# திருநள்ளாறு




"ஐயாறனடிமை"

புலவர் கோ. சுப்பிரமணியனார்,

# திருவையாறு
# திருத்தல முழு வரலாறு

ஒரு திறனாய்வு (முதல் பாகம்)

ஆசிரியர்
முத்தமிழ்மணி, நல்லாசிரியர் சிவநெறிச்செம்மல்
திருவையாறு புலவர்.கோ.சுப்பிரமணியனார்
ஐயாறனடிமை

துணை ஆசிரியர்
புலவர் பத்மா சுப்பிரமணியம், M.A.,M.Ed.,M.Phil
தையல் T.T.C ஓவியம், T.T.C. புலவர் D.I.T பி.லிட். B.Ed

ஐயாறப்பரக வெளியீடு
ஐயாறப்பர் அருளகம்,
99A, தெற்கு வீதி,
திருவையாறு 613 204, தஞ்சாவூர் மாவட்டம்
1995

முதற் பதிப்பு : 1995 சனவரி
உரிமை : ஆசிரியர்க்கு
விலை : உரு. 40

"திருவையாறு திருத்தல வரலாறு"

கோ. சுப்பிரமணியன் (1927)
திருமதி S. பத்மா (1937)

நூல் கிடைக்குமிடம் :
"ஐயாறப்பர் அருளகம்"
99எ, தெற்கு வீதி,
திருவையாறு 613 204 தஞ்சாவூர் மாவட்டம்

அச்சிட்டோர் :
சர்மா ஸானடோரியம் ப்ரஸ்,
கணேஷ்நகர், புதுக்கோட்டை 622 001 போன் : 21659

---

காணிக்கை :

வாழ் நாளெல்லாம், பேச்சிலும், மூச்சிலும் நீங்கா இடம் பெற்றெம்மை ஆட்கொண்டருளும் கருணைக் கடலான அம்மையப்பராம் அருள்மிகு அறம்வளர்த்த நாயகி உடனாய அருள்மிகு ஐயாற்றெம்பெருமானுக்கே இந்நூல் உரித்தாகும்.

# திருவையாறு
# திருத்தல முழு வரலாறு

This book is
Published with the Financial Assistance of
**TIRUMALA TIRUPATI DEVASTHANAMS**
under their scheme
"Aid to Publish Religious Books"

புலவர் கோ. சுப்பிரமணியனார்
புலவர். பத்மா சுப்பிரமணியம்
திருவையாறு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சரிதம படைத்த திருவையாறு | 1-37 |
| 2. | வரலாறு வழங்கும் திருவையாறு | 38 |
| 3. | திருககோயிலிற் சிறந்த திருவையாறு | 73 |
| 4. | வேதம், ஆகமம் விளக்கும் திருவையாறு | 119 |
| 5. | புராணம் புகழும் திருவையாறு | 138 |
| 6. | கல்வெட்டில் நிலைத்த திருவையாறு | 155 |
| 7. | திருமுறை பாடும் திருவையாறு | 189 |
| 8. | இலக்கியம் பேசும் திருவையாறு | 229 |
| 9. | சித்தர் முத்தர் வாழும் திருவையாறு | 264 |
| 10. | சீரூர் விளககும் திருவையாறு | 287 |
| 11. | திருவிழா அழகிற்குத் திருவையாறு (இரண்டாம் பாகம்) (தனிநூல்) | 301 |

உ
சிவ: சிவ: ஓம்: சக்தி!

# முன்னுரை எனும் ஐயன் தன்னுரை

"உற்றா ரிலாதார்க் குறுதுணை யாவன ஓதி நன்னூல்
கற்றார் பரவப் பெருமை யுடையன காதல் செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தான் கொடுக்கும்
அற்றார்க் கரும்பொருள் காண்க ஐயாற னடித் தலமே." அப்பர்.

எல்லாம் வல்ல அருள் மிகு அறம் வளர்த்த நாயகியுடனாய ஐயாற்றெம் பெருமான் தன் தண்ணருட் கருணை சுரந்த தன் வெளிப் பாடே இத்திருவையாறு திருத்தல முழு வரலாற்று நூலாகும். பிற தல வரலாற்று நூலிற்கும்இதற்கும் சற்று மாறுபட்ட வேறுபாட்டைக் காணலாம். ஊர், நகரம், தலம் என்றால் அவ்வவற்றிற்குரிய முழுமை யான செய்திகள் அனைத்தையும் ஆய்ந்து, பல்காலும் தூழ்ந்து சிந்தித்து அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வகைப்படுத்தி, முறைப்படுத்தி எழுதப் பெற்ற முழுமையான நூலாகும்.

1990 ல் திருவையாறு வில்லேந்திய வேலவன் வரலாறு, 1991 ல் அருள்மிகு ஐயாறப்பர் ஆலய வரலாறு, அருள்மிகு அறம் வளர்த்த நாயகி ஆலய வரலாறு ஆகிய நூற்கள் எழுதி வெளியிட்ட காலை, அம்மையப்பரின் திருவருட் சக்தி உள் நின்று, "திருவை யாற்றுத் தலச் சிறப்பு இது மட்டுமோ? இன்னும் எத்தனை எத்தனையோ உள்ளனவே அதனையும் ஆய்ந்து எழுது!" என உள் மனத்திற்கு ஆணையிட்டது. அதனைச் சிரமேற் கொண்டு திருவருட் சிந்தனையுடன், பய பக்தியோடு ஐந்தாண்டு காலம் பொறுமையாக ஆய்வு செய்தோம். பதினோரு தலைப்புக்களில் திறனாய்வு செய்து வெளிக் கொணர்ந்த பாங்கனைத்தும் அடியோம் செயலல்ல. கருத்துமல்ல. நாளும் எம்மை வழி நடாத்திச் செல்லும் ஐயாறன் தன் திருவருட் குறிப்பேயன்றி வேறல்ல. யாம் செய்த ஒன்றே ஒன்று. அர்த்த யாம வழிபாடு. அதற்குக் கிடைத்த பரிசு; பேறு இஃது.

ஐயாறன் திருவருட் துணையே கண்ணாக உளத்திருத்தி எழுத முயன்றோம்; செய்திகள் வந்து விழுந்தன, குவிந்தன, ஏராளம்.

"அப்படியு மந்நிறமு மவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணாதே"

என்ற திருநாவுக்கரசுப் பெருமானின் திருவாக்கு என்னளவில் பொய்க்கவில்லை. உண்மையாயிற்று. எழுதுங்கால் ஏற்படும் இன்னலுக்கு வழி கிடைக்க அர்த்த யாம வழிபாட்டில் பாடிப் பரவி பாடுகிடப்போம். மறுநாளே ஐயங்களுக்கு விளக்கங்களும், தடை விலக்கங்களும், தேவைப்படும் புதிய செய்திகளும் கிடைத்து விடும்.

திருஞான சம்பந்தப் பெருமான் கூறுவது போல

"எனதுரை தனதுரையாக"ஐயாற்றெம் பெருமானே எழுதிய, உள் நின்றுணர்த்திய உண்மையின் வெளிப்பாடுகளே யன்றி வேறல்ல.

இவையனைத்தும் பொய்யல்ல, புனைந்துரையல்ல, அனுபவ உண்மை என்பதையும் பயில்வார் மனத்தே அவ்வப்போது பளிச்சிடும் உண்மைகளின் துணை கொண்டே அவரவர் தாமே நன்குணரக் காணலாம்.

பன்னெடுங்காலம், பல்வேறு தலைப்புகளில் பலரால் ஆய்ந்து வெளிக்கொணர வேண்டிய ஒன்றைக் காலங் கருதி, மக்கள் நலங்கருதி, சிக்கனங்கருதி பல தலைப்பு நூல்களைத் திரட்டி ஒரே நூலாக வடித்துத் தரப்பட்டிருக்கிறதென்றால் அது தான் திருவருட் சக்தி. அதுதான் இந்நூலிற்கு அமைந்த தனிப்பட்ட ஒப்பற்ற சிறப்பாகும்.

தற்கால மக்கள் மனநிலை, வாழ்க்கை நிலை யாவும் இயந்திர வேகத்தில் ஓடிக் கொண்டுள்ளதனை நன்கறிவோம். அம்முறையில் 'சுற்றுலா'என்ற பெயரில், 'தலயாத்திரை'என்ற பெயரில்

நகர்வலம் வரும் மக்களைக் காண்கின்றோம். அவர்கட்கு ஏற்ப சுளையாக, சுவையாக, முழுமையாக ஐயாற்றைப் படம் பிடித்துக் காட்டி, முடிந்தளவு சுற்றிக்காட்டி, விளக்கிக் காட்டி இருந்த இடத்தில் இருந்து கொண்டே படித்த மாத்திரத்தில் அனைத்துச் செய்திகளையும் அறிந்து கொள்ளும் வகையில் எழுத வேண்டும் என்ற அவாவின் விளைவே இந்நூல். பரந்து விரிந்த ஐயாற்றுச் செய்திகள் அனைத்தும் அவரவர் தாமே அமைதியாக அமர்ந்து, பொறுமையாகப் படித்துணர வேண்டிய ஒன்றாம். அவ்வாறு உணர்வாரகத்தே (டி.வி.) தொலைக்காட்சியில் கண்ணுறுவது போன்று, அவரவர்தம் மனக் கண்ணில் ஐயாற்றுக் காட்சிகள் யாவும் நேரில் தோற்றிக் காட்சியளித்தல் கண்கூடு. அதனால் ஏற்படும் உள்ளக் கிளர்ச்சி: ஐயாற்றைக் கண்டறியாதாரையும் காண விழைந்த ழைக்கும், பெற்றித்தாம்.

வாசகர்கள், நூல் நோக்கர்கள், சுவைஞர்தம் மன அளவைகள் பல்வேறு விதம். ஒருவர் கலைக் கண்ணோட்டத்தே காண்பர்; ஒருவர் இலக்கிய நோக்கில் நோக்குவர்; ஒருவர் பக்திப் பார்வையில் பார்ப்பர்; ஒருவர் சரித்திரம், ஒருவர் விஞ்ஞானம்; ஒருவர் கல்வெட்டு; ஒருவர் புராணம்; ஒருவர் திறனாய்வு முறை; ஒருவர் பழம் பண்பாட்டுணர்வு, மக்கள் நலம், நாகரிக வளர்ச்சி இப்படி அவரவர் தம் ரசனைக்கேற்பக் காண்பர் அத்துணைபேர்க்கும் விருந்தளிக்கும் வகையில் ஒட்டு மொத்தமான கருத்துப் பெட்டகமாக இந்நூல் அமைந்துள்ளது எனலாம்.

இந்நூலை ஐயாறனே பக்கபலமாக, உறுதுணையாக உள் நின்று வழி நடாத்திச் சென்ற அனுபவச் சூழலை எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே"

என்ற திருமூலர் வாக்கு நாயினும் கடைப்பட்ட அடியோமை ஐயாறன் படைத்ததும், தம்மை நன்றாகத் தமிழில் எழுதுமாற்றிற்கோ

என எண்ணி இரும்பூதெய்துகின்றோம். அவனது தண்ணருட் கருணைத் திறத்தை என்னென்று சொல்வது? செய்திப் பொருளை முட்டின்றி வழங்கிய ஐயாற்றெம் பெருமான் தன்நூலை வெளியிட பதிப்பிக்க ஏற்பட்ட பொருள் முட்டுப்பாட்டினையும் நீக்கியருளினன். வாராது வந்த மாமணியாய் வடவேங்கடவன்ஏழுமலையான் மூலம் திருவருள் நிதி உதவியும் வாரி வழங்கிய கருணையின் பெற்றிமையை மாட்சிமையை என்னென்று இயம்புவது.

திருவையாறு: தலை சிறந்த தமிழ்க்கல்லூரியைத் தன்னகத்தே கொண்ட ஊர். அதில் ஆழ்ந்த சமய உணர்வு, சிறந்த பேரறிவுத் திறன், உயர்ந்த ஆய்வுள்ளம் கொண்ட எத்தனை எத்தனையோ தமிழ்ப் பேராசான்கள் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர். இத்தனை காலம் அவர்களுக்கெல்லாம் கிட்டாதபேறு எந்தமக்குக் கிட்டியதென்றால் அதற்குக் காரணம், உட் பொருள் ஏதேனும் ஒன்று இருக்க வேணடுமே, அது என்னவாக இருக்கும் என ஆய்ந்தோம் அதற்குக் கிடைத்த ஒன்று, திருவையாற்றிலேயே பிறந்து, வளர்ந்து, தமிழைப் பயின்று, புலவர் குடும்பப் பாரம்பர்யம், காத்து இளமைக் காலந்தொட்டு ஐயாறப்பர் ஆலயத்தையே ஆயிரமாயிரம் முறை சுற்றிச் சுற்றி வலம் வந்தோம். வழியினர் பிழைப்பிற்காக வெளியூர் சென்றாலும் பேச்செல்லாம், மூச்செல்லாம், உயிரெல்லாம் ஐயாறன் நினைவாகவே இருந்த தகைமையினை ஐயாறனடிமையாக, ஆன்ம நாயகனாக, சிவபூசையில் ஐயாறப்ப ரையே ஆன்மார்த்த மூர்த்தியாக வரித்துக் கொண்டதன் பயன்தான்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தி யவனிருக்கும்
வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள், பெயர்த்துமவனுக்கே
பிச்சியானாள்"

என்ற நாவுக்கரசுப் பெருமானின் வாக்கிற்கேற்பதன்புகழ் நிறுவற்கு இவனே உகப்பானவன என பணித்துக் கொண்டனன் போலும்.

திருவையாறு திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக் கயிலாய பரம்பரை தருமை குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ லசண்முக தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கட்கும்,

நல்ல அச்சகம், புதுக்கோட்டை சர்மாபிரஸ்தற்காலத்தில் சிறந்த கணிப்பொறி (Computer press) அச்சகம் கண்கவர் வனப்புடன் அச்சியற்றி வழங்கியோர்க்கும், அணிந்துரை வழங்கிய நுண்மாண் நுழைபுல மிக்கப் பேரறிவுக் களஞ்சியமாகத் திகழும் நமது கெழுதகை நண்பர் நூற்கடல் "செந்தமிழ்க் கலாநிதி பண்டித வித்து வான் தி.வே.கோபாலய்யர் M.A.M.Ed., (இந்தியப் பண்பாட்டு ஆய்வுக்கழகம், புதுச்சேரி) அவர்கட்கும், மதிப்புரை வழங்கிய சீர்நூல் பெருந்தகை டாக்டர் ஔவை து. நடராசனார் (துணைவேந்தர் தஞ்சைத் தமிழப் பல்கலைக்கழகம்) அவர்கட்கும் நூலை வெளி யிட்டு வாழ்த்து மடல் வழங்கிய சென்னை டாக்டர். வி.ஜி.சந்தோஷம் (தமிழிசை மன்ற கவுரவத்தலைவர்) அவர்கட்கும் எம் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கள ஆய்விலும் நந்தமக்குப் பயிற்சிக் குறைவான வேத ஆகமம் இசை, ஆங்கிலம், வடமொழி, கல்வெட்டுத்துறை, வல்லவர் நம் தம் செய்திகளை ஞானதானமாக வழங்கியருளிய அறிஞர் பெருமக்கட்கும் எந்தம் நன்றிக் கடப்பாட்டைப் புலப்படுத்திக் கொள்கின்றோம். புகைப்படம், வண்ணப்படம், பிளாக் வழங்கிய அன்பர்கட்கும், யாம் பணியாற்றும் ஐயாறப்பர் வார வழிபாட்டுக்கழகம், ஐயாறன் மெய்த்தொண்டர் இயக்கம், ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம், ஓய்வூதியர் சங்கம், தமிழய்யா வீ.குமாரசாமி பிள்ளை கல்விக் கழகம், உலக சமாதான அறக் கட்டளை அன்பர்கட்கும் நூலை வெளியிட உறுதுணை புரிந்த திருவையாறு தமிழிசை மன்றப் பொறுப்பாளர்கள் அத்துணை பேருக் கும் எமது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருவையாறு.
16.3.1995

இன்னணம்
கோ. சுப்பிரமணியன், S.பத்மா.

# அணிந்துரை

"நூற்கடல்", செந்தமிழ்க் கலாநிதி, பண்டித, வித்துவான்
தி.வே. கோபாலய்யர் M.A., M.Ed.,
ஆய்வாளர், இந்தியப் பண்பாட்டு ஆய்வுக்கழகம், புதுச்சேரி.

திருவையாறுதிருத்தல வரலாறு என்ற இவ்வரிய நூலைத் திருவையாறு பற்றிய செய்திகளைப் புராண காலந்தொட்டு இன்று வரை எஞ்சாமல் நிரல் படத் தொகுத்துச் சுவைபட இனிய தமிழில் வழங்கியுள்ள புலவர் கோ. சுப்பிரமணியனார் எமக்கு ஒரு சாலை மாணாக்கர். இளமை தொட்டே அமைதியும் இன்முகமும் இன் சொற்களும் இறைவழிபாட்டு உள்ளமும், பிறருக்கு இயன்ற அளவு உதவும் பண்பும் உடையவர். திருவையாற்றில் பிறந்து அங்கேயே கல்வி பயின்று, பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் மூப்பு நிலையில் அவ்வூரிலேயே வாழ்ந்து ஐயாற்று எம்பெருமானுடைய திருவடிகளை வழிபட்டு வாழும் பேறு பெற்றவர், சிவபூசை செய்பவர், சிவனடியார்களைப் பேணுபவர். தேவையான அளவு எல்லா நலன்களையும் பெற்று வாழ்வின் பிற்பகுதியை இறைத் தொண்டில் அமைதியாகக் கழித்து வருபவர்.

இப் பெருமகனார் தம் துணைவியாருடன் இணைந்து வரைந்துள்ள திருவையாறுதிருத்தல வரலாறு என்னும் நூலைக் கண்ணுறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தொடக்க வாழ்வில் இருபதுயாண்டும், இடைக்காலத்தில் பதினைந்து யாண்டும் ஆக முப்பத்தைந்து ஆண்டுகள் திருவையாற்றில் இருந்தும், இவர் குறிப்பிடும் செய்திகளில் செம்பாதியைக் கூட யான் அறிந்தேன் அல்லேன். அதற்குக் காரணம் என்னுடைய ஆர்வக் குறைவே. இவர் இயற்றிய நூலினை முழுதும் வாசித்தறிந்த பின்னரே திருவையாறு பற்றிய செய்திகள் யாவும் முழுமையாக அறிந்த நிறைவு எனக்கு ஏற்படுகிறது. என்னைப் போன்றே திருவையாற்றில் இருக்கும் பலரும் இருப்பார்கள் என்று நம்புகிறேன். தாம் வாழும் ஊரின்

வரலாற்றினை முழுமையாக அறியும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் மனநிறைவைத் தருவது இயல்பே அன்றோ?

இந்நூல் 11 தலைப்புகளை உடையதாக அமைந்துள்ளது. ஒவ்வொரு தலைப்பிலும் காணப்படுவனவாய் இதற்குமுன் பெரும் பாலும், பலராலும் அறியப் படாதனவாய், அறிந்து கொள்வதற் கேற்ற வரலாற்றுச் சுவை உடையனவாய செய்திகளை நிரல்பட நோக்குவோம்.

**1. சரிதம் படைத்த திருவையாறு**

ஐயாற்று மக்கள் பண்பாடு, மக்களுக்கு உணவளித்த சத்திரங்கள் பல இந்த நூற்றாண்டின் இடைக்காலம் வரை செயற்பட்டு வந்த செய்தி, இங்கு அண்மைக்காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள் பற்றிய குறிப்பு முதலியன இப்பகுதியில் உள்ளன. தெருப் பெயர்க் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. சிலவற்றின் பெயர் திரிபுகள் புலப்படுத்தப்பட்டுள்ளன. புறாக்கூடு வரலாறு யாளி முகப்பு வரலாறு, நஸர் மகால் பற்றிய செய்திகள் உள்ளத்துக் கொள்ளத்தக்கன.

**2. வரலாறு வழங்கும் திருவையாறு**

இப்பகுதியில், கரிகாற்பெருவளத்தான் வரலாறு, திருப்பணி, காவிரியாற்றில் நீராடுவதற்கு அமைக்கப் பெற்ற பலபடித்துறைகளின் பூசப்படித்துறையும், அதனோடு இணைந்த கட்டிடங்களின் அமைப்பும் திருவையாற்றிற்கே சிறப்பாக அமைந்தவை. கல்யாணி மகால் படித்துறையும் அன்ன, அயிராவணப் படித்துறையின் பெயர்க்காரணம் இனிது. அயிர்கருமணல் அயிர் ஆம் வண்ணம். அஃதாவது கட்டிடமின்றிக் கருமணலே இறங்கு துறையாக அமையும் வண்ணம் ஏற்பட்டதுறை அயிராவணப் படித்துறையாம்.

**3. திருக்கோயிலிற் சிறந்த திருவையாறு**

ஐயாற்றுத் திருக்கோயில் தேர் ஓடும் வீதிகளோடு ஐந்து பிரகாரங்களையுடையது. உலோகமாதேவீச்சுரம், பஞ்சவன்

மாதேவீச்சுரம், ஒன்றன் முன் ஒன்றாக கருவறையை நோக்கியுள்ள நந்திகள் ஐவர். சுயம்பு மூர்த்தியாகிய பெருமானின் சிறப்பு, அவருக்கு அமைந்துள்ள உருத்திராக்கமணி விதானம், அருகிலுள்ள உமாதேவி செம்புத்திருமேனி சிறப்பு, பிரகாரங்களின் சிறப்பு, அன்னை திருக்கோயிலின் அருமை, தீர்த்தங்களின் வரலாறும் பெருமையும், வெளியூர்களில் ஐயாறப்பர் கோயில்கள், ஐயாறப்பர் கோயிலுக்குப் பண்டைச் சான்றோர்கள் அமைத்த அறக்கட்டளைகள், ஐயாறப்பர் அருளிய திருவிளையாடல்கள் போல்வன திருவையாற்றில் வாழ்பவரும் முழுமையாக இதுவரை அறியாத அரிய செய்திகள் ஆகும்.

4. வேதம் ஆகமம் தத்துவம் விளக்கும் திருவையாறு

வேதங்கள் தொல்காப்பிய காலம் தொட்டே நம் தமிழகத்தில் பெரிதும் போற்றப்பட்டுள்ளன. வேதத்துக்கு உரிய பெயர்கள் பொதுவாக நான்கு உள்ளன. அவை: வேதம், சுருதி, ஆம் நாயம், சந்தஸ் என்பன. இவை முறையே அறிவிப்பது, காதுகளால் கேட்டே உணரப்படுவது, ஏடுபார்த்துப் படிக்காமல் வாயால் சொல்லிச் சொல்லியே மனப்பாடம் ஆவது. இவ்வடசொற்களை நம் முன்னோர்கள் முறையே புலன், கேள்வி, வாய்மொழி, மறை என்று தமிழாக்கம் செய்து வழங்கினர். வேதக்கருத்து பழைமையானது. 'முன்னை மரபின் முதுமொழி, ஏவல்இல் முதுமொழி, கெடு இல் கேள்வி மாயாவாய் மொழி' என்னும் பரிபாடல் சொற்றொடர்களால் போதரும்.

இத்தகைய வேதத்தின் நான்கு பகுதிகளையும் பற்றிய ஆசிரியர் குறிப்பிடும் சிறு விளக்கங்கள் நமக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டியவை, சிவ பெருமானின் திருவாக்காகும் சைவ ஆகமங்கள் இருபத்தெட்டின் பெயர்களையாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா ? இன்றியமையாத செய்திகள் பல இத்தலைப்பில் இடம் பெற்றுள்ளன. இவையாவும் யாவரும் அறிய வேண்டுவன ஆயினும், பொதுவாக இவற்றை அறிந்து கொள்ள இருள் தருமாஞாலத்து இயங்கிக் கொண்டிருக்கும் நம் உள்ளம் நாட்டம் கொள்ளாது. ஆதலின் நம் உள்ளம் கவரும் சுவைமிக்க

தலைப்புக்களை இருபுறமும் அமைத்து இத்தலைப்பினை அவற்றின் இடையே வைத்து விளக்கி, இந்நூலாசிரியர் நம் உள்ளங்களை இத்தலைப்பிற்கு ஈர்த்துள்ளார்.

**5. புராணம் புகழும் திருவையாறு**

இத்தலைப்பில் புராணங்கள் தோன்றிய வரலாறு, பிரமகைவர்த்த புராணத்தில் 64 அத்தியாயங்களில் அமைந்த பஞ்சநதமான்மியம் திருவையாற்றுப்புராணம், செப்பேசபுராணம் ஆகிய இவற்றின் சாரத்தின் சுருக்கம் இத்தலைப்பில் இடம் பெறுகிறது. முப்பதுக்கும் மேற்பட்ட புராண நிகழ்ச்சிகளில் சுருக்கம் மூல நூல்களைக் காணவும், பயிலவும் வாய்ப்பு இல்லாத நம் போன்றவர்களும் திருவையாற்றின் சிறப்பை உணர்ந்து உளம் மகிழ இத்தலைப்பு பெரிதும் உதவுகிறது.

**6. கல்வெட்டில் நிலைத்த திருவையாறு**

இத்தலைப்பில் தெள்ளாறு எறிந்த நந்திவர்ம பல்லவன் கோபரகேசரி வர்மன் முதலாய சோழப்பேரரசர்கள் பாண்டியர், விசயநகர மன்னர்கள் தஞ்சை நாயக்க மன்னர்கள் தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஆகியவர் காலத்து அறக்கொடைகள் குறிக்கப்பட்டுள் ளன. கோயிலுக்கு வழங்கப்பட்ட அணிகலன்கள் திருப்பரிகலன் கள் பெயர்கள் விளக்கம் குறிக்கப்பட்டுள்ளன. கோயிலுக்கு விளக்கு எரிக்க, நிவேதனத்திற்கு, விழாக்கள் நிகழ்த்த விடப்பட்ட நிலங்கள் ஆகியவற்றின் செய்திகளையும் இக்கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அண்மைக்கால பச்சையப்ப முதலியார், குடிமக்கள் வழங்கிய அறக்கொடைகள் பற்றிய கல்வெட்டுகள் எஞ்சாமல் தொகுக்கப் பட்டுள்ளன. சுருங்கக் கூறின் ஐயாற்று எம்பெருமானுடைய கோயில் என்றும் சிறப்புறத் திகழ நம் முன்னோர்கள் செல்வத் தொகுதியின் பழங் கணக்கை இக்கல்வெட்டுகள் தெரிவிப்பதைக் கண்டு வருந்தும் பேறிலிகளாக நாம் இருப்பதனை இத்தலைப்பின் வாயிலாக உணர்கிறோம்.

## 7. திருமுறைபாடும் திருவையாறு

இத்தலைப்பில் திருஞானசம்பந்தர் திருவையாற்றைப் பற்றி அருளிய 5 பதிகங்களும் திருநாவுக்கரசர் அருளிய 12 பதிகங்களும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பதிகமும், திருவையாற்றின் தொடர்புடைய திருவாசகத் திரு பாகரங்கள் மூன்றும் ஐயாற்று எம்பெருமானுக்குப் பொருந்துபவனவாகக் கருதும் திருமந்திரத் திருப்பாடல் இரண்டும், சேக்கிழார் பெருமானால் போற்றப்படும் திருவையாற்றைப் பற்றிய பெரிய புராணச் செய்திகளும் அவற்றிற்கு முன்னதாக ஐயடிகள் காடவர்கோன் நாயனார் க்ஷேத்திரக் கோவைப்பாடலும் விளக்கப்பட்டுள்ளன. திருவாரூரில் தியாக விடங்கர் அஜபா நடனம் ஆடுவது போல, திருவையாற்று ஓலோக விடங்கர் பாண்டரங்கம் என்ற கூத்தாடும் செய்தி விரிவாக விளக்கப் பட்டுள்ளது. திருவையாற்றுக்கும் தேவார மூவருக்கும் உள்ள தொடர்பு விரித்துரைக்கப்பட்டுள்ளது. இந்தலைப்பு ஐயாற்றுச் சிவனடியார்களைப் பரவசப்படுத்தும் பகுதியாகும்.

## 8. இலக்கியம் பேசும் திருவையாறு

1. இத்தலைப்பில் திருவையாறு பற்றிய வடமொழி தென்மொழிப் புராண நூல்கள் தவிர ஏனையனவாகிய பட்டினத்தார் பாடல், அருணகிரிநாதர் திருப்புகழ், தாயுமானவர் பாடல், வள்ளற் பெருமானின் விண்ணப்பக் கலிவெண்பா, வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய திருவையாற்றுப் பதிகம், திருவை யாற்று முருகன் மும்மணிக்கோவை, முத்துசாமி பாரதி பாடிய திருவையாற்றுப் பதிற்றந்தாதி, திருவையாற்றுத் தர்மசம்வர்த்தனி மாலை, அப்பாத்துரை தேசிகர் இயற்றிய தருமாம்பிகைப் பதிகம் சுந்தரேச வாண்டையார் இயற்றிய ஐயாறப்பர் ஐம்மணிமாலை, அறம் வளர்த்த நாயகி பதிகம் என்ற தமிழ்ப் பிரபந்தங்களும்

குருதாசர் இயற்றிய சிவபஞ்சரத்ன சுலோகங்கள் என்ற சித்திரகவிகள் சான்றோர் வரைந்த பஞ்சநதீசர் பஞ்சகம், தேவலக்ருதர் இயற்றிய ப்ரணதார்த்தி ஹரஅஷ்டக துதி என்ற

வடமொழிப்பாடல்கள் தியாகராசர் அருளிய திருவையாறு தொடர்பான இசைப்பாடல்களும் எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கப் பட்டுள்ளன. இவை யாவும் நமக்குப் பெரும்பாலும் புதுச் செய்திகளே.

## 9. அருள்தவ சித்தர் முத்தர் வாழும் திருவையாறு

இத்தலைப்பு மிக உயரிய தலைப்பாகும். நமக்கு அண்மைக் காலத்தில் நம்மிடையே வாழ்ந்து மறைந்த அம்மகான்களைப் பற்றி உள்ளவாறு உணர்ந்தவர்கள் சிலரே. திருநந்திதேவர், அகத்தியர், அகப்பேய்ச்சித்தர் என்ற முற்பட்ட மகான்களைத் தவிர இந்நூற் றாண்டை ஒட்டி ஐயாற்றில் இருந்த ஆட்கொண்டார்சாமி, சுடுகாட் டுச்சாமி, தம்பலசாமி, ஆண்டார்சாமி, சிங்கப்பூர்சாமி, அருள்சாமி, சச்சிதானந்தா சாமி, சுந்தரசாமி, தியாகராசசாமி கொடைவள்ளல் பச்சையப்பர் ஆகியவர் பற்றிய குறிப்புகள் நம் உள்ளத்தில் நிலைபெற்று நமக்குப் பெருமிதம் நல்க வேண்டுவனவாகும்.

## 10. சீரூர் விளக்கும் திருவையாறு

இன்று திருவையாறு தேர்வுநிலைப் பேரூராட்சியை உடையதாய்க் கழிவுநீர் போக்கிற்கும், கொசுத் தொல்லைக்கும் செயற்பாலனவற்றை விடுத்துச் செய்துள்ள ஏனைய நலப்பணிகள் குடிநீர்த்தொட்டிகள், கல்விநிலையங்கள், திருவையாற்றைச் சுற்றியுள்ள சிற்றூர்கள், இங்கு வளரும் கைத்தொழில்கள், அரசு அலுவலகங்கள் வங்கிகள் பொது நல அமைப்புகள் ஆன்மீக அமைப்புக்கள் ஆகியவை இத்தலைப்பில் விளக்கப்பட்டுள்ளன.

## 11. திருவிழா அழகிற்குத் திருவையாறு (இரண்டாம் பாகம்)

நந்தியம் பெருமான் அவதார விழா திருமணவிழா, ஏழூர்வலம் வருவிழா, அப்பர் கயிலைக் காட்சி விழா, ஆட்கொண்டார் விழா, திருவாதிரை விழா, தியாகராசர் சங்கீத விழா, தமிழிசை விழா முதலிய திருவையாற்றுத் திருவிழாக்களை விளக்கி உரைக்கும்

சைவத் திருத்தலமாகிய திருவையாற்றின் தேரோடும் வீதிகளுக்குள் குடியிராமல் ஏனைய தெய்வ வழிபாட்டினர் புறத்தே தம் இனத்தாரோடு ஒன்றிக் குடியிருக்கும் செய்தி தொடக்கத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வரிய நூல் புராண காலந்தொட்டு இன்றுவரை திருவையாற்றைப் பற்றிய செய்திகள் யாவற்றையும் எஞ்சாது தொகுத்துக் கூறுகிறது. ஐயாறப்பர் திருக்கோயிலை மையமாகக் கொண்டு வளர்ந்துள்ள இவ்வூரில் வாழும் வாய்ப்புடையவர்கள் இந்நூலில் காணப்படும் 11 தலைப்புக்களுள் தமக்கு உகப்பான எந்தத் தலைப்பையும் மனத்துக் கொண்டு பெருமிதமுறலாம். இந்நூலாசிரியர் தம் பிறந்த ஊராகிய ஐயாற்றினிடத்தும், தம்மைப் புரந்து வரும் ஐயாற்று எம்பெருமானிடத்தும் கொண்டுள்ள ஈடுபாடு இந்நூலாக வெளிவந்துள்ளது. பிறரை நலியாது , வேற்றுப் பொருள் வெஃகாது மையில் அறிவினராய்ச் செவ்வதின் நடந்து, தம் அமர்துணை பிரியாது, மக்களொடு மகிழ்ந்து, பாத்துண்டு முத்தயாக்கையொடு பிணியின்றி இவ்வாசிரியர் பல்லாண்டு வாழ ஐயாறன் அருள்வானாக இறையன்பர்களும், தமிழன்பர்களும், இந்நூல்களை வாங்கி வாசித்துப் பயன் கொள்வாராகுக.

28, வைசியர் வீதி
புதுச்சேரி 605 001

அன்பன்
தி.வே.கோபாலையன்
6.3.95

# 1. சரிதம் படைத்த திருவையாறு

சரிதம்-என்பது, நாடு பற்றிய செய்திகளைத் தந்து கொண்டிருப்பது. (World-History) உலக சரித்திரம் என்பது போலக் கொள்வோம். சரிதம் என்னும் வடசொல் சரித்திரம் ஆயிற்று. சரித்திரமும், வரலாறும் ஒன்று போன்ற தெனினும் (வரல் ஆறு) வாழ்க்கை வரும் வழிமுறைகளைவாழ்வியல் நிகழ்ச்சிகளை வழங்குவது வரலாறாகவும், நாட்டியல் நிகழ்ச்சிகளை நவில்வது சரிதமாகவும் கொண்டு பார்ப்போம்.

ஓதியாரு மறிவாரிலை யோதி யுலகெலா
சோதியாய் நிறைந்தான் சுடர்ச்சோதியுட் சோதியான்
வேதியாகி விண்ணாகி மண்ணோடெரி காற்றுமாய்
ஆதியாகி நின்றானும் ஐயாறுடை யையனே

திருஞானசம்பந்தர்

## ஊரும் பேரும்

திருவையாறு இந்தியாவின் தமிழகத்தில் தஞ்சாவூருக்கு வடமேற்கே 13 கி.மீ. தொலைவில் காவிரியின் வடகரையில் உள்ள ஊராகும். @பூகோளப்படத்தில் இதன் இடத்தை வடக்கு அட்சரேகை 10 51' என்றும் கிழக்குத் தீர்க்கரேகை 70 10' என்றும் குறிப்பர். தென்கயிலாயம் பஞ்சநதம், ஜெப்பேசம், பஞ்சாட்சரபுரம், ஜீவன் முக்திபுரம் எனப் பல பெயர்கள் கொண்டு புராணங்களாற் புகழப் பெற்றாலும், கி.பி.7ம் நூற்றாண்டு முதல் இன்று வரைத்திரு முறையிலும், கல்வெட்டுக்களிலும், உலக வழக்கிலும் திருவையாறு என்பதே நிலைத்த பெயராக இருந்து வருகிறது.

*வடக்கே, பஞ்சநதிகள் பாயும் பிரதேசம் பஞ்சாப் என்று அழைப்பது போல, ஐந்து நதிகள் பாயும் பகுதி பஞ்சநதம் என்பதும்,ஐயாறு என்ற தமிழ்ப் பெயரும் அப்பொருளையே தரவல்லதாம்.

---

¤ A Manual of the District of Tanjore, T.Venkasami Raw, 1883

* தமிழகம் ஊரும் பேரும் - ரா.பி. சேதுப்பிள்ளை, 4ம் பதிப்பு 1968 பக்கம் 179

நீர் வளமும் நில வளமும்

"வான்பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி" நீர் வளத்தாலும் நில வளத்தாலும், நெல்லும்கரும்பும், மஞ்சளும் இஞ்சியும் கொஞ்சி விளையாடும் தஞ்சைப் பகுதியின் தலைசிறந்த நகராகும் திருவையாறு. தஞ்சைதிருவையாறு இடைவெளியில் வெண்ணாறு, வெட்டாறு,வடவாறு, குடமுருட்டி, காவிரி எனும் ஆறுகள் ஐந்தும் பாய்ந்து ஆங்காங்கே வளம் சேர்க்கின்றன. எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேரெனக் காட்சி நல்கும். தென்னை, மா, பலா, கமுகு, வாழை சூழ்ந்த தோப்புந்துரவும் எங்கணும் செறிந்து காணப்படும். கண்டகண்ட இடமெல்லாம் வயல்களே. நல்ல நிலம் ஏக்கருக்கு 110 கலம் வரை விளைச்சல் காணும் தரமுடையது.

தரமான நிலப்பகுதி என்றால் கால் நடைகளும் தாராளமாக வாழ வேண்டியவை தானே! அம்முறையில் பால், தயிர் பஞ்சமின்றி நாளும் தயிர்ச் சந்தை கூடும் சிறப்புடையது.

ஊர் அமைப்பு

ஆதிகாலத்தே மன்னர்கள் இறையருள் துணைகொண்டு அமைத்த நகரங்கள் யாவும் கோயிலை நடுவணாகக் கொண்டே ஊரை அமைத்துள்ளனர். இதனைப் பழம்பெரும் தலங்களான சிதம்பரம், மதுரை,திருவாரூர் போன்றவை திருக்கோயிலை மையமாக அமைத்துச் சுற்றிலும் வீதிகள், தெருக்கள் அமைந் துள்ளதைக் காணலாம். அம்முறையில் திருவையாறும் கரிகாற் சோழனால் காடுகெடுத்து நாடாக்கியபொழுது திருக்கோயிலை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது. கோயில் 3 திருச் சுற்றுக்களும், நான்காவது மாடவளாகமும், ஐந்தாவது தேரோடும் வீதியும் ஆக, 5 திருச்சுற்றுக்களைக் கொண்டு அவற்றிற்கு இடை இடையே தெருக்களும், சந்துகளும்,கடைவீதிகளும், அலுவல கங்களும் கொண்டு விளங்குகிறது.

நாற்புற நெடுஞ்சாலைகள் கிழக்கே கும்பகோணம் சாலை, தெற்கே தஞ்சாவூர் சாலை, மேற்கே கல்லணைச் சாலை, வடக்கே விளாங்குடி, அரியலூர்ச் சாலை ஆகிய இவை பஸ், வண்டிகள் போக்குவரத்து உள்ளவையாக அமைந்துள்ளன

மக்கள் வாழ்க்கை முறை

சுற்றுப்புறம் எங்கும் நன்செய் வயல்களே மிகுதியாதலின், மக்களின் வாழ்க்கைக்கு உதவுவது உழவுத் தொழிலே எனலாம். கிராமங்களில் கத்தரி, வெண்டை, அவரை, கீரை வகைகள் போன்ற காய்கறிகள் பயிரிடுவோரும், கரும்பு, வாழை, வெற்றிலைக் கொடிக்கால் பயிரிடுவோரும் ஆக உள்ளனர்.

ஐயாற்று மக்களில் .பெரும்பகுதியினர் விவசாயிகள் கடைவைத்திருப்போரும் மிராசுதாரர்களாகவே இருப்பர். தினச் சந்தைபோலக் காய்கறி மார்க்கெட்டில் அன்றாடம் புத்தம்புது காய்கறிகளை கிராம மக்கள் கொணர்ந்து விற்பர்.

திருவையாறு நகரைப் பொறுத்தவரை பிராமணர்களுக்கு ஒரு முக்கியமான ஊர் எனலாம். அக்ரஹாரங்கள் உள்ள தெருக்கள் பல உள்ளன. திருவையாற்றில் வைதிக பிராமணர்கள் மிகுதி. வேத, வித்பன்னர்கள் இங்கிருந்து டில்லி, பம்பாய், சென்னை போன்ற இடங்களுக்குச் சென்று மந்த்ர, யக்ஞ, வைதிக காரியம் செய்யும் சாஸ்திரிகள் பலர் உண்டு. கல்வி அறிவிற் சிறந்தவர் பலரும், பிற மாநிலங்களில் உயர்ந்த உத்தியோகத் துள்ளனர். ஓய்வு பெற்றவர்கள் திருவையாற்றைச் சுகவாசத் தலமாகக் கொண்டு விரும்பி வந்து வாழ்கின்றனர். காரணம் காவிரியில் நீராடலாம், அன்றன்று பசிய காய்கறிகள், தயிர், பால், நெய், அரிசி பஞ்சமின்றி கிடைக்கிறது. மாலையில் அருமையான திருக்கோயில் தரிசனம்; நிம்மதியான வாழ்க்கை காசி போல் இறப்பது இங்கு விசேடம் எனக் கருதி இறுதிக் காலத்து இங்குவந்து தங்குவோர் பலருண்டு. யாவற்றிற்கும் வசதி வாய்ப்பே காரணமாகும். இங்கு எல்லா ஊர்களுக்கும் எப்பொழுதும் செல்ல பஸ் போக்குவரத்து உள்ளது. சென்னை, சேலம்,திருச்சி, கும்பகோணம் ஆகிய ஊர்களுக்கு திருவள்ளுவர்,சோழன், தீரன், அண்ணா, தனியார் பஸ்கள் யாவும் செல்கின்றன.

சமுதாய வழக்கு

ஊர்கள் தோறும் மொழிவழக்கு வேறு, பழக்க வழக்கங்களும் வேறு. அவ்வகையில், விவசாயிகள் போரடிக்கும் காலத்து ஒரு வழக்கினைப் பின்பற்றி வருகிறார்கள். இதனை

(Madras District Gazetteerrs Thanjavur Vol I 1906) குறிப்பிடும்போது கால்நடை வழிபாடு எனக் குறிப்பிடுகிறது. அதாவது "எழுகளம்" என்று சொல்வார்கள். போரடி முடிந்தால் சாகுபடி வேலை முடிந்தது என்று பொருள். ஆனால் முடிந்தது என அமங்கலமாகச் சொல்லாமல், அடுத்தடுத்த ஆண்டும் களத்தில் போரடி எழ வேண்டும் என்ற பொருளில் எழுகளம் என மங்கள வழக்காகச் சொல்வது மரபாக உள்ளது. அதாவது போரடிக்கும் இடத்தில் திருஷ்டி கழிய ஒரு சிறுவன் வயிற்றில் நெல்லைக் கட்டி, முன்னால் எருதுகள் சுற்றி வர அதன்பின்னால் இவனது கால்களைப் பிடித்து இழுத்து வருவார்கள். ஒருவர் கூடையில் நெல்லை வைத்துக் கொண்டு பொலியோபொலி எனக்கூறித் தூவி வருவார் சிறுவனுக்கு வயிற்று நெல் அவனைச் சாரும். இறுதியில் களத்துமேட்டிற்குத் தேங்காய் உடைத்துப் பழத்துடன் சூடம் காட்டி வணக்கம் செய்து, யாவருக்கும் சந்தனம், வெற்றிப்பாக்கு வழங்கி மங்களகரமாக முடிப்பர்.

திருவையாறு விவசாயச் சிறப்புமிக்க தலமாதலின் 'பொங்கல் விழா' கிராம மக்களால் சிறப்புறக் கொண்டாடப் பெறும். அதுசமயம் இங்கு கரும்புக் கட்டுகளும், வாழைத் தார்களும், பொங்கல் பானைகளும் ஏராளமாக விற்பனையாகும். வைதிகப் பிராமணர்கள் வாழும் பகுதியாதலின் தைப் பொங்கல் நாளை, 'திருவையாறு மகரசங்கராந்தி' என்றே பஞ்சாங்கத்தில் போட்டிருக்கக் காணலாம். காவிரிக் கரையில் உத்திராயண புண்ணியகாலமாகச் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவர். திருவையாறே இப்புண்ணிய காலத்திற்குச் சிறந்ததாகக் கூறப்படுவதால் வெளியூரிலிருந்து ஏராளமானோர் வந்து கோதானம், தீபதானம் செய்து பொங்கலிடுவர். அன்று ஐயாறப்பர் தீர்த்தம் கொடுப்பர். மறுநாள் சுவாமி மாமியார் வீடு செல்வதாக 'பாரி வேட்டை' மாடு விரட்டிக்கொண்டு திருநெய்த்தா ;ாம் செல்வார். அவரவர் வீட்டு மாடுகளும் சுவாமி பின்னர் செல்லும் வழக்காறு உள்ளது.

## கட்டிடக்கலை அமைப்பு:

திருவையாற்றில் பெரும்பாலான கட்டிடங்கள் மண்டபக்கட்டு அமைப்பு உடையனவே. தஞ்சை மராட்டிய

மன்னர் கால அரண்மனைக் கட்டிடங்கள் 5 உள்ளன. அக்காலக் கட்டிடக் கலை மரம், இரும்பு, பயன்படுத்தாதவாறு பெரிய பெரிய தூண்களைக் கொண்டு கூண்டுக்கட்டிடங்களாக மாட மாளிகை களை எழுப்பியுள்ளனர். காற்றோட்டம், வெளிச்சத்திற்கு நடுவில் முற்றமாக வாசலாக அமைத்திருப்பர். பெரும்பாலான கட்டிடங்கள் சத்திரங்களாக நீண்ட கூடஅமைப்போடு எத்தனை பேர் வேண்டுமானாலும் அமர்ந்து சாப்பிடும் வகையில் உள்ளன. அனைத்து இனத்தார்க்கும் சத்திரங்கள் உள்ளன. இதிலொரு உண்மை இருக்கிறது. தர்மம் என்ற பெயரில் இருந்தால் விற்க வாங்க அஞ்சுவார்கள். தலைமுறை தலைமுறையாகத் தம் குடும்பம் வம்ச விருத்தியோடு இருக்கும் என்ற நல்ல எண்ணத்தால் பெரியவர்கள் செய்த வழி இது.

மக்கள் பண்பாடு:

ஐயாற்று மக்களிடம் கடவுள் பக்தியும், ஈகைக் குணமும் நிறைந்திருந்தது என்பதற்குச் சான்று: தெருவிற்குத் தெரு, ஊருக்கு ஊர் பல்லக்குகள் இறங்கும் மண்டபங்கள் நிறையவுள்ளன. அவை இன்று வீடுகளாக மாறி வருகின்றன. ஐயாறப்பர் விழாக் காலத்தே வரும்பொழுது பட்டுசார்த்தி வழிபாடு செய்து, அடியார்க்கு அன்னதானம் செய்வர். சித்திரை மாதம் ஏழூர் விழாக்காலத்தே கிராமத்து மக்கள் ஆர்வத்தோடும், பக்தியோடும் அவரவர் வீட்டு விழாப்போல தெருக்களை அலங்கரிப்பதும், வீட்டு முன் பந்த லிட்டு வருவோர்க்குச் சந்தனம், பழம் கொடுத்து வரவேற்பதும், மக்களது பண்பாட்டுணர்வைக் காட்டுகிறது. வீடுகளில் திண்ணை வைத்து கட்டியுள்ள நோக்கமும் வருவிருந்து புரக்கும் பண்பாடேயாகும்.

திருவையாற்றில் சத்திரங்கள் நிறைய இருக்கின்றன. மற்ற ஊர்களில் இல்லாத அளவு திருவையாற்றில் மட்டும் சத்திரங்கள் அதிகம் இருப்பானேன்? அதன் நோக்கம் என்னவாயிருக்கும்? என்பது பற்றிச் சற்று ஆய்வோம்:

நம் முன்னோர்கள் செய்து வைத்த செயற்பாடுகள் யாவும் பொருள் பொதிந்தவையாகத்தான் இருக்கும். காரணம் இன்றி காரியம் நிகழாது. ஏதேனும் ஒரு உயர்ந்த உண்மைப் பொருள் பொதிந்து காணப்படும்.

தானங்களில் சிறந்தது அன்னதானம்; ஏழைகள், ஏதிலார் இவர்களுக்கு இடுவது இறைவனுக்கு இடுவதையொக்கும். பசியென்னும் பாவி, பசிவந்திடப் பத்தும் பறந்துபோகும் என்பார்கள். காய்ந்த குடலில்ஒரு கவளம் உணவு விழுமேயானால் உள்ளம் மகிழும்; ஊசலாடிய உயிர் மகிழும். அந்நேரத்து உணவிட்டாரை உளப்பூர்வமாக வாழ்த்துவர். "புண்ணியவான் குடும்பம், கிளையோடு கோடிகோடிகாலத்து வாழணும்" என்ற வாழ்த்து சாதாரணமானதல்ல; தெய்வீகம் வாய்ந்ததாகும். இதற்கு ஈடாகக் கோடிப்பணம் கொடுத்தாலும் ஈடாகாது. சாதாரண சராசரி மனிதன் சொல்கின்ற வாக்கிற்கே இவ்வளவு பலனிருந்தால் வேத சாத்திரங்களைக் கற்று சதா சர்வ காலமும் தியானம், தபம், ஜெபம் செய்கின்ற சத்துக்கள் வாக்கு எவ்வளவு பலனளிக்கும்! அதுவும், பக்திபூர்வமாக ஏகாதசி விரதமிருந்து மறு நாள் துவாதசியன்று வெறும் குடலில் இறைமை கலந்து தியானித்த வயிற்றில் பௌர்ணை செய்ய சீவன் சிவன் ஆகிய இரண்டற்கும் சம ஆராதனை செய்வதால் சிவன் உளமும் மகிழ்ந்து அவர்களும் மகிழ்ந்து வாழ்த்தும் வாழ்த்திற்குப் பலன் ஏராளம். என்றேனும் ஒருவர் வந்தால் போதும்; அதனால் 100 பேருக்குச் செய்த பலன் கிட்டுமே! ஒரு பிராமணருக்கு இடுவது இவ்வளவு பலன் என்றால் பல பிராமணர்களுக்கு, வேதோத்தமப் பிராமணர்களுக்குச் செய்வது தனி மனிதனுக்குச் செய்வதாகாது என்பது இதன் பொருள்: இறைவனுக்குச் செய்வதாகவேயாகும். இறைவனே அப்பிராமணர் வடிவில் வந்து உணவு உண்டு மகிழ்ந்து வாழ்த்துவதாகப் பொருள், உண்மையும் அதுவே. 'அந்தணர் என்போர் அறவோர்', அதனால்தான் ஐயாற்றில் 35 சத்திரங்களில் பிராமணர்களுக்கு உணவிட்டு தம் வம்ச விருத்திக்கு வழிதேடிக் கொண்டார்கள். மற்ற இனத்தார்க்கும் ஏழைகளுக்கும் உணவிடுதல் புண்ணியம் என்றாலும், பிராமணர்களுக்குச் செய்வதே சிறந்தது என்பதன் நோக்கம் மேற்குறிப்பிட்ட காரணங்களேயாக வேண்டும். இக்காலத்தே, குத்தகைவாரச் சட்டம் காரணமாக நெல் அளப்பாரும் இல்லை அன்னதானம் செய்வாரும் இல்லை என்றாயிற்று. மேலும், மக்கட்பெருக்கம் காரணமாக அதே இடத்தில் பலரும் வாழ வழி வகை செய்யுங்கால் ஒரே இடத்தில் 5 குடும்பம், 10 குடும்பங்கள் என்கின்ற பொழுது

அவரவர் வாழ்ற்கேற்ற அமைப்பினைத் தந்து செய்யும்பொழுது இடங்கள் சுருங்கிவிட்டன. ஐயாற்றின் கட்டிடக்கலை தனித் தன்மை வாய்ந்தது.

கல்யாணிமால் போன்ற கட்டிடங்கள் தூண்களின் சுமையில் சமதளஓட்டாக மரம் இரும்பு சம்பந்தம் இல்லாமல் இரண்டு மூன்று அடுக்கு மாளிகைகளைக் கொண்டு இருப்பது அக்கால கட்டிடக் கலையின் உயர்விற்குச் சிறந்த சான்றாகும். வெல்லமும் முட்டையுமிட்டு அரைத்த சுண்ணாம்பினால் கட்டி இருக்கும் கட்டிடத்தில் இன்று ஒரு ஜன்னல் வைக்க இடிக்க முயன்றால் சிறிது கூட இடிக்க முடியவில்லை, அவ்வளவு உறுதியாகவுள்ளது. இதன் வலிமைக்கு இக்கால காங்கிரேட் ஒட்டுகள் ஒரு சிறிதும் ஈடுகொடுக்க முடியாது எனலாம்.

நேற்று, இன்று, நாளை:

நேற்று: இன்று பெரிய நகரங்களாக உள்ள ஊர்கள் யாவும் காலப்போக்கில் படிப்படியாக வளர்ச்சி பெற்றனவே. ஆனால் திருவையாறு மட்டும் பழைய கட்டிடங்கள் அமைப்பில்தான் இன்றுமுள்ளது. புதிய மாற்றங்கள் ஏதும் பெறவில்லை. சொல்லப் போனால் பழைய அமைப்பிலிருந்த வசதிகூட இன்றில்லை எனலாம். உதாரணமாக, ஆதியில் பாதாள சாக்கடை கழிவு நீர் வடிகால் (drinage) இருந்துள்ளது. இன்று சாலைப் புதுப்பிக்கும் பகுதிகளில், தோண்டும்போது பார்த்ததில் விசாலமான சாக்கடை 7 அடி ஆழத்தின் கீழ் செங்கல் கட்டிடத் தாலமைத்து, மேலே கருங்கல் பலகை போடப்பட்டுள்ளது தெரிய வந்தது. அக்கழிவு நீர் விளாங்குடி சாலை, அந்தணர்குறிச்சி சாலை, மேலவட்டம் சாலை வழிகளில் போக்கிருந்துள்ளது. மழைநீர் சிறிதும் தங்காமல் கிழக்குமேற்கு வாய்க் கால்களில் சென்று சேறும்படி அமைத்துள்ளனர். குளங்களுக்கு பாய்கால், வடிகால் வசதியிருந்தது.

இன்று: காலப்போக்கில் அடிக்கடி சாலைபோடும்போது சரளைக் கற்களால் உயர்த்திஉயர்த்தி ஊர்மேடாகவும்,

மிகப் பழைய வீடுகள் பள்ளத்திலும் இன்று இருப்பதைக் காணலாம். தஞ்சையிலிருந்து திருவையாறு வரும் பொழுதே பார்த்தால் தெரியும்; சுமார் 1 கி.மீ. உயரம் மேடிட்டுள்ளது திருவையாறு என்பது தெரியவரும்.

கழிவு . நீர் போக்கு முன்பிருந்ததுபோல பாதாள சாக்கடைத் திட்டம் திரும்பவும் திருத்தி அமைக்கப் பெறாத காரணத்தினால்தான் கொசுத் தொல்லை, யானைக்கால் நோய் போன்றவை வரும் சுகாதாரக் குறைவிற்கு இடமேற்பட்டுள்ளது.

நாளை; எனவே, பாதாளசாக்கடை, படுக்கைவசதி கொண்ட பெரிய மருத்துவமனை, தீயணைப்பு நிலையம், மின்சார தர்மல்பவர்ஹவுஸ், இரயில் நிலையம் போன்ற வசதிகள் இன்றியமையாத் தேவைகளாகும். ஊருக்கு நல்லன செயல் வேண்டும். முன்பிருந்தது போல அவுட்ஏஜென்சி முறையிருந்தால் கூட, மக்கள் ரயில் பயணம் செய்ய வசதியாகயிருக்கும் அல்லவா?

நகர்வலம் வருவோம்வாருங்கள்.

கீழவீதிவடகிழக்கு (ஈசான்யம்)/ செண்பகப்பேட்டைத் தெரு :திருவையாற்றுச் சிறப்பிற்குரிய சான்றோர்கள்:

தருமபுர ஆதீன மடம். அதில் ஓர் நந்தவனம் உண்டு. கோயிலுக்கு வேண்டிய செண்பகமலர்கள் நிறையப் பூத்திருக்க பூசைக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் உண்டானது பெயர் செண்பகப்பேட்டைத்தெரு எனலாம். பெரிய நந்தவனம் உண்டு. இத்தெருவில் மடத்தைய்யா வீடு, இலக்கண விளக்க ஆசிரியர் சோமசுந்தர தேசிகர், சித்தவைத்திய நிபுணர் சிங்கப்பெருமாள் வைத்தியர் ஆகியோர் இருந்தனர். தெருவின் முன்னர் காவல் நிலையமும், எதிர்மூலையில் மாதாக் கோவிலும் உள்ளன. கீழ வீதியில் எமது ஆசான் பேராசிரியர் கு. சோமசுந்தர தேசிகர் அவர்கள் வாழ்ந்தார்கள்.

பாவாசாமி அக்ர்ஹாரம்:

'அக்ரேஹரிஹரவ்'என்பதுதான் 'அக்ரஹாரம்' ஆயிற்று. அதாவது வீதியின் இருமுனைகளிலும் சிவ,விஷ்ணு இருப்பர்.

ஈசான்யத்தில் சிவனும், மேற்கே பெருமாளும் கோயில் கொண்டிருப்பது மரபு. (உதாரணம்கூத்தூர்,மகாராஜபுரம்)

'சேதுபாவா சாமிகள்' எனும் மராட்டிய மன்னர் சிவாஜியின் குரு அமைத்த அக்ரஹாரம். 8,9,10 எண்ணுள்ள வீடுகள் அவரது அரண்மனையாக இருந்ததால் பாவாசாமி அக்ரஹாரம் ஆயிற்று. துங்கபத்ரையில் இருந்து கொணர்ந்த ஆஞ்சநேயரைப் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டினார். காயத்ரியின் 24 அட்ஷரம் போல், இதற்கு 24 வீடுகளை கொண்டதால் 'காயத்ரிபுரம்' என்றும் கூறுவர். முதல் வீட்டில் இசைமேதை மகாவைத்தியநாதய்யரும், அவரது தமையனார் ராமசாமி சிவமும் வாழ்ந்தார்கள். "பெரிய புராணக் கீர்த்தனைகள்" எனும் நாயன்மார் வரலாற்றை, இசைப் பாடல்களாகப் பாடி வழங்கியவர்கள். பாரதி பாலகிருஷ்ணய்யர் பாரதி பாடல்களை உணர்சிததும்பப் பாடியவர் வீடு.

.யுத.ஜி.சுப்ரமண்ய அய்யர் காங்கிரஸ் ஸ்தாபகர், சுதேசமித்திரன், இந்துப்பத்திரிக்கை ஆரம்பித்து, அதன் ஆசிரியராக இருந்தவர். அரிய மேதாவி, தலைசிறந்த எழுத்தாளராகப் பெரும் புகழ் பெற்றவர் வாழ்ந்த தெரு.

.சசிராமய்யர் செந்நெல் அம்மன் திருவருள் பெற்று 'திரிபுரா ரகசியம்' என்ற வடமொழி நூலைக் கொணர்ந்தவர்.

.அண்ணாசாமி சிரௌதிகள் திருக்கணித பஞ்சாங்கமுறை தயாரித்தவர்.

பரமஹம்ச வாசுதேவேந்திர சரஸ்வதிகள் எனும் அத்வைத சந்நியாசிகள், 'விசாரசாகரம்' என்ற இந்தி அத்வைத நூலை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தவர். (வீடு 21)

.சிவப்பிரகாச ஆனந்தகிரி ஸ்வாமிகள் சிறந்த ராஜ யோகி. தமிழ் உரைநடையில் ஆனந்த ரகசியம், ஆரோக்கிய ரகசியம், சாந்தி யோகம், யோகசிகிச்சை, ராஜயோகம் போன்ற ஒப்பற்ற நூல்களை வெளியிட்ட, யோகாச்சார்யா பெங்களூர் சுந்தரம் அவர்களின் குருநாதர் (வீடு எண் 19)

'ஹரிகதாப்ரவீண', பிரம்மஸ்ரீ டி.அண்ணாசாமி பாகவதர் அவர்கள் சிறந்த சங்கீத மேதை. அரிதா விற்பன்னர் பெரிய சங்கீத வித்வான்களாற் பாராட்டப்பெற்றவர் வாழ்ந்த தெரு தஞ்சாவூர் சமஸ்தான வித்வான் பதினைந்து மண்டபம் துரைசாமி ஐயர், சங்கீத மேதை பட்டணம் சுப்பிரமணிய அய்யர், கோபால கிருஷ்ண பாரதியார், திருநெய்த்தானம் பஞ்சு பாகவதர் (ஸ்ரீ தியாகய்யரின் சிடர்)சங்கீத பூஷணம் பேராசிரியர் சபேசய்யர் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) வித்யா சுந்தரி பெங்களூர் நாகரத்தினம்மாள் (ஆகியவர்கள் திருவையாற்றின் பெருமைக்குப் பாடுபட்டவராவர்). திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் (அண்ணாசாமி பாகவதர் குரு)

*திருவையாறுத் தல மகிமைச்சுருக்கம் தருமை ஆதீனம் 1937 பக்கம் 11*

எதிரில் வடக்கு மாடவளாகம்

திருக்கோயில் திருமதில் சார்ந்த வடக்குப் பகுதியே வடக்கு மாடவளாகமாகும். இத்தெருவில் டாக்டர் பி.எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி எம்.ஏ. பி.எச்டி., அவர்கள் தமிழில் முதன் முதல் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ் இலக்கண நூலை ஆங்கிலத்திலும் வடமொழியிலும் இணைத்து அவர் எழுதிய நூல்கள் பல. திருவையாறு அரசர் கல்லூரியில் முதல்வராக இருந்தவர்.

கீதாசாரிய பண்டித ஸ்ரீ லெக்ஷ்மணாச்சாரியார் கீதைக்கு "திரிமதபாஷ்யம்" (துவைதம், அத்வைதம், விசிட்டாத்வைதம்) எழுதிய மேதை மாத்வர் சிறந்த சொற்பொழிவாளர். வேதமூர்த்தி ஸ்ரீ முத்து கன பாடிகள் யஜுர் வேதத்தைத் தழைக்கச் செய்தவர், கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள், அவரது மூலதனத்துடன் வேதபாடசாலை நடத்தியவர். வேதகம விற்பன்ன ஸ்ரீ விசுவநாத கனபாடிகள் யஜுர் ஆகம பாடசாலை ஆசிரியர்.

'பிராசாத சட்ஸ்லோகி' என்ற வடமொழி அறுஸ்லோகங்களைக் கொண்ட நூலுக்கு வியாக்யானம் செய்தவர் ஐயாற்று சிவாச்சாரியார் என்பர். இந்நூல் ப்ராசாத தீபம், அகவல், சட்கம், மாலை தமிழ்நூல்களுக்கு முதல் நூல. இவ்வாறே 'ருக்' வேதத்தைத் தமிழ்ப்படுத்திய ஆன்றோர் நம் இவ்வூரினரே என்பர்.

ஸ்ரீபாலகிருஷ்ணசாஸ்திரிகள் :

"வேள்வி செய்வதில் சிறந்த வாஜபேயி அவரிடம் ஏககாலத்தில் 60 பரமஹம்ச சந்நியாசிகள் வேதாந்த பாடம் கேட்டனர்" என்று காஞ்சி முனிவரால் புகழப்பெற்றவர். ஸ்ரீ யக்யேஸ்வர தீட்சதர் யாக காரியங்களில் வல்லவர். முத்து சிரௌதிகள், வடக்கு வீதி குரு சிரௌதிகள் குடும்பதநவர்கள் ஸ்ரீ ஹரதத்த சிவாச்சாரியாருடைய சிஷ்ய பரம்பரையினர் மந்திர சாஸ்திரத்தில் சிறந்த புலமையும் சித்தியும் பெற்ற சீடர்களாவர். திருநெய்த்தனம் டி.எஸ்.எஸ்.ராஜன் மத்திய அமைச்சராக இருந்தவர்.

கல்கி, ஆனந்தவிகடனில் கதை, கட்டுரை எழுதிப் புகழ்பெற்ற (திங்களூர்) வ.ரா. எனப்படும் வ.ராமசாமி அய்யங்கார். மகாகவி பாரதியைத் தமிழ் உலகிற்கு வெளிப்படுத்தியவர் இங்கு வாழ்ந்தார். கவிஞர் திரிலோக சீதாராம் வாழ்ந்ததும் இங்குதான்.

100 ஆண்டுகளுக்கு முன்பு, இங்கு சிர்வாணி விலாச முத்திராட்சராலயம் எனும் அச்சுக்கூடத்தை நிறுவி "சிவாகமம்" போன்ற வடமொழி நூல்களையும், அதன் தமிழ் மொழி பெயர்ப்புக்களையும் வெளியிட்டது. ஒழிவிலொடுக்கம் என்ற சித்தாந்த நூலுக்கு இராமலிங்க சாமிகள் எழுதிய உரைநூலையும் முதன் முதலில் வெளியிட்டது.

கீழவீதி : சைவர்கள் வாழ்பகுதி

கும்பகோணம் சாலை, தேரடியை அடுத்து தியாகராஜா காலனி, அடுத்து செவ்வாய்க்கிழமைப் படித்துறைத் தெரு இப்பெயர் சரியல்ல, செல்வப்பநாயக்கன் படித்துறைத் தெரு என்பதே சரி. (படித்துறை வரிசையில் விளக்கம் உள்ளது காண்க). இத்தெருவில், துர்க்காபாய்அம்மி சத்திரம் பெரிதாக உள்ளது. மதுஷ்ர காளி அம்மன் கோவில் உள்ளது. அடுத்து தெற்கு வீதி சினிமாக்கொட்டகை பேரூராட்சி அலுவலகம் உள்ளது. அதனை அடுத்து கீழமடவாளகம் : இதில் நாதஸ்வரக் கலைஞர்கள் வசிக்கிறார்கள். எதிரில் திருமஞ்சனவீதி:

அருள்மிகு ஐயாறப்பருக்கு, காவிரியிலிருந்து அபிடேகத் தீர்த்தம் எடுத்து செல்லும் தெருவே திருமஞ்சன வீதியாகும். இங்கு,

கர்நாடக இசைமேதை சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் இல்லம் தேசிய நினைவாலயமாக உள்ளது காணவேண்டிய ஒன்று.

தெற்கு வீதி : இதில், அரசர் கல்லூரி, ராஜாமிராசுதார் அரசு மருத்துவமனை, கடைத்தெரு உள்ள பகுதி

புஷ்ய மண்டபத் தெரு : தெற்குக் கோபுரவாயில் எதிரில் உள்ள காவிரி தீர்த்தக் கட்டம் புஷ்ய (தை) மாதச் சங்கராந்திக்குக் கோதானம், பூதானம், தீபதானம் இக்காவிரிக் கரையில் கொடுத்தல் மகாபுண்ணியம் எனக் கருதி வெளியூரிலிருந்து பலரும் வந்து செய்வர்.

மராட்டிய மன்னர் குடும்பத்தினருக்கு சிவுபானா பட்கோசாமிராவ் என்பவர் புரோகிதராக இருந்தார். அவருக்கு சிவாஜி மன்னரால் கட்டிக் கொடுத்த பெரிய மாளிகை இங்கு காணலாம். இத்தெருவில் அழமான, பழமையான மண்டப வீடுகள் கட்டிடக்கலைக்குச் சான்றாகவுள்ள பலவற்றைக் காணலாம். தெற்கு வீதி இருபுறமும் கடைகள், உட்புறம் காய்கறி மார்க்கெட், நடுவில் பெரிய கூடம், வீரர்கள் குஸ்தி பழகுமிடமாக இருந்தது. வீராசாமி வஸ்தாத் (ஜெட்டி) ப்ரம்பரையினர் இருந்தார்கள். மேலவடவாளகம் : இத்தெருவில் சிவாச்சார்யார்கள் மிகுதி. தெரு முகப்பில் கத்திரிக்காய்ப் பிள்ளையார்கோவில் உள்ளது. இது கத்திரிக்காய் வியாபாரம் செய்தோர் சேகரித்த உண்டியலால் கட்டிய கோயிலாகும். இதனை அடுத்து ஆண்டான் ஸ்வாமி சமாதி கோயிலும், ஆதிபராசக்தி மன்றமும் உள்ளன.

ஓடத்துறைத் தெரு : தென்புறம் மராட்டிய மன்னன் சிவாஜியால் கி.பி.1846-47ல் காவிரியில் பாலம் கட்டப்பெற்றது. பாலம் இல்லாத காலத்து காவிரியைக் கடக்க ஓடம் நிற்கும் துறையே ஓடத்துறையாயிற்று. பாலத்தின் பக்கம் 15 மண்டபத் தெரு (மேற்கில்) உள்ளது. ஓடத்துறை தெரு நடுவே, பேருந்து நிலையமும், எதிரே ஸ்ரீனிவாசராவ் மேனிலைப்பள்ளியும், சி.நா. சத்திரமும் உள்ளன. இது தஞ்சை மன்னரின் அரண்மனையாக இருந்ததை 110 ஆண்டுகட்கு முன் ஆங்கிலேயரிடமிருந்து நகரத்தார் வாங்கி சத்திரமாக்கினர். இதில் பெரிய கூடங்கள் உள்ளவற்றைக் காண்போமேயானால் நம்மை வியப்பில் ஆழ்த்தும். அடுத்து ஈ.வே.ரா. காய்கறி மார்க்கெட்

நஸர் மஹால் அரண்மனை : கும்பகோணம், தஞ்சாவூர், திருக்காட்டுப்பள்ளி முக்கூட்டுச் சாலை முச்சந்தியில் மிகப்பெரிய அரண்மனை, இரண்டு அடுக்குகளைக்கொண்ட 'நஸர்மஹால் அரண்மனை உள்ளது. இது, வீதிக்கு அழகு தருவதாய் மையப்பகுதியில் அமைந்துள்ளது. அக்காலத்தே அரச மகளிர் வந்து, வீதிவலம் வரும் ஸ்வாமியைத் தரிசனம் செய்வார்கள். இப்போது கடைகளும், கல்யாணமகாலுமாக மாறியுள்ளது. பழைய கோர்ட்டு சந்து எனும் பள்ளிச்சந்து வடக்கே முச்சந்தியில் உள்ளது. இங்கு கிராம பஞ்சாயத்து கோர்டு எண் : 4 எம் இல்லிலிருந்து செயல்பட்டது. இதில் பஞ்சாயத்துத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் எஸ். பொன்னுசாமி பிள்ளை, டி.எஸ். கோபாலசாமி செட்டியார், வேணு கோபால் நாயுடு, கணேசய்யர், சிதம்பர மூப்பனார் ஆகிய 5 பேர் கொண்ட கிராம மத்திசக் கோர்ட்டாக நீதிமன்றக் கிளையாகச் செயல்பட்ட இது 1943ல் கலைக்கப்பட்டது. பழைய கோர்ட்டு சந்து பெயர் மாறி வன்னியர் வாழ் பகுதியாகவுள்ளது. இங்கு சிர்திருத்த விநாயகர், முனியாண்டவர் கோயில்கள் உள்ளன.

தெற்கு வீதியில் : வங்கிகள், காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, யூனியன் ஆரம்பப் பள்ளி, வண்ணாரச் சந்து, ஆகியவை உள்ளன. (வீதியின் வடபுறம்) மருதமடத் தெரு இதில் மதுரை ஞானசம்பந்தர் ஆதீன மடம் உள்ளது. பச்சையப்பன் கட்டளை மகேஸ்வர பூஜை நடைபெற்ற இடம் (பச்சையப்பர் கல்வெட்டில் இது உள்ளது) மதுரை மடம் என்பதே மருத மடமாயிற்று. தெருவின் மேல்புறம் இடையே செட்டித் தெரு, வெங்கலநாயக்கன் தெரு உள்ளது. இதன் பெயர் காரணமறிய முயன்றபோது ஒரு சுவையான சரிதமே கிடைத்தது. அடுத்த பக்கம் பார்க்க. தெருவின் கீழ்ப்புறம் தமிழர் மேட்டுத் தெருவும் இடையே ராஜாத் தெரு எனும் சந்து ஒன்றுமுள்ளது. தெற்கு வீதியின் நெடுக்கு பஜனை மடம், காளியம்மன் கோவில், கல்கி அகரஹாரம், பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் செல்லும் பாதை, திருக்காட்டுப்பள்ளி சாலையில் குற்றவியல் நீதிமன்றம் உள்ளது. (தெ) பீமராயபுரம் எனும் சாமாராயர் அக்ரஹாரம், இதில் ராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவனம் உள்ளது. வீதியில்

சுடுகாட்டுச் சாமி மடம், தம்பலசாமி மடம், ஆட்கொண்டார் சாமி மடம், எனும் 3 மடங்கள் உள்ளன.

மேலவீதி

சந்தி விநாயகர் கோவில், சிறப்பு மிகு அருள்தரு மாரியம்மன் கோவில் உள்ளது. சக்தி வாய்ந்த பராசக்தி அன்னை; வேண்டுவார் வேண்டும் வரம் அருள்கிறாள். அருள்மிகு திரௌபதி அம்மன் கோவில், மும்மூர்த்தி விநாயகர், தண்டபாணி, காளி கோவில் இவையாவும் பழமை மிகு கோயில்களாகும்.

வடக்கு வீதி

*துண்டராயன்பேட்டை (தொண்டி) வடமேற்கு மருதவாணன் பேட்டை வடக்கு வீதியின் மேலைக்கோடிக்கு வடக்கே உள்ளது. கிறித்துவர் உள்ளனர். வடம் போக்கியும், மேற்கே பங்களாத் தெருவும் உள்ளன.

வடக்கு வீதி இடையில் தென்புறம் நல்ல தண்ணீர் கிணற்றுத் தெரு - இக்கிணறு மிக்க ஆழமுடையது. ஆடி 18 ஆம் பெருக்கு அன்று பொங்கி வழியும் சிறப்புடையது. ஊர் மக்களுக்கு நீர் வழங்கும் கிணறாகும். பக்கத்தில் உப்புக்குட்டை சந்து உள்ளது.

வடக்கு வீதியிடையில் தென்புறம் பிராமண மேட்டுத் தெரு : இதில் அருட்சக்திவாய்ந்த அபீஷ்ட விநாயகர், காசிவிசுவநாதர், விசாலாட்சி திருக்கோயில் உள்ளன. கோயில் எதிரில் சமுத்திர தீர்த்தம் உள்ளது. இதில்தான் ஆடி அமாவாசையன்று அப்பர் எழுந்தார். அதனால் அப்பர்குட்டை என்றும் கூறுவர். வீதியின் இடையில் வடபுறம் அந்தணர் குறிச்சி : நந்திகேஸ்வர் பிறந்த இடம். அதன் எதிரில் தென்புறம் மேலமடவிளாகம் உள்ளது. வீதி நெடுக்கில் கருவூலம், கான்வெண்ட் பள்ளி, வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவை உள்ளன. வீதி கோடியில் வடபுறம் விளாங்குடி. சாலை, ஐயனார் கோயில் தெரு, முனையில் ஏழாம் திருநாள் மண்டபம், சந்திமுனை விநாயகர் போலீஸ் ஸ்டேஷன், செண்பகப் பேட்டைத் தெரு ஈசான்யத்தில் நாம் தொடங்கிய இடத்திற்கே வந்து சேர்ந்துவிட்டோம்.

* திருவையாற்றுத் தர்மசம் வர்த்தனி மாலை, தருமபுர ஆதீன வெளியீடு 1979, பக்கம் 4 [திருவையாறு பற்றிய உ.வே.சா. குறிப்பு]

தனிச்சிறப்பு

இந்த ஆய்வில் கிடைத்த ஓர் உண்மை : ஊரின் நான்கு மூலையும் எல்லையாக பேட்டைகள் உள்ளன. தென் கிழக்கே (தொண்டி), இராயன்பேட்டை, தென் மேற்கே வைத்தியநாதன் பேட்டை, வடமேற்கே, மருதவாணன்பேட்டை, வடகிழக்கே செண்பகப் பேட்டையாகும். இவ்வாறே எல்லைத் தெய்வங்களாக நான்கு திசைகளிலும் கோயில்கொண்டுள்ள கிழக்கே சப்த கன்னியர், அங்காளம்மனும், தெற்கே மதுர காளியம்மனும், மலையாள மாரியம்மனும், மேற்கே ஆதிபராசக்தி மாரியம்மனும், திரௌபதியம்மனும், வடக்கே ஐயனாரும், பிடாரியு மாகவுள்ளனர்.

வெங்கல நாயக்கன் தெரு (செட்டித் தெரு) சுவையான சரிதம் :

செந்தமிழ் நாடாகிய சோழ நாட்டினைத் தெலுங்கர்களாகிய விஜய நகர நாயக்கர்கள் வந்து தஞ்சையில் கி.பி. 1532-1673 வரை ஆட்சி செய்ததும், பீஜப்பூர் சுல்தான் கீழிருந்த மராட்டியர்கள் வந்து தஞ்சையில் கி.பி. 1676-1855 வரை ஆட்சி புரிந்ததும் வியப்புக்குரியதாயினும் அவர்களால் கலைகளும், நாகரீகமும் பெருகிப் புதுவளம் பெற்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

*அம்முறையில் தஞ்சை நாயக்க அரசர் வரிசையில் தலைசிறந்த மன்னராகத் திகழ்ந்த விஜயராகவ நாயக்கர் (கி.பி. 1633-1672) சிறந்த கலைஞர், சிறந்த புலவராகவும் திகழ்ந்தவர். அவர் ஒவ்வொரு நாளும் காலை 9 மணிக்கு 12000 பிராமணர்களுக்கு உணவளித்த பின்னரேதாம் உணவு உண்ணும் வழக்கமுள்ளவர். நாள்தோறும் தஞ்சையிலிருந்து 30 கல் தொலைவிலுள்ள திருவரங்கத்திற்குப் பல்லக்கில் ஏறிச் சென்று பெருமாளை வணங்கிவிட்டு வந்து உணவு கொண்ட வைதிக நெறியினர். அவர், தானும் வெண்கலத்தினால் செய்த உருவமான வெண்கலப் பசுவின் வயிற்றில் நுழைந்திருந்து வெளிவந்து தாம் மறுபிறப்படைந்ததாக நம்பியவர்.

---

* நாயக்கர் வரலாறு : பக்கம் 281 அ.கி.பரந்தாமனார்,
பாரி நிலையம், சென்னை, 1966

அதனால் சாத்திர நம்பிக்கை மிக்க இவரை, புதுமை செய்த இவரை மக்கள் விஜயராகவ நாயக்கர் என்னாமல் வெங்கல நாயக்கர் என்றே அழைப்பாராயினர். இவரது நினைவு என்றும் நிலைத்திருக்கவே இத்தெருவிற்கு இப்பெயர் இட்டனர் போலும். (இன்றும் நம் நாட்டுத் தலைவர் பெயரால் ஊர், நகர், தெருக்கள், பல்கலைக்கழகங்கள் வழங்கி வருவதைக் காண்கின்றோம் அல்லவா? அதுபோலவே இதுவும் எனக் கொள்வோம்.

இத்தகைய கொள்கை வீரராக, ஆதர்ஷத புருஷராக வாழ்ந்த இவரது முடிவு கொடுமையானது. 1673ல் மதுரை சொக்கநாத நாயக்கருக்குத் தன் மகளைத் திருமணம் செய்து தர மறுத்ததால், பகை மூண்டு, தஞ்சையை பகைவர் முற்றுகை யிட்டனர். விஜயராகவ மன்னர் பகைவனிடம் சரண் அடைவதை விட சாவதே மேல் எனக் கருதி, தஞ்சை அரண்மனையின் ஒரு பகுதியில் தன் உரிமை மகளிர், மகள் யாவரையும் ஒருமுகமாக இருக்கச் செய்து, அப்பகுதிக்கு வெடிகுண்டை வைத்து அனைவரையும் செந்தழலுக்கிரையாக்கியதோடு, தானும் தன் மகனும் சேர்ந்து போர்க்களம்புக்குப் போரில் வீரமரணம் எய்தினர். இறுதிவரை அடி பணியாது வாழ்ந்த வீரவரலாறு படைத்த பெருமையுடையவர் வெங்கலப்ப நாயக்கர் - வாழ்க அவர் புகழ்.

இதைப்போல் சரித்திரப் புகழ் வாய்ந்த பலரது தெருக்கள், படித்துறைகள் ஐயாற்றில் பல உள்ளதைக் காணலாம். ஒன்று முத்துநாயக்கன் தெரு, இரண்டு செவ்வப்ப நாயக்கன் தெரு, மூன்று சகாஜி சந்து, நான்கு யசந்தரப்பா சந்து இவர்கள் வரலாற்றை படித்துறை வரிசையில் காணலாம். சரித்திர நாயக - நாயகியர் பலரது படித்துறைகள் இங்குள்ளன.

### சரிதம் படைத்த திருவையாறு

மனிதருள் மாணிக்கம் மேதகு ஜவஹர்லால் நேரு அவர்கள் 1935ல் திருவையாற்றிற் கு வருகை புரிந்தார்கள். இரவு 12 மணி இருக்கும். தற்சமயம் பேருந்து நிலையம் உள்ள இடத்தில் வந்து பேசிச் சென்றார்கள். இவர்கள் தவிர விடுதலைப் போராட்ட காலத்தில் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் கால்

நடையாக கதர்க்கொடியும், கதர்க் குல்லாயும், அணிந்து நடந்து வந்த காங்கிரஸ் (தொண்டர்களாம்) தலைவர்கள் அத்துணை பேரும் ஐயாற்றிற்கு வந்து சென்றவர்கள் தாம். கனவுபோல் நினைவிற்கு வருகிறவர்களை மட்டும் கூறுவோம்:

சரிதம் படைத்த திருவையாறு

* திருவையாறு : இந்தக் கிராமத்தில், அரிசன சேவா சங்கத்தின் கிளை ஒன்று 11-12-1932 அன்று ஆரம்பிக்கப்பட்டு, அதன் தலைவராக பிதம்பர சாஸ்திரியரும், துணைத்தலைவராக ஸ்ரீநிவாசம் பிள்ளையும், செயலாளராக நொண்டி பஞ்சாபகேசய்யரும் இருந்து சிறந்த சேவையாற்றினர். அக்காலச் சூழலில், அரிசன சேவைக்கு அந்தணர் ஒருவர் துணிச்சலாகத் தன்னை அற்பணித்துக் கொண்டது ப்ராட்டற்குரியது. அது மட்டுமல்ல அவர் தனக்கு கிடைத்த தியாகிப்பட்டயம், நிலம், ஊதியம் எவையும் வேண்டாமென உதறியவர்.

டாக்டர். திரு. சுப்பராயன், சர் பி.டி.ராஜன், சத்தியமூர்த்தி, அருணா அசப்பலி, ராஜாஜி, வினோபாஜி, ஜெயப்பிரகாஷ் நாராயண், காமராஜர், சர்தார் வேதரத்தினம், ராஜீவ் காந்தி போன்றவர்கள் ஐயாற்று சரிதத்தே இடம் பெற்றவராவர். இவர்கள் யாவரும் புனிதத் தீர்த்தக் கட்டமாகிய திருவையாறு புஷ்யமண்டபத் துறையின் மேடையின் மீது நின்று பேசியக் காட்சி இன்றும் மனதில் பசுமையாக உள்ளது. இவர்களை மறக்க முடியுமா? மாந்தருள் தெய்வம் மகாத்மாகாந்தி அவர்கள் இங்கு வரவில்லை என்றாலும் அவரது அஸ்தி இப் புனித பூமியில் 12.2.1948 அன்று காவிரியில் கலந்தது. அதன் நினைவாக ஆண்டுதோறும், இன்றுவரை சர்வோதயமேளா பிப்ரவரி மாதத்தே காதித் தொண்டர்களால் கொண்டாடப்பெற்று வருவதனை அறிவோம்.

1942 ஆகஸ்டு ஒன்பதாம் தேதி காங்கிரஸ் கமிட்டியில் 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானம் பம்பாயில் நிறைவேற்றப் பட்டது. (Do or Die) 'செய் அல்லது செத்துமடி' என்ற புரட்சிகரத் தீர்மானத்தைக் கேட்டதும், வெள்ளை அரசாங்கம் மகாத்மாகாந்தி, நேரு, பட்டேல் போன்ற மாபெரும் தலைவர்களைக் கைது

* செய்தி உதவி : திரு இராஜரெத்தினம், காவல்துறை 12-5-1993

செய்துவிட்டது. மறுநாள் இந்தியா முழுவதும் மக்கள் கொந்தளித்தார்கள். ஆங்காங்கே கடைகளும், பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டன. காங்கிரஸ் தொண்டர்கள் அரசாங்க ஊழியர்களை, வேலைக்குச் செல்லவேண்டாம் என்று வேண்டிக்கொண்டு அஹிம்சா முறையில் போராட்டம் நடத்தினர்.

* அதில் இந்தியாவிலேயே முதன்முதலாக திருவையாற்றில் தான் ஆகஸ்டு கலவரம் தீவிரமாக நடைபெற்றது. தபால் ஆபீஸ்களை எரிப்பதும், தந்திக்கம்பிகளை அறுப்பதும், கடைகளை அடைப்பதுமான செயல்களில் ஈடுபட்டனர். செய்தித்தாளில் இதனை அறிந்தபிறகே பிற இடங்களில் தீவிரம் ஏற்பட்டது. திருவையாறு காங்கிரஸ் தொண்டர்களில் ஆர். கிருஷ்ணசாமி ஜெட்டி என்பவர் படாதபாடுபட்டார். 12 கசையடியும் 6 மாதம் 13 நாள் சிறைவாசமும் பெற்றார். திருவையாற்றில் மொத்தம் 44பேர் காங்கிரஸ் தியாகிகளாகச் சிறை சென்றார்கள். அவற்றில் குறிப்பிடத்தக்கவர்கள் தமிழ்க்கல்லூரி மாணவர்களாக இருந்த எஸ்.டி. சுந்தரம் (சினிமா கதை எழுத்தாளர்), கு.ராஜவேலு (பேராசிரியர்), புலவர் சுந்தரமூர்த்தி, சாமிநாத மூப்பனார், பூக்கடை சிதம்பரம், மார்க்கெட் நல்லதம்பி, சிதம்பர ஸ்வாமிகள், நொண்டி பஞ்சாமி அய்யர், . பாரதிபாலகிருஷ்ணய்யர், மேலவட்டம் ஏகாம்பரம், திருநெய்த்தானம் மாணிக்கம் போன்றவர்களாவர்.

இதுபோன்றே செயற்கரும் சேவைகளைச் செய்த சான்றோர் பலரையும் நாட்டிற்குத் தந்த திருவையாறு தனக்கென ஓர் தனிப்பெரும் சரிதமே படைத்துக்கொண்ட திருவையாறாகத் திகழ்கிறது.

அதுமட்டுமல்ல, வெள்ளையர் தம் ஆட்சியில் திருவையாற்றின் சிறப்புக்களை அவர்தம் பதிவேட்டில் (ஆங்கில கெஜட்டில்) சுருக்கமாக, தெளிவாக, அழகாக, சரிதம் படைத்த திருவையாறாக அவர்களே முழுதும் எழுதியுள்ள மாண்பினைக் காண்போம். அங்கிலப்படியும் அதன் மொழிபெயர்ப்பும் இதோ:

---

செய்தி வழங்கியவர் : ஆர். கிருஷ்ணசாமி ஜெட்டி திருவையாறு வயது 85, 7.12.92

# GAZETTEER OF THE TANJORE DISTRICT
# CHAPTER XV

By F.R.HEMINGWAY, I.C.S (1906)

Tiruvadi : Population 7,821. A large unior six miles north by west of Tanjore. In the days of native rule it was the headwuarters of a subah and till 1860 the chief town of a taluk. It is now the station of a District Munsif and a Deputy Tahsildar and sub-magistrate. The town contains a dispensary, a police-station, a sub-registrar's office, a travellers' bungalow, an upper secondary school five Sanskrit schools and a lower secondary school for girls. It possesses a peculiar sanetity and is for that reason largely inhabited by Brahmans, who make up over one-third of the population. It lies in a fertile neighbourhood on the bank of the Cauvery is surrounded by luxuriant crops, vegetables and trees, and possesses some fine buildings and steps running down to the river, which have caused it to be likened to a miniature Benares[1].

2. The usual name of the town is Thiruvaiyaru ('the holy five rivers'; the Sanskrit equivalent is Panchanadam), and it is not clear how the name Tiruvadi came into existence. Natives when speaking of the place nearly always use the former name, and as a rule only speak of Tiruvadi when talking English. The name Tiruvaiyaru is derived from the fact that the five branches of the sacred Cauvery all flow within a distance of a bout five miles of the town.[2]. The town is rather unhealthy and elephantiasis is not uncommon.

---

1. Government Epigraphist's report contained in G.O. No. 745, Public dated 27th July 1888

2. A different and rather fantastio legendary account is givenin the local

3. The Sanctity of Tiruvadi is so great that there is a saying that it is sholier than Benares by one-sixteenth. There is a story that a Brahman who was going to Beneares to throw his father's bones into the river there halted a night at Tiruvadi on the way, and when he awoke in the morning he found that the bones had assumed the shape of a lingam (emblem of Siva) He still set his face to Benares whereupon the bones again became disunited; and how he realised that Tiruvadi was the holier place and committed the bones to the river there. Nowadays bones are brought from other districts to be thrown into the Cauvery at this place, and many agod and pious Brahmans resort to Tiruvadi in the hope of dying there. That it is blessed to die at Tiruvadi is explained by a legeud of a boy who was killed by Yaman. (the god of death) while worshipping the god of the five rivers. The latter there upon killed Yaman, but restored him to life again on the condition that he should not molest those who died at Tiruvadi or within sight of the smoke of the incense burnt at the Tiruvadi shrine. In a great pit in front of the southern gate of the temple incense is continuouslyburnt to the god under the title of Alkondar ('he who protected men') A Statue of the deity represents him as a elossal figure crushing Yaman under his feet.

4. The temple is the chief of a set of seven neighbouring shrines called the saptastalam (seven places) The legand says that the bull Nandi, who was appointed chief of Siva's attendants at Tiruvadi, was married under the auspices of the god at Thirumalavadi (three miles north of Tiruvadi) and afterwards was taken in procession round these seven places, ending up at Tiruvadi. A thirteen days festival of the saptasthalam in the month of Chittrai (April) celebrates this event and the provession then

goes round all these seven shrines[1]. The town is crowded with visitors on this occasion. There are two other considerable festivals, besides a number of smaller ones. The Vaisakha feast begins on the day of the star Punarvasu in Vaikasi (May), and the Adipuram festival, which also lasts for ten days, begins on the day of the star Bharani in Adi. On the new moon day which occurs in the middle of this latter festival an embel[2] representing the god is bathed in the Cauvery; and a vast multitude presses down to the river to bathe at the same time, as the sanctifying power to the water is supposed to have been much increased by the immersion of the emblem. This festival is intended to commemorate the anniversary of the beatification of the Saivite saint Appar.

5. The temple is a fine old building and is called after the five rivers the Panchanadisvara temple. It has been surveyed by the Superintendent of the Archaeological Survey (see his report for 1892) who has made many drawings, caste and photographs of it. It contains a large number of inscriptions of the Chola kings who preeded Rajaraja I (985-1013 A.D) as well as of the later Cholas. There are also one Pandyan and two Vijayanagar inscriptions the latter dated 1429 and 1538 A.D. and one of the little known Udaiyar dynasty dated 1381 A.D. Of special interest are gifts by Vimalatitya king of Vengi, 1011-22) and prince Kulottunga (later the great Kulottunga I) of the Eastern Chalukyan line, who regined over a part of the Northern Cirears as tributaries

1. The Seven shrines are at Tiruppayanam Tiruchattural, Tiruvedikudi, Tirukkandiyur, Tirupantiruthi, Tillaisthanam and Tiruvadi. All are within a radians of three miles from Tiruvadi.

2. A large javelin-headed implement called astidecat ('the essential god')

of the Cholas, to whom they were both related by marriage. It is curious to find their records so for south. Fortyfour of these grants (Nos. 213-256 of 1894) have been copied by the Government Epigraphist, and will be found described and briefly analysed in his report for 1895[1]. The greater number merely record gifts to the temple. In the small shrine called Dakshina Kailasa there are some pillars of a type not usually met with in this part of the country. They are of polished black granite, some of them exquisitely carved, and of kind that recalls the Chalukyan temples of the Decan. Some pillers of apparently the same type are found in Hemavati, a very anclent town in Ananthapur District. There is a good echo at the north- west and south-west corners of the inner prkaram. The temple is richly endowed with 752 acres of land which are estimated to give an income of nearly Rs.7,000, and nearly 9,000 kalams of paddy, Besides this, private persons have invested over Rs.7,000 with the trutees for the conduct of certain ceremonies, and over Rs.2,000 are spent directly by private persons every year on certain festivals.

6. Another remarkable building is the large Kalyanamahal chattram charmingly situated on the river bank. It is high and capacious and striking in appearance. it was founded by Sarabhoji, and is now under the control of the District Board. It has an income of over Rs.23,000. There are no less than 33 other chattrams in the town in three of which meals are saved daily. Tiruvadi contains Sanskrit and English high schools and a Vedic school. There is a little cotton weaving of small importance, but

1. The Seven shrines are at Tiruppayanam Tiruchatturai, Tiruvedikudi, Tirukkandiyur, Tirupantiruthi, Tillaisthanam and Tiruvadi. All are within a radians of three miles from Tiruvadi.

no the industryy whatever. It is the home of a good many persons well-known among natives. Of there the songwriters and singers. Tyaga Aiyar and Patnam Subrahmanya Aiyar and the singer Maha Vaidyanatha Aiyar were known throughout the Tamil country.

7. The locel saint, Alkondar Paradesi, had at one time a great reputation. A number of coriors stories are told about him. Apparently he got his name from the fact that he used to sit just opposite the Alkondar figure at the southern gate. He never wore clothers, entered any house or shop and ate or took anything he He was much revered as an oracle; and, though difficult to approach ( he generally received his votaries with volleys of stones and abuse) was invariably accurate in his predictions. He is said to have performed torrents of rain from a clear sky, would sit without hurm in the burning incense-pit and could sever his limbs and reunine them to his body at will. More than once he is said to have been imprisoned by the sub- magistrate for wearing no clothes, and to have escaped by supernatural means. He sometimes used his powers to cure disease, his general preseoription being plantain fruit. His death, which occurred some 30 years ago, was of course miraculous. Having invited the public to witness his demise, he sat down at the appointed time near the incensepit and his skill burst spontaneously acunder. Those stories are widely helieved even by educated people. . A parallel to them will be found in the account of the recently deceased saint of Kottacheravn, near Penukonda, in the Anantapur District Gazetteer.

# MADRAS DISTRICT GAZETTEERS TANJORE

## BY

## F.R.HEMINGWAY, I.C.S. (1906)

தமிழ்வழி மொழியாக்கம்

திருவாடி - மக்கட்தொகை 7821- தஞ்சாவூருக்கு வடமேற்கே ஆறுகல் தொலைவில் உள்ளது. 1860 வரை தாலுக்காவின் முக்கிய 'கஸ்பா'வாக விளங்கியது. இந்நகரத்தின் கண் இப்பொழுது (டிஸ்டிரிக் முனசீப்) மாவட்ட முன்சீப் அலுவலகமும், (டிப்டி தாசில்தார்) துணை வட்டாட்சியர் மற்றும் (சப் மாஜிஸ்ரேட்) துணைக் குற்றவியல் நீதிமன்றமும் அமைந்துள்ளன. மருத்துவமனை, காவல் நிலையம், சார் பதிவாளர் அலுவலகம், பயணியர் விடுதி, ஒரு மேல்நிலைப்பள்ளி, மூன்று வடமொழிப் பள்ளிகள், பெண்களுக்கான ஆரம்பப் பள்ளி ஆகியவை அடங்கிய ஒரு நகரம். இது மூன்றில் ஒரு பங்கு வைதிகப் பிராமணர்கள் நிறைந்த ஊராக அமைந்துள்ளது. காவிரிக்கரையில் அமைந்துள்ளதும், நல்ல வளமான சுற்றிலும் நிலத்தையுடையதும், வாழைகளும் காய்கறிகளும் மரங்களும் ஆற்றைத் தழுவிய அழகிய சில கட்டிடங்களும் 'குட்டிக் காசி' என்று சொல்லக்கூடிய அளவில் உள்ளது.

2. வழக்கமாக திருவையாறு எனப்படும் ஊர் (ஐந்து புனித நதிகளால் சூழப்பட்டு வடமொழியில் 'பஞ்சநதம்' என்ற பெயரில் உள்ளது) திருவாதி என்ற பெயர் எப்படி புழக்கத்திற்கு வந்தது என்பது தெளிவாகவில்லை. பெரும்பாலும் பழமைப் பெயரால ஊர் வழங்கப்பட்டாலும் ஆங்கிலத்தின் சாயலில் 'திருவாடி' எனச் சொல்லபபடுகிறது. காவிரியைத் தொடர்ந்து ஐந்து மைலகளுக்குள ஐந்து நதிகள் அமைந்துள்ளன. யானைக் கால வியாதி உள்ள காரணத்தினால் சுகாதாரத்திற்கு ஏற்ற இடமலல எனச சொல்லமுடியாது.

3. இதனுடைய புனிதம் மிக உயர்ந்தது. 'காசிக்கு வீசம் அதிகம்' என்று சொல்லக்கூடிய அளவில் புனிதம் வாய்ந்தது. இது பற்றிய வரலாறு ஒன்று:- தனது தகப்பனாரது எலும்புகளை கங்கையில் போடுவதற்குச் சென்று கொண்டிருந்த அந்தணன் ஒருவன், ஓர் இரவு இந்த ஊரில் தங்க நேர்ந்தது. தூங்கி எழுந்ததும் அவன் வைத்திருந்த எலும்புகள் லிங்கமயமாக மாறியிருக்கக் கண்டான். ஆயினும், அவ்வேதியன் காசிக்குச் செல்வதை நிறுத்த வில்லை. போய்க்கொண்டிருக்கையில் லிங்காகிருதியாக இருந்தது மறுபடியும் முன்பிருந்தபடியே எலும்புத்துண்டுகளாக மாறி விட்டன. இச்சம்பவத்திலிருந்து இவ்வூர் காசியைவிடச் சிறந்த இடம் என்று தீர்மானத்திற்கு வந்த பிராமணன் தனது தகப் பனாரது எலும்புகளை இவ்விடத்திலுள்ள காவிரி நதியிலேயே போட்டுச் சென்றனனாம். இப்பொழும் இறந்து போனவரது எலும்புகள் இதர ஜில்லாக்களிலிருந்தும்கூடக் கொண்டுவந்து இவ்விடத்திய நதியில் போடப்படுகின்றன. அனேகம் பிராமணர்கள் திருவையாற்றிலேயே இறக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் இவ்வூரில் வசிக்க வருகிறார்கள். இவ்வூரில் இறத்தல் விசேடம் என்பதைக் குறிக்கும் கதையும் உளது:- பஞ்சநதீஸ்வரரை பூஜித்துக் கொண்டிருந்த ஒரு சிறுவனை யமன் கொன்று, அவனது ஜீவனைக் கொண்டுபோக முயலுகையில் ஈசன் யமனைக்கொன்று மறுபடியும் உயிர்ப்பித்து அவன் திருவை யாற்றில் இறந்தவர்களையும், திருவையாறு கோயிலிலிருந்து கிளம்பும் குங்கிலியப் புகையைப் பார்க்கக் கூடிய தூரத்தில் இறந்தவர்களையும் பாதிப்பதில்லை என்று வாக்களிக்கும்படி செய்தனர். இங்குள்ள கோயில் தெற்கு வாசலின் முன் ஒரு பெரிய குழியில் குங்கிலியம் சதா புகைந்துகொண்டே இருக்கும். இங்குள்ள கடவுள் 'ஆட்கொண்டார்' எனப்படுவார். பக்தனை ஆட்கொள்பவர் என்பது பொருள். யமனைக் காலின்கீழ் போட்டு நசுக்கும் பாவனையாகவிருக்கும் ஒரு பெரிய சிலை அவரைக் குறிக்கிறது.

4. இந்த ஊரின் கோயில், ஸப்தஸ்தலக் கோயில்கள் என்ற ஏழு கோயில்களுள் முக்கியமானது. சிவனது வாகனமாகிய நந்தி சிவகணங்களுக்கு இவ்விடத்தில் அதிபதியாக அதிகார நந்தியாக ஏற்படுத்தப்பட்டார். இதற்கு வடக்கில் 3மைல் தூரத்தில் இருக்கும் திருமழபாடி யென்றவிடத்தில் உள்ள கடவுள் முன்னர் அவருக்குத் திருக்கல்யாணம் நடந்தேறியது. அதன்பிறகு அவரை ஊர்கோலமாக ஏழு இடங்களுக்கும் கொண்டு சென்றார்களாம். கடைசியாகக் கொண்டுவந்து சேர்க்கப்பட்ட இடம் இது. இச் சம்பவத்தைப் பிரதிவருஷமும் சித்திரை மாதம் (ஏப்ரல்) 13 நாளைய உற்சவமாகக் கொண்டாடி வருகிறார்கள். இதற்கு வெளியூரிலிருந்து திரளாக மக்கள் வருவார்கள்.

இந்த உற்சவத்தைத் தவிர இன்னும் இரண்டு பெரிய உற்சவங்கள் இங்கு நடைபெறும். வைகாசி (மே) மாதத்தில் புனர்வசு நட்சத்திரம் கூடிய தினத்தில் வைசாக உற்சவம் ஆரம்பமாகும். இது 10 நாட்கள் கொண்டாடப்படும். ஆடி மாதத்தில் பரணி நட்சத்திரம் கூடிய தினத்தில் இதனைப் பார்க்க வெகு ஜனங்கள் கூடுவார்கள்.

இதன் முடிவில் தீர்த்தம் கொடுப்பார். தீர்த்தம் கொடுத்தல் என்பது விசேட நாட்களில் ஐயாறப்பர் போல சூலபாணியைக் காவிரிக் கரைக்கு எழுந்தருளச் செய்து அதற்கு அனைத்து அபிசேகமும் செய்து சிவாச்சாரியார் தூக்கிக் கொண்டு ஆற்றில் புனித நீராட்டுவார். உடனே மக்களும் இறைவனோடு தாமும் இணைந்து நீராடுவர். இந்த விழா சிவனடியாரில் சிறந்த அப்பருக்குக் காட்சி கொடுத்தல் நிகழ்ச்சியின்போதும் நிகழ்வுறும்.

5. இத்திருக்கோயில், மிகப் பழமையான அழகிய கட்டிடமாகும். ஐந்து நதிகளால் சூழப்பட்ட பஞ்சநதீஸ்வரர் திருக்கோயிலாகும். தொல்பொருள்துறை கண்காணிப்பாளரால் ஆராயப்படுகிறது. (1892) அறிக்கை பார்க்க) அதனுடைய ஓவியங்கள் புகைப்படங்கள் ஆகியவை அவர்களிடம் உள்ளன. சோழர்காலக் கல்வெட்டுக்கள் ராஜராஜனுடைய கல்வெட்டுக்கள்

(கி.பி. 985-1013) அதனைத் தொடர்ந்து பிற்காலச் சோழர்களுடைய கல்வெட்டுக்களும் அதில் அடங்கியுள்ளன. பாண்டியரது ஒன்றும் விஜயநகர அரசரது கல்வெட்டுக்கள் 2ம் உள்ளன. (கி.பி. 1429 - 1538) அதில் உடையார் வரலாறு (கி.பி.1381) வேங்கை நாட்டு மன்னன் விமலாதித்தனுடையது சிறப்பம்சமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. (கி.பி. 1011-1022) மற்றும் முதல் குலோத்துங்க சோழனுக்குப்பின் கீழைசாளுக்கிய மன்னருடைய வரலாறும் அறிகிறோம். இதுவரை 1894ல் உள்ள எண்கள் (213-256) கல்வெட்டுக்கள் அரசியலரால் படி எடுக்கப்பட்டுள்ளன. இதைப்பற்றிய விரிவான விளக்கம் 1895ல் உள்ள அறிக்கையின் ஆய்வை அரசுக் கலைக்கூடத்தில் காண்கிறோம்.

தேசத்தில் மற்ற வரலாற்று அடிப்படையில் அமைந்துள்ள தூண்களைவிட - தென்கயிலாயத் தூண்கள் மாறுபட்ட முறையில் அமைந்துள்ளன. கருப்புச் சலவைக் கல்லால் ஆனது. சில செதுக்கப்பட்ட அமைப்பு சாளுக்கிய மன்னர்களின் அமைப்பாகக் கொள்ளலாம். சில படைப்புகள் டெக்கான் போன்றவை சில ஹேமாவதி அமைப்பில் அமைந்துள்ளது. அனந்தப்பூர் மாவட்டத்தில் உள்ள பழமையான ஹேமாவதி கோயில்களை ஒட்டிய சிற்பங்களாகவே உள்ளன.

பெரிய கோயில் ஐயாறப்பர் உள் பிரகாரத்தின் வடமேற்கு மூலையிலும் தென்மேற்கு மூலையிலும் நல்ல எதிரொலி அமைந்துள்ளது.

இதன் வருமானம் : 752 ஏக்கர் நிலங்களும் வருடத்திற்கு 7000/- ரூபாய் வருமானமும் 9000 கலம் நெல்லும் வருவாய் உடையனவாக இருக்கிறது. அத்துடன் தம்பிரான்கள் 7000 ரூபாய் அறக்கட்டளையாக நியமித்து விழாக்களுக்காகவும், 2000ம் ரூபாய் குறிப்பிட்ட விழாச் செலவுகளுக்காகவும் அறக்கட்டளையாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

6. இன்னொரு குறிப்பிடத்தக்க கட்டிடம், கல்யாண மால் சத்திரம். அழகிய தோற்றத்துடன் காவிரியின் கரையில்

அமைந்துள்ளது. தோற்றத்தில் உயர்ந்து கம்பீரமாகக் காட்சி யளிக்கிறது. சரபோஜி மன்னரால் தோற்றுவிக்கப்பட்டது. 23000க்கும் மேல் வருமானத்தைக் கொண்டது. இதைத் தவிர 33 சத்திரங்கள் உள்ளன. அதில் 3ல் நாள்தோறும் உணவு அளிக்கப் படுகிறது. திருவையாற்றில் வடமொழி மற்றும் ஆங்கிலப் பள்ளி களும் ஒரு வேத பாட சாலையும் உள்ளன. சிறிய நூற்பாலை இருந்தாலும் பெரிய தொழிற்சாலைகளைக் கொண்டிருக்க வில்லை. பிரபல சங்கீத வித்வான்களாகிய தியாகய்யர், பட்டணம் சுப்ரமண்யய்யர், மகாவைத்தியநாதய்யர் முதலானோர் இருந்த ஊர்.

7. இங்கு ஆட்கொண்டார் பரதேசி என்ற ஒரு பரதேசி ப்ரக்யாதி பெற்றிருந்தார். அவருக்கு அவரது பெயர் தெற்கு வாயிலில் ஆட்கொண்ட மூர்த்திக்கு எதிரே உட்கார்ந்திருக்கும் வழக்கப்பட்டதிலிருந்து வந்திருக்கவேண்டும். அவர் நிர்வாண மாகத் தான் இருப்பார். நினைத்தவிடங்களில் வீடானாலும் சரி, கடைகளானாலும் சரி, அவர் தாராளமாகப் புகுந்து வேண்டி யதைச் சாப்பிட்டுவிட்டோ எடுத்துக்கொண்டோ போய்விடுவது வழக்கமாம். அவர் வரப்போவதைச் சொல்வதில் சமர்த்தராக இருந்தாராம். சமயத்தில் கற்களை வீசி எறிந்தும், துர்வாசகங் களால் நிந்திக்கும் வழக்கப்பட்டிருந்த காரணம் பற்றி அவரை ஜனங்கள் அணுகுவது கஷ்டமாயிருந்தது. அவர் அனேக சித்துக் களைக் காட்டினார். நிர்மலமான வானத்திலிருந்து மழை பெய்ய வைப்பார். சப் மாஜிஸ்திரேட் இவர் நிர்வாணமாக இருந்ததைப் பார்த்து ஜெயிலில் போட தன் சக்தியால் வெளியே வந்து காட்டினார். கொடிய நோய்களுக்கு வாழைப்பழம் கொடுத்து நீக்குவார். இவர் தாம் இறக்கப்போகும் நேரத்தை முன்னதாக ஜனங்களுக்கு அறிவித்துத் தனக்குமுன் கூடும்படி செய்தார். குறித்த நேரத்தில் தூமகுண்டத்திற்கு அருகில் உட்கார்ந்து தமது மண்டையைத் தானாக வெடித்துப் பிராணன் போகும்படி செய்துகொண்டாராம். (இவர் ஆட்கொண்டார் சந்நிதியில் அகண்ட தீபம் எரிய 800 ரூபாய் மூலதனம் வைத்துள்ள கல்வெட்டு ஆட்கொண்டார் அருகில் உள்ளது)

## ஐயாற்றுக் காவிரியாற்றுப் பாலமும் - புறாக் கூடும்

## * இரண்டாம் சிவாஜி (கி.பி. 1833_1855)

தஞ்சை மராட்டிய அரசின் கடைசி மன்னராகத் திகழ்ந்தவர் சிவாஜி ஆவர். இவர் சரபோஜி மன்னரின் ஒரே புதல்வர். சரபோஜி மன்னரின் மறைவிற்குப் பிறகு தஞ்சை அரண் மனையில், மன்னர் என்ற பெயரில் கி.பி.1833ல் அரியணையில் அமர்ந்தார். அரசு நிருவாகம் அனைத்தையும் கிழக்கிந்தியக் கம்பெனியாரே நடத்தினர். எனவே, இவரது அரசியல் சாதனைகளாக எதுவும் அமையவில்லை. எனினும் இவரது முயற்சியால்தான் தஞ்சைக்கும் திருவையாற்றுக்கும் இடையே உள்ள எல்லா ஆறுகளிலும் பாலங்கள் கட்டப்பட்டன. இதற்குச் சான்று கூறும் கல்வெட்டுக்களை இன்றும் வெண்ணாற்றுப் பாலத்திலும் திருவையாற்றுப் பாலத்திலும் காணலாம். ஆக திருவையாற்றுக் காவிரிப்பாலம் இரண்டாம் சிவாஜியால் 1846-47ல் கட்டப் பெற்றது. இதன் தென்வடல் நீளம் 450 அடி. கிழ-மேல் உள் அகலம் 20 வெளி அகலம் 28' ஒன்பது கண் வளைவுகளைக் கொண்டு நல்லுறுதியுடன் திகழ்கிறது.

சிவாஜி மன்னன் பாலம் கட்டியது மட்டுமல்ல; மக்கள் இனிதே நீராட தென்கரை - வடகரை பாலத்தின் இருமருங்கிலும் அழகிய[1] கருங்கல் படித்துறைகளையும் கட்டுவித்தான். பாலம் கட்டாததற்கு முன்பாக மக்கள் காவிரியைக் கடக்கப் பரிசில் அல்லது ஓடத்தில்தான் செல்வர். மக்களை ஏற்றிச் சென்றுவரும் ஓடம் நிற்கும் துறை (பேருந்து நிலையம் போன்றது) 'ஓடத்துறை' என அன்று வழங்கிய பெயரே இன்றும் சாலைப் பெயராக வழங்கிவருகிறது.

> "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் என்பார் தெய்வப்புலவர்
> இறைவனடி சேராதார்"

சிவாஜிதான் பிறவிக்கடல் நீந்தவும், மக்கள் வெள்ளம், ஆற்று வெள்ளத்தைக் கடந்து அக்கரை சேரவும் ஆற்றுப்

---

சரஸ்வதி ம... வழிகாட்டி நூல் : அ.பஞ்சநாதன் 1992 பக்கம் 42

பாலத்தைக் கட்டிப் புண்ணியம் தேடிக் கொண்டான். அது மட்டுமல்ல அழகிய கோபுரம் போன்ற "புறக்கூடு" இரண்டையும் பாலத்தை ஒட்டிக் கட்டி அழியாப் புகழ் தேடிக்கொண்டான். இதன் வரலாறு சுவையானது. அவன் கட்டிய பாலம் என்பதற்குரிய கல்வெட்டு :

"This Bridge was erected at the expense of His Highness. Maharaja Sivagee. Raja of Tonjore A.D. 1846-47 Sri. H.C. Montgomery Bart and J.E. Bishop Esq. offering residents Captain E. Lawford, Civil Engineer. His Highnes has thus by tour bridge completed the communication between Tanjore and Triviar for the public good at an expense of 71,000 Rupees"

— B. Crutcalield, Sc. Trichinapoly.

## காவிரிக்கரைப் புறாக் கூடு - சரிதம்

இது ஓர் அற்புதப் படைப்பு மட்டுமல்ல; வியத்தகு - விந்தைமிகு நினைவுச் சின்னமுங்கூட, இதன் வரலாறு தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

தஞ்சையிலிருந்து வரும்பொழுது ஊரின் எல்லையில் கம்பீரமாக அழகுடன் நின்று வரவேற்கும் தூபி போன்ற கோபுரம் புறாக்கூடு. இதனைப் பார்க்கின்றபொழுதெல்லாம் இதனை யார் கட்டினார்கள்? ஏன் கட்டினார்கள்? எதற்கு? என்ற கேள்விகளெல்லாம் உள் மனத்தே எழும். நாள்தோறும் பல்லரையும் கேட்போம் - இது புறாக்கூண்டு - தெரியவில்லையா? யாரோ ஒருவர் கட்டியிருக்கிறதனால்தானே இருக்கிறது? இதெல்லாம் என்ன கேள்வி - என்றனரே தவிர சரியான பதில் கிடைக்கவில்லை.

சிலருக்கு அலட்சியப் பொருளாக உள்ளது. ஆய்வாளருக்கு அற்புதப் பொருளாக அமைவது இயற்கை. அம்முறையில் பலகாலம் சிந்தித்தோம். அன்றாடம் நாம் காணும் பொருள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு உண்மை, பயன்பாடு இருக்கத்தான் செய்கிறது; சிலவற்றில் மறைவாக இருக்கும்;

சிலவற்றில் வெளிப்படையாகவே தெரியும். அம்முறையில் இவை புரியாப் புதிராகவே இருந்து வந்தது. வழிகாட்ட ஐயாறன் திருவருளை நாளும் நயந்து நின்றோம். "மறைத்திருந்த கருத்தறிந்து முடிப்பவனாயிற்றே;" தாராதிருப்பானா? மராட்டிய மரபுப் பெரியவர் 90 வயது எச்.வாசுதேவராவ் சாகேப் சுர்வே அவர்கள் மூலம் தந்தான்: அற்புதச் செய்தி இதோ:

இரண்டாம் சிவாஜி மன்னரின் மனைவி "காமாட்சி பாய்சாப்" அவள் பலமுறை கருவுற்றும், அவை வளர்ச்சியுறாது சிதைவுற்று அவதியுற்றாள். இதற்கு மாற்றுக் காணமுயன்ற மன்னன் மருத்துவ - சாத்திர வித்பன்னர்களைக் கேட்டான். அவர்கள் அதற்குப் பரிகாரம் கண்டு கூறினார்கள்.

அதாவது, "பறவை போன்ற உயிர்கள் பாதுகாப்பாகத் தங்கி வாழ அவைகட்குக் கூடு கட்டிக்கொடுத்தால், அதில் பறவைகள் தங்கி மகிழ்ந்து வாழும். உன் மனைவியின் மணி வயிற்றுக் கருவுயிரும் கலங்காது தங்கி வாழும். உம் மனைவி நற்புத்திரப் பேறு வாய்க்கப்பெறுவாள் - இதனை உடன் செய்க" என்றார்கள்.

சரி, அதனை எங்கு, எப்படிச் செய்வதென ஆய்ந்த பொழுது, சிவாஜி மன்னர் தாம் கட்டியுள்ள திருவையாற்றுப் பாலத்தின் ஓரத்திலேயே ஒன்றற்கு இரண்டாகக் கட்டக் கட்டளையிட்டார்

பறவையினத்தில் இணைபிரியாது வாழும் காதற் பறவையினம் புறாக்கள். அவைகட்குக் கூடுகட்டத் தெரியாது. அவை மாட மாளிகைகளில், கூடகோபுரங்களின் பொந்துகளில் தான் வாழும். எனவே, அதே சூழ்நிலையை வகுத்துக் கொடுத்து அவைகள் தங்கி மகிழ்ந்து இனப்பெருக்கம் செய்யும் வகையில் மாடங்கள் (துவாரங்கள்) பல கொண்ட கோபுரங்கள் ஆற்றோரத்தே அமைத்தார்கள். அதனால் இதற்குப் 'புறாக்கூண்டு' என்றே வழங்கலாயிற்று. நமக்குத் தெரிந்து இவற்றில் நிறைய புறாக்கள் தங்கியிருந்தன. புறாப்பிடிப்போர் அடிக்கடி இரவில்

பிடித்துச் செல்ல இன்று அவை வர அஞ்சி ஒன்றுமில்லாது போயிற்று.

சிறந்த கலைச்சின்னமாக இப்புறாக்கூடு சிவாஜியின் தந்தை சரபோஜி, நெப்போலிய மாமன்னனை வென்ற ஆங்கிலேயர்க்கு நன்றி தெரிவிக்குமுகத்தான் கி.பி. 1814ல் சாளுவநாயக்கன் பட்டினத்தே எட்டு அடுக்குகளுடன் கூடிய 'மனோரா' எனும் (துணை) கோபுரத்தை அமைத்தாற்போல அதே வடிவமைப்பில் நாலு அடுக்குடைய சிறிய மனோராவாக புறாக்கூண்டை சிவாஜி தன் ஆட்சியின் நினைவுச் சின்னமாகவும் இதனை 1846 _ 47ல் உருவாக்கித் தன் புகழ் நிறுவினான். இப்புறாக்கூடு பார்வைக்கு எளிதாயினும் ஐயாற்றுச் சரிதத்தே அரியதொரு செய்தியாக, ஒப்பற்ற கலைச் சின்னமாக இடம்பெற்றுச் சரிதம் படைத்துவிட்டது எனலாம்.

* சிவாஜி எவ்வளவு புண்ணிய தருமங்கள் செய்தும் அவருக்கு ஆண்வாரிசு இல்லாது போகவே வாரிசு இன்மை கோட்பாட்டின்படி (Doctrine of Lapse) ஆங்கிலேயர் தஞ்சை அரசாட்சியை ஏற்றனர். தஞ்சையில் மன்னராட்சி இவரோடு முடிகிறது . எனினும், தஞ்சை அரண்மனை தர்பாரில் சிவாஜி மாமன்னர் ஓவியமாக அமர்ந்துகொண்டு, வருகிற பன்னாட்டு விருந்தினர்களையும் வரவேற்று மகிழும் காட்சியை இன்றும் காணலாம்.

## காவிரிக்கரை ஹஉசூர் அரண்மனை யாளி முகப்புச் சரிதம்

இதுவும் ஓர் விந்தைமிகு வரலாற்றைத் தன்னகத்தே கொண்டதாகும். (படித்துறை வரிசையில் இதன் தோற்ற வரலாறுள்ளது காண்க)

யாளி, நான்கு கால், இரண்டு வால் கொண்ட உயிரினம் இறக்கையுடன் குரங்குபோல் உட்கார்ந்துள்ளது வியப்பு.

* சரசுவதி மகால் வழிகாட்டி நூல்: அ.பஞ்சநாதன் . பக்கம் 14

*இரண்டாம் சகஜி கி.பி 1684-1712) இவர் தஞ்சையில் மராட்டிய அரசைத் தோற்றுவித்த ஏகோஜியின் மூத்த புதல்வர். இவருடன் பிறந்தவர்கள் முறையே முதலாம் சரபோஜியும், துளஜாவும் ஆவார். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் வரிசையில், தமது ஆட்சியாலும், திறமையாலும் முதலிடம் வகிப்பவர்.

தஞ்சை அரண்மனையில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டி, இந்தி ஆகிய மொழிகள் சங்கமித்தன. சகஜி மன்னர் பன்மொழிப் புலவராகவும், இசை மேதையாகவும், நாட்டியக் கலை . விற்பன்னராகவும் திகழ்ந்ததால் இவரது அவையில் பன்மொழிப் புலவர்களின் குழாமும், இசைமேதைகளின் சங்கமமும், நாட்டியக் கலை வித்தகர்களின் கூட்டுறவும் மிகுதியாகவே காணப்பெற்றன. கர்னாடக இசை, பரதநாட்டியம், போன்றவை அரண்மனையில் ஆக்கம் பெற்றன. இவரது காலத்தில் இத்துறை இலக்கியங்கள் மலர்ந்த அளவு தஞ்சை மண்ணில் வேறு எந்த அரசர் காலத்திலும் இவ்வளவு இலக்கியங்கள் மலர்ந்ததில்லை எனலாம். சான்றாக, சகஜி கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சாகராஜபுரம் (திருவிசை நல்லூர்) என்னும் ஊரை 46 புலவர்களுக்கு அளித்து அழியாப் புகழெய்தினார். திருவிசலூர் ஐயாவாள் எழுதிய சாகேந்திர விலாசம் எனும் நூல் சகஜியின் வாழ்க்கையைப் பற்றி விவரிக்கும் ஓர் அரிய சமஸ்கிருத நூலாகும். இவர் தம் இறுதி நாட்களில் அரசுப் பொறுப்புகளில் இருந்து விலகி ஆன்மீகத் துறையில் ஈடுபட்டு ஐயாற்று அரண்மனையில் உயிர் துறந்தார்.

சகஜியால் கி.பி. 1684ல் தஞ்சை அரண்மனை தர்பார் கூடம் திருத்தி அமைத்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பல்கலை, பன்மொழிப் புலவரான இவரே ஒரு சிறந்த கட்டிடக் கலை விற்பன்னராகவும் விளங்கியதால் திருவையாற்று காவிரிக் கரையில் கூட கோபுர, நிலாமுற்ற அமைப்போடு யாளி முகப்

* சரஸ்வதி மகால் வழிகாட்டி நூல் அ. பஞ்சநாதன் 1992 பக்கம் 35.

புடன் கூடிய காதல் மாளிகையாம் ஹூசேர் அரண்மனை காண்போர் யாவரையும் வியப்பிலாழ்த்தும் வண்ணம் கட்டியுள்ளார். புதுமைமிகு யாளிமுகப்பிற்குரிய காரணம் இல்லாமல் இருப்பதற்கு நியாயமில்லைஏதோஓர் பின்னணி இருந்தேயாக வேண்டும் என ஆய்ந்தோம். திருவருள் வயத்தால் கிட்டியதோர் அற்புதச்செய்தி

அக்காலத்தே யாளி என்பது வியத்தகு விலங்கு கொடியது வலிமை மிகுந்தது. யானை, சிங்கத்திற்கு இணையானது. வலிமையான கோரைப் பற்களை உடையது. மற்றொரு விந்தை இறக்கையும் கொண்டுள்ளது. ஆந்தை முகம் போலுள்ளது விலங்குமன்று பறவையுமன்று. பறக்கு விலங்கு விந்தை உயிரினம். இன்று சிங்கத்தின் இனம் உலகில் மிகக் குறைந்து விட்டது. சிங்க இனத்தைப் பெருக்க உலக அரசுகள் பெருமுயற்சி எடுத்து வருகின்றன. அதைப் போன்றே யாளி இனம் குறைந்து விட்ட காலம். நேரு அவர்கள் ஜப்பானியக் குழந்தைகளுக்கு யானைப் பரிசு அளித்ததுபோல, புஜங்கராவ், ஹரிராவ் எனும் அமைச்சர்கள் ஐதராபாத் சென்றிருந்தபோது உதயகிரி நவாப்பினால் மன்னருக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. கிடைத்தற்கரிய விந்தைமிகு உயிரினத்தைப் பெற்று மகிழ்ந்த சகஜி எதிர்காலம் போற்றும் வகையில் அரண்மனை முகப்பில் அழகாக அதன் வடிவமைப்பை உருவாக்கியுள்ளார். கட்டிடக்கலை விற்பன்னரல்லவா? தமக்குக் கிடைத்த பரிசை எதிர்காலத்தில் நாம் கண்டு மகிழும் வகையில் உருவாக்கி நமக்குப் பரிசாக அளித்துச் சென்றுள்ளார் மாமேதை சகஜி மன்னர் எனக் கொள்வோம்.

## தஞ்சை மாவட்டத்தில் நிகழ்ந்த, நினைவு அகலா நிகழ்ச்சிகள்

| ஆண்டும் | நிகழ்ச்சியும் |
| --- | --- |
| கி.பி. 850 | தஞ்சை சோழப் பேரரசின் தலைநகராதல் |
| கி.பி. 985_1004 | தஞ்சைக்கும் சோழப்பேரரசிற்கும் பொற் காலம் |
| கி.பி. 1009 | தஞ்சை பெரியகோயில் தஞ்சை மன்னன் இராச ராசனால் கட்டிமுடிக்கப்பெற்றது. |
| கி.பி. 1279 | சோழப் பேரரசு மறைவு, பாண்டியர் ஆட்சி துவக்கம் |
| 14ஆம் நூற்றாண்டு விஜயநகர பேரரசின் ஆட்சி. | கிருஷ்ணதேவராயர் கி.பி. 1509 _ 1529 |
| கி.பி. 1532_1674 | தெலுங்கு நாயக்க மன்னர்கள் ஆட்சி, சங்கீத மஹால் தர்பார் மண்டபம் கட்டப்பெற்றன. இக்காலத்தில் தான் ஐரோப்பியர் தஞ்சை மாவட்டத்தில் குடியேற அனுமதிக்கப் பட்டனர். |
| கி.பி. 1620 | முதல் தடவையாக ஒரு டேனிஷ் தளபதி தரங்கம்பாடியில் வந்திறங்கினார் |
| கி.பி. 1660_1781 | நாகப்பட்டினத்தில் டச்சு ஆட்சி |
| கி.பி. 1676_1855 | எக்கோஜி தஞ்சை மன்னன் ஆனான் - மகாராட்டிர மன்னர்கள் ஆட்சி |
| கி.பி. 1706 | கிறிஸ்துவம் பரப்ப ஜெர்மானியர் வந்தனர் |
| கி.பி. 1781 | மாவட்டமெங்கும் பிரிட்டிஷ் ஆட்சி. தஞ்சையில் 'பிரிட்டிஷ் பிரசிடெண்டு' நியமிக்கப்பட்டார். |
| கி.பி. 1782 | நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு பிரிட்டிஷார் தஞ்சை மாவட்டத்தை ஆளத் தொடங்கினர். |

| | |
|---|---|
| கி.பி. 1798 | இரண்டாம் சரபோஜி மன்னனானான். ஆனால் அதிகாரம் முழுதும் ஆங்கிலேயர் கைக்கு மாறிற்று. பெயரளவில்தான் மகாராஜா ஆட்சி |
| கி.பி. 1806 | மாவட்ட நீதிமன்றம் நிறுவப்பட்டது |
| கி.பி. 1832 | கலைக்காவலர் சரபோஜி உயிர்நீத்தார் |
| கி.பி. 1839 | கல்லணையை வெள்ளைக்காரர் திருத்திக் கட்டினர் |
| கி.பி. 1845 | மாவட்டத் தலைநகரை பிரிட்டிஷார் நாகையிலிருந்து தரங்கம்பாடிக்கு மாற்றினார் |
| கி.பி. 1860 | மாவட்டத் தலைநகரம் தஞ்சாவூருக்கு மாற்றப்பட்டது |
| கி.பி. 1863 | தஞ்சையில் மாவட்ட நீதிமன்றங்கள் ஏற்பட்டன. 1806 முதல் கும்பகோணத் திலிருந்த மாவட்டச் சிறைச் சாலை. தஞ்சாவூருக்கு மாற்றப்பட்டது. |
| கி.பி. 1866 | தஞ்சாவூர், நாகப்பட்டிணம், கும்ப கோணம், மாயூரம், மன்னார்குடி. ஆகிய ஐந்து ஊர்க ளில் நகராண்மைக் கழகம் நிறுவப்பட்டன. |
| கி.பி. 1872 | ஜில்லா முன்சீப் கோர்ட் மாயூரத்தில் நிறுப்பெற்றது. |
| கி.பி. 1880 | திருவையாற்றில் அரசர் கல்லூரி வட மொழிக் கல்வி புகட்டத் தொடங்கியது |
| கி.பி. 1906 | வடுவூர் ஏரி உடைப்பு |
| கி.பி. 1910 | தஞ்சை வட்டம் ஏற்பட்டது |
| கி.பி. 1921 | முகமது அலி சகோதரர்களும் - காந்தி ஜியும் தஞ்சை மாவட்டத்திற்கு வருகை |
| கி.பி. 1922 | திருவாவடுதுறையில் பெருங்கலம் |
| கி.பி. 1924 | காவிரியில் பெருவெள்ளம், காவிரி நீரைப் பகிர்ந்துகொள்ள மைசூர்-சென்னை அரசாங்கங்களுக் கிடையே உடன்பாடு |
| கி.பி. 1930 | வேதாரண்யத்தில் உப்பு சத்தியாக்கிரகம் |

| | |
|---|---|
| கி.பி. 1931 | தஞ்சை பெரியகோயில் சோழர்காலச் சுவர் ஓவியங்களை வரலாற்றாசிரியர் கோவிந்த ராசன் உலகுக்கு அறிவித்தார் |
| கி.பி. 1933 | கல்லணைக் கால்வாய் நீர்ப்பாசனத்து விடப்பட்டது |
| கி.பி. 1943 | சென்னை நகரில் ஜப்பானியர் குண்டு போட்டனர் |
| கி.பி. 1942 | "வெள்ளையனே வெளியேறு" புரட்சி இயக்கம் |
| கி.பி.1955 | பெரும்புயல் |
| கி.பி.1961 | தஞ்சை நகருக்குள் கல்லணைக் கால்வாய் உடைப்பு 50 இடங்களில் பெருவெள்ளம் - கொள்ளிடம் உடைப்பு. திருவையாறும், கோயிலடியும் காலிசெய்யப்பட்டது. |

## சரிதம் படைத்த திருவையாறு : நிறைவுரை:

*இதுகாறும் திருவையாற்றின் வளர்ச்சியை, கட்டிடக் கலையின் உயர்ச்சியைக் கண்டறிய நகர்வலம் வந்தோம். அம்மம்ம! எத்தனை எத்தனை செய்திகள். நகரில் வாழ்ந்த சான்றோர் பலரது பெயர்கள், வரலாற்றுச் சிறப்போடு கூடிய தெருப் பெயர்கள் ஆகியவற்றைக் கண்டோம். அதுமட்டுமல்ல, 400 ஆண்டுகாலம் நம்மை ஆண்ட வெள்ளையர்தம் ஆட்சிக் காலத்தே திருவையாற்று நிலையை அவர்களே அரசுப் பதிவேட்டின் மூலம் வெளிப்படுத்தியுள்ள பல உண்மைச் செய்திகள நமக்குத் தக்க சான்றாக நின்று நம்மை வியப் பிலாழ்த்தின. மேலும், தஞ்சைமாவட்டத்தே நிகழ்ந்த நினைவு அகலா நிகழ்ச்சிகள் பல நம் அறிவிற்கு விருந்தாக அமைந்து இன்பம் பயந்தவாற்றைக் கண்டோம். தியாகிகள் புறாக்கூடு யாளிமுகப்புச் சரிதங்கள் உண்மையிலேயே சரிதம் படைத்த திருவையாறாக்கி விட்டன.*



பொருளடக்கம்

## 2. வரலாறு வழங்கும் திருவையாறு

*முன்னுரை வரலாறு : சோழவளநாடு-சோழர் குடிச் சிறப்பு-தமிழகத்தின் தனிச்சொத்து-புகழ்மிகு முன்னோர்- சோழ நாட்டின் தலைநகர்-மனுச்சோழன்-கரிகாற்பெருவளத்தான்,- பிறப்பும் இளமையும்-கரிகாலன் ஆட்சி-மக்கள் வாழ்க்கை- வாணிபம்-கொடைத்தன்மை-கரிகாலன்வீரமும், வெற்றியும்- தலை நகர் மாற்றம்-இமயவெற்றி-திருப்புமுனை-ஐயாறப்பரின் அருட் காட்சியும், சித்தரின் அருளுரையும் ஐயாற்றுத்திருக்கோயில் திருப்பணி-இலங்கை வெற்றி-காவிரியும் கரிகாலனும்,- கல்லணை கட்டிய கரிகாலன்-இன்றைய கல்லணை கரையெழுப்பிய கரிகாலன்-உவகைஉலா-கரிகாலன் காலம் கரிகாலனின் வீடுபேறு- வரலாறு வழங்கும் காவிரிக்கரையினிலே-படித்துறைகள் பகரும் பல்சுவை நிகழ்ச்சிகள்: கவின்மிகு 24 படித்துறைகள்-நிறைவுரை*

# 2. வரலாறு வழங்கும் திருவையாறு

வரலாறு என்பது வரல் + ஆறு = வாழ்க்கை வரும் வழிமுறைகளைக் கூறல் எனவே நாடு, அல்லது ஒருவன் தன் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை வகைப்படுத்தி உரைக்க வல்லது வரலாறாகும். கரிகாலன் வரலாறு என்பது போல தனி மனித வாழ்வியற் செய்திகளை வழங்க வல்லது வரலாறு. சரிதம் வடசொல்லாயினும், வழக்கில் நாடு பற்றிய செய்திகளை (Indian History) இந்திய சரித்திரம் என்பது போல பிற்காலத்தியதாக வழங்கி வருதலைக் காண்கின்றோம். ஆக வரலாற்றை முற்காலத்தியதாகவும் சரித்திரத்தைப் பிற்காலத்தியதாகவும் கொண்டு பார்ப்போம்.

சோழ வளநாடு:

> "பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்
> கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
> சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
> நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்."

பெரியபுராணம் நாட்டுச் சிறப்பு! சேக்கிழார்

> "தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே,
> மண்ணாவ தும்சோழ மண்டலமே." ஔவையார்

எனச் சேக்கிழாராலும், ஔவை மூதாட்டியாராலும் போற்றிப் புகழப் பெற்ற சிறப்புடையது சோழ வளநாடு.

சோழர் குடிச் சிறப்பு:

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர் எனும் மூவேந்தருள் சூரியகுலத் தோன்றலாக விளங்கியோர் சோழ மன்னராவார். அவர்கள் பலநூறு ஆண்டுகட்கு முன்பே சீரும் சிறப்பும், பேரும் புகழும் பெற்றுத் திகழ்ந்தார்கள் என்பதைப் பழந்தமிழ் நூல்களான சங்க இலக்கியங்கள் வாயிலாகவும், வரலாற்றாலும் நன்கறியலாம். "வண்புகழ் மூவர் தண் பொழில்

வரைப்பில், போந்தை, வேம்பே ஆரென வருஉம்" என மூவேந்தர் பற்றி தொல்காப்பியர்ச் சூத்திரம் கூறும். கி.மு.2 ஆம் நூற்றாண்டில் காத்யாயனர், சோழர், பாண்டியர் பற்றிய விளக்கங்களைக் கூறுகிறார். கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோகர் கல்வெட்டுக்களில் மூவேந்தர் பற்றிய குறிப்புகள் உள்ளன. சோழப் பேரரசு மட்டுமே 400 ஆண்டுகள் இடையறாது ஆண்ட பெருமையும், 2000 மைல்கள் கடல்கடந்து சென்று வென்ற சிறப்புமுடையது.

சோழ மன்னர்கள், நல்ல ஆட்சித் திறனும், சமயப் பற்றும், கலைத்துறை ஆர்வமும், வீரமும், வள்ளண்மையும் கொண்டிருந் தார்கள் என்பதை அறிய நமக்குத் துணைபுரிவன அவர்கள் எடுப்பித்த கற்றளி (திருக்கோயில்)களேயாகும். அவர்கள், "அழிந்து படும் நாம், நாம் வாழும் அரண்மனைகளைக் கட்டி அழகு பார்ப்பதைவிட அழியா நிலை பேறுடைய ஆண்டவன் உறையும் ஆலயங்களைக் கட்டி அழகு பார்ப்பதே சிறந்த பேறு, அதுவே நம் வாழ்விற்கு என்றென்றும் உயர்வைத் தர வல்லது" என்ற உயர்ந்த உண்மையைப் புரிந்துகொண்டு செயல்பட்டுள்ளார்கள். அதனால் தான், தமிழகம் முழுவதும் உள்ள திருக்கோயில்கள் கலைப் பெட்ட கங்களாக, தெய்வங்கள் கொலுவீற்றிருக்கும் திருவிடங்களாகத் திகழ்கின்றன. மேலும், அவர்கள் புகழைப் பறைசாற்றிக் கொண்டுள்ளன.

## தமிழகத்தின் தனிச் சொத்து

பண்டைச் சோழர்களும், பல்லவ, பாண்டியர் குல மன்னர்களும், பழைய சிறிய கோயில்களைப் பெரிதாக்கியும், புதுப்பித்தும், புதிய கோபுரங்களை 7 நிலை 12 நிலை மாடங்களைக் கொண்டும், திருச்சுற்றாலை, விமானம், மண்டபம் எனப் பல உறுப்புகளுடன் அழகாக உருவாக்கியுள்ளார்கள். தமிழகமே கோயில்களின் நிலைக்களன்., பழங்கால முதலே தமிழகக் கோயில்கள் பொறியியல் வல்லமையுடன் அழகிய கட்டுமானத் தாலும், தெய்வத் திருவுருவங்கள் சிலைகள் போன்ற அற்புதச் சிற்ப வேலைப்பாட்டாலும், வார்ப்படக் கலையில் ஐம்பொன் சிற்ப

விக்ரகங்களின் கலை அழகாலும் உலகமே - உலக மக்களே கண்டு வியந்து பாராட்டும் வகையில் உயர்ந்து நிற்கிறது. இது தமிழகத் திற்கே உரிய தனிக்கலையாக தனிச் சொத்தாக திகழ்கின்ற தெனலாம்.

புகழ்மிகு முன்னோர்

சோழர்குல முன்னோனாகிய முசுகுந்தச் சக்கரவர்த்தி, இந்திரனுக்குச் செய்த உதவிக்கு நன்றியாக இறை உருவமாகிய ஏழுவிடங்க மூர்த்திகளைப் பெற்றான். அதனைத் திருவாரூர், திருநாகைக்காரோணம், திருக்காராயில், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் ஆகிய ஏழு தலங்களில் பிரதிட்டை செய்தான். அவைகளே, 'சப்தவிடங்கத் தலங்களெனக்' கந்தபுராணம்-கந்தவிரதச் செய்யுட்களிலிருந்து அறிகிறோம்.

அதற்கடுத்து, 'மனுச்சோழன், கோச்செங்கணான், கரிகாலன், இராசராசன், போன்ற சோழ மன்னர்கள் காலத்தும் கோயில்கள் பல கட்டி சைவசமயம் பரப்பினர் என்பதைச் சங்க இலக்கியங்கள், திருத்தொண்டர் புராணம், திருமுறை வாயிலாக அறிகிறோம்.

சோழநாட்டின் தலைநகர்

சங்க இலக்கியங்கள் மூலம் காவிரிப்பூம்பட்டினம் என்றும் பூம்புகாரே சோழரின் தலைநகராக விளங்கியது. அதன்பின் உறையூர் தலைநகராகியது. அவ்வக்கால மன்னர்களின் வசதிக் கேற்ப திருவாரூர், பழையாறை, தஞ்சாவூர் போன்ற நகரங்களும் தலைநகரங்களாயிருந்தன.

மனுச்சோழன்[1]

கி.மு. 3, 4 ஆம் நூற்றாண்டில் திருவாரூரை ஆட்சிபுரிந்த மனுச்சோழனின் திருக்குமாரன் 'குளக்கோட்டன்' என்பவன் இலங்கை சென்று ' அந்நாட்டிலே கோயிலும், குளமும்

1. திருவாரூர் : [illegible] கோயில் வெளியீடு [illegible] பக்கம் 528

ஏற்படுத்தியவன் என்று இலங்கை வரலாறுகளான மகாவம்சமும், தீபவம்சமும் கூறுகின்றன. அப்போது இலங்கையை ஆட்சி புரிந்த பெண்மணி 'சூடகசுந்தரி' என்றும் கூறுகிறது. பெரிய புராணத்தே சேக்கிழார் மனுநீதிச் சோழனைப் பற்றி, 'மலர்தலை உலகங் காக்கும் மனுவெனும் என்கோமான்' என்பார். மகன் வீதி விடங்கன் தேரில் வர இடையில் தேர்க்காலில் சிக்கி மடிந்த பசுங்கன்றிற்காகத் தன் மகனையே தேர்க்காலில் செலுத்தி மனுநீதியை நிலைநாட்டியவன் மனுச்சோழன்.

கோச்செங்கட்சோழன்

யானை ஏறாத மாடக் கோயில்களாக நன்னிலம், குடவாயில், அம்பல் போன்ற 70 கோயில்களை அமைத்த சோழன் இவன். என்டோலீசற்கு எழுபான் கோயிலமைத்தான்.

கரிகாற் பெருவளத்தான்

சங்க இலக்கியங்களுள் தலைமை சான்றது-பத்துப்பாட்டு எனும் ஒப்பற்ற நூல். இதனுள் அமைந்த இரண்டாம் பாட்டாகிய பொருநராற்றுப்படைக்கும், ஒன்பதாம் பாட்டாகிய "பட்டினப் பாலைக்கும்" தலைவன், சோழன் கரிகாற் பெருவளத்தான் எனும் பழம்பெரும் மன்னனாவான்.

இவனே, நம் ஐயாற்றுக்கோயிலை ஆதியில் எடுப்பித்த சிறப்பிற்கு உரியவன். எனவே அவன் வரலாற்றை நாம் அறிய முயல்வது நம் இன்றியமையாத முதற் கடமையாகும்.

பிறப்பும் இளமையும்

[2]இவன், சோழன் உருவப் பஃறேரிளஞ்சேட் சென்னியின் புதல்வன் என்பதும்,

இரும்பிடர்த்தலையார் - எனும் பெரும்புலவரை மாமனாகக் கொண்டு அவரால் வளர்க்கப்பட்டவன் என்பதும்,

2. பத்துப்பாட்டு - உ.வே.சாமிநாதய்யர் பதிப்பு 1931 பக்கம் 54

[3] இளமையில் கருவூரிலிருக்குங்கால், கழுகுமலமென்னும் சீர்காழியிலிருந்த யானையால் தூக்கிக்கொண்டு வரப்பட்டு அரசாட்சிக்கு உரியவனாயினன் என்பதும்

நாங்கூர் வேளிடை மகட்கொண்டோன்-என்பதும்,

இளமையில் பங்காளிகளின் தீய செயலால் நெருப்பாற் சுடப்பட்டுக் கால்கள் கரியாகி உயிர்பிழைத்துக் "கரிகாலன்" ஆனான் என்பதும்

மேலும், மிகச் சிறுவயதிலேயே அரசு கட்டில் ஏறியதால் இவனைச் சிறுவன் என இகழ்ந்த ஐம்பெரும்வேளிரை அழித்தவன் என்பதும்,

[4] 'சிறுவன் இவன்' எனக் கருதித் தம் வழக்குரைக்க மயங்கிய முதியோர் இருவர்தம் வழக்கைத், தானே முதியவன்போல் வந்து, தீர்ப்பு வழங்கிய திறம்படைத்தவன் என்பதும்,

[5] 'வெண்ணிப்போர்' வரலாற்றுச் சிறப்புடைய போர் இன்று, தஞ்சை திருவாரூர்ச் சாலையில் உள்ள, 'கோயில் வெண்ணி' என வழங்கும் ஊரில், கரிகாலன், சேரமான் பெருஞ் சேரலாதனோடு போர் செய்து அவனையும், ஒரு பாண்டியனையும் வென்றான் என்பதும் பொருநராற்றுப் படையால் அறிகிறோம். இவனிடம் பெயர்பெற்ற எண்ணற்ற அழகுமிக்க போர்க்கால இரதங்கள் இருந்தனவாகவும் அறிகிறோம்.

## கரிகாலன் ஆட்சி

கரிகாற் சோழன் சேர பாண்டியரை வென்று, தெற்கே பாழ நாடுவரையும், வடக்கே நெல்லூர் வரையும் தன் செல்வாக்கை நிலைநாட்டியிருந்தான். கரிகாலன் தன் ஆட்சியில் மாதவர்,

3. கரிகாலன் - கி.வா.ஜ. அமுதநிலையம், சென்னை 1954, பக்கம் 32.

4. பொருநராற்றுப்படை 130, 145 - 148 வரிகள் பத்துப்பாட்டு உ.வே.சா.பதிப்பு 1931 பக்கம் 94

5. பழமொழி : மூன்றுறையரையனார் கழகப் பதிப்பு 1941 செய்யுள் 6

வேதியர், மக்கள் யாவர்க்கும் ஒத்த உதவி செய்தான். ஆறில் ஒரு பங்கே அரசிறையாகப் பெற்றான். சிவனடியார்களைப் பேணும் தொண்டில் ஈடுபட்டும், நாளும் சிவன் கோவில் சென்று வழிபட்டும், நித்திய பூசை, மாதவிழாக்கள் வழிபாடுகள் வழுவாது நடைபெற்று வருவதற்குரிய நிபந்தங்களும் விட்டிருந்தான்.

**மக்கள் வாழ்க்கை**

விண்ணுலகிற்கு ஒரு சூரியன் போல மண்ணுலகிற்கு உரிய சூரியனாக கரிகாலன் இருந்தான். பெற்ற தாய் தந்தையர், தன் மக்களை எப்படிப் பேணிக் காப்பரோ, அப்படிக் குடி மக்களைக் கண்ணும் உயிரும்போல் காத்து வந்தான்.

[6]"விண்ணி னண்ணிய வண்ணல் பானு விளக்க மொன்று நிரப்பினான்
மண்ணி னண்ணிய சூரி யன்என மற்ற றங்கள் விளக்கினா
னெண்ணி லாருயிர் தந்தை தாய்பெற விவனே டுத்து வளர்த்துளான்
கண்ணு மாவியுமாயி னான்கரி கால்சோழ னென்றொருவனே."

**வாணிபம்**

காவிரிப்பூம்பட்டினத்தில் சிறந்த தொழில் வளத்தையும், வெளிநாட்டு வாணிகத்தையும் பெருக்கியிருந்தான் என்பதை

[7]"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"

என சங்க இலக்கியம் பட்டினப்பாலை கூறுவதிலிருந்து காவிரிப் பூம்பட்டினக் கடைத்தெரு வளத்தை நன்கறியலாம்.

---

6. திருவையாற்றுப் புராணம் : ஞானக்கூத்தர் தருமை ஆதினம் 1930 பக்கம் 45

7. பத்துப்பாட்டு : பட்டினப்பாலை உவே.சா. பதிப்பு 1931 பக்கம் 524.

கொடைத்தன்மை

கரிகாலன் ஆட்சித் திறனும், வீரமும் கொண்டு விளங்கிய தோடு, செந்தமிழ்ப் புலமை மிக்கவனாகவும் விளங்கினான். அவன் செந்தண்மைப் பூண்டு ஒழுகிய காரணத் தால் செந்நாப் புலவர்கள் அவன் புகழைப் பல நூல்களாகப் பாடிப்பரவினர். அப்படிப் பாடிப்பரவிய புலவர்களுக்கு வாரி வழங்கினான். சான்றாக, பட்டினப்பாலை பாட்டைக் கேட்டு அதனைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் எனும் புலவர்க்கு, இவன் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான். மேலும், இவனைப் பாடிய பெண்பாற் புலவர்களான முடத்தாமக்கண்ணியார், கருங் குழலாதனார், வெண்ணிக்கு யத்தியார் போன்றவர்களையும் பரிசளித்துப் பாராட்டினான். அவன் காலத்திற்குப் பிறகும் வாழ்ந்து கையறு நிலை பாடிய புலவர் கருங்குழலாதனார் என்பவராவார்.

கரிகாலனின் வீரமும் வெற்றியும் : காஞ்சி வெற்றி

[8] கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் உறையூரில் கரிகால்சோழன் சோழநாட்டுக்கு அரசனானான். சேரர், பாண்டியரையும், சிங்கள அரசரையும் தோற்கடித்துப் பெரும் புகழ் பெற்றுக் காவிரிப் பூம்பட்டினத்தைத் தன் தலைநகராக்கினான். அப்போது காஞ்சிபுரத்தில் திரிநயனபல்லவனென்னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் கரிகாலனுக்குக் கப்பங்கட்டும் சிற்றரசனாய் இருந்தான். ஒருமுறை அவன் கப்பங்கட்ட மறுக்கவே, காரணம் அறிய அவன் படத்தை வரைந்து கொணரச் சொல்லிப் பார்த்தான். அவன் மூன்று கண்களுடையனாய்த் தெரிய "ஓ! உன் ஆணவத்திற்கு இதுதான் காரணமோ!" என்று அந்த மூன்றாம் கண்ணைக் கத்தியால் குத்தி அவன் ஆணவத்தை அழிக்கச்சென்று வென்று, கச்சி நகரக் காவலனானான். அங்கிருந்த இறைவன் கோயிலைப் பொன்னாற் புதுப்பித்தான். வேத வேள்விகள் பல செய்தான் எனப் புறம் கூறும்.

---

8. பல்லவர் சரித்திரம், பி.த. சீநிவாஸய்யங்கார், பக்கம், 12, 13

தொண்டை மண்டலத்தைத் தன் வசமாக்கினான். இளந்திரையன் என்பவனைத் தன் கீழ் குறுநில மன்னனாய் இக் காஞ்சிபுரத்தை ஆள நியமித்தான். இளந்திரையனைப் பத்துப் பாட்டில் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப் படையில், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார்.

## தலைநகர் மாற்றம்

கோழியூர் எனும் உறையூர், கோழி ஒன்று யானையை வென்றதால், வீரம் உறையும் ஊர் உறையூராதலினாலும் காவிரியைக் கண்காணிப்பதற்கு வசதியாக இருக்கவும், காவிரிப் பூம்பட்டினத் தலைநகரை உறையூருக்கு மாற்றத் திட்டமிட்டான். எனவே, காடுகெடுத்து நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கினான். ஊரின் நடுநாயகமாக இறைவனுறை (கோ + இல்) கோயிலையும் கட்டினான். சுற்றித் தெருக்களையும் அமைத்தான். மக்கள் வாழ மாட மாளிகையில் குடிமக்களைக் குடிபெயரச் செய்தான். புதிய நகராக மக்களும்-மன்னனும், மகிழ்ந்து உறையும் ஊராக, 'உறையூர்' தலைநகராய்த் திகழ்ந்தது. இதனை,

[9] "காடுகொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளப்பெருக்கிப்
பிறங்குநிலை மாடத்துறந்தை போக்கிக் கோயிலொடுகுடி நிறீஇ"

பட்டினப்பாலை 283-286 எனக் கூறும்

## இமய வெற்றி

[10] தமிழகத்தில் தன்னிகரற்ற வீரனாய்த் திகழ்ந்த கரிகாலன், தமிழகம் தாண்டி வடபுலத்தும் தன்புகழ் பரப்பப் புறப்பட்டான். கரிகாலன் போகும் வழியில் எதிர்ப்பு ஒன்றுமில்லை. நேரே ஒவ்வொரு நாடாகக் கடந்து சென்றவனின் இமாசலப் படையெடுப்பு, இமாசல யாத்திரையாக முடிந்தது. கங்கையில் மூழ்கி, காசியை வணங்கி, கொடிய வழிகளைக் கடந்து, முன்னோர் யாரும் செய்யாத காரியத்தைத்தான் செய்துவிட்டான். இமாசலப்

---

9. பத்துப்பாட்டு : உ.வே.சா. பதிப்பு 1931 பக்கம் 529

10. கரிகாலன் கி.வா. ஜகந்நாதன் - அமுதநிலையம் சென்னை 1954 பக்கம் 59

பகுதியில் உலகம் நினைவு கூறும்வகையில் தன்புலிக்கொடியை நாட்டினான். கொடி எவ்வளவு காலம் இருக்கும்! ஆதலால் பல இடங்களில் தன்னுடைய புலிக்கொடியின் உருவத்தைக் கல்லிலே பொறிக்கச் செய்தான்.

இதனைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தே:

"பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர்"

என அழகுறக் கூறுவார். இதனையே திருவையாற்றுப் புராணமும்

கங்கை யம்புனன் மூழ்கி யங்குள கருது தீர்த்தமு மூழ்கினன்
வெங்க டங்கள் கடந்து சென்று விரைந்து மேருவி லேறினன்
பொங்கு கின்ற மகிழ்ச்சி யோடு புலிக்கொடிப்பொறி யிட்டன
னங்க திற்கன கம்ப றித்தனி சேனை வாழ வளித்தனன்.

எனக் கூறும்.

இவ்வாறு சோழன் கரிகாலன் சென்று, புலி இலச்சினை பொறித்த இடம் சிக்கிம், பூடான், பகுதியினிடையில் உள்ளதென்று ஆராய்ச்சியாளர்கள் சொல்வார்கள். அந்தப்பகுதியில் "சோழ மலைத்தொடர்" என்றும் "சோழன் கணவாய்" என்றும் இரண்டு இடங்கள் இன்றும் இப்பெயர் கொண்டு வழங்குவதாக "இம்பீரியல் கெசட்டியார் ஆப் இந்தியா" எனும் நூல் தெரிவிக்கிறது.

திருப்புமுனை

"மேருவை அடைந்த காகமும் பொன்நிறம் அடையும்" என்பார்கள். அதுபோல இமயமாம் மேருவிடம் கிடைத்த கனகம் - பொன்னையெல்லாம் தன் சேனைகளுக்கு வாரி வழங்கினான் - கரிகாலன். இமயத்தே புலி பொறித்து வெற்றிவாகை சூடித் தேர்மிசை இவர்ந்து வரும் வளவனுக்கு வழிநெடுகப் பாராட்டும், பரிசும், வாழ்த்துக்களும், குவிந்த வண்ணம் இருந்தன. இதனால் அவன் மனத்தே மமதையோ ஆணவமோ ஏற்படவில்லை.

மாறாக, போரிலே உழன்று உழன்று துன்புற்ற மனம், அறம், சாந்தம், அமைதி, போகும் வழிக்குப் புண்ணியம் என்ற

தத்துவத்தில் ஈடுபாடு கொண்டது. வாழ்க்கையில், முதிர்ந்த பக்குவ நிலை திருவருளால் கிட்டுகிறது என்பார்கள். அந்நிலைதான் அவனுக்கு ஏற்பட்டது. வழியில் கிடைத்த பொருளெல்லாம் தன் சேனைகளுக்கே ஈந்தான். படைகள் மேற்றிசை வழியே திரும்பி, வரும் வழியில் உள்ள காஞ்சிபுரம் போன்ற சிவத்தளிகளை எல்லாம் வணங்கிவந்தான். கிழ்பால் காவிரிக்கரை வழி, வருகின்றபோது ஓர் அற்புத நிகழ்ச்சி காத்திருந்தது.


திருமாவளவன் ஏறி வந்த தேர், பஞ்சநதிக்கண் - திருவையாற்றில் குறிப்பிட்ட ஓர் இடத்தின் கண் வந்ததும், தடைப்பட்டு நின்றுவிட்டது.

"காவி ரிப்புன லுள்ளடங்கிட வெங்குறற்கரை கட்டினான்
மாவி ரைத்தெழ சோலை சூழ்சிவதானமெங்கும் வணங்கினான்
பாவி கட்கரி தாயசங்கரர் பரமபஞ்ச நதிக்கணிற்
றேவ ரைத்தொழ வரலு மோடிய தேர்புதைந்து திகைத்ததே."

திருவையாற்றுப் புராணம் நி.ச.12

ஐயாறப்பரின் அருட்காட்சியும், சித்தரின் அருளுரையும்

தேர்க்கால்கள் புதைந்துவிட்டன. யானை, சேனைகள் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. காரணம் அறியாத வனாய்த் திகைக்க, அமைச்சர் அறிவுரை : "இங்கு யாரோ ஒரு மகான் இருத்தல் வேண்டும்; இதனடியில் உள்ள அற்புத சக்தி ஒன்று ஈர்த்திருக்கிறது; இஃது ஒரு சிவயோகியரின் செயலே" எனக் கூற அவ்வில்வக் காட்டைஅழித்து வழித்தடத்தையும் அகழ ஆணையிட்டனன் மன்னன். என்னே அதிசயம்! முதலில் மேலேயே *(ஆதி) விநாயகர் சிலை கிடைக்கிறது. அடுத்து முருகன், அருமைத் திருமேனியாக நீண்டு உயர்ந்த சுயம்பு வடிவில் நம் ஐயாற்றெம் பெருமான் காட்சி தருகிறார். அடுத்து சத்தி, சப்த மாதர், சண்டேசர், சூரியன் திருவுருவங்களும் யோகி ஒருவரின் சடைகள் பரந்தும், விரிந்தும், புதைந்தும் காணப்பட்டன. உளமகிழ்ந்து வியந்த மன்னன் அவை வந்த வழியே அகழ்ந்து பார்க்க, நியமேசர் என்னும் அகப்பைச்சித்தர் நிட்டையில் இருப்பது கண்டு மெய்விதிர்ப்பெய்தி அவர் பாதம் பணிந்தான்



## திருக்கோயிலை கட்டிய வரலாறு

1. நியமேசர் எனும் சித்தர் நிட்டை கூடிப்புற்றுமூட, கரிகாற்சோழன் தேரில் வர தேர்தடைப்பட, காட்டை அழித்தல்
2. சித்தர் வெளிவந்து நந்தி பூசித்த இச்சுயம்பு லிங்கத்திற்குக் கோயில் கட்டுவாயாக எனப்பணித்து நந்தியின் குளம்படி நான்கு குழியினின்றும் தங்கம், வெள்ளி, வெல்லம், கருங்கல் கிடைக்க எடுத்து திருப்பணி நடைபெறுகிறது
3. சித்தரே முன்னின்று காடழித்து, கோயில்கட்டி, சிற்பிகளுக்கு சன்மானம் வழங்கல்
4. சிலாதர் தவம் - பெருமான் எதிர்கொண்டு அழைத்தல்



1. சிலாத முனிவர் நிலத்தை உழுத பொழுது பெட்டி ஒன்று குழந்தையுடன் கிடைக்க, மகிழ்வுடன் மனைவியிடம் கொடக்க, அவள் பாலூட்ட
2. 'செபேசர்' எனப்பெயரிட்டு, 16 வயதே தமக்கென்பதறிந்து செபேசர் தவமியற்ற
3. தவத்திற்கிரங்கி ஐயாறப்பர் அம்மையின் பால், தமது கமண்டலநீர், சந்திர தீர்த்தம், சூரிய தீர்த்தம், நந்திவாய் நுரைநீர் ஐந்தாலும் அபிடேகம் செய்து 'நந்திகேஸ்வரர்' - எனும் பட்டம் சூட்டல்
4. அடியவர் உயிர் ஊசலாடும் பொழுது ஐயாறப்பர் தம் மடியில் கிடத்தி தாரக உபதேசம் செய்து, அம்மை முந்தானையால் வீசி விமானத்தில் அமர்க்கி விண்ணவர் எகிர் கொண்டமைக்க விண்ணுலகு சேரல்.

அவரும் கருணைகூர்ந்து கரிகாலனிடம், "மன்னா! இதுவரை ஐயாறனாகிய ஐயன் பகைவர் காணாது ஒளித்திருந்தார்; நீ ஆளவந்தாய் என்றதும் உனக்காகத் தோன்றியுள்ளார். தேவர்களும், நந்திசரும் வழிபட்ட இம்மகாலிங்கத்திற்கும், மற்ற படிமங்கட்கும் கோயில் எடுப்பாயாக" எனக்கூறி எவராலும் வெல்லற்கரிய தண்டமொன்று மளித்து, கோயில் கட்டுவதற்கு வேண்டிய பொருளும் நந்தியின் குளம்படியில் பொன், வெள்ளி, வெல்லம், கருங்கல் ஆகியவை கிடைக்கும் என அருள் புரிந்தார்.

திருப்பணியும் குடமுழுக்கும்: அவ்வாறே கரிகாற் சோழன் சிறப் பாகத் திருவையாற்று ஐயாறப்பர் ஆலயத்திருப்பணி செய்தும், அங்கும் ஓர் அழகிய ஊரை உருவாக்கி மக்களையும் நிலைபெறச் செய்தான். அதன் பிறகு ஐயாறப்பர் ஆலயக் குடமுழுக்கும் செய்து அதற்கு நிபந்தங்களும் அளித்தான்.

கரிகாற் சோழனுக்கு ஐயாறப்பரே எல்லாம் வல்ல சித்தராக குரு வடிவில் வந்து தான்தோன்றி நாதராகத்தான் சுயம்பு வடிவில் உள்ள தன் இருப்பிடம் காட்டிக் கோயிலையும் கட்டச் செய்தார். மன்னனும் மகிழ்ந்து போற்றினான்.

"குருவ தாவுருக் கொணடஐ யாறனைப்
பரவி னான்பணிந் தான்மறை பாடினான்
அரக ராவென் றரற்றி யழுதனன்
கரவி லுன்மத்தர் போலக் களித்தனன்."

திருவை -பு.தி.ச. 26

இலங்கை வெற்றி

கரிகாலன் இமயம் சென்று மகத்தான வெற்றி கண்டதோடு, ஐயாற்று மகேசனின் ஆலயமும் கட்டி வெற்றி கண்டான். மேலும், தன் சோணாட்டைப் பெருக்க இலங்கை சென்றும் தன் வீரத்தைக் காட்ட விரும்பினான். இவன் காலத்தில் இலங்கை அரசன் 'வசவன்' ஆவான். கரிகாலன் இவன் மீது படையெடுத்துச் சென்றான். ஆனால் கரிகாலனுடைய படையெடுப்பு வசவனுடைய மகளான 'சிங்கநாசிகைதீசன்'

காலத்தில் (கி.பி. 111-114) நடந்தது. சிங்களவர் பன்னீராயிரம் பேரைச் சிறைப்பிடித்துக் கொணர்ந்து, அவர்தம் உதவியால் சோழ நாட்டில் காவிரிக்கு அணையும், கரையும் கட்டினான்.

காவிரியும் கரிகாலனும்

வளவன் என்றாலே வளம் கொழிக்க ஆள்பவன் என்பது பொருள். நீர்வளம், நில்வளம் கொழிக்கும் சோணாட்டுத் தலைவன் திருமாவளவன் ஆவான். இதனையும் இவனது நாட்டு வளத்தையும்

"சாலிநெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடுகிழவோனே !"

என பொருநராற்றுப்படை 246-248 சிறப்பித்துக் கூறும். அதாவது, வேலிக்கு ஆயிரம் கலம் விளையும் வளத்தோடு கூடிய காவிரியைப் பாதுகாக்கும் தலைவனாக வாழ்ந்தான். காவிரி என்றால் கா + விரி = சோலைகளை விரிவடையச் செய்வது என்பது பொருள். வாழ்வளித்த காவிரியே சோணாட்டின் வளத்திற்குத் தாழ்வளிக்கவும் தவறவில்லை. அடிக்கடி காவிரி வெள்ளம் கரைகடந்து வந்து, நாட்டு மக்களைக் கொள்ளை கொண்டு போயது. மன்னனின் கடமை, மன்னுயிரைத் தன் உயிர் போல் காப்பதலலவா? தன்னாலோ, தன் உறவினராலோ, பகைவர், கள்வர் உயிரினங்களாலோ ஏற்படும் தொல்லைகளைக் களையவேண்டும். இயற்கையால் ஏற்படும் வெள்ள அபாயத்தையும் கட்டுப்படுத்தவேண்டும். இது மன்னனின் தலையாய கடமை. எனவே, இதற்கு வழிவகை செய்ய அமைச்சர்களைக் கூட்டினான். அறிஞர்களைக் கலந்தான்; அவர்களும் ஆராய்ந்தனர்.

கல்லணை கட்டிய கரிகாலன்

குடகுமலையில் உற்பத்தியாகி வரும் காவிரி நீர், திருச்சி தஞ்சை சோணாட்டுப் பகுதியில் அகண்ட காவிரியாக வருகிறது.

திருவையாற்றுக் காவிரியும் அன்று சுந்தரர் வாக்குப்படி, காவிரிந தெனகரைக கண்டியூர்வரை அகண்ட காவிரியாகவே

இருந்தது. எதிர்பாராது இரவு நேரங்களில் வரும் வெள்ளத்தால் ஏராளமான மக்களும் உயிரினங்களும் பலியாயின• காவிரி நீரும் கழனிகளுக்கு உதவாமல் வீணே கடலில் சேருகிறது. இதற்கு வழி திருச்சி அருகே காவிரியின் குறுக்கே கருங்கல்லால் அணையைக் கட்டி காவிரியைக் கட்டுப்படுத்தினால் வேண்டியபோது நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம். (அதிகப்படி நீரைக் கொள்ளிடத்தில் திருப்பியும் விடலாம்.) எனவே, கல்லணை கட்டுவோம்" என்ற முடிவை மன்னனுக்கு அறிவித்தனர்.

கரிகால்வளவனும் இதனை ஏற்று, 'மக்கட் பணியே மகேசன் பணி' எனக் கொண்டு திருச்சி அருகில் காவிரிக்கிடையே அணை கட்ட ஏற்பாடு செய்தான். ஏராளமான மக்களும், படை வீரர்களும், சிங்களக் கைதிகளும் உழைத்தார்கள். கல்லே கிடைக்காத பகுதி அது. நீண்ட தூரம் மலையுள்ள பகுதிக்குச் சென்று அணைக்கு வேண்டிய கற்களை உடைத்துக் கொணர்ந்து கட்ட ஆரம்பித்தார்கள். வெள்ளம் கல்லைப் புரட்டாதிருக்கும் வகையில் கல் இடைவெளியில் களிமண்ணைக் கரும்புச் சாறு கொண்டு பிசைந்து இரப்பர் பதத்தில் மல்லர்களைக் கொண்டு இடித்தும், கருங்கல்லால் ஆன அணையைக் கட்டி முடித்தான். சோழ பரம்பரையில் யாருமே செய்யாத பணியைச் செய்து, "கல்லணை கட்டிய கரிகாலன்" எனும் பெரும் புகழைப் பெற்றான். பொறியியல் வல்லுனரும், வெள்ளையரும் கண்டு, அக்காலக் கட்டுமானப் பணியின் உயர்வை வியந்து பாராட்டினர். இன்றும் பாராட்டுகின்றனர். யாவும் ஐயாறப்பர் கரிகாலனுக்களித்த தண்ணருட்கருணையேயன்றி வேறொன்றிருக்க முடியுமோ?

இன்றைய கல்லணை

எனவே, இன்றைய கல்லணையை நேரில் சென்று பார்ப்போமானால் காவிரிநீரைத் தடுத்து அணைகட்டி காவிரிக்கும். வெண்ணாற்றுக்கும் மிகுதித் தண்ணீர் கொள்ளிடத் திற்கும். போகவழி செய்துள்ளது. நன்கு விளங்கும். ஆகக் கல்லணையிலிருந்து பிரிவது இரண்டே ஆறுகளாகும். அவன்

காலத்திற்குப் பின்வந்த மன்னர்கள், காவிரியிலிருந்து குடமுருட்டியையும், வெண்ணாற்றிலிருந்து வெட்டாறு, வடவாறு களையும், பிரிந்துள்ளார்கள். என்பதறிகிறோம். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் 1830ல் அன்றைய கலெக்டராக இருந்த M.W கிணற்சலிதுறை கல்லணைக் கால்வாய்வெட்டி நீர்ப் பாசனத்திற்கு விடப்பட்டது. தெரியவருகிறது.

காவிரிக்குக் கரையெழுப்பிய கரிகாலன்:

சோழ நாட்டின் வளம் பெருக்க முதலில் காவிரி நீரை ஒழுங்குபடுத்தக் கல்லணை கட்டினான். அப்படியும் காவிரி வெள்ளம் கரைபுரண்டோடியது. அரிப்புகள் ஏற்பட்டன, உடைப்புகளும் உண்டாயின. எனவே இதனைத் தடுக்க ஆய்ந்து கல்லணை .தோடங்கி காவிரிப்பூபட்டினம் வரை (125 கி.மீ) தூரம், இருமருங்கும் கரைகட்ட விரும்பினான். தன் விருப்பத்தை மன்னர் களுக்கும் மக்களுக்கும் அறிவித்தான். சிங்களவர் பன்னீராயிரம் பேரச் சிறைப் பிடித்துக்கொணர்ந்தவர்களையும் ஈடுபடுத்தினான். காவிரியின் மணலைக் கொண்டே இருமருங்கும் கரைகளை எழுப்பி, அரிப்பு ஏற்படாதிருக்க, நாணல், தர்ப்பபைக் காடுகளுண்டாக்கிப் பெரிய மரங்களையும் பயிர் செய்வித்தான்.

நினைத்துப் பார்க்கவே அச்சமாகவிருக்கிறது. அணை கட்டுவதும், கரையெழுப்புவதும் எவ்வளவு பெரிய செயல்அரிய செயல். மலைப்பான செயல் மக்களின் ஆர்வமும், மன்னனின் தூண்டுதலும் இருந்தாலன்றி மகோன்னதமான இச் செயலைச் செய்திருக்க முடியுமா? தன்னலமற்ற தியாகவுணர்வு வேண்டும். கூலிகொடுத்துச் செய்யும் வேலையல்லவே. இவை யாவும் திருவருட்செயலால். பக்தி தந்த பரிசுகளாகும்.

கரிகாலனின் உவகை உலா:

காவிரி இருபுறமும் அழகான தடுப்புக் கரைகள் எழுப்பும் வேலைகள் முடிந்தன. அக்கரையின் அழகைக் காண விரும்பினான். மாமன்னன் கரிகால்வளவனே, ஒரு நாள் தன் பட்டத்து யானை மீது ஏறி, அம்பாரி மீது அமர்ந்து படைகள்

புடைசூழ வந்தான்.(படம் காண்க) கல்லணை தொடங்கி காவிரிப் பூம்பட்டினம் வரைவெற்றி வீரனைக்காண மக்கள் வெள்ளம், சாலை இருமருங்கிலும் கூடிச் சூழ்ந்து நின்று மகிழ்வோடு வரவேற்றன. இக்காட்சி எப்படியிருந்திருக்கும்? நம் நாட்டின் பிரதமரோ அல்லது பெருந்தலைவரோ வந்தால் அவரைக் காண சாலைகளின் இருபுறமும் ஓரத்தே நாம் எப்படி ஆவலோடு காத்து நிற்கிறோமோ அதனை ஒத்து இருக்கும். மன்னனும் மக்களைப் பெருமிதத்துடன் கண்டு பெரிதும் வாழ்த்தி வந்தான். இராஜதரிசனம் என்பது இறைவனைத் தரிசிப்பது போன்றது. ஆண்களும் பெண்களும் ஆரவாரத்துடன் மகிழ்ந்து வரவேற்றனர், வணங்கினர். அக்கூட்டத்தே மன்னனின் அழகைக் கண்டு மையல் கொண்டாள் பெண் ஒருத்தி.

" அரிமா சுமந்த வமளிமே லானைத்
திருமா வளவனைத் தேறேன் திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன் றொழுதகைப்
போனவா பெய்த வளை". பத்துப்பாட்டு.

சிம்மாசனத்தோடு கூடிய யானை மேல் அமர்ந்துவரும் திருமாளவன் சோழ மன்னன் என அறியாது திருமால் என்றே மயங்கித் தொழுதேன். என் கைவளை கழன்று அவன்பால் போயது ஏன்? எனக் கேட்கிறாள் விரகதாப மங்கை.

இது போல் சங்க இலக்கியங்கள் இவன் புகழைப் பலவாறு பேசுகின்றன, என்றாலும் இவன் வரலாற்றைக் கவியோகி. சுத்தானந்த பாரதியார் அவர்கள் சுருக்கமாக அழகாகப் பாடியுள்ளார்.

"கடற்படை கொண்டிலங்கை சென்று தக்கணத்தைக்
கைப்பற்றி வங்கர்கோ சலரைவென்று
வடநாட்டார் அடிபணிய வன்போர் செய்து
வானகையுடன் புலிக்கொடியை யிமயமேற்றி
அடற்கரிய தமிழ்வீரப் படையால் பொன்னி
அணைகட்ட மன்னர்பணி கொண்டமன்னன்
சுடர்மணிப் பூம்புகா ராண்ட கரிகாற்சோழன்
துலங்கியநன் னாடுதித்த தூரச்செய்கோன்".

எனும் இப்பாடல், என்ன அழகு! எவ்வளவு அருமை! பாருங்கள்!

கரிகாலனின் காலம்[11]:

கரிகாலன் இலங்கை மீது படையெடுத்த காலம் கி.மு.44 கி.மு. 17 -வுதல் வேண்டும். வடநாட்டுப் படையெடுப்புக்குரிய இரண்டாம் காலம் கி.மு. 27 ஒத்திருத்தல் காணத்தக்கது. எனவே, ஏறத்தாழ கி.மு. 10 என்பது கரிகாற்சோழன் காலம் எனக் கோடல் தவறாகாது அன்றோ? இம்முடிவிற்கு கடல் வாணிகச் செய்தியும் துணைச் செய்தல் காண்க. கரிகாலன் மீது பாடப்பெற்ற பொருநராற்றுப்படையிலும், பட்டினப்பாலையிலும் புகார்ச் சிறப்பும் கடல் வாணிகச் சிறப்பும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

கரிகாலன் காலத்தைப்பற்றி கி.மு. என்பாரும், முதல், இரண்டு, நான்கு நூற்றாண்டென்பாரும், இருவர் என்பாரும் உளர். எப்படியிருந்தாலும் காவிரிநாடு சிறப்பு முற்பட்டமா மன்னன் கரிகாலன் என்பது மட்டும் தெளிவாகிறது. இஃது ஒன்றே சாலும்.

கரிகாலனின் வீடு பேறு:

கரிகால் வளவனுக்கு முன்னோர் சித்தர் அருளும், அவனது முந்தைய நல்வினையும் கூடி, ஐயாற்றெம்பெருமானுக்கு ஆலயம் கட்டும் பேற்றை நல்கியது. நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஆற்றலை சித்தர் அளித்த தண்டம் கொடுத்தது. இதனால் இலங்கை சென்று சிங்களரை வென்றதும் அவர்களைக் கொணர்ந்து காவிரிக்கு அணையும், காவிரியின் இருபுறமும் கரையும் கட்டச் செய்தது. கரிகாலன் திக்கெல்லாம் புகழும் தீரனாக மாவீரனாக மங்காத மன்னனாக ஐயாற்றுக் கோயிலெடுத்தான், குடமுழுக்குச் செய்தான். குடிமக்களுக்கு ஏற்படும் அல்லலை அகற்ற காவிரிக்கு அணையும் கரையும் எழுப்பினான். மன்னர்கள் வரலாற்றில் இதுவரை எந்த மன்னரும் செய்யாத செய்ய முடியாத அரிய சாதனைகள் பல சாதித்துக் காட்டினான்.

11. சோழர் வரலாறு மா. இராசமாணிக்கனார் பூரம்பப்ளிகேஷன்ஸ், சென்னை பக்கம் 21-27

உலக வாழ்க்கையில் இறையருளோடு நிறைவாழ்வு வாழ்ந்து முடித்த கரிகாலனின் உள்ளம், சிவம்பெருக்கும் சிந்தனையில் ஈடுபட்டது. 'இம்மைப்பேறு யாவும் பெற்று விட்டோம்'. இனி மறுமைப் பேற்றிற்கு உரிய வழியில் ஈடுபடுவோம். எனவே, வீடு பேற்றிற்கு உரிய வழியை நாடுவோம் என ஐயாறன் ஆலயத்திற்கு அடிக்கடி வரலாயினன். நல்லோர் பலரது அறிவுரைப்படி சித்தர் அளித்த பஞ்சாக்கர மந்திரத்தை ஐயாற்று ஜெபமண்டபத்தே வடக்கிருந்து நாளும் ஒரு லட்சம் தியானித்திருந்தான். அரசபோக வாழ்வகற்றி முடி துறந்து உருத்திராக்கமுடிபுனைந்து, சதா திருவருட்சிந்தனையுடன் இருந்தான். அவனது துணைவி செம்பியன்மாதேவியும் உறுதுணையாக அணுக்கத்தொண்டு புரிந்துகொண்டு உடன் இருந்தாள். சிவபக்த சிகாமணிகளாகிய இருவரது சிவயோகச் சிலைகளை இன்றும் முத்தி மண்டபத்தில் காணலாம். (அட்டைப் படத்திலும் காணலாம்) பக்குவம் வந்த ஆன்மாக்களுக்குப் பரமன் இடபாரூடராக அருட்காட்சி நல்கி அழைத்துக் கொள்வது வழக்கம்.

" தீகறுத்த வங்க மருளூர் ஐயாறனூர்
பொறுத்த வெள்விடை மேற்பொலி வெய்தினான்".10 நி.ா.

"ஞானத்தீயை மூட்டி ஊனக்காயம் ஒழி" என சிவனருளிய மொழிப்படி சமாதி கூடினான். கரிகாலன் வடக்கிருக்க பட்டத்தரசியாரும் இணைபிரியாது ஈருடல் ஒருயிராயினர்.

"ஞானத் தீயை நலம்பெற மூட்டுக
வூனக் காய மொழியுமென் றான்சிவன்
வானத் தார்தொழ மன்னன் சமாதியி
லீனக் காய மெரிந்தெழ நோக்கினான்".

இருவரும் இணையிலா ஐயாறன் இணையடி சார்ந்தனர். பொன்னியின் மைந்தன், கரிகாலன் வரலாறு, ஒப்பற்ற ஓர் காவியமாகவேயன்றோ திகழ்கின்றது. என்னே அருமை, அவன் தன் பெருமை! வாழ்க அவன் புகழ்!

## வரலாறு வழங்கும் காவிரிக் கரையினிலே:.....
## படித்துறைகள் பகரும் பல்சுவை நிகழ்ச்சிகள்:

அன்று கரிகாற்சோழன் தான் கட்டிய காவிரி அணை அழகைக் காண உலா வந்தது போல நாமும், இன்று நம் ஐயாற்றுக் காவிரிக் கரையின் துறை அழகைக் கண்டுகளிக்க வலம் வருவாம் வாருங்கள். எப்படி நைல் நதியின் நன்கொடை 'எகிப்து' ஆகுமோ, அதுபோல் காவிரியாற்றின் நன்கொடை திருவையாறாகும்.

"ஆதிமா தவமுனி அகத்தியன்தரு, பூதநீர் கமண்டலம் பொழிந்த காவிரி" என சேக்கிழார் பெருமான் காவிரியின் தோற்றத்தை, அருந்தவமுனிவர் அகத்தியர் தம் கமண்டலத் திலிருந்து வந்த காவிரி என அழகாகப் படம் பிடித்துக் காட்டுவார். அத்தகைய காவிரிக் கரையிலுள்ள வடகரைச் சிவத்தலங்கள் 63, தென்கரைத் தலங்கள் 127 எனப் பிரித்துள்ளனர் நம் ஆன்றோர். அதில் வடகரைத் தலங்களில் 51வது தலம் திருவையாறு. திரு+ஐ+ஆறு அழகிய மேலான ஆற்றையுடைய ஊர் என்ற பொருளில் காவிரி ஆற்றின் பெயரையே ஊர்ப் பெயராக்கிக் கொண்டு விளங்கும் தனிச்சிறப்புடையது. காவிரிக் கரையில் பல தலங்கள் இருந்தாலும் "காவிரிக்கோட்டம்" என்ற கோயிற் பெயராகக் கொண்ட தலம் இஃதொன்றே.

### கவின்மிகு காவிரிக்கரை:

இயற்கையன்னையின் எழில் பூத்துக் குலுங்கும் திருவையாற்றுக் காவிரிக் கரையின் அமைப்பும், அங்குள்ள படித்துறைகளின் பூசைமண்டபங்களும், அரசர் கல்லூரி எனும் கல்யாணிமகாலும், கவினுறு மாளிகையாகக் காட்சியளிக்கின்றன. இலண்டன் மாநகரின் தேம்ஸ் நதிக்கரையில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் போல, தமிழகத்தே தஞ்சை மாவட்டத்தின் காவிரிக் கரையிலுள்ள 'திருவையாறு அரசர் கல்லூரி' தனிச்சிறப்பு வாய்ந்தது. காவிரிப் பாலத்திலிருந்து வடக்கு நோக்கினால் காசிகேதாரகட்டம் போன்ற தோற்றம் காசி நகரை நம் கண் முன் கொணர்ந்து நிறுத்துந்தன்மையன. கங்கையில் நீராடும் துறைகள்

64. அதே போல ஐயாற்றில் நீராடும் துறைகள் 24. அதன் அருமை பெருமைகளை உணர பாலத்தின் மேற்கே வடக்கிருந்து வருவோம். அதோ கோடியில் தெரிகிறதே ஒரு துறை அது.

1. சாமாராயர் படித்துறை:

கி.பி. 1840 ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சி சமயம்(தாசில்தார்) வட்டாட்சியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் "சாமாராயர்" என்னும் மராட்டி பேசும் பிராமண ராயர். அவர் தன் சொந்த வருவாயில் மாத்துவப் பிராமணர்களுக்கு ஒரு தெருவும், 5 வீடுகளும் அமைத்துக்கொடுத்ததோடு, அவர்கள் நீராட அழகிய காவிரிப் படித்துறையும் கட்டிக் கொடுத்தார். படித்துறையில் உருது, மராட்டி மொழிக் கல்வெட்டு ஒன்றும் போட்டுள்ளார். அவர் பெயரால் சாமாராயர் படி.த்துறை என்ற பெயரும் கொடுத்தார். அழகிய கருங்கல் படித்துறை கிழக்கு மேற்கே மாடத்தே காவிரி அம்மன் சிலையும், நாகர் உருவச் சிலையும் படித்துறை மேல் நடுவில் பிருந்தாவனமும் கொண்டு விளங்குகிறது. தற்சமயம் பயன்படுத்துவோர் குறைவால் கிலமாகிவருகிறது. அடுத்து,

2. பதினைந்து மண்டபப் படித்துறை

தெரு :யமுனாம்பாள்புரம் என்னும் சரபோஜி மன்னரின் மனைவி பெயரால் வழங்கும். பஞ்சாயத்து போர்டு பதிவேட்டில் இப்பெயரே உள்ளது. ஆயின் வழக்கில் 15 மண்டபத் தெரு என்றே வழங்குவர். இது தஞ்சை சரபோஜி மன்னரால், (கி.பி.1798-1832) 15 வேதப் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட 15 மண்டப வீடுகளைக் கொண்ட தெருவாகவும், அந்த 15 வீடுகளில் உள்ளோர் மட்டும் நீராடும் வசதிக்கேற்ப நீண்ட படி.த்துறையைக் கொண்டு இது விளங்குகிறது. கரையில் சிறிய விநாயகருடன் சிவப்பிராமணர் ஒருவர் சிவலிங்கத்தை வழிபடுவதுபோன்ற அழகிய சிலை ஒன்று மாடத்தில் சான்றாக உள்ளது காணலாம்.

3. சீதாபாயி அம்மே படித்துறை

*இதுவும் 15 மண்டபத் தெருவிலேயே உள்ளது. (கி.பி. 1841) "பிலவ வருஷம் மாசி மாதம் சுக்லபட்ஷம் சத்தமி புதன்கிழமை அசுபதி நட்ஷத்திரம். இந்த சுபதினத்தில் வஜ்ராத்து மாபுனேகோஜி மாடிக்ராவ் அசாயபு அவர்களுடைய பத்தினி சீதாபாயி அம்மாளுடைய தர்மம்" என இப்படித்துறை கட்டிய செய்தியை இதிலுள்ள கல்வெட்டுச் சொல்கிறது. அரசமகளிர் தஞ்சையிலிருந்து வந்தால், காவிரியில் நீராட மறைப்புடன் சொந்த உபயோகத்திற்கென கட்டிக் கொண்ட தனிப்படித்துறையாகும். படித்துறையில் ஐயனார் சிலை உள்ளது. தங்குவதற்கு வீடுமுள்ளது.*

4. ஓடத்துறை படித்துறை

*ஹுஜூர் அரண்மனை மேல்புறம் உள்ள துறை. கி.பி.1816-17ல் மராட்டிய மன்னர் இரண்டாம் சிவாஜியால் (கி.பி.1833-1855) கட்டப்பெற்ற பாலத்தின் ஓரமாக உள்ளது. பாலம் கட்டாததற்கு முன்பாக காவிரியைக் கடக்க பரிசில் அல்லது ஓடத்தில்தான் மக்கள் செல்வர். மக்களை ஏற்றிச் சென்றுவரும் ஓடம் நிற்கும் (பஸ்ஸ்டாண்ட் போன்றது) துறை. நல்ல படிக்கட்டுகளுடன் எளிய மக்கள் நீராடும் துறையாக இருந்து வருகிறது. கரையில் வரசித்தி விநாயகர் உள்ளார். எதிரில் வரலாற்றுச் சிறப்புடைய புறாக்கூடு ஒன்று அழகாக எழுப்பப்பட்டுள்ளது காணலாம்.*

5. ஹுஜூர் அரண்மனைப் படித்துறை

*காவிரிக் கரையில் மிகப் பெரிய யாளி முகப்பினை இருபுறமும் கொண்டு கூட கோபுர, நிலா முற்ற அமைப்போடு கூடிய மாட மாளிகை, தலைமை அரண்மனை கவின்மிகு காதல் மாளிகை, இருபுறம் புறாக்கூண்டுகளுடன் மிக்க அழகோடு கூடிய இவ்வரண்மனையின் வரலாறு சுவையுடையது. அரச குமாரிகள் மட்டும் நீராடும் படித்துறை கொண்டது. இதனைப் பிற்காலத்தே [illegible] பில்டிங் என வெள்ளையர் பெயரிட்டழைத்தனர்.*

[12]கி.பி.1684-1712 வரை தஞ்சை வளநாட்டின் மன்னராக ஆட்சிபுரிந்த 'சகசி' மன்னன் மகாராட்டிர வம்சகுலதீபமாக விளங்கியவன். இவன் ஆட்சியில் தமிழ், தெலுங்கு, மராத்தி, வடமொழி, ஹிந்துஸ்தானி 5 மொழிகளும் வளர்ச்சிபெற்றன. சகசி மன்னன் சோழ மரபு போற்றிக் காத்தவன். திருவாரூர் தியாகராஜப் பெருமானைக் குலதெய்வம் போலப் போற்றி வழிபட்டவன். சதய நட்சத்திரத்தே பிறந்தவன்.

இவனைப் போன்றே மாளவ நாட்டு மன்னன் மகள் சந்திரிகாஹாசை என்பவளும் திருவாரூரில் கோயில் கொண்டுள்ள வன்மீக நாதரை வழிபடுபவள். நாளும் தனக்குத் தகுதியுள்ள கணவன் கிடைக்கவேண்டி, பூசனை செய்து வந்தாள். ஒருநாள் சிவயோக சித்தர் ஒருவர் வந்து பெண்ணே : "சகசி மன்னன் மகாசிவபக்தன் ஆனதால் வன்மீகநாதர் அருளால்தான் சகசியை நீ அடைய முடியும். அம் மன்னனே உனக்கு ஏற்ற கணவன்" என்று கூறி, அவனிடமும் சென்று கூறி அவரே இருவருக்கும் மணம் முடித்து வைத்தார். இவ்வரலாறு, திருவாரூரிலும், தஞ்சையிலும் நாடகமாகவும் நடத்திக் காட்டப் பட்டது.

எனவே, சகசி தன் அருமை மனைவி சந்திரிகாஹாசைக்குக் காவிரிக் கரையில் கட்டிக் கொடுத்த காதல் மாளிகையாகவே இவ்வரண்மனையைக் கொள்ளலாம். தஞ்சையில் அரண்மனை யிருந்தாலும் இங்கு தென்றல் தவழும் - காவிரிக்கரை - காதல் வாழ்விற்கு உகந்ததாக இதனை அமைத்துக் கொடுத்தான். பட்டத்தரசியர் இவருடன் இங்கு தங்கவும், பொழுது போக்கிற்கு கந்த பூங்கா, தோட்டங்களையும் கொண்டுள்ளது. இதற்கு வடக்கே உட்புறமாக கடைவீதியிலுள்ள "நவர் மஹால் அரண்மனைக்கு"ச் செல்லலாம். மற்று, பாதுகாப்பிற்கு உரிய பாதுகாவலர், பாங்கியர் பக்கத்தே தங்க வீடுகள் உள்ள தனித் தெருவுள்ளது - மன்னர் பெயரால்.

---

12. "திருவாரூர்" - குடவாயில் பாலசுப்பிரமணியன், திருக்கோயில் வெளியீடு, 1988, பக்கம் 531, 532

கரைமீது மாத்வர் வணங்க பிருந்தாவனம் ஒன்றும், பக்க மண்டபத்தே விநாயகர், தனுசு சுப்பிரமணியர் கோயிலும், அண்மையில் ஆதிசங்கரர் பிரதிஷ்டையும் செய்யப்பட்டுள்ளன.

புஷ்ய மண்டபப் புனித நீராடற் சிறப்பும் பலனும்

இமயம் முதல் குமரி வரை உள்ள அத்தனை புண்ணிய தீர்த்தங்களும் (புஷ்யமாதம்) தைமாதம் முதல் நாள் மகர சங்கராந்தியன்று ஐயாற்றுத் துறையில் நீராட (கலக்க) வருகின்ற தென்றால் அதில் நாமும் மூழ்கினால் நமக்கும் நற்கதிதானே!

"கங்கை கோதா விரிமுதலாய்க் கணிக் கவரிய தீர்த்தங்கள்
தங்கள் பாவம் தீர்த்தற்குத் தைமா தத்திற் சங்கிரம
மங்கை பாக னையாற்றுத் துறையிற் படிய வருமென்றா
லங்கு மூழ்க நற்கால மதுபோற்றக்க சிறப்புண்டோ!"

தை மாதம் பொங்கலன்று நாமும் மூழ்கி விரதம் இருந்து நான்மறை அந்தணர்க்குத் தீபதானம் கோதானம் ஏதேனும் ஒன்றைச் செய்து ஐயாறப்பரைத் தமிழாலும், வடமொழி மந்திரத்தாலும் வழிபட்டால் பிறவித்துயர் என்பது கிடையாது.

13 "வந்து மூழ்கி யுபவசித்து வகைவந்த நன்மறை யோர்க்குத்
தந்து சேவித்தை யாறன் றனைத்தண் டமிழால் வடசொல்லிற்
சிந்தை யாரத் துதித் தேத்தித்தீப முதலா யேதேனு
முந்த வீயுந் தகையோர்க்கு முடியாப் பிறவித் துயருண்டோ!"

ஐயாற்றுப் பூசை மண்டபத்தே நீராடியோர்க்கு நினைத்தவை கைகூடும்; எல்லா வளமும் கிட்டும்; துன்பம் அகலும்; நோய் விலகும்; ஏழேழு பிறப்புப் பாவமும் அகலும்; பகையகன்று முத்திப் பேறு கிடைக்கும். இது உண்மை. சத்திய வார்த்தை.

14 "நினைத்த கருமங் கைகூடும் நிலையி லிங்கிற் புகவுய்க்கு
மெனைத்து வளமு மெளிதாக்கு மிடர் நோயறுக்கு முயர்வாணா
ளனைத்து மளிக்கு மெழுமையினு மகலாப் பாவ மறத்துடனாய்
முனைத்து பகைதீர்த் தழியாத முத்தி யளிக்கு மீதுண்மை.

13. பஞ்சநதமான்மியம் : செய்யுள் ஏட்டுப்பிரதி, ஸரஸ்வதி மஹால், காவிரிச் சருக்கம்

14. 'திருவையாறு' நூல் சதாசிவ பஞ்சாமி 1988 பக்கம் 6

9. மோட்சப் படித்துறை : அன்றாடம் காணும் உண்மை

"காசிக்கு வீசம் அதிகம் திருவையாறு" எனும் பழமொழி ஒன்று வழங்கப்படுகிறது. இதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?... என ஆராய்ந்தபோது, கங்கைக்கரையில் (காசி) அரிச்சந்திர கட்டத்தில் எந்நாளும் - எந்நேரமும் இறந்தவர்களின் பிணம் வந்தவாறு இருக்கும். எரித்து ஆற்றில் விட்டவண்ணம் இருப்பர். அவ்வாறே, திருவையாறு பூசைப்படித்துறை காவேரி தீர்த்தக் கட்டத்தில், நாளும் தவறாமல் இறந்தோர்க்கு இறுதிக் கடன் செய்வோர் கூட்டம் ஏராளமாக வெளியூர்களிலிருந்து வந்தவண்ணம் இருப்பர். காவிரிக் கரைத்தோட்டத்தில் உள்ள அரச மரத்தடியில் பிண்டம் போடுவது, கயை அட்ஷயவிடத்தில் (ஆலமரத்தடியில்) பிண்டஸ்ரார்த்தம் செய்வதற்கு சமம் என்ற கோட்பாடே காரணமாகும். இறந்தோர் அஸ்தியை இங்கு கரைப்பது காசியில் கரைப்பதற்குச் சமம். எனவே, இறந்தோரை மோட்சத்திற்கு அனுப்ப அஸ்தி, பிண்டமிவற்றைப் போட்டு மூழ்கும் தனிப்படித்துறையாகும்.

இன்றும் நிறைய புரோகிதர்கள் (புரோ + கிதம் = பிறவிக்கு நன்மை தருவோர்) இதற்காகவே ஆற்றங்கரையிலும், பேருந்து நிலையத்திலும் காலையில் பலர் வந்து காத்திருப்பார்கள். அவர்கள் வருவோர் சக்திக்கு ஏற்ப நீத்தார் கடனை முடித்தனுப்புவர். கருமம் + ஆதி = கருமாதி என்றால் பெற்று வளர்த்தவர்களுக்கு செய்யும் முதல் கடமை என்று பொருள். எள்ளும் தண்ணீருமாக இறைத்து ஒரு ஆண்டிற்குரிய எள்ளும் அரிசியும் கலந்த உணவினைப் பிண்டமாக அளித்து பிதிர்க்களாகிய தென்புலத் தாரின் ஆன்மா சாந்தி அடையச் செய்வதாகும். இதனை ஏற்ற இறந்தோரின் ஆன்மா (உயிர்) மகிழ்ந்து வாழ்த்தும். அதற்கு அறிகுறியாகத்தாம் மொட்டையடித்து, காவிரியில் மூழ்கி வந்து பிதிர்வடிவில் உள்ள புரோகிதரிடம் அட்ஷதை, சந்தனப் பொட்டணிந்து ஆசி பெறுவர். அதன்பின் முக்கிய உறவினர் களுடன் தலைக்கட்டு மரியாதைபெற ஐயாறப்பர் ஆலய மண்டபத்தே வந்து அமர்வர். சம்பந்தி, பங்காளி, மாமன்மார்,

6. சகாஜி படித்துறை

*அவர்கள் வாழ அரண்மனையை ஒட்டி 'சகசி' மன்னன் தன் பெயரால் 'சகாஜி தெரு' (சந்து) என்ற ஒன்றை அமைத்துள்ளதே இவ்வரலாற்றுக்குத் தக்க சான்றாக அமையும். அவன் பெயரிலுள்ள காவிரிப் படித்துறையும், இன்று சீனிவாசரால் பள்ளி வசம் உள்ளது. சகாஜி படித்துறை என்ற பெயரில் அரச மகளிர் மட்டும் நீராடும் பாங்கில் மறைவுடன் கட்டப்பட்டுள்ளது. ஆற்றங் கரையில் இன்றும் சகாஜி சந்து என்ற பெயரில் சில வீடுகளைக் கொண்டு விளங்குகிறது.*

7. சிங்கப்பூர் சாமி-படித்துறை :

*அறுபத்துமூவர் மடத்திலிருந்து முருகேசசாமிகள் எனும் சிங்கப்பூர் சாமிகள் நீராடவரும் தனித்துறையாகும், வருவதற்கு மாடி வழி மேம்பாலத்துடன் அழகாகவுள்ளது.*

8. புஷ்ய மண்டபப் படித்துறை - பூசைப்படித்துறை

*இத்துறையே ஐயாற்றுக் காவிரித் தீர்த்த கட்டமாகும். காசியில் கங்கைக் கரையில் உள்ள கேதார கட்டம் போன்றது. ஐயாற்றுக்கு அழகு தரும் தீர்த்தக் கட்டம், முப்புறமும் விசாலமான அழகிய பெரிய மண்டபங்கள் தன்னகத்தே கொண்டுள்ளது. வெளியூரிலிருந்து மக்கள் எத்தனைபேர் வந்தாலும், தங்கி ஆன்மார்த்த பூசை செய்வதற்கும், வைதிக காரியங்கள் செய்வதற்கும் வசதியாக மண்டபம் உள்ள காரணத்தால் இதனைப் "பூசை மண்டபத் துறை" என அழகிய தமிழால் அழைப்பர். சிவபூஜை செய்வதற்கு ஏற்ற அமைதியான இடம். தியானம் - வழிபாட்டிற்குகந்த இனிய சூழல்.*

"ஆசையராய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்?"

*சிவபோகசாரம்*

புஷ்ய மண்டபம் - புஷ்யம் தை மாதத்தையும், பூச நட்ஷத்திரத்தையும் - குறிக்கும். தைப்பொங்கலன்றும், தைப் பூசத்தேயும் தீர்த்தமாடும் சிறப்புக் கருதி புஷ்ய மண்டபம் எனப் பெயர் வந்ததாகவும் கொள்ளலாம். புதுமண்டபத் துறை - என்றும் கூறப. எங்குமில்லாப் புதுமை கருதியுமிருக்கலாம்.

துறை அமைப்பு

நீராடுபவர்க்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் காவிரி உட்புறம் இருபுறமும் உயர்ந்த அழகிய விமான அமைப்புள்ள குதிரை பூட்டிய தேர் மண்டபங்கள் உள்ளன. இதற்கு "வசந்த மண்டபம்" என்று பெயர். இதனை அச்சுதப்ப நாயக்கர் காலத்து இடைமருதூர் ஆனையப்ப பிள்ளையும் அவர் தம்பி வைத்திய நாதரும் எடுப்பித்தனர். இம்மண்டபம் ஒன்றில் வைகாசி மாத வசந்த உற்சவ நாளில் ஐயாறப்பர் எழுந்தருளி ஊஞ்சலில் அமர்ந்து காற்று வாங்கிக்கொண்டு, அருள் பாலிப்பார். காவிரிக் கரையின் நடுவே விமானம் அமைப்புடைய சுவாமி எழுந்தருளும் 16 கால் மண்டபம் உள்ளது. முன்புறம் தகரக் கொட்டகை புண்ணிய காலங்களில், அதாவது விசேட நாட்களில் சுவாமி ஐயாறப்பர் எழுந்தருளி காலையில் தீர்த்தம் கொடுத்துப் பகல் முழுதும் அமர்ந்து காற்று வாங்குவார். இரவு புறப்பட்டு வீதி வலம் வருவார்.

மண்டபத் திருப்பணி

தஞ்சை நாயக்க மன்னர்களில் அச்சுதப்ப நாயக்கர் (கி.பி.1560-1600) காலத்தில் கி.பி. 1596ல் கட்டப்பெற்றது. அவரது அமைச்சராய் இருந்த கோவிந்த தீட்சிதர் என்பார் இதுபோன்றே ஸ்ரீரங்கம், கும்பகோணம், திருவிடைமருதூர், மயிலாடுதுறை காவிரிக்கரையில் கட்டியுள்ளார் என்பர். அவற்றில் இஃது ஒன்றே சிறப்புடன் திகழ்கிறது. சுவாமி அமரும் மண்டபத்தின் அடியில் (ஏ.ஆர்.இ.426/1924) உள்ள வடமொழிக் கல்வெட்டு இதனைக் 'கல்யாணசிந்து' எனக் குறிப்பிடுகிறது. காவிரிக் கரையில் முன்பு, பிராமணர்கள் நீராட சாமாராயர் கட்டிய தனி மண்டபம் இருந்தது 1971ல் படித்துறை விரிவு செய்ய மண்டபத்தை இடித்தனர்

கரைமீது மாத்வர் வணங்க பிருந்தாவனம் ஒன்றும், பக்க மண்டபத்தே விநாயகர், தனுசு சுப்பிரமணியர் கோயிலும், அண்மையில் ஆதிசங்கரர் பிரதிஷ்டையும் செய்யப்பட்டுள்ளன.

புஷ்ய மண்டபப் புனித நீராடற் சிறப்பும் பலனும்

இமயம் முதல் குமரி வரை உள்ள அத்தனை புண்ணிய தீர்த்தங்களும் (புஷ்யமாதம்) தைமாதம் முதல் நாள் மகர சங்கராந்தியன்று ஐயாற்றுத் துறையில் நீராட (கலக்க) வருகின்ற தென்றால் அதில் நாமும் மூழ்கினால் நமக்கும் நற்கதிதானே!

"கங்கை கோதா விரிமுதலாய்க் கணிக் கவரிய தீர்த்தங்கள்
தங்கள் பாவம் தீர்த்தற்குத் தைமா தத்திற் சங்கிரம
மங்கை பாக னையாற்றுத் துறையிற் படிய வருமென்றா
லங்கு மூழ்க நற்கால மதுபோற்றக்க சிறப்புண்டோ!"

தை மாதம் பொங்கலன்று நாமும் மூழ்கி விரதம் இருந்து நான்மறை அந்தணர்க்குத் தீபதானம் கோதானம் ஏதேனும் ஒன்றைச் செய்து ஐயாறப்பரைத் தமிழாலும், வடமொழி மந்திரத்தாலும் வழிபட்டால் பிறவித்துயர் என்பது கிடையாது.

[13]"வந்து மூழ்கி யுபவசித்து வகைவந்த நன்மறை யோர்க்குத்
தந்து சேவித்தை யாறன் றனைத்தண் டமிழால் வடசொல்லிற்
சிந்தை யாரத் துதித் தேத்தித்தீப முதலா யேதேனு
முந்த வீயுந் தகையோர்க்கு முடியாப் பிறவித் துயருண்டோ!"

ஐயாற்றுப் பூசை மண்டபத்தே நீராடியோர்க்கு நினைத்தவை கைகூடும்; எல்லா வளமும் கிட்டும்; துன்பம் அகலும்; நோய் விலகும்; ஏழேழு பிறப்புப் பாவமும் அகலும்; பகையகன்று முத்திப் பேறு கிடைக்கும். இது உண்மை. சத்திய வார்த்தை.

[14]"நினைத்த கருமங் கைகூடும் நிலையி லிங்கிற் புகவுய்க்கு
மெனைத்து வளமு மெளிதாக்கு மிடர் நோயறுக்கு முயர்வாணா
ளனைத்து மளிக்கு மெழுமையினு மகலாப் பாவ மறத்துடனாய்
முனைந்து பகைதீர்த் தழியாத முத்தி யளிக்கு மீதுண்மை.

13. பஞ்சநதமான்மியம் : செய்யுள் ஏட்டுப்பிரதி, ஸரஸ்வதி மஹால், காவிரிச் சருக்கம்

14. 'திருவையாறு' நூல் சதாசிவ பஞ்சாமி 1988 பக்கம் 6

9. மோட்சப் படித்துறை : அன்றாடம் காணும் உண்மை

"காசிக்கு வீசம் அதிகம் திருவையாறு" எனும் பழமொழி ஒன்று வழங்கப்படுகிறது. இதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?... என ஆராய்ந்தபோது, கங்கைக்கரையில் (காசி) அரிச்சந்திர கட்டத்தில் எந்நாளும் - எந்நேரமும் இறந்தவர்களின் பிணம் வந்தவாறு இருக்கும். எரித்து ஆற்றில் விட்டவண்ணம் இருப்பர். அவ்வாறே, திருவையாறு பூசைப்படித்துறை காவேரி தீர்த்தக் கட்டத்தில், நாளும் தவறாமல் இறந்தோர்க்கு இறுதிக் கடன் செய்வோர் கூட்டம் ஏராளமாக வெளியூர்களிலிருந்து வந்தவண்ணம் இருப்பர். காவிரிக் கரைத்தோட்டத்தில் உள்ள அரச மரத்தடியில் பிண்டம் போடுவது, கயை அட்ஷயவிடத்தில் (ஆலமரத்தடியில்) பிண்டஸ்ரார்த்தம் செய்வதற்கு சமம் என்ற கோட்பாடே காரணமாகும். இறந்தோர் அஸ்தியை இங்கு கரைப்பது காசியில் கரைப்பதற்குச் சமம். எனவே, இறந்தோரை மோட்சத்திற்கு அனுப்ப அஸ்தி, பிண்டமிவற்றைப் போட்டு மூழ்கும் தனிப்படித்துறையாகும்.

இன்றும் நிறைய புரோகிதர்கள் (புரோ + கிதம் = பிறவிக்கு நன்மை தருவோர்). இதற்காகவே ஆற்றங்கரையிலும், பேருந்து நிலையத்திலும் காலையில் பலர் வந்து காத்திருப்பார்கள். அவர்கள் வருவோர் சக்திக்கு ஏற்ப நீத்தார் கடனை முடித் தனுப்புவர். கருமம் + ஆதி = கருமாதி என்றால் பெற்று வளர்த் தவர்களுக்கு செய்யும் முதல் கடமை என்று பொருள். எள்ளும் தண்ணீருமாக இறைத்து ஒரு ஆண்டிற்குரிய எள்ளும் அரிசியும் கலந்த உணவினைப் பிண்டமாக அளித்து பிதிர்களாகிய தென்புலத் தாரின் ஆன்மா சாந்தி அடையச் செய்வதாகும். இதனை ஏற்ற இறந்தோரின் ஆன்மா (உயிர்) மகிழ்ந்து வாழ்த்தும். அதற்கு அறிகுறியாகத்தாம் மொட்டையடித்து, காவிரியில் மூழ்கி வந்து பிதிர்வடிவில் உள்ள புரோகிதரிடம் அட்சதை, சந்தனப் பொட்டணிந்து ஆசி பெறுவர். அதன்பின் முக்கிய உறவினர் களுடன் தலைக்கட்டு மரியாதைபெற ஐயாறப்பர் ஆலய மண்டபத்தே வந்து அமர்வர். சம்பந்தி, பங்காளி, மாமன்மார்,

மைத்துனர் ஆகியோர் சந்தனம் வெற்றிலை பாக்குடன் புத்தாடை வழங்க அதனை உடுத்திக்கொண்டு யாவரும் ஐயாறப்பர் ஆலயம் சென்று அம்மையப்பருக்கு அர்ச்சனை வழிபாடாற்றி உணவு விடுதியில் (ஹோட்டல்) வடை பாயசத்துடன் உறவினரோடு உணவருந்திச் சிறப்பாக நீத்தார் கடனை நிறைவேற்றிய மகிழ்வில் அவரவர் ஊர்செல்லும் காட்சியை அன்றாடம் காணலாம். இவ்வாறே மாளயபட்சத்திலும் (புரட்டாசி அமாவாசைக்குப் பிறகு) திதிசெய்ய மறந்தோர் இங்கு வந்துசெய்வர். சிரார்த்தம் (சிரத்தையோடு செய்வது) தெ + வசம் = தெய்வநிலை அடைந் தோர்க்கு இலைபோட்டுக் கொடுப்பதைச் சிறந்ததாகக் கருதி இங்கு வந்து செய்வர். சிரார்த்தம் பிராமணர்கள் பிதிரர்களாகவே பிராமணர்களை அமர்த்தி, அவர்களுக்கு மனப்பூர்வமாக பஞ்சபட்ச பாயசான்னத்தோடு உணவிட்டு நமஸ்காரம் செய்து பூரிதட்சணையுடன் கொடுப்பர்.

---

திருவையாற்றுச் சிறப்பில் நகரத்தாரின் திருப்பணிகள் ஒப்பற்றனவாகும். அவை :

1. அறம் வளர்த்த நாயகி திருக்கோயில் திருப்பணி : உ.ராம.மெ.சுப.சேவு. சேவுகன் மெய்யப்பச்செட்டியார் குடும்பத்தினர்

2. மேட்டுத் தெரு அப்பர் குட்டை திருக்குளத் திருப்பணி : காரைக்குடி, ஆவி. பழ.சித .ராம உபய

3. அன்னசத்திரம் :கருத்தான்செட்டியார் வகையறா - சி.நா. சத்திரம்

4. பசுமடம் :வ. அழ .ராம வகையறா உபயம் - ஐயாறப்பருக்கு அபிடேகப் பால் தருகிறார்கள்

5. தேவார பாடசாலை : ஆலெ.ராம.மெய்யம்மை ஆச்சி உபயம்

6. கடைத்தெரு தண்ணீர்பந்தல், தர்மம் : பி.ச.அரு

7. செண்பகப்பேட்டைத் தெரு நந்தவனம் :தேவகோட்டை பி.ச.அரு.

8. வேதபாடசாலை :ஒய்யக்கொண்டான் சிறுவயல் செ.

## 10. கல்யாணமகால் கல்லூரிப் படித்துறை

இன்று 'திருவையாறு அரசர் கல்லூரி' எனச் சிறப்புடன் விளங்கும், மொழி அரசியும், கலையரசியும் செங்கோலோச்சும் பல்கலைக் கல்லூரி உள்ள இடமே கல்யாணமகால் கட்டிடமாகும். தாஜ்மஹால், நாயக்கர்மஹால் என்பது போல 'கல்யாணிமஹால்' என்பதே மருவி கல்யாணமால் என வழங்கி வருகிறது. இதன் வரலாறு சுவையுடையது.

தஞ்சையை ஆண்ட 2 ஆம் சரபோஜி மன்னன் (கி.பி.1798 - 1832) சிறந்த கலைக் காவலன்; மராட்டிய மன்னர்களில் தலை சிறந்து விளங்கியவன். ஒரு சமயம் வடநாடு யாத்திரை சென்ற போது கங்கைக்கரையில் வாழ்ந்த 'கல்யாணி' என்ற பெண்ணை விரும்பி அழைத்தனனாம். அது சமயம் அவள், அரசனிடம், 'தாம் தன் சகோதரியுடன் கங்கைக்கரை அரண் மனையில் வாழ்வது போல உம் ஊரில் அமைத்துத் தந்தால் அங்கு வருவதாகக் கூறினளாம். அதனை ஏற்ற சரபோஜி மன்னர், ஐயாற்றுக் காவிரிக் கரையில் இவ்வரண்மனையைக் கட்டிக் கொடுத்தனராம். இரண்டு பேருக்கும் நான்கு அடுக்குகளைக் கொண்ட இரண்டு கட்டிடங்களை ஒரே அமைப்பில் வித்தியாசம் இல்லாமல் வழ-வழப்பாகப் பளிங்குச் சுவரால் அமைத்துக் கொடுத்துள்ளதை இன்று கண்டாலும் பழைய சுவர்களில் முகம் தெரியும். கூண்டில்லாத சமதள அமைப்புக் கட்டிடக் கலைக்கு சான்றாக இது விளங்குகிறது. இருபுறமும் நீண்டப் படித்துறை கொண்டது. இருபடித்துறை இருபுற மாடங்களிலும் விநாயகர், தண்டபாணி உள்ளனர். தோழியர், அரசியல் பாதுகாவலர் பக்கலில் தங்கும் தனிக் கட்டிடங்களும், தனிப் படித்துறைகளும் உள்ளன.

## 11. இராணிகல்யாணி பாய் படித்துறை

அரசியார் மட்டும் குளிக்கும் தனிப் படித்துறையாகும். இது கீழ்புறம் (சமையல்கட்டு இறங்குள்ள படித்துறை) மாடங்கள் இரண்டில் கீழ்புறம் கல்யாணி அரசி வணங்கி நிற்க, எதிர் மாடத்தே கிருஷ்ணன் வேய்ங்குழல் ஊதிக் கொண்டு காட்சி தருகிறான்.

"கல்யாணிமகால்" என்பதற்கு இச்சிலையே தக்க சான்றாக அமையும். அதன்பிறகு சரபோஜி மன்னனின் ஆசை நாயகி லாகுபாய்வசம் வந்தது.* இந்த லாகுபாய் அம்மாவிடம் 31.12.1828ல் தியாகப்ரம்மம் தன் வீட்டை விற்றார்கள்.

12. கயிலாச வாகனப் படித்துறை

சித்திரை உற்சவ வசந்த உற்சவ காலங்களில் ஐயாறப்பர் எழுந்தருளி அமரும் படித்துறையாகும். (கல்யாணமஹால் மண்டகப்படி.)

13. திருமஞ்சனப் படித்துறை

அருள்மிகு ஐயாறப்பருக்குத் தினம் காவிரி நீர் அபிடேகத்திற்கு எடுத்துச் செல்லும் துறையாகும். தெய்வத் தன்மை வாய்ந்த படித்துறை என்பதற்குச் சான்றாக

இதன் தனிச்சிறப்பு :

115 அடி நீளமுள்ள இதன் படிக்கட்டுகள் யாவுமே சந்தனக்கல்லால் ஆனவை. இன்றும் சிறிதும் சிதறாமல் வழவழப் பாகக் காட்சி தருகிறது. இது எங்கும் காணக் கிடைக்காத அற்புதம். சலவைத் தொழிலாளர் நன்கு அழுக்குப் போவதாகக் கூறி இங்கு வருவர்.

14. யசந்தரப்பா சந்துப் படித்துறை

கி.பி. 1830 இல் மராட்டிய மன்னர் 2ம் சிவாஜியால் மானியமாகக் கொடுக்கப்பட்டது. யசந்தரப்பாவின் பேரன் கிருஷ்ணராஜ் சூரிய வம்சி குடும்பத்தாருள்ளனர்.

தனக்கென சிறிய படித்துறையாக அமைத்துக் கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது. துறையின் எதிரில் 12 கால் மண்டபமும், தெற்குப் பார்த்த விநாயகர் கோயிலும் உள்ளது. இதனைத் தொடர்ந்துள்ள சந்தனக்கல் படித்துறை திருமஞ்சனப் படித்துறை என்று கூறுவர். படித்துறை இருபுற மாடங்களில்

* ஸ்ரீ தியாகப்பிரம்ம மஹோத்சவ சபா - பொன்விழா மலர் 1991 _ ஸ்ரீ [illegible]த்துள்ள ஓலை ஏட்டுப்பத்திரம்

மேற்கில் இராமர், சீதை, இலக்குவரும் எதிரில் இராவணன் வணங்கி நிற்பது போன்ற சிலையும் உள்ளது ஓர் சிறப்பு அம்சம்.

15 இராணி பீமாபாய் அம்மி அரண்மனைப் படித்துறை:

இருபுறமும் விமான மண்டப மேடை. படித்துறை கீழ்புற மாடத்தில் பீமாபாயி ஷாப் அரசி சிலை வடிவில் சர்வாலங்கார புஷிதையாய் வணங்கி நிற்கிறாள். சுவரில் சப்தகன்னியர் உள்ளனர். விட்டோபா கோயிலுக்குரியவரின் அரண்மனைப் படித்துறையாகும் இது.

16. முத்து நாயக்கன் படித்துறை:

*முத்துவீரப்ப நாயக்கன் என்பது முத்து நாயக்கன் என்றாயிற்று. தஞ்சையிலும், மதுரையிலும் இந்நாயக்க மன்னரின் ஆட்சிக் காலம் கி.பி. 1682 1689. இவன் ஏகபத்தினி விரதன். அவன் ஆட்சிக் காலத்து இத்தெரு, படித்துறை ஏற்பட்டிருக்க வேண்டும். அறம் மலிந்த நெஞ்சினராய்ச் சத்திரங்களையும் பார்ப்பனக் குடியிருப்புகளையும் அமைத்தவர். படித்துறை இருபுற மாடங்களிலும் இராமர், சீதை, இலக்குவர் எதிரில் நாயுடன் பைரவர் நிற்கிறார்.

17. இராஜாப் படித்துறை:

துளஜா மகாராஜா வந்தால் நீராடுவதற்குத் தனி மண்டப அமைப்போடு உள்ள தனிப் படித்துறை. இது தஞ்சாவூர் குஜராத்தி சபா வசமுள்ளது.

18. விக்டோபா கோயில் படித்துறை:

[2]தஞ்சை மராட்டிய மன்னர் இரண்டாம் துளஜா மகாராஜா (கி.பி.17631787). இவர் திருவையாறு தியாகப்ரமம் தந்தையார். இராமப்ரம்மத்தை ஆதரித்து திருமஞ்சன வீதியில் வீடு வழங்கியவர். மகாராட்டிரருக்கு உறவினர் யாரும் வடக்கே ட ாதலின் துளசிங்க மகாராஜாவிற்கு காமாட்சிபீமா பாயிஷாப் என்னும் பெண்ணைப் பார்த்தார்கள். அப்பெண் பாண்டுரெங்க

---

* மதுரை நாயக்கர் வரலாறு: அ.கி. பரமானந்தர் பாரி நிலையம். சென்னை பக்கம் 317 2ம் பதிப்பு 1966

1. செய்தி வழங்கியவர் திரு. சுந்தரக்குருக்கள் வயது 90. 10.10.92

பக்கத்தை, தஞ்சாவூர் மகாராஜாவிற்குத் தான் வாழ்க்கைப் படுவதாயிருந்ததால், சந்திரபாகா நதிக்கரையில் உள்ள விக்டோபாவைப் போல் அங்கும் தனக்காக கோயில் அமைத்துக் கொடுத்தால் சம்மதிப்பதாகக் கூறினாள். அவள் அழகில் மயங்கிய மன்னரும், சரி என்று திருவையாறு காவிரிக் கரையில் இந்த விக்டோபா கோயிலையும் அமைத்துக் கொடுத்தார். பக்கத்தி லேயே அரண்மனை (மாளிகை) ஒன்றும் கட்டிக் கொடுத்தார். அழகிய படித்துறையுடன் இதற்கு முன் உள்ளது. இந்தியாவிலேயே இரண்டு இடங்களில்தான் பாண்டு ரெங்கன் கோயில் உள்ளது. பண்டரிபுரத்தில் ஒன்றும், இங்கு ஒன்றுமாகும். மற்றொரு சிறப்பு: பாண்டுரெங்கன் முடியில் சிவலிங்கம் உள்ளது கண்டு தரிசிக்க வேண்டியது. எதிரில் பீமா பாயிஷாப் சிலையும் உள்ளது. பக்கத்தில் காசி விசுவநாதர் தனிக் கோயிலையும் கட்டிக் கொடுத்து, சிவவிஷ்ணு பேதமின்றி வழிபடச் செய்தான். மிகப் பழமையான கோயில் இதனைப் புதுப்பித்தால் நன்றாக இருக்கும். ராணியின் மகள் சம்மாராப் பாயிஷாப் 100 வயது வரை வாழ்ந்தார். அவளது பரம்பரையினர் இங்கு உள்ளனர். கோயில் காஞ்சி சங்கராச்சாரியார் பராமரிப்பில் உள்ளது.

**19. செவ்வாய்க் கிழமைப் படித்துறை அல்ல செவ்வப்ப நாயக்கன் படித்துறை:**

கீழ்புறம் மண்டபமும், மேல்புறம் மங்கள விநாயகர் கோயிலும், இடையே படித்துறையும் கொண்டு விளங்குகிறது. ஆடி, தைச் செவ்வாய் கிழமைகளில் ஸ்வாமி எழுந்தருளி தீர்த்தம் கொடுத்திருக்குமோ எனக் கருதி பலரையும் வினவினோம். அப்படி என்றும் இல்லை, என்றே பெரியவர் பலரும் கூறினர். அருள்மிகு ஐயாறப்பரின் திருவருளை நயந்து விண்ணப்பித்த சமயம் திரு. எல்.என். ராமசாமி எம்.ஏ.,பி.எல்., அன்பர் மூலம் சான்றோடு திருவருள் விளக்கம் கிடைத்தது. செவ்வாய்க் கிழமை அல்ல, செவ்வப்ப நாயக்கன் படித்துறை என்பதே அது என்றதும் ஆய்ந்தோம்.

*கி.பி. 1532-1560 வரை 28 ஆண்டுகள் சோழ நாட்டில் செங்கோலோச்சிய செவ்வப்ப நாயக்கர் தமிழகத்திலேயே மிக உயர்ந்த கோபுரமான திருவண்ணாமலை இராசகோபுரத்தை எடுப்பித்து அழியாப் புகழ் அடைந்தவர். இவர் கட்டுவித்த கோபுரங்களும், திருமதில் பிரகாரங்களும், கோயிற்திருப் பணிகளும் ஏராளம். இவற்றுள் குறிப்பிடத்தக்கவை காஞ்சிபுரம், ஸ்ரீசைலம், விருத்தாசலம், திருவாரூர் கோயில்களுக்குக் கோபுரங்கள் கட்டித் திருப்பணி செய்ததோடு, ஸ்ரீசைலம், திருப்பதி போன்ற கோயில் விமானங்களுக்குப் பொன் வேய்ந்தும் சமயப்பணி செய்துள்ளார். திருக்கோயில் திருப்பணி செய்வதில் பேரார்வம் காட்டிய இம்மன்னன் சுவாமிமலை திருக் கோயிலைத் திருப்பணி செய்து, சுவாமிநாத சாமி சந்நிதி முன் மண்டபத் தூணில் தன் உருவச் சிலையை இடம்பெறுமாறு செய்தான். இவ்வளவு திருப்பணிகளைச் செய்த மன்னவன் தஞ்சைக்குப் பக்கத்தில் உள்ள திருவையாற்றில் திருப்பணி செய்யாமல் இருப்பானா? அச்சுத நாயக்கர் போல, செவ்வப்ப நாயக்கனும் சில திருப்பணிகள் செய்துள்ளான். ஐயாறப்பர் திருக்கோயில் திருமதில் பிரகாரம் அவன் திருப்பணியாகத்தான் இருக்க வேண்டும். எனவே காவிரிப் படித்துறைகள் ஒவ்வொன்றும் ஒரு மன்னர் பெயரால் வருவது போல தஞ்சை நாயக்க மன்னர்களில் செவ்வப்ப நாயக்கரால் கட்டப்பெற்ற படித்துறையே இது. நீண்ட காலப்போக்கில் செவ்வப்ப நாயக்கன் செவ்வப்பவாகி, செவ்வப்பா செவ்வாய்க் கிழமையாகி எப்படியோ மருவி வந்துவிட்டது என்பது தெற்றெனத் தெரிகிறது.

## 20. இராமப்ப அக்ரஹாரம் படித்துறை

[1] காவிரிக் கரையில் அந்தணர் வசித்த காலம் ஒன்று உண்டு. இப்போது யாவரும் வாழ்கின்றனர். (திருமலை நாயக்கர் கி.பி. 1623 1659) நாயக்கர் ஆட்சி தஞ்சையில் இருந்த காலத்தே அவரது படைத்தலைவரான இராமப்பய்யர் அக்காலத்தே வீரப்புகழ் மிக்கவராய்த் திகழ்ந்தார். அவர் தஞ்சையில் இருந்தபொழுது

* திருவாரூர் குடவாசல் பால சுப்ரமணியம் கோயில் வெளியீடு 1988 பக்கம் 29.

1. மதுரை நாயக்கர் வரலாறு பாரி நிலையம், சென்னை. 1966 பக்கம் 164.

திருவையாற்றின் வளம் கண்டு காவிரிக் கரையில் தன் பெயரால் வீடுகள் கட்டி, நீராடத் துறையும் கட்டியிருக்க வேண்டும். இராமப்பய்யர் அக்ரஹாரம் இன்று இராமப்பா அக்ரஹாரமாகி படிக்கட்டுகள் போய் களையிழந்து காணப்படுகிறது. 350 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதல்லவா?

**21. சேதுபாவா சாமியார்ப் படித்துறை:**

* மராட்டிய மன்னன் இரண்டாம் சிவாஜியின் (கி.பி. 1832 1855) குரு சேதுபாவா சாமி என்பவராவார். பாவாசாமி அக்ரஹாரத்தே அவரது அரண்மனை வீடுகள் எண் 8,9,10 உள்ளன. அக்காலத்தே அவர் குடும்பத்தார் கோஷாப் பெண்கள் இரட்டைக் குதிரைப் பீட்டனில் ஒத்தத் தெரு வழியாக வந்து நீராடுவதற்கெனவே தமக்கென தனியாகக் கட்டிய படித்துறை யாகும். பாவாசாமி (யார்) படித்துறை காலப்போக்கில் சாமியார்ப் படித்துறை என முதற்குறையாகி விட்டது. அங்குள்ள காசி விஸ்வநாதர் கோயிலும் அவர்களுக்காகவே அவர்கள் கட்டிக் கொண்டவை ஆகும். அடுத்துள்ளது தியாகய்யர் படித்துறை.

**22. தியாகய்யர் படித்துறை:**

சாமியார் படித்துறை அடுத்துள்ள படித்துறை இது. தற்கால அமைப்பில் நீண்ட சிமெண்ட் படித்துறையாக சருக்கையுடன் அமைந்துள்ளது. இடிந்துமுள்ளது. இதில் அப்பகுதி மக்களும், விழாக்காலத்தில் பக்தர்களும் நீராடுவர்.

காவிரித்தாய் சலசல ஒலிசுருதியுடன் "சோபில்லு சப்தஸ்வரசோ" எனும் தியாகராஜர் கீர்த்தனையை இனிமையாகப் பாடிக் கொண்டே ஓடிக் கொண்டுள்ளாள். உலகமே ஈடு இணையற்ற இசைமாமேதையாகப் போற்றப் பெறும் ஸ்ரீதியாக ப்ரம்மம் எனப்படும் சத்குரு தியாகராஜ சுவாமிகளின் 'ஜீவசமாதி' ஸ்வர்க்கோடி இக்காவிரிக்கரையில் அமைந்துள்ள ஒரு தனிச் சிறப்பு. மன்னர்களின் சமாதிக் கோயிலை 'பள்ளிப்படை' என்பர். அதுபோல் இவரும் ஓர் சங்கீத சக்கரவர்த்தி யாதலின் இவரது

* திருவையாறு எச். வாசுதேவராவ்சாஹேப் கர்வே 12.12.92. 90 வயதுடையவர் நேரில் கூறியவை.

சமாதிக் கோயிலையும் ஒரு 'பள்ளிப்படை' என்றே கூறலாம். பிராமணர்களின் சமாதிகள் அடங்கிய மயான பூமியே இது. பிருந்தாவனத்தின் முன் சலவைக்கல்லிலான திருவுருவில் "தியாகப் பிரம்மம்" அமைதியே வடிவாய் அமர்ந்து கொண்டு நாடி வருவோர்க்கு நலம் பல நல்கிக் கொண்டுள்ளார்.

23. மயானப் படித்துறை:

திருவையாற்றில் இறந்தவர்களுக்கெல்லாம் எமவாதனை கிடையாது. ஆட்கொண்டார் சந்நிதியில் போடும் குங்குலியப் புகை படரும் தூரம் வரை காலதூதர் வாரார். சிவகணங்களே அழைத்துச் செல்வர் எனும் சிறப்புடைய தலத்தின் மயானபூமி.

இறந்தவர் சடலங்களைக் கிடத்தி, இத்துறைக் காவிரித் தீர்த்தத்தால் வைதீக கிரியை செய்யும் காவிரிப் படித்துறை. மராட்டிய மன்னர்குரிய இப்பகுதி "துளசித் தொண்டித் தோட்டம்" என அக்காலத்தே வழங்கி வந்தது.

24. ஐராவணப் படித்துறை:

ஐயாற்றின் கிழக்கே 1கி.மீ தூரத்திலுள்ள 'கார்குடி' படித்துறையே ஐராவணப் படித்துறையாகும். அரசு, வேம்பு மரத்துடன் இருந்த கருங்கல் படித்துறை புயலில் சிதைந்து மண்படித்துறையாகிவிட்டது. அருமையான தூய தமிழ்ப் பெயர் கொண்ட இதனை அறிய, பல்கால் கவன்று திருவருட் குறிப்பின் துணை கொண்டே அறிய முடிந்தது.

இதனை, டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் திருவையாற்றுக் குறிப்பில் "செங்கழுநீர்ஓடை" ஐராவணப் படித்துறை போகிற வழிக்குக் கிழக்கும் மேற்கும் எனக் குறிப்பிடுகிறார். இது எங்குள்ளது என்பதறிய பலபாடுபட்டோம். சிவனடியார் AP. வேணுகோபால் என்பவரின் செங்கழுநீர் நிலத்தைக் கொண்டு கார்குடிப் படித்துறைதான் ஐராவணப் படித்துறை என்பது தெளிந்தோம், ஐராவணம் என்பதற்கு இந்திரனின் யானை என்றும் சுயம்புமண் என்றும் பொருள். அப்பர் சுவாமிகள் திருவாரூர்த்தாண்டகத்தே, "உயிரா வணமிருந்து..........

3. அயிராவண மேறாதா னேறேறி அமரர் நாடாளாதே ஆரூராண்ட

4. அயிராவண மேயென் னம்மானே நின் அருட் கண்ணால் நோக்காரார் அல்லாதாரே" எனப் பாடியுள்ளார்.


முதல் ஐராவணத்திற்கு இந்திரனது யானையாகிய அயிராவணத்திலேறாமல் என்றும், இரண்டாவது அயிரா வணத்திற்கு சுயம்பு (புற்று மண்) வடிவமான வன்மீக நாதப் பெருமானே என்றும் பொருள். எனவே இரண்டாவது ஐராவணப் பொருள்படி, மணற்படித்துறையாகவே உள்ளது. பெயருக்கேற்ப இன்றளவும் இயல்பான மண்படித்துறை நிலையிலே ஐராவணப் படித்துறையாக உள்ளது. அதனால்தான் கருங்கல் படித்துறை நிலைக்கவில்லை போலும்.

**2. வரலாறு வழங்கும் திருவையாறு நிறைவுரை:**

வரலாறுகள் வாழ்க்கையின் வழிகாட்டியாக நம்மை நல்வழிப்படுத்தவல்லன என்பதனை திருவையாறு வரலாற்றில் வரும் கரிகாற் பெருவளத்தானின் வரலாறு மூலம் அறிந்தோம் பழங்காலச் செய்தியாக புத்துணர்வூட்டும் செய்தியாக அமைகிறது. இதனால் நம்மை அறியாமல், நம் முன்னோர் தம் திறனை அவர்தம் ஆட்சித் திறனைக் கண்டறிந்து வியக்கின்றோம். சோழ வளநாட்டின் பெருமைக்குக் கரிகாலனின் ஆட்சி ஓர் கலங்கரை விளக்கம் எனலாம். அவனால் எழுப்பப்பட்ட " கல்லணை " அவன் புகழ் போற்றும் நினைவாலயமாகத் திகழ்கிறது. அவன் காலம் ஓர் பொற்காலம் எனலாம். ஏன்? பிற்காலத் தஞ்சை மன்னர்கள் கூட அவன் அடிச்சுவட்டைப் பின் பற்றி ஐயாற்றுக் காவிரிக் கரையில் பல படித்துறைகளை அமைத்து வரலாறு படைத்துக் கொண்டனர். இவையாவும் நமக்குக் கிடைத்தற்கரிய கருத்துக் கருவூலங்களாகும். இதுவரை எவரும் செய்யாத செயற்கரிய பணி காலங்காலமாய் அவர்கள் புகழ் பாடும் பரணி எனலாம். இவைகளைப் படித்த நமக்கு "ஐயாற்றுப் பெருமை இத்தகையதா?" என நம்மை ஓர் வியப்பிலாழ்த்துகின்றதன்றோ?

தேசத்தார் பரவியேத்தும் திருவையா றமர்ந்ததேனை
வாசத்தால் வணங்கவல்லார் வல்வினை மாயுமன்றே".

அப்பர்



பொருளடக்கம்

## 3. திருக்கோயிலிற் சிறந்த திருவையாறு

சோணாட்டு வளமும், தலமும்,--திருவையாற்றுத் தல மேன்மை -- கோயிற் சிறப்பும் பழமையும்,--ஓலமிட்ட விநாயகர் -- 1. அருள்மிகு ஆட்கொண்டார் ஆலயம் 2. தென்கயிலாயமெனும் பஞ்சவன் மாதேவீச்சுரம் 3. வடகயிலாயமெனும் ஓலோகமா தேவீச்சுரம் 4. ஐயாறப்பர் ஆலயம்--காவரி கோட்டம் காசி விசுவநாதர் விசாலாட்சி உட்கோயில்--திருத்தலத்தரு அம்மன் கோயில் வழிபாட்டிற்கு வந்த காலம் 5. அருள்மிகு அறம் வளர்த்த நாயகி கோயில் எனும் திருக்காமகோட்டம்--அன்னையின் எழிற்கோலம்--தனிச்சிறப்பு ஐயாற்று அறுதீர்த்தங்களின் பெருமை--வெளியூர்களில் ஐயாறப்பர் கோயில்கள்--பழமை நினைவுகள் உண்மை நிகழ்ச்சிகள், நிறைவுரை

இணைப்பு : திருக்கோயில் வரைபடம்
நாவுக்கரசர் வரலாறு வண்ணப்படம்
கோயிற்படங்கள் மூர்த்தங்கள்

# 3. திருக்கோயிலிற் சிறந்த திருவையாறு

(மூர்த்தி, தல, தீர்த்த மகிமை)

"நோக்கிய இடங்க ளெல்லாம் நுவலரும் தலங்களாகத்
தேக்கிய தீர்த்த மாகச் சிவலிங்க மூர்த்தியாக
ஆக்கிய தவத்தா னாளும் அடைந்தவர்க் கறமென்றோதும்
பாக்கிய மாக்கிம் மேலுய்ப் பதுமுது சென்னிநாடு"

– மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

*குறிப்பு: நமது ஐயாறப்பர் ஆலய வரலாற்று நூலில் வெளிப்படுத்தாத புதிய செய்திகள் பல இதில் இடம் பெற்றுள்ளன.*

## சோணாட்டு வளமும் தலமும்:

*'சோழ வளநாடு சோறுடைத்து' என்பது மட்டுமன்று, கோயிலுடைத்து என்னும் பெருமையினையும் கொண்டது. சோழநாடு எந்த அளவிற்கு நெல் நிறைந்த நாடாக விளங்குகிறதோ, அந்த அளவிற்குக் கோயில் மலிந்த நாடாகவும் திகழ்கின்றது. கழனி வளமும், கோயில் வளமும் சோணாட்டிற்குத் தனிப் பெருமை யளிக்கிறது. இப்பெருமைக்கும் மூல காரணம் காவிரி வளமே.*

## திருவையாற்றுத் தல மேன்மை:

*வளம் சார்ந்த தலங்களில் காவிரி வடகரைத் தலங்களில் 51 வதாக விளங்குவது திருவையாறு. காசி விசுவநாதர் கோயில் போன்று இத்தலம் புனிதம் மிக்கதாகப் போற்றி வணங்கப் படுகிறது. மூவரின் பாடல் பெற்ற தலம் : (சம்பந்தர் 5, அப்பர் 12, சுந்தரர் 1 ஆக 18 பதிகங்களைக் கொண்டது அப்பர் பெருமானின் அதிகப்பாடல் பெற்ற தலங்களில் மூன்றாவது தலம்.*

*காவிரியின் கரையில் எவ்வளவோ கோயில்கள் இருப்பினும் இந்தக் கோயில் ஒன்று மட்டுமே "காவிரிக்கோட்டம்" என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றுத் திகழ்கிறது.*

*ஆடி அமாவாசை நாளில் அப்பர் அடிகளுக்குச் சிவபெருமான், "நம்மை நீ கயிலையில் இருந்த அம்முறைமை பழுதில் சீர் திருவையாற்றிற்காண்" என திருக்கயிலாயக் காட்சி அளித்த திருத்தலம் இது.*

சம்பந்தப் பெருமான் ஐயாறன் அருள் நிழலில் தங்கி கலைமணங் கமழும் ஐயாற்றின் இயற்கை எழிலைச் சந்தத் தமிழில் இருமுறை வந்து பாடியருளிய தலம்.

சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், சேரமான் பெருமான் நாயனாருக்கும் இறைவன் காவிரியின் வெள்ளத்தைப் பளிங்கு மலை போல் மேற்புறம் ஒதுக்கி வழிவிடச் செய்த ஒப்பற்ற திருப்பதி. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு தியாகராஜ சுவாமிகள் ஜீவன் முக்தியடைந்த திருத்தலம்.

## *கோயிற் சிறப்பும் பழமையும்:

திருவையாறு நகரின் நடுநாயகமாக அமைந்து விளங்குவது ஐயாற்றீசர் திருக்கோயில். திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான இத்திருக்கோயிலினுள் ஐந்து கோயில்கள் உள்ளன. இவ்வைந்தனுள் முதன்மையும், தொன்மையும் மிக்கது ஐயாறப்பர் கோயில். இக்கோயில் ஐந்து திருச்சுற்றுக்களோடும் அழகிய கோபுரங்களோடும் விளங்கக் காண்கிறோம். இத்திருக்கோயிலின் மொத்தப் பரப்பளவு 14 3/4 ஏக்கர். கிட்டத்தட்ட தஞ்சை பெரிய கோயிலை விட இரண்டு மடங்கு அதிகப் பரப்புடையது.

இதுகாறும் திருவையாறு ஐயாறப்பர் கோயில் ஆதித்த சோழனால் கட்டப்பட்டது என்ற கருத்து நிலவியது. ஆனால் அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புகள் இதனை மாற்றி அமைத்துள்ளன. இக்கோயில் தெற்குச் சுவரில் புகழ்பெற்ற பல்லவ மன்னன் தெள்ளாறெறிந்த நந்திவர்மனின் கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதனால் இவன் ஆதித்த சோழனை விடக் காலத்தால் முற்பட்டவன் என்பதும், இத்திருக்கோயில் ஆதித்த சோழனுக்கு முன்பே கட்டப்பட்டுள்ளது என்பதும் உறுதியாகிறது. இதனால் பல்லவ மன்னர் காலத்தில் உருவாக்கப் பெற்ற கோயில் சோழ மன்னர்கள் காலத்தில் விரிவாக்கப் பெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது. மூவர் முதலிகளால் பாடல் பெற்ற காலத்திலேயே இக்கோயில் செங்கல் தளியாக இருந்திருக்க

* திருவையாறு : புலவர் செந்துறைமுத்து டாக்டர் ச. வெங்கடேசன், மணிவாசகர் பதிப்பகம். செப்டம்பர் 1989, பக்கம் 2.

வேண்டும். எனவே ஐயாறப்பர் கோயில் எப்பொழுது வழிபாட்டிற்கு வந்தது என்பதை நம்மால் கணிக்க இயலாது.

பல்லவர் திருப்பணி என்பதற்குச் சான்று: சோழர் கால துவாரபாலகர்களுக்கு நான்கு கைகள் இருக்கும். பல்லவர்கால துவார பாலகர் வாயில் காவலர்களுக்கு இரண்டே கைகள்தான் இருக்கும். இங்குள்ள வாயில் காவலர்கள் இரண்டு கைகள் உடையவர்களே.

## ஓலமிட்ட விநாயகர்:

அன்று, காவிரித் தென்கரையாயிருந்த கண்டியூரில் நின்றபடி சுந்தரர் ஐயாற்றெம் பெருமானைப் "பரவும் பரிசொன்றறியேன் நான்..... காவிரிக் கோட்டத் தையாருடைய அடிகளோ" எனப் பதிகம் பாடி ஓலமிட்டழைத்தார். எதிர் ஒலியாக, 'ஓலம் ஓலம்' (அபயம் அபயம்) என எதிர்க்குரல் கொடுத்து அழைத்து வந்த பிள்ளையார் "ஓலமிட்ட விநாயகர்" இவர் தெற்குக் கோபுர வாயில்வழி நுழையும் நமக்கு, முதலில் காட்சி தருகிறார். இடப்புறம் கிழக்குப் பார்த்த சந்நிதி, சுந்தரருக்கு அபயமளித்து அழைத்து வந்ததால் சுந்தர விநாயகர் எனவும் கூறி வழிபடுகின்றோம். சுந்தரருக்கு மட்டுந்தான் அபயம் பாதுகாப்பு அளிப்பவரா? ஏன்? நாமும் நம் துன்பங்களைச் சொன்னால் ஓடோடி வந்து உதவுகிறார்என்பதனை இன்றும் சங்கடகர சதுர்த்தி நாளில் ஏராளமானோர் வழிபட்டு நலம் பெறுவதைக் கொண்டு நன்கு அறியலாம்.

### 1. அருள்மிகு ஆட்கொண்டார் ஆலயம்

தெற்குக் கோபுர வாயில் இருபுறமும் ஆட்கொண்டார், உய்யக் கொண்டார் எனும் இரு துவார பாலகர்கள் உள்ளனர். புராணங்களில் அசிதாங்க குண்டன் சிச குண்டன் எனக் கூறும் தனிக்கோயில். தெற்குப் பார்த்த மூர்த்தங்கள் சிறந்தவை என்பார்கள். தெட்சணாமூர்த்தி நடராஜர், சண்டேசர் போன்ற தென்முகமூர்த்தங்கள் அருட்சக்தி மிக்கவர்கள். இவர்களைப் போன்றே எத்தலத்திலுமில்லா ஆட்கொண்டார் தெற்கு நோக்கி எமனை உதைத்து, எமன்திசை நோக்கி நிற்கிறார். எங்கும் துர்க்கைத் தலமுண்டு. பைரவத் தலமுண்டு; நந்திகேஸ்வரத்

தலமோ, துவாரபாலகத் தலமோ எங்கு மிராது. ஐயாறப்பர் நந்தியெம் பெருமானுக்கும், துவார பாலகருக்கும் இங்கு தம் முழு ஆற்றலையும் கொடுத்துள்ளார் என்பது ஒரு தனிச்சிறப்பு.

அவரது கோலம்:

ஓலமிட்ட விநாயகர் பக்கத்திலேயே ஆட்கொண்டார் தெற்கு நோக்கி எமனை உதைத்த கோலத்தில் வலது காலைத் தூக்கிய நிலையில் கால்மாட்டில் எமன் கிடக்கச் சாய்வாகக் காட்சி தருகிறார். வலது கரத்தில் தர்ஜனி முத்திரை காட்டி இடது கரத்தால் கதாயுதத்தை அழுத்திய நிலையில், காலடியில் எமன் கிடக்கவுள்ளார். மேல் வலக்கை விஸ்மய முத்திரைக் காட்டி, மேல் இடக்கை அபயகரத்துடன், காதில் நாகபத்ர குண்டலமும், மார்பில் உருத்திராக்கமுடன், தேள், நண்டுக்காலி மாலையும் நாகமும் பூண்டு கடிபந்தமுடன் காட்சி தருகிறார். 7 அடி உயரமுள்ளவர்.

நகரப் பாதுகாவல் தெய்வம் க்ஷேத்திர பாலகராக, மக்களுக்கு ஆபத்சகாயராக எத்தகைய இடுக்கண்களையும், களையும் வரப்பிரசாதியாக அருள் நலம் பாலிக்கிறார். நம்பிக்கை மிகு தெய்வம், யார் வீட்டில் எந்த விசேடம், விழா நடத்தினாலும் ஆட்கொண்டாரிடம் வேண்டிக் கொண்டே செய்வர், நலமாக முடியும் முடிந்தவுடன் அவரவர் சக்திக்கேற்ப அபிடேகம் செய்பவரும், அருச்சனை செய்பவரும், இயலாதவர் 25 காசுக்கு குங்குலியம், வாங்கிப் போடுவோரும் உண்டு. தேள், பாம்பு, முதலிய விஷ உயிர்கள் தீண்டா. உடம்பில் தேள், பூரான் ஊர்வது போல வெள்ளியில் சார்த்தியிருப்பர். விசேட அபிடேக காலத்தில் வெள்ளி அங்கி அணிவிப்பர். முறுக்கிய மீசையும் பல்வரிசையுடன், கோரைப் பற்களும் கூடிய அவரது கம்பீரமான தோற்றம் பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்தும், அச்சம் தராது, பார்வை விழி பெரிதாக இருந்தாலும் குளிர்ச்சியாக விருக்கும்,

வடைமாலை அலங்காரம்:

ஆஞ்சநேயர் போல இவருக்கும் வடைமாலை அணிவிப்பர். காரணம் கோரஸ்வரூபம் காலன் மீது கொண்ட கோப வேகம் தணிந்து கனிவுடன் அருள் நலம் அவர் தர நாம் பெற

வடைமாலை சார்த்துகிறோம். உளுந்திற்கு அவ்வாற்றலுண்டு. ஆண்டில் பல நாட்கள் நடந்தாலும் மார்கழி திருவாதிரை நன்னாளில் சிறப்பாகப் பெருமானின் திருவுருவமே தெரியாத அளவு வடைமாலைகளை உச்சி முதல் உள்ளங்கால் வரை அணிவித்திருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். நமக்குத் தெரிந்து இன்றும் 3 மூட்டை உளுந்து அரைத்து மிக மிக மெல்லிதாக மிகச் சிறிய வடிவில் தட்டி மணிக்கயிற்றில் கோர்த்து அணிவிப்பர். தேங்காய் எண்ணெயில்தான் செய்வர். வடை மிக மொறுமொறுப்பாக மிளகு, பெருங்காய மணத்துடன் சுவையாக இருக்கும். பல மாதங்கள் ஆனாலும் கெடாமல் இருக்கும். பம்பாய் டில்லி போன்ற வெளியூரிலுள்ளோரும் வெளிநாட்டிலுள்ளோரும் வேண்டிக் கொண்டு அபிடேகம் செய்து அணிவித்த வடைமாலைப் பிரசாதம் அனுப்பப் பெற்றுக் கொள்வார்கள்.

குங்குலிய மகிமை:

ஆட்கொண்டார் சந்நிதி எதிரில் பெரிய கிணறு வடிவில் குங்குலியக் குண்டம் உள்ளது. அதில் எந்நாளும் எந்நேரமும் ஒளிவீசிப் புகைந்து கொண்டேயிருக்கும். பக்தர்கள் குங்குலியம் எனும் வாசனைத்தூளை வாங்கிப் போட்டுக் கொண்டேயிருப்பர். அத்தீச் சுவாலை விட்டு எரியும் போது, நம் தீவினை யாவும் எரிந்து புகைந்து போகும். சிவ பெருமானுக்குகந்த நறுமணப் புகைப் பொருள்களில் சாம்பிராணி போல் குங்குலியமும் ஒன்று. குங்குலியக் கலய நாயனார் இத்தொண்டு செய்தே முக்தி பெற்றார். இறைவன் எமனிடம் இக்குங்குலியப் புகை செல்லும் தூரம் வரை நம் பக்தர்கள் உயிரைப் பிரிக்க நெருங்கக் கூடாது என ஆணையிட்டதாகத் தலபுராணம் கூறும். "அஞ்சேல் என்று அருள் செய்வான் அமருங் கோயிலல்லவா?" திருக்கடையூரில் மார்க்கண்டேயன் எனும் சிறுவனைக் காத்த கால சங்கார மூர்த்தி போல, சுசரிதன் எனும் சிறுவனின் உயிரைக் காக்க எமனை உதைத்து, அவனை ஆட்கொண்டதனால் ஆட்கொண்டார் ஆனார். தலபுராணத்தே இதனை "எமதன் வங்கி ஆலயம்" எனக் குறிப்பிடும். மனிதர்களாகிய நாமும் எமபயமின்றி நீண்ட நாள் வாழ ஆட்கொண்டாராகிய கால சங்கார மூர்த்தியை

வழிபட்டுய்வோம். இங்கும் திருக்கடையூர் போல மணிவிழாச் சாந்தி செய்வோர் ஏராளம். வாழ்வில் ஏற்படும் இடர்களையும் நீண்ட ஆயுள் பெறவும் இதனைப் பாராயணம் செய்வோம் நன்மை பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

" நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத
என்னடியான் உயிரைவவ்வேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமந்தும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே." ஞானசம்பந்தர்

மார்க்கண்டேயர் அருளிய மகாம்ருத்யுஞ்சய தோத்திரம்

ருத்ரம் பசுபதிம் ஸ்தாணும் நீலகண்டம் உமாபதிம
நமாமி சிரசா தேவம் கிம்நோ ம்ருத்யு: கரிஷ்யதி
கால கண்டம் காலமூர்த்திம் காலாக்னிம் காலநாசனம்
நமாமி சிரசாதேவம் கிம்நோ ம்ருத்யு கரிஷ்யதி....
மிருத்யுஞ் ஜாய ருத்ராய நீலகண்டாய சம்பவே
அம்ருதேசாய சர்வாய மகாதேவாயதே நம:
ஸம்ஸார வைத்ய ஸர்வஞ பிஷஜாம் அபியோ பிஷக்
ம்ருத்யுஞ்ஜய ப்ரஸன்னாத்மா தீர்க்கம்

மிருத்யுஞ்சய மகாமந்திரம்

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாத் ம்ருத்யோர் முக்ஷிய மாம்ருதாந்
—ஸ்ரீ ருத்ரம் (யஜுர்வேதம்)

இம் மகாமந்திரத்தை நாள்தோறும் ஓதிவருபவர்கள் கால பயமின்றி நீடு வாழ்வர்.

இதுவரை ஐந்தாம் பிரகாரமாகிய தேரோடும் வீதி தெற்குக் கோபுர வாயிலில் இருந்தோம். இனிக் கோயிலின் உள்ளே செல்வோம் முன்னர் திருக்குளம் பழைய காசி விசுவநாதர் கோயிலைக் கடந்து நேரே உள்ள நான்காம் பிரகாரத்தை வலமாகத் தொடர்கிறோம். தென்மேற்கு மூலையில் அழகிய கோயில் ஒன்றைப் பார்க்கிறோம்.

## 2 தென்கயிலாயம் பஞ்சவன் மாதேவீச்சுரம்

இக்கோயில் (கி.பி. 1014-1042) முதலாம் இராஜேந்திர சோழனின் பட்டத்தரசியார் பஞ்சவன்மாதேவியாரால் புதுப்பிக்கப் பெற்றது. அதனால் இக்கோயிலுக்குப் பஞ்சவன் மாதேவீச்சுரம் என்றும், இறைவனுக்குப் பஞ்சநதிவாணர் என்றும் பெயர்.


பிரகாரத்தே, தன் கணவன் இராஜேந்திரன் வடக்கே நுளம்ப நாட்டின் தலைநகரான ஹேமாவதியிலிருந்து கொண்டு வரப்பெற்ற வெற்றிச் சின்னங்களான தூண்கள் பலவற்றைச் சேகரித்து தாம் எடுப்பித்த இக்கோயிலைச் சுற்றிலும் மண்டபமாக்கி மகிழ்ந்துள்ளாள். நுட்பமான கலைத்திறன் மிக்க 44 தூண்களும், கல்வெட்டுக்களும் நேரில் கண்டு களிக்கத் தக்கவையாகும். சந்நிதி முன் மண்டப விதானத்தே பழங்கால வண்ண ஓவியங்கள் (15 ம் நூற்றாண்டு) அப்பர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றை அப்படியே தத்ருபமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. எதிரில் அவ் வண்ணப்படம் இணைக்கப் பட்டுள்ளதைக் கண்டு களியுங்கள்.

இக்கோயில்தான் அப்பர் சுவாமிகளுக்குக் கயிலாயக் காட்சி நல்கிய திருக்கோயிலாகும். மூலவர் சிவலிங்கத் திருமேனியுடன் பின்புறம் அம்மையப்பராகவும் காட்சி தருகிறார். இக்கோயில் அமைப்பே வடமேற்கு மூலையைப் பார்த்த வண்ணம் புதுமையாகத் திரும்பியுள்ளது. காரணம் என்னவாக இருக்கும் என ஆய்ந்தபொழுது திருவருள் விளக்கத்தால் கிடைத்த உண்மை: (கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் சுவாமிகள் இறையருளால், இமயத்துள்ள மானசரோவர் குளத்தில் மூழ்கி ஐயாற்றுத் திருக்குளத்தில் வந்து எழுகிறார். அக்குளம் மேட்டுத் தெரு, அப்பர் குட்டை (உப்பன்குட்டை) என வழங்கும் சமுத்திர தீர்த்தத்தில் மூழ்கி எழுந்து பார்க்கிறார். கயிலாயக் காட்சி ஆ! ......ஆ! இத்தென்கயிலாயக் கோயில் அற்புதமாய்க் காட்சி தருகிறது. அப்போது எப்படித் தெரிந்திருக்கும்? இன்றைய கோபுரம் மதில் தெரு வீடுகள் அக்காலத்தே இலலாதிருந்த நிலையில். இக்கோயில் நன்கு தெரிந்திருக்கும் அல்லவா? இதனை நம் அகக் கண் கொண்டு பார்த்தால் நன்கு புலனாகும். இத்





1. திலவகதியார் வரவேற்றல் திருவதிகை - சீர்காழியில் ஞானசம்பந்தர்
2. திருச்சத்திமுற்ற வழிபாடு. நல்லூரில் இறைவன் திருவடி சூட்டல்
3. அப்பூதியடிகள் வரவேற்று, மனைவி சமைக்க, மகன் வாழை இலை
4. பாம்பு கடித்து மாள, நாவுக்கரசர் வினவி, எழுப்பி, உணவுண்டு



6. திருவீழிமிழலையில் படிக்காசு பெறுதலும், திருமறைக்காட்டில் மறைக்கதவம் திறத்தலும்
7. திருப்பைஞ்ஞீலியில் இறைவன் கட்டமுது தருதலும், காளத்தி சென்று வழிபடலும்
8. காசி விசுவநாதர் தரிசனம், கங்கையில் நீராடி, கயிலை செல்லல்

இடத்தில் இன்றும் ஆடி அமாவாசையன்று அப்பருக்குக் கிடைக்கும் இக்கயிலைக் காட்சி நமக்கும் கிடைக்குமே! வாருங்கள் பார்க்கலாம். அதனால்தான் அப்பர் பெருமானைக் 'குளிச்செழுந்த நாயனார்' என்று திருப்புகலூர்க் கல்வெட்டுக்கள் பேசுகின்றன. தாராசுரம் கோயில் சிற்பங்களில் ஒன்று அப்பர் கைலைக் காட்சியை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

## 3. வடகயிலாயம் ஓலோகமாதேவீச்சுரம்

நான்காம் திருச்சுற்றின் வடக்கில் உள்ளது வடகயிலாயம். அழகிய இக்கோயில் முதலாம் இராச இராசனது மனைவி யாராகிய தந்தி சக்தி விடங்கியரான் ஓலோகமாதேவியாரால் கட்டப் பெற்றது. இதனாலேயே இக்கோயில் 'ஓலோகமா தேவீச்சுரம்' என்று திருப் பெயர் பெற்றுத் திகழ்கிறது. முற்றிலும் கல்லால் கட்டப்பட்ட சிறுகோயில் சிற்ப வேலைப்பாடுகள், கல்வெட்டுக்கள் நிறைந்து காணப்படுகிறது. இக்கோயிலில் விழாக்கள் நடக்க ஏராளமான நிலங்களும் அணிகலன்களும் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தஞ்சையைத் தலை நகராகக் கொண்டு தன்னிகரற்ற ஆட்சி புரிந்த மாமன்னர் முதலாம் இராஜராஜர் கி.பி. 985 ல் முடிசூடி 1014 வரை ஆண்டார். எனவே, இராஜராஜன் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டி முடித்த அக் காலத்திலேயே அவன் மனைவியாரால் இக்கோயில் கி.பி. 1006 ல் கட்டப் பெற்றது என்பது தெளிவாகத் தெரிகிறது. மூலவர் சிவலிங்கத் திருமேனி மட்டுமே உள்ள கோயிலாகும்.

## 4. ஐயாறப்பர் ஆலயம்: காவிரிக் கோட்டம்

**ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே**

அப்படியே வலமாக வந்து விக்கிரமசோழன் கோபுர வாயில் வழியே—கோயிலினுள் மூன்றாம் திருச்சுற்றை வலம் வருகிறோம். தென் மேற்கு மூலையில் நின்று வடக்கு நோக்கி, "ஐயாறா ! ஐயாறா ! என அழைக்கிறோம். அடுத்தடுத்து 'ஐயாறா' என்ற ஒலி படிப்படியாக 7 முறை ஐயாறனே எதிர் ஒலிப்பது போல் உள்ளது. கேட்டு "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என அப்பர் பெருமான் இதனால்தான் பாடினார் போலும் என மகிழ்ந்து வலம் வருகிறோம். வடகிழக்கு ஈசான்ய மூலையில் யாக சாலையும்

நடுவே நெற்களஞ்சியமும் உக்ரான அறையில் கலக்காகப் பிள்ளையாரையும் தென்கிழக்கு அக்னி மூலையில் மடைப் பள்ளியும் கண்டு கொடிமர விநாயகர், நந்தியை வணங்கி கோயிலினுள் 200 கால் மண்டபத்தே நுழைகிறோம். இடையே முக மண்டபம் பிரசார மண்டபம், அலுவலக மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம் கடந்து அர்த்த மண்டப வாயிலில் ஐயாறப்பர் சந்நிதி முன் வந்து நிற்கிறோம்.

## நந்தி வகை:

வெளியில் பிரும்ம நந்தியையும், கொடிமர அருகில் இடப நந்தி (மால்விடை) யையும் நடுவே மணக்கோலத்துடன் அதிகார நந்தியாக மான்மழுவுடன் வணங்கி நிற்பவரையும், சந்நிதி எதிரில் சிலை வடிவில் உள்ள அந்தரால நந்தியையும் அதன் அருகில் பித்தளை ஐம்பொன் சிலா ரூபத்தில் உள்ள தரும நந்தியையும் அதன் அருகில் பித்தளைப் பலி பீடத்தையும் அதன் பின் உள்ள பித்தளைக் கண்ணாடியையும் பார்த்து சந்நிதி முன் நிற்கிறோம்.

## பலிபீடம், கண்ணாடி ஏன் ?

பலிபீடம் நம்மிடம் உள்ள ஆணவம் முதலிய தீமைக் குணங்களைப் பலியிட்டுத் தூயராய்ச் சென்று வழிபடவும் பித்தளை வட்டக் கண்ணாடி வருகின்ற தீய சக்திகள் பாபிகள், நாத்திகர் தோஷங்களை அபகரிப்பதுமாகிய முகரம் எனப்படும்.

நந்தியின் குறுக்கே போகலாகாது என்கிறார்கள். ஏன் எனக்கேட்டுக் காரணம் அறிந்த பொழுது வியந்து போனோம்.

## சிவலிங்கப் பெருமானுக்கும் நந்திக்கும் குறுக்கே செல்லக் கூடாது...

கைலாயத்தில் நவரத்தின மணி பதித்த மரகத ஊஞ்சலில் பார்வதியுடன் பரமேசன் அமர்ந்திருக்க, அவர்கள் முன் எதிரில் வீற்றிருக்கும் நந்திதேவர் விடும் மூச்சுக் காற்றினால் அந்தத் தெய்வீக ஊஞ்சல் மென்மையாக அசைந்து ஆடிக் கொண்டு பரமேஸ்வர தம்பதியரை ஆனந்தப் பரவசப்படுத்துகிறது. திருவையாறும்

கைலாயம்தானே அதனால் நான் நேருக்கே செல்லக்கூடாது நேருக்கே சென்றால் ஊசல் தடைப்படும், என்பது காரணமாகும். அடடா! என்ன உண்மை. நம் முன்னோர்கள் கடவுளைக் கற்பனைக் கண்கொண்டு மானசீகமாக நம்மைப் போலவே இறைவனை ஊஞ்சலில் அமர்த்தி மகிழ வைத்துப் பார்ப்பதில் எவ்வளவு மரியாதை! எவ்வளவு பய பக்தி இஃதன்றோ இறையுணர்வு. சிவ அம்சமே நந்தி தேவராதலின் அவரை முதலில் பாடிப் பணிவோம்.

நந்திகேஸ்வர காயத்திரி:

தத் புருஷாய வித்மஹே சக்ர துண்டாய தீமஹி
தந்நோ நந்திப்ரசோத யாத். — மார்கண்டேய முனிவர்

நந்தியெம் பெருமான் தன்னை நாடொறும் வணங்குவோர்க்குப்
புந்தியில் ஞானம் சேரும்! பொலிவுறு செல்வம் கூடும்!
சிந்தையில் அமைதி தோன்றும்! சிறப்புறு மக்கள் சேர்வர்!
இந்திர போகம் கிட்டும்! இணையிலா வாழ்வுறுமே!!
— நந்தீஸ்வரர் பெருமை

அருள்மிகு ஐயாறப்பர்

கி.மு.வில் வாழ்ந்த கரிகாற் சோழனுக்கு எல்லாம் வல்ல சித்தராக வந்து தான்தோன்றி நாதராக, இங்கு சுயம்பு வடிவில் தோன்றியுள்ள தன் இருப்பிடம் காட்டி, இக்கோயிலைக் கட்டச் செய்த அற்புத மூர்த்தி.

இன்று, அழகு ஒழுக, வண்ணம் தீட்டி, கயிலாயமாகக் காட்சி நல்கும் "காவிரிக் கோட்டத்தே" (கோயிற் பெயர்) கருவறையில் சுயம்புலிங்க வடிவில் அருள்மிகு ஐயாறப்பர் காட்சி தருகிறார். தன்னை நாடி வரும் உயிர்களுக்கு அருள்புரிய வேண்டியே சிவபெருமான் அருவுருவத் திருமேனியாக சிவலிங்க வடிவில் உள்ளார்.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"

என்பது சேக்கிழார் வாக்கு. சிவலிங்க வடிவங்கள் அட்சயம் அனாட்டியம், சுரேட்டியம், சர்வசம் எனும் வகையில் அட்சய வடிவில் ஆயிர முகமுடைய சகஸ்ர லிங்கமாக இங்குள்ளார். இவர்

போன்றே இடை மருது, குடந்தை ஆய தலங்களில் உள்ளவர்களும் ஆவர்.

பெருமான் புற்று மண்வடிவினராதலின் சரியாதிருக்க புனுகுச் சட்டம் மட்டுமே பாணத்தின் மீது கைபடாமல் வெற்றிலையில் வைத்துத் தடவுவர். புனுகிற்கு மணலை உதிராமல் கட்டுப்படுத்தும் சக்தி உண்டு. இன்றும் இம்மரபு வழுவாமல் நடைபெற்று வருகிறது. அபிடேகம் யாவும் ஆவுடையார்க்கே. சிவலிங்கத் திருமேனிக்கு இரண்டு முழச் சரம் மட்டுமே மலர் மாலையாகும். பூணூலும் அணிவர். நாளும் ஆறுகால பூஜை உண்டு. ஐயாறப்பரின் பின்புறம் 27 நட்சத்திரங்களுக்குரிய நட்சத்திர தீபம், நேத்திர தீபம் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. தீவினை அகல நாளும் இத்தீப கைங்கர்யம் செய்வோர் பலர். "தேச விளக்கெலாம் ஆனாய், நீயே. திருவையாறு அகலாத செம்பொற் சோதி" என்பது எவ்வளவு பொருத்தம். செம்பொற் சோதியாக உள்ள மகாலிங்கம் புனுகுக் காப்புடன் விளக்கொளியில் மின்னுகின்றார்.

புனுகு மணமும் நம் மூக்கைத் துளைக்கிறது. இதுவரை நாம் கண்டறியாத ஓர் இன்ப மணம் நம் உள்மனத்தையும் மணக்கச் செய்கிறது. அவரை வழிபடும் பொழுது நம்மை அறியாது நம் மனம் அவருடன் ஒன்றுபடுவதை உணர்கிறோம். இதுவே இறையாற்றல், திருவருட் சக்தி என்பதாகும்.

எனவே, புற்றிடங்கொண்ட பெருமானே! தீண்டாத் திருமேனி நாதா! தான்தோற்றியப்பா! என்றெல்லாம் அவரை அகங்குழைய அழைக்கிறோம். அதுமட்டுமல்ல திருவாரூர் திருவையாறு காஞ்சிபுரம் ஆகிய மூன்று தல மூர்த்திகளும் (மண்) பிருதிவி வடிவினர். திருவாரூர் சிவதத்துவம் மிகுந்தது. காஞ்சிபுரம் சத்திதத்துவம் மிகுந்தது. திருவையாறோ சிவசக்தி தத்துவம் இரண்டும் மிகுந்தது. அதனால்தான் வழிபாட்டில் நாளும் நாம்:

"ஆரூர் அமர்ந்த அரசே போற்றி! சீரார் திருவையாறா போற்றி
ஏகம்பத்துறை எந்தாய் போற்றி ! பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி! கயிலை மலையானே போற்றி போற்றி

என அறிந்தோ அறியாமலோ இம்மூவரையும் இணைத்தே போற்றி வழிபாடு செய்கிறோம். செம்பொற்சோதியைக் கனகத்

*திரளாகவும தென்கயிலாய மாதலின் கயிலை மலையானே என்றும் பொருத்தமுற நம்மைக் காக்க அழைக்கின்றோம். வாராதிருப்பானா ஐயாற்றெம் பெருமான் வருவான் வந்து பாருங்கள்!*

"எல்லா வுலகமு மானாய் நீயே யேகம்ப மேவி யிருந்தாய் நீயே!
நல்லாரை நன்மை யறிவாய் நீயே! ஞானச் சுடர்விளக்காய்
நின்றாய் நீயே!
பொல்லா வினைகளறுப்பாய் நீயே! புகழ்ச்சே வடியென்மேல்
வைத்தாய் நீயே!
செல்வாய் செல்வந் தருவாய் நீயே திருவையா றகலாத
செம்பொற் சோதீ!"

## ஓர் அற்புதம்:

*பஞ்சநதீஸ்வரர், ப்ரணதார்த்திஹரர் ஜெப்பேசர், திரிசூலி என்றெல்லாம் அழைக்கும் ஐயாற்றெம்பெருமானுக்கு அருமையான உருத்திராக்கப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. (திருவானைக்காவில் சிலந்தி, தன்வாய் நூலினால் பந்தல் அமைத்தது போல)* [1]*காசிவாசி பனசை ஸ்ரீலஸ்ரீ. அருணனந்தித் தம்பிரான் ஸ்வாமிகள் 27.1.1970 அன்று* 3,'9" x 33,' 9" *அளவில்* 40 *சரங்கள் கொண்ட 2249 உருத்திராக்க மணிகளாலான விதானத்தை அழகுற அமைத்துள்ளார்கள். கருவறை அடுத்துள்ள அர்த்த மண்டபத்தை நான்கு வேதங்களே நான்கு தூண்களாக வந்து ஐயாறன் ஆலயத்தைச் சுமக்கின்ற அதிசயத்தைப் பார்க்கிறோம். இது ஒரு தனிச்சிறப்பு.*

## ஐயன் அருகில் அன்னை உமா:

[2] *ஐயாறப்பனின் இடப்புறத்தே யோக சக்தி போக சக்தி எனக் கூறப்படும் உமா தேவியின் செப்புத் திருமேனி உள்ளது. இது கி.பி.* 10-11 *ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகலாம். அன்னை உமா பத்மபீடத்தில் இடக்காலைத் தொங்கவிட்டு வலக்காலை சற்று மடக்கி சற்று உயர்த்தி அமர்ந்து காட்சி தருகிறாள். இத்தேவியின்*

---

1. *ஆனைத்திருமுறையும், உருத்திராக்க விதானமும், பனசை ஆதீன காசிமட வெளியீடு 1971 பக்கம். 15*

2. *திருவையாறு சு. இராசகோபால்*

இரு திருக்கரங்கள் வலது கரம் கடக முத்திரை காட்டியும் இடது கரம் பீடத்தில் ஊன்றியும் காணப்படுகின்றன. தலையில் மகுடமும், காதுகளில் மகர குண்டலங்களும் மார்பில் உபவீதமும் இடையில் கணுக்கால் வரையிலான வரிச்சேலையும், கால்களில் சிலம்புகளும் அணி செய்கின்றன. உதடுகளில் இளநகை நவழ்கிறது. இடது கரத்தை ஊன்றியதால் இடது தோள் உயர்ந்த பாவனை சிற்பியின் திறமையைக் காட்டுகிறது. 2அடி உயரமுள்ள அழகிய மூர்த்தி.

முச்சக்திகளில் ஞானசக்தி சிவலிங்க பீடத்தில் உள்ளவள். இச்சாசக்தி போகயோக சக்தியாக எப்பொழுதும் இறைவன் பக்கத்திலேயே இருக்கும் இவள் வெளியில் வாராதவள். கிரியா சக்தி என்பவளே உற்சவமூர்த்தியாக உலாவருபவள்.

"சுயம்பு" என்பதற்கு "அருட்குறி" என்பது பொருள். அர்த்த யாமத்தே சுயம்புத் திருமேனி பாதுகாப்பிற்காக செப்பு கவசம் இடப் பெறுவர். விசேட காலங்களில் வெள்ளிக் கவசம் அணிவிப்பர். பீடத்தின் முன் பார்வைத் தகடு கவசமாக இடபமும் திரிசூலமும் பொறிக்கப்பட்டிருக்கும். "கங்காளர் திரிசூலப் படையாளர் திருவையாறே" எனும் ஞானசம்பந்தர் தேவாரம் இதனை வலியுறுத்தும். இதனால் சுவாமிக்குத் திரிசூலி என்ற பெயரும் உண்டு. பஞ்சாபகேசர் எனும் பெயருக்கேற்ப ஈசானம் தத்புருடம் அகோரம் வாமதேவம், சத்யோஜாதம் எனும் ஐந்து முகத் தோற்றத்தையும் மானசீகமாக நினைத்துப் பார்த்தால் ஐயாறப்பர் ஐமுக வடிவில் தோற்றமளிப்பார். மேலும் அவரவர் கருத்திற்கிசைந்த வடிவிலெல்லாம் தோற்றமளிப்பார். இதுவும் ஐயாறப்பரின் தனிச்சிறப்பாகும்.

## முதல் திருச்சுற்று வலம் வருவோம்

ஐயாறப்பரின் அருஞ்சிறப்புக்களை அறிந்த நாம் சந்நிதி இருபுறமும் அடியோம் எழுதியுள்ள திருக்கோயிற் சிறப்பும் மூர்த்தங்களின் உயர்வும் 'ஏழூர்தல வரலாறு' இவற்றையும் படித்துணர்ந்தவாறு அனுமதி கணபதியை வழிபட்டுத் தென்புற நிலைவாயிற் படி வழியே முதற்சுற்றாலை (பிரகாரம்) பற்றியும் அறிய முற்படுவோம். இத்திருச்சுற்று மாளிகை, அகழி அமைப்பில்

ஐயாறப்பரை ஒட்டி மிக நெருக்கமாக எடுக்கப்பட்டுள்ளது. இதனடியில் ஏராளமான கல்வெட்டுக்கள் உள்ளன.

சிற்பங்கள்

இத்திருச்சுற்றில் அருமையான கி.பி 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சப்த மாதர்கள் சிற்பங்கள் உள்ளன. இவை ஒரே பலகைக் கல்லில் செதுக்கப்பட்டவை. சப்த மாதர்கள் அவரவர்களுக்குரிய கொடிகளுடனும், படைக்கலன்களுடன் தெளிவாக அழகாக செதுக்கப்பட்டுள்ளனர். சப்த மாதர்களுக்கு முன்னும் பின்னும் வீரபத்திரர், விநாயகர் சிற்பங்கள் தெளிவில்லாமல் உள்ளன. அதனையடுத்து 63 நாயன்மார் திருவுருவங்கள் குறிப்புகளுடன் காணப்படுகின்றன. அத்துடன் அச்சுதப் பநாயக்கரும் அவர் மனைவியும் சிலை வடிவில் உள்ளனர். எதிர் மாடத்தே ஜெப்பேச லிங்கம் உள்ளது. மற்றும் நடராசர், திரிபுரசுந்தரி உமா மகேஸ்வரர் சிற்பம்' அருமையாக உள்ளது. இதன் திருவாசியின் அமைப்பு ஓங்கார வடிவத்தில் உள்ளது. விதானத்தே அக்கால வண்ண ஓவியம் உள்ளதும் காணலாம்.

தென்முகக் கடவுள்:

ஐயாறப்பர் கோயிலின் தென் கோஷ்டத்தில் தெட்சிணாமூர்த்தி காலின் கீழ் ஆமை காட்டப்பட்டுள்ளது ஒரு புதுமை. அது மட்டுமல்ல 18 வகை தென்முகக் கடவுளருள் இவர் அரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி ஆவார். திருவீழிமிழலையில் கண்மலரிட்டு அர்ச்சனை செய்து சக்கரம் பெற்ற திருமால் ஜெபப் பெருமையை உணர்ந்து இங்கு இம்மூர்த்தியிடம் உபதேசம் பெற்றார். அதனால் இவர் அரிகுரு ஆனார். இதற்கு அகச் சான்று ஞானசம்பந்தர், "இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய் உயர்ந்தார் பெயர்ந்தநன் மாற்கும் குருவராய் நின்றார் குறைகழல் வணங்கக் கோணமா மலையமர்ந்தாரே" என்பார்.

மேற்குக் கோஷ்டத்தே லிங்கோர்ப்பவருக்குப் பதில் அர்த்தநாரீசராக உள்ளார். அதில் ஓர் புதுமை அம்பிகை திருவுருவம் வலப்பாகத்து உள்ளது. காரணம் "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" எனும் திருமுறைப்படி

திருமால் அம்பிகை வடிவில் உள்ளதால் வலப் பாகத்து உள்ளார். மற்றுமொரு கருத்து. அகத்தியர் வழிபட்ட தலம் என்பதற்கு அடையாளம் அர்த்தநாரீசர் இடம் மாறியிருப்பது வழக்கம் என்பர். சான்று கரந்தை கருணாகர ஸ்வாமி கோவில். வடகோஷ்டத்தில் நான்முகன் உள்ளார்.

## மூலக்கோயில் ஆதிக்கோயில்

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் கோயிற் கலை வளர்ச்சியுற்ற பின்னர்தான் பரிவார தெய்வங்களுக்குத் தனிக் கோயில்கள் ஏற்பட்டன. அதற்கு முன் கருவறைச் சுற்றியே பரிவார மூர்த்தங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அம்முறையில்தான் இங்கு ஆதிக்கோயில் அமைப்பில் அனைத்து மூர்த்திகளும் இத்திருச் சுற்றில் இடம்பெற்றுள்ளன. நின்ற நிலையில் ஐயாறப்பரை பூசனை செய்து கொண்டுள்ள நவக் கிரகங்கள், பைரவர், சண்டேசர் போன்ற அனைத்து மூர்த்தங்களும் இங்கு அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பு. அதன் பிறகே கோயில் விரிவடைந்துள்ளது தெளிவாகிறது. முதல் திருச்சுற்றில் பக்தர்கள் வலம் வருவதில்லை. காரணம்; புராணப்படி இறைவனின் சடைமுடி விரிந்து கிடப்பதாலும் மகாலெட்சுமி தவம் இருப்பதாகவும் ஐதிகம் ஆதலின் வரக் கூடாதென்பர். மேலும், திருக்கயிலையில் சுவாமி திருமலைக்குச் சமீபத்தில் இருக்கும் திருச்சுற்றில் யாரும் வலம் வருதல் என்பது இயலாத ஒன்று. அவ்வாறே ஐயாற்றுப் பெருமானின் திருக்கோயில் தென் திருக்கயிலை யாதலின் இங்கும் உள் பிரகாரத்தை வலம் வருதல் கூடாது என்பதும் திருவருட் குறிப்பே.

## இரண்டாம் திருச்சுற்று வலம வருவோம்

திரும்பிய நாம் கீழ்புற் வாயில் ஐயாறப்பரை வணங்கி மீண்டு அவ்வழியே இரண்டாம் பிரகார முற்றம் வருகிறோம். இடப்புறச் சுவர்களில் கல்வெட்டுக்கள் நிறையவுள்ளன. இதில் நமக்குப் பல புதுமைகள் காத்திருக்கின்றன. நிலையை ஒட்டி சிறு கோயில்: விநாயகரே சிவலிங்க வடிவில் கணேச லிங்கமாக உள்ளார். பக்கத்தில் மூஷிக வாகனம் உள்ளது. இது எங்கும் காணக் கிடைக்காத ஒன்று. எதிரில் திருமாளப்பத்தி எனும்

இரட்டை மாடி மண்டபம் பிரகாரம் ஒருபுறம் அமைந்திருக்க, அதில் புராணக் கதைகளை அழகிய பெரும் பொற் சித்திரங்களாக வரைந்துள்ளார்கள். மேடை முன்புறம் கல்வெட்டுக்கள் உள்ளன. கண்டு வலம் வருகிறோம். வலப்புறம் பெரிய மண்டபம் சோமாஸ்கந்தர் மண்டபம் தனிவிமான அமைப்பு ஆவுடையார் கோயில் கொடுங்கை போன்ற சிற்ப வேலைப்பாடு சிம்மத் தூண்கள் இவைகளைக் கண்டு மகிழ்ந்த நாம் தென் கோஷ்ட மூர்த்தமாக ஆபதோத்தாரண பைரவர் எனும் சீர்காழி சட்டநாதர்உள்ளது கண்டு முக்தி மணடபம் வருகிறோம். நாகை, காசி, ஐயாறு இம்மூன்றில்தான் முத்தி மண்டபங்கள் உள்ளன. இதில் ஜெபம் செய்வது மிக்க சிறப்பு. பலன் மிகுதி. இம்மண்டபத்தமர்ந்து ஜெபம்செய்து பேறு பெற்றோர் பலர். நாமும் அமர்ந்து தியானம் செய்யலாமே.

## ஆதி விநாயகர்:

இருகைகளோடு கூடிய மிகப் பழமையான மூர்த்தி. இக்கோயிலைக் கட்டுவதற்குக் காரணமானவர். வெளியில் இருபுறமும் குழந்தைபோல அமர்ந்துள்ள காவலர்கள். தென்புறம் கூழ்ப்பாண்ட கும்போதரன்., வடபுறம் லம்போதர கும்போதரன் இவர்களை வணங்குகிறோம். அடுத்து நவக்கிரகங்கள் இறைவனைப் பூசிப்பதால் வலம் வரும் அமைப்பு இங்கு இல்லை. நவக்கிரகங்களின் இடப்புறம் அகத்தியர் லிங்க வடிவிலும் அவர் மனைவி உலோபாமுத்திரை காவேரி அம்மனாகவும் உள்ளனர். ஆடிப் பதினெட்டாம் பெருக்கு அன்று திரளான மக்கள் இக் காவேரியம்மனை வழிபடுவர். எதிரில் பஞ்சபூத லிங்கத் தரிசனம் கிடைக்கிறது. முக்தி மண்டபமாகிய இச்செப்பேச மண்டபத்தே நாமும் சிறிது நேரம் அமர்ந்து ஐந்தெழுத்து ஓதி அமைதி பெறுகிறோம். இங்கு ஓர் அற்புதச் சிற்பம் ஆதியில் இக்கோயிலைக் கட்டிய கரிகாற்சோழன் உருத்திராக்கமுடி தரித்துத் தவக்கோலத் துடன் வடக்கு நோக்கியும், அவன் மனைவி தெற்கு நோக்கி செம்பியன் மாதேவி வணங்கும் கோலத்துடனுமுள்ளனர் காண வேண்டிய ஒன்று. வடபுறச் சிறிய கற்கோயில் அழகாக உள்ளதும் ஐம்பூதலிங்கங்களும் காணத் தக்கது. தரையில் நந்தியின் குளம்படி காண்கிறோம்.

வேலவன் கோட்டம்:

மேல் பிரகாரத்தே அழகிய வில்லேந்திய வேலவரை தனிக்கோயிலில் 'குமாரஸ்தவம்' பாடிப் பணிகின்றோம். எங்கும் காணக்கிடைக்காத அற்புத மூர்த்தி இவ்வேலவன் கோட்டத்தே உள்ளார். சென்னையில் கந்த கோட்டம், காஞ்சியில் குமர கோட்டம், ஐயாற்றில் வில்லேந்திய வேலவன் கோட்டம். மேல் பிரகார மேடையில் பாண லிங்கங்களுடன் ஆவுடையாரின் மீது விநாயகர் ஆவுடைய விநாயகராகவுள்ளார். இது ஓர் புதுமை. மேடையின் தென்கோடியில் கோவிந்த தீட்சதரும், அவர் மனைவியும் சிவலிங்க அம்பாள் வடிவில் உள்ளனர்.

காசி விசுவநாதர்விசாலாட்சி உட்கோயில்:

வடமேற்கு மூலையை ஒட்டி இரண்டு சந்நிதி இரண்டு விமானங்களுடன் பரிவார மூர்த்தங்களுடன் தனிக்கோயிலாகவே காட்சி தருகின்றன. இரு சந்நிதி எதிரிலும் நந்தி பலி பீடங் களுள்ளன. அத்துடன் அழகிய பெண், சிலை உருவில் நின்று கொண்டு சந்நிதியை வணங்கிக் கொண்டுள்ளாள். மூலவர் விஸ்வநாதர், விசாலாட்சி, விநாயகர், முருகன், தட்சிணாமூர்த்தி, பிர்மா, துர்க்கை, வீரலெக்குமி, சண்டேசர், பைரவர், நந்தி, பலிபீடம், சூரியன் யாவும் உயிர்க் கற்களால் உருவானவை. சிலைகள் மரகதம் போன்ற பசுமை நிறத்துடன் காணப் படுகின்றன. அனைத்தும் ஒரே இடத்திலிருந்து கொணர்ந்த கல் என்பது நன்கு தெரிகிறது. சிற்ப வேலைப்பாடும் மிக உயர்வாகவுள்ளது.

இக்கோயில் திருப்பணியாரால் செய்யப்பட்டது என்பதறிய பல நாள் பலரைக் கேட்டும் ஏதும் கிடைக்கவில்லை. திருவருள் சிந்தனையோடு மனமுருகி வேண்டி நின்ற காலை எய்ப்பினில் வைப்பாக 90 வயதுடைய பெரியவர் சிவத்திரு கண்டமங்கலம் சுந்தரக் குருக்கள் அவர்கள் மூலம் விளக்கம் கிடைத்தது:

பெண்சிலையொன்று முக்காடிட்டு வணங்கிக் கொண்டு சந்நிதி எதிரில் நிற்பவள்தான் 2ஆம் சிவாஜி மன்னரின் மனைவியாவாள். "காமாட்சி பாய்ஸாப்" எனும் மராட்டியப்

பெண், சிவையின் கீழ் பொருள்ளது 100 வயது வரை உயிருடன் இருந்தவள், அக்காலத்திலெல்லாம் காசி சென்று வந்தவர்கள் ஒரு கோயிலில் சிவலிங்கப் பிரதிட்டை செய்தால் மோட்சம் கிடைக்கும் எனும் சாத்திரபடி சிவலிங்கப் பிரதிட்டை செய்துள்ளார்கள். காசிஇராமேஸ்வரம் போன்ற தலங்களில் நிறைய சிவலிங்க பிரதிட்டைகளைக் காணலாம். அம்முறையில் தான் தஞ்சை மராட்டிய மன்னர் 2ஆம் சிவாஜி (1832-1855) மனைவி "காமாட்சி பாய்சாப்" எனும் மராட்டிய பெண்மணியால் கி.பி.1850ல் இக்காசி விசுவநாதர்விசாலாட்சி கோயில் கட்டப்பட்டுள்ளது. இதற்கு நாலுவேலி நிலமும் நிவந்தமாக விடப்பட்டுள்ளது.

பின்னர் கிடைத்த மற்றொரு செய்தி:

* பாணாசுரன் தம் ஈராயிரம் கைகளால் ஆயிரம் ஆயிரம் சிவலிங்கங்களுக்குப் பூசை செயது நர்மதை, கண்டகி முதலிய புனித நதிகளில் விட்ட அச்சிவலிங்கங்களே பாணலிங்கங்கள். இவை கூழாங்கற்கள் வடிவமெய்தின.

வடநாடு செல்வோர் இப்புனித நதிகளில் கிடைக்கும் இக்கூழாங்கற் சிவலிங்கங்களைக் காசிக்குக் கொண்டு சென்று கங்கையில் நீராட்டி அவற்றிற்கு விசுவநாதர் என்னும் பெயர் சூட்டித் தங்கள் ஊர்களில் பிரதிட்டை செய்து காசி விசுவநாதர் எனக் கொண்டார்கள். பொருட் செல்வர்கள் (மன்னர்கள்) தனிக் கோயில்கள் அமைத்து வழிபாடாற்றினர். அத்தகையதே இக்கோயிலுமாகும்.

இவ்வாறே காடேராவ், ஆப்ராம் பண்டிதர் இருவராலும் எடுத்த இருமுழு சிறுகோயில்கள் கொடிமரம் எதிர் புறம் இருந்தன. அவை 1971 குடமுழுக்கு சமயம் அவற்றில் ஒன்றை காசிவிசுவநாதர் பக்கத்திலுள்ள மேடையில் இராமேஸ்வரம் இராமநாதர் எனும் சிற்றாலயமாக அமைத்துள்ளார்கள். மற்றொன்று தென்க யிலாயத் துள்ளே வைத்துள்ளார்கள். அவற்றிற்கெல்லாம் நிவந்தங்கள் உள்ளன:

---

* உழவாரம்" - சமய இலக்கியத்திங்கள் இதழ் மதுரை-மலர் 9 இதழ் 11 (1994 மே) பக்கம் 17,18

இங்கு பவானிநாகநாதர் என்பவராலும், பிரணதார்த் திஹரர் என்பவராலும், ஆவுடையப்பபிள்ளை என்பவராலும், சிவலிங்கப் பிரதிட்டை செய்து அவரவர் பெயராலேயே உள்ளதைக் காணலாம். மேல் பிரகாரத்தே காசி சென்று வந்த பெயர் தெரியாதவர்களால் பிரதிட்டை செய்யப்பட்ட பாண லிங்கங்கள் வரிசையாகவுள்ளன என்று பல செய்திகள் அறிந்தோம்.

## பள்ளியறை:

வடமேற்கு மூலையில் சிறிய அறை, கண்ணாடி விமானக்கட்டிலின் ஊஞ்சலின் மீது ஐயாறன் அம்மையப்பராக அமர்ந்து கொண்டு நாளும் ஆன்மாக்களுக்கு நல்லருள் இன்பத்தை வழங்கிக் கொண்டுள்ளார். அர்த்த யாம வழிபாடு மிக மிகச் சிறந்தது. ஒருநாளில் 6 கால வழிபாட்டையும் செய்த பலன் கிட்டும். சேதிக கோலத்தில் அம்மையப்பரை வழிபடுவதற்குப் பலன் மிகுதியுண்டு. சேவிக்க வாருங்கள்.

## திருத்தல்த்தரு (தலவிருட்சம்)

இத்தலத்தின் புனித மரம், வில்வம்(கூவிளம்). இரண்டாம் பிரகாரமாகிய இதன் மேல்த்திசையில் மூன்று வில்வ மரங்கள் பயிர் செய்து பாதுகாத்து வருகின்றனர்.

தலமரம் (தலவிருட்சம்) என்பது ஆதிகாலத்தே நம் முன்னோர்கள் கானகத்தை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். அவர்கள் வாழும் காட்டில் எந்த மரம் அதிகமாக உள்ளதோ அம்மரத்தடியில் இறைவனது உருவத்தை எழுந்தருளச் செய்து வழிபட்டனர். சில கானகத்தே குறித்த மரத்தடியில் தான்தோன்றி நாதராக இறைவன் சுயம்பு வடிவில் தோன்றி அவ்வழி வரும் அல்லது அப்பக்கத்தே ஆளும் அரசனுக்கு அறிவித்து கோயில் கட்டச் செய்வதுண்டு. அவ்வாறே கடம்ப வனமாகிய மதுரையிலும், வில்வாரண்யமாகிய திருவையாற்றிலும் சித்தரால் அறிவிக்கப் பெற்று கரிகாலன் மூலம் இக்கோயில் கட்டப் பெற்றது என்பது அறிவோம். இன்னும் சில ஊர்ப்பெயர்கள் வனப் பெயரால் உள்ளதைக் காணலாம்.

ஒரு மன்னன் காடுகெடுத்து நாடாக்க முற்படும்போது ஊரின் நடு நாயகமாக தெய்வத்திற்குத் திருக்கோயில் அமைத்த பின்பே, வீதிகள், தெருக்களை அமைப்பான். இவ்வாறு கோயில்கள் அமைந்த போதிலும் ஆதியில் இருந்த மரத்தினை அழிக்காது அதனை இன்றளவும் கவசமிட்டுப் பாதுகாத்து வருவதை மதுரை போன்ற தலங்களில் காணலாம். பிற தலங்களில் ஆதிமரத்தின் நினைவாக சுவாமிக்கு அருகில் தலமரம் என்ற பெயரில் அவ்வின மரத்தை வளர்த்து வருகின்றனர். அம்முறையில் இத்தலத்தின் ஆதி மரம் வில்வமாகும். எனவே, இத்தலம் வில்வாரண்ய க்ஷேத்திரம் எனப்படும்.

## வில்வத்தின் தனிச்சிறப்பும் உயர்வும்:

வில்வம் சிறந்த மூலிகைக் குணமும், சிவபெருமானுக்கு உகந்த மரமும் ஆகும். இதன் இலை மூன்று இதழ்களோடு கூடியது. சிவபூஜைக்கு மிக்க சிறப்புடையது. உடனடியாக பலந்தரவல்லது. வில்வம் சிவபெருமானது இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி என்ற மூன்று சக்திகளின் வடிவமாகும். மும்மூர்த்திகள் தன்மை பெற்ற இதன் மூவிதழ் முக்குணம் உடையது. மூன்று கண்கள் போலவும், மூன்று ஆயுதம் போலவும், முப்பிறவிப் பாவங்களை அழிக்கவல்லதாகும். இதன் சிறப்பை 'வில்வாஷ்டகம்' உயர்வாகச் சிறப்பிக்கும். வில்வத்தை ஆள்காட்டி விரலும், கட்டை விரலும் கொண்டு எடுத்து, சந்தன ஜலத்தில் தோய்த்து பரமேஸ்வரனைப் பூஜிக்க வேண்டும். அர்சித்த வில்வ இதழை திருவருட் பிரசாதமாக உட்கொள்ளலாம். இலையும், காயும் அனைத்து நோய்கட்கும் மருந்தாகும். ஆதலின், வில்வ மரத்தடியில் மூன்று நாள் ஊண் உறக்கமின்றி அரகர என்ற சிவஜபம் செய்தால் சகல பாவங்களும் நீங்கும். 'கொலை பாதகங்களும் அகலும். வில்வ மரத்தடியில் அமர்ந்து மந்திர ஜபம், தியானம் செய்தால் சகல மந்திர சித்திகளைப் பெறலாம். அதன் அருள் வீச்சு, நம் உடலிற் பாயும் அனுபவத்தையும் உணரலாம். பூஜைக்குரிய மற்றப் பத்திரங்களில் குண தோஷம் இருந்தால் பூஜிக்கலாகாது. ஆயின், வில்வ இலை மடங்கியோ, சுருங்கியோ, வாடியோ, புழுக்கடியுண்டோ இருந்தால் பூஜை செய்யலாம். வில்வத்தை ஆறு மாதங்கள் வரை வைத்திருந்து அர்ச்சிக்கலாம் என புட்பவிதி எனும் நூல் கூறுகிறது.

வில்வம் கிடைக்காவிடில் பூஜித்த வில்வத்தையே கழுவி மீளவும் சாத்தலாம் ஒரு மாதம் வரை. இதன் வகை பஞ்ச வில்வங்கள் எனப்படும். நொச்சி, வில்வம், கிளுவை, முல்லை, விளா எனும் இலைகள் மூவிதமுடையவை பூஜைக்கு உகந்தவையாகும்.

## வில்வாஷ்டகம்: பில்வதள ஸ்தோத்திரம்

1. த்ரிதளம் த்ரிகுணாகாரம் த்ரிநேத்ரம்ச த்ரியாயுதம்
   த்ரி ஜன்ம பாபஸம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்:
2. தரைசாகை: பில்வபத்ரைச்ச அச்சித்ரை: கோமளைச்சுபை:
   தவபூஜாம் கரிஷ்யாமி ஏகபில்வம் சிவார்ப்பணம்:
3. அக்ஷமாலாதரம் ருத்ரம் பார்வதீ ப்ரியவல்லபம்
   சந்திரசேகர மீசானம் ஏகபில்வம் சிவார்ப்பணம்:

உதவி சௌ. நாகவராசன் குடந்தை

## ஓம்சக்தி மண்டபம்: துர்க்கை, லெட்சுமி, சரஸ்வதி.

*துர்க்கை:* இவள் வடக்கு நோக்கிய விஷ்ணு துர்க்கை. எருமைத் தலையுடைய மகிடாசுரனை மிதித்த வண்ணம் அபயவரம் தந்து கொண்டுள்ளாள். பின் இருகைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ளாள். சாந்த வடிவம். 12ஆம் நூற்றாண்டுச் சிற்பம் என்பர். புன்முறுவல் பூத்தமுகம். திருமணமாகாக் கன்னிப் பெண்கள், செவ்வாய், வெள்ளி, ஞாயிறு இராகு காலத்தே எலும்பிச்சம் பழ விளக்கேற்றி வழிபடுகின்றனர். தோஷ நிவர்த்திக்கு அருகில் இரட்டை நாகர் உள்ளது. "பராசக்தி, பாபசமணி, மந்தகமணி, மகிஷாசுர மர்த்தினி.....சரணம்சரணம்."

*கஜேந்திர லெட்சுமி ஆலயம்:* எனப் புராணத்தில் குறிப்பிடப்பெறும் கஜலெட்சுமி. ஒரே கல்லில் யானைகள் அபிடேகிக்கும் வடிவமைப்பு. கருணை ததும்பும் காட்சியுடைய இலக்குமி, அன்று தேவேந்திரனுக்கு அருள் புரிந்தவள் இன்று நமக்கும் அருள் வழங்க ஆவலுடன் நம்மை அழைப்பது போலுள்ளாள். அருமையான தோற்றப் பொலிவு. அற்புதச் சிற்பம்.

*சரஸ்வதி:* ஆய கலைகள், அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை கலைமகள் ஆவாள். பக்கத்தில் தன் கணவர் பிர்மா (பிர்மலிங்கம்) துணைவருடன் காட்சி தருகிறாள். கையில் வீணை இல்லாமல் அமயவரமிருப்பது வியப்பிற்குரியது.

*அமிர்த கூபம் (தீர்த்தக் கிணறு): தேவேந்திரன், இலிங்கத்தைப் பூசிக்க விசுவகர்மாவால் தோற்றுவித்து தேவாமிர்தத்தையும் கலந்தான். அருந்த அனைத்து நோயும் அகலும் சிறப்புடையது பிரிந்தவரைக் கூட்டுவிக்கும்*

## சித்தேசராலயம்:

*தலபுராணத்தே இக்கோயில் "சித்தேசராலயம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பழனியில் போகர், வைத்தீஸ்வரன் கோயிலில் தன்வந்திரி போல, திருவையாற்றில் கரிகாற் சோழனால் இக்கோயில் கட்டக் காரணமாயிருந்த அகப்பேய்ச் சித்தர் இங்கு அமர்ந்துள்ளார். இவர் ஜுரம் மட்டுமல்ல, நம் பிறவிப் பிணியையும் கூட அகற்றவல்ல சித்தேசராக அருளாட்சி புரிகிறார். அவரையே ஜுரஹரேசர் எனவும் கூறுவர். இவரைப் பணிந்து அருள் நலம் பெறுவோம் வாருங்கள்.*

## சண்டேசர்:

*சிவாலய தரிசனவிதிப்படி: திருக்கோயில் திருமூர்த்தங்களை வழிபட்டபின் முடிவாக சண்டேசுவரரை வணங்கினால் தான் சிவனருள் சித்திக்கும் தியானத்தில் உள்ளவரிடம் மெதுவாகக் கைதட்டி பெருமானே! சிவாலய தரிசன பலனைத் தரவேண்டும் எனக் கூறி, வணங்கி விடை பெறுகிறோம். அடுத்து ஆடவல்லான், ஏழூர் தல மூர்த்திகள் மணக்கோல அதிகார நந்திகேசுவரர், சந்தானாச் சாரியார், சோமாஸ்கந்தர் சமயாச் சாரியார் இவர்களை வணங்கிக்கொடி மரத்தடியில் சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்து விட்டு வெளியே வருகிறோம். தியானம்:*

தந்தையாய் ஆவானும் சார்கதி இங்காவானும்
அந்தமிலா இன்பம் நமக்காவானும் எந்தமுயிர்
தாமா குவானும் சரணாகுவானும் அரும்
கோனாகு வானும் குரு.

*வழியில் நூற்றுக்கால் மண்டபத்தே தண்டபாணியை வழிபட்டு, அம்மன் கோயில் செல்கிறோம்.*

## 5. அறம் வளர்த்த நாயகி ஆலயம் (அம்மன் கோயில்)

அருள்மிகு ஐயாறப்பர் கோயிலின் தெற்கும்வடக்கும் சோலை சூழ்ந்திருக்க சிறிது தூரத்தில் வடகிழக்குத் திசையில் புதிய தனிக்கோயிலாக அமைந்துள்ளது. கிழக்குப் பார்த்த சந்நிதி. அம்மன் பெயர் அறம் வளர்த்த நாயகி, தர்மசம்வர்த்தினி, திரிபுரசுந்தரி என்றெல்லாம் வழங்குவர், சக்திமிகு திரிசூலி பீடமாகும்.

இக்கோயில், ஆதி பழைய கோயிலைத் தரைமட்டமாக்கிப் புதிய கற்களைக் கொண்டுபுதிய கோயிலாகத் தேவகோட்டை திரு. சேவுகன் செட்டியார் குடும்பத்தினரால் 191537ல் கட்டி முடிக்கப்பட்டது. நகரத்தார் திருப்பணி மூலத்தானக்கோயில் வழ வழப்புடன் கூடிய சலவைக் கருங்கல் திருப்பணி ஓர் புதுமை. இக்கோயில் இரண்டு திருச்சுற்றுகளுடன், பிரகார அணி ஒத்தி மண்டபம், கோபுரசாலா மண்டபம், நவராத்திரி கொலு மண்டபம் கூடிய அழகிய சிற்ப வேலைப்பாடும், அருமையான சுதைவேலைப்பாட்டோடு கூடிய கோபுரமும் கொண்டு காட்சியளிக்கிறது.

புதிய செய்தி: அம்மன் கோயில் வழிபாட்டிற்கு வந்தகாலம்

பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் இறைவனுக்குக் கோயில் எழுப்பும் போது மூலக்கோயிலைச் சுற்றிய திருச்சுற்றில் பரிவாரதேவதைகளுக்குக் கோயில் அமைக்கும் பழக்கம் இருந்தது. (ஐயாறப்பர் கோயில் சான்று அதன் பிறகே பிரகாரம், பரிவாரக் கோயில்கள் உண்டாகியுள்ளன). ஆனால் இராஜேந்திர சோழனின் இறுதிக் காலம் (கி.பி.1042) முதலே, ஒவ்வொரு சிவாலயங்களிலும் தனித்த அம்மன் கோயில் அமைக்கும் முறை தோன்றியது என அறிகிறோம். இது திருக்காம கோட்டம் என அழைக்கப்பட்டது.

அம்மன் உறைகின்ற ஆலயத்தைக் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து 'உலகுய்யக்கொண்ட காமகோட்டம்' என அழைத்து வரலாயினர்.

---

* திருவாரூர் திருக்கோயில் : குடவாயில் பாலசுப்ரமணியம் கோவில் வெளியீடு 1988 பக்கம் 111

இவ்வுண்மை பற்றிச் சான்று ஆய்வோம்:

கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை சோழர் கோயில்கள் சிவலிங்கம் மட்டும் அமைந்த கருவறையும், மகாமண்டபமும் கொண்டு எளிய முறையில் தான் அமைந்திருந்தன. அம்மன் கோயில் என்பது தனியாக இல்லை., இருந்தமைக்கான ஆதாரமுமில்லை. ஏன்? திருவையாற்றுத் தென் கயிலாயமும் வடகயிலாயமுமே நமக்குத் தக்க சான்று பகர்கின்றனவே! இவ்விரு கோயிலையும் எழுப்பிய அரசமாதேவியர் அம்மைக்குக் கோயில் எழுப்பாமல் இருந்திருப்பார்களா? காரணம்: அம்மன் கோயில் அக்காலத்தே வழக்கிற்கு வரவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது.

மேலும், , நமக்குத்தக்க சான்றாகவுள்ள திருமுறைகள் தேவார வழிநின்று பார்ப்போம். கி.பி.7-8ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தேவார மூவர் தம் தேவாரங்களில் இறைவன் சந்நிதி முன்னின்று பாடியது போல், இறைவி சந்நிதி முன்னின்றும் பாடியிருந்தால் அம்மை பதிகமும் நமக்குக் கிடைத்திருக்குமே. அவ்வத்தல அம்மனைக்கூட இணைத்துப் பாடவில்லையே. ஏன்? இருந்தாலல்லவா பாடுவார்கள். நம் ஐயாறப்பரைப் பாடியவர்கள் அறம் வளர்த்த நாயகியைப் பாடினார்களில்லையே ஆயினும், தேவாரத்தே பொதுவாக இறைவியை இணைத்துப் பாடியதைக் காண்கிறோம்.

"தோடுடைய செவியன்.....", "ஆகம் மலைமகள் கூறுடையான்" என ஞானசம்பந்தரும், "மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி......" " பாதிப்பெண்ணொரு பாகத்தான்....."என நாவுக்கரசரும், ....." வாராரும் முலையாள் ஒரு பாகம் மகிழ்ந்தனவே" எனச் சுந்தரரும் பாடியுள்ளது கொண்டு, இறைவனொடு இணைந்ததே சிவசக்தி சொரூபம்வேறுபாடில்லை என்ற கொள்கையினர் என்பதறிகிறோம்.இதனைப் பெரிய புராண உரையாசிரியர் சிவக்கவிமணி C.K.S. ஐயர் அவர்கள்:

"சிவன் ஐந்தொழில் நடத்துதலை நினைந்து சக்தியொடுகிய இரண்டு இயல்பை மேற்கொண்டார்"என விளக்கம் தருகிறார்கள்.

எனவே இவ்வாலய அமைப்படையில் அமையக் கோயில், காலத்தால் பின் இணைப்பாகத் தோன்றியவை என்பது தெளிவாகிறது. அறம் வளர்த்த நாயகி:

'ஐயன் தந்த அளைப்படி நெல்லால்
வையத் தில்லறம வளர்த்தாய் போற்றி!" சக்தி வழிபாடு ஓம்.

## அறம் வளர்த்த நாயகி:

எல்லாம் வல்ல சிவபெருமான் அன்னையிடம், "உனக்கு ஆண்டுதோறும் இருநாழிநெல்லைத் தருகிறோம், உலக உயிர்களின் பசிபோக்குக" எனப் பணித்தார். அவ்வாறே இவ்வம்பிகை அதனைக் கொண்டு 32 அறங்களையும் குறைவின்றி நிறைவேற்றியதால் 'அறம் வளர்த்த நாயகி' என்னும் அருமைத் திருப்பெயரைப் பெற்றாள். இதனையே காஞ்சிபுராணத்தில் 'சிவஞானமுனிவர் கூறுவார்:

"கல்யாண மண்டபத்தின் உனக்குரிமைத் தொழில்மறையோர்
கன்னிசெய்ய
எல்லாரும் இதுகண்டு களிப்புறுக இன்னும் உனக் காண்டு–தோறும்
நல்லாயமை அறம்வளர்க்கும் வித்தாநெல் இருநாழி தருகேம்–அந்த
நெல்லாலே இகபரதமும் உயிர்ப்பைங்கூழ் தழைகவென நிறுவல்
செய்தார்".

## அன்னையின் திருக்கோலம்:

"ஓம் ஐயா திருந்தறம் வளர்ப்பாய் போற்றிஓம்" போற்றி மலர்கள்.

கிழக்குப் பார்த்த சந்நிதி நின்ற திருக்கோலம், மிகப் பழமையான மூர்த்தம், நான்கு திருக்கரங்கள், மேல்வலக்கரத்தே கெண்டியும், மேல் இடக்கரத்தே அட்சர மாலையும், கீழ்வலக்கரத்தே அபயமும், கீழ்இடக்கரம் தொடையை தொட்டுக் கொண்டும் காட்சிதருகிறாள். திருவடி அழகே அழகு. அவள் தன் கருணைக் கடைக்கண்ணழகும், புன்முறுவல் பூத்த முகத்தழகும், வருவோரை மனத்தைக் கவர வல்லதாம். வந்து பணிந்து சேவைசெய்திடுவார்:

"கல்லாரும் கற்றாரும் காதலுடன் போற்றிடுவார்
எல்லாரும் நாட்டாரும் வளம்பெறவே வந்திடுவார்

காஞ்சிப் புராணம் சிவஞான முனிவர், தழுவக்குழைந்த படலம் பாடல் 126

இல்லாரும் உடையாரும் இன்னருளை வேண்டிடுவார்
எல்லாரும் நலம்பெறவை அறம்வளர்த்த நாயகியே!"

*அறம் வளர்த்த நாயகியார் திருப்பதிகம்*

## 1. ஐயாற்றுத் தீர்த்தப் பெருமை

### காவிரி தீர்த்தச் சிறப்பு:

*இமயம் முதல் குமரி வரையுள்ள தீர்த்தங்களுள் முதன்மையான தீர்த்தமாக எல்லாவிதமான பாவங்களையும் தீர்க்க வல்லாதாக கங்கையிலும் மேலானதாக மதிக்கப்படுகிறது. "கங்கையிற் புனிதமாய காவேரி"என்பார் தொண்டர் அடிப்பொடியார்.*

"கங்கேஸ யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி நர்மதே
ஸிந்து காவேரி ஜலஸ்மின் ஸ்ந்நிதம் குரு"

*காசி கங்கைக்கரையிலுள்ள கேதார கட்டம் போன்ற அழகிய அமைப்புடைய 'கலாயாணசிந்து' எனும் பெயர் உடைய காவிரி தீர்த்தக் கட்டம். இன்று பூசப் படித்துறை எனும் பெயரில் தெற்குக் கோபுரம் எதிரில் விளங்குகிறது. இத்தலத்தில் இங்கு காவிரி முழுக்கு மிக்க புண்ணியம் பயப்பதாகப் போற்றப்படுகிறது. இதனைப் பற்றி அருள்மிகு ஐயாறப்பரே கூறியதாக தலப்புராணக் குறிப்பு: "திருவையாறு பஞ்சநத க்ஷேத்திரத்தில் மார்கழி திருவாதிரையிலும், (தை) மகரசங்கராந்தியிலும், மாசி மகத்திலும், பங்குனி உத்திரத்திலும், சூரிய, சந்திர கிரகண அமாவாசை, பௌர்ணமி,வியதீபாத, அர்த்தோதய, மகோதய, மாதப்பிறப்பு, ஏகாதசி முதலிய புண்ணிய காலங்களிலும் சூரிய உதயத்திற்கு முன், காவேரி ஸ்நானமும், அனேக தானங்களும் செய்து லிங்க ரூபமாகவுள்ள எம்மைத் தெரிசிப்பவர்களுக்குக் கெர்ப்ப வாசம் கிடையாது.*

*துலாமாதம் (ஐப்பசி) முப்பது நாளும் அருணோதயத்திற்கு முன் இங்கு, காவிரியில் ஸ்நானம் செய்தவர்களுக்கும், மாதுர் ஸ்ரார்த்தம், பிதுர் ஸ்ரார்த்தம் செய்தவர்களுக்கும் நரகவாதனை கிடையாது." ஐயாறப்பர் ஆண்டில் 43 முறை தீர்த்தம் கொடுப்பார்.*

*எனவே, காசி, இராமேஸ்வர தீர்த்தக் கட்டத்தில் செய்கின்ற பலனுக்கு நிகரான ஐயாற்றுக் காவிரித் தீர்த்தக் கட்டம்*

இது என்பது, மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இறைவனுறை தலங்கள் தோறும் நிறைய நெற்பயிர் விளைவித்து உயிர்களை வளர்ப்பதால் 32 அறங்களை வளர்க்கும் அறம் வளர்த்த நாயகியை ஒத்துள்ளது காவிரி

"இறைவனைத் துறைதொறுந் தழீஇ தண்ணகர்ப்பதி
நிறையளக்கு நெல்வளர்த் துயிர்ப் பசிப்பிணிநீக்கி
முறைதவழ்ந் தோடு செல்வ முதறிவுவரலால்
அறம் வளர்த்த வள்நிகர்த்தது காவிரி யாறு"

எனத் திருவையாற்றுப்புராணம் கூறுகிறது.

## 2. திருக்குளம்: சூரிய புஷ்கரணி தீர்த்தம்

நான்காம் பிரகார தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள திருக்குளம். இருபுறமும் தென்னந்தோப்பும், தென்புறத்தோப்பில் காசிவிஸ்வநாதர் கோயிலும் மேல்புறம் மதிலும் வடபுறம் படிக்கட்டுகளோடும் கூடியது. சிலாதமுனிவருக்கு மகனாகத் தோன்றிய செப்பேசுவரன் என்னும் நந்தியெம்பெருமான் ஆயுட்பெருக்கம் வேண்டி, இத்திருக்குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று நீண்டநாட்கள் தவஞ்செய்ய, அவருடம்பு, மீன் போன்ற நீர்வாழ் உயிர்களால் அரிக்கப்பெற்று எலும்புக் கூடாயிற்று.

இதனை அம்மை கண்டு அப்பனிடம் கூற அவரும் உளம் மகிழ்ந்து எழுந்தருளி வந்து நலமுறச் செய்வதற்குத் தாமே தம் திருக்கரங்களால் கங்கை நீர், மழைநீர், கமண்டல நீர், அம்பிகையின் பால், இடப நந்தியின் வாய் நுரை நீர் ஆகிய ஐந்து நீராலும் அவருடம்பை முழுக்காட்டிப் பழைய உருவந்தந் தருளினார் என்று புராணம் கூறும்.

அவ்வைந்து தீர்த்தங்களும் கலந்து புனிதமான குளமாக, தீராத நோய் தீர்க்கும் தீர்த்தமாகவுள்ளது. நந்தியெம்பெருமான் உடலை அரித்த தீமையால் மீன்கள் இதில் இல்லை. சிறிய அழகிய நீராழி மண்டபம் நடுவே இருக்கும் இத்திருக்குளத்தில், ஆவணி மாதம் மூல நட்சத்திரத்தில் தெப்ப உற்சவம் நடைபெறும்.

### 3. நந்தி தீர்த்த கூபம் (கிணறு)

இது கொடிமரம் அருகே மூன்றாம் பிரகாரத்தில் உள்ளது. நந்திவாயின் நுரை நீரே தீர்த்தமாக உள்ளது. அன்று நந்தியெம்பெருமானுக்கு அபிடேகித்த தீர்த்தமே இன்றும் அவருக்கு அபிடேகிக்கும் சிறப்புடையதாகவுள்ளது

### 4. அமுத கூபத் தீர்த்தம் (கிணறு)

முச்சக்தி மண்டபத்தில் உள்ளது. தேவேந்திரனால் அமிர்தம் கலந்து மகாலெட்சுமிக்கு அபிடேகித்ததாகும். இதனை யார் ஒருவர் அருந்தினாலும், நீராடினாலும், நோய், வறுமை, புத்திரப்பேறு, குடும்ப நன்மை, பிரிந்தவர் கூடுதல் ஆகிய நன்மை கிடைக்கப்பெறுவர் என்பது அனுபவ உண்மை.

### 5. சமுத்திர தீர்த்தம் (திருக்குளம்)

மேட்டுத்தெரு அபீஷ்ட விநாயகர் திருக்கோயில், திருக்கோயிற்கு எதிரில் உள்ள திருக்குளம். வடக்கே கயிலை மலை அருகில் உள்ள மானசரோவரில் மூழ்கிய அப்பர் பெருமான், இக்குளத்தில் வந்து எழுந்தார். எழுந்தவுடன் திருக்கோயில் கயிலாயமாகவும், பார்க்கின்ற பொருள் அனைத்தும் அம்மையப்பர் வடிவமாகவும், "கண்டறியாதன கண்டேன்" என கயிலை நாதரின் தரிசனம் (ஐயாறப்பர் மூலம்) கண்டு களித்த திருக்குளம். ஆடி அமாவாசை நாளில் மதியம் அப்பர் மூழ்கி எழும் காட்சி இக்குளத்தே நிகழும். "சப்த சாகரத் தடாக..." மென்றும் கூறுவர். சமுத்திரராசன் இங்கு இக்குள வழியில் வந்து காவேரியை மணந்து கொண்டதாக ஐதிகம்.

### 6. கம்பா நதி கூபம் (கிணறு)

அம்மன்கோயில் வடக்குப் பிரகாரத்தில் உள்ளது. காஞ்சி காமாட்சி கம்பாநதிக் கரையில் 32 அறங்களை வளர்த்ததுபோல, ஐயாறு அறம் வளர்த்தாள், காவிரிக்கரை இக்கம்பா நதிக்கரையில் 32 அறங்களையும் வளர்த்து வரும் புனிதமான தீர்த்தமாகும்.

## இத்தல அம்பிகையின் தனிச் சிறப்பு:

அறம் வளர்த்த நாயகி மூன்று கண்களை உடையவள் என்பது ஒரு தனிச் சிறப்பு. "முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே" என்பார் அபிராமி பட்டர். தேவியைப் போற்றும் லலிதா ஸகஸ்ரநாமம் அவளைத் "ஸிந்தூராருண விக்ரஹாம் த்ரிநயனாம்....", "திரி அம்பகா" என்று போற்றி வழிபடும். அம்பகம் என்பதற்குக் கண்கள் என்று பொருள். திரியம்பகா மூன்று கண்களைக் கொண்டவள். சூரியன், சந்திரன், அக்னி என்று மூன்று ஒளிமண்டலங்களைக் கண்களாகக் கொண்டவள் அன்னை ஆதிபராசக்தி தர்மசம்வர்த்தனி திரிபுரசுந்தரி என்பது அறிகிறோம்.

"ஸ்ரீசக்ரராஜ நிலயா ஸ்ரீமத் த்ரிபுரஸுந்தரி" (லலிதா சகஸ்ரநாமம் 182) என்பதால் தான் விதானத்தே ஸ்ரீசக்ர பிரதிட்டையுள்ளது போலும்.

## வெளியூர்களில் ஐயாறப்பர் கோயில்கள்:

சிதம்பரத்தில் ஒரு திருப்பெருந்துறை, திருவிடைமருதூரில் ஒரு திருப்பெருந்துறை போல, 1. திருமயிலாடுதுறையில் மாயூர நாதசுவாமி கோயிலுக்கு மேலபால் நான்கு வீதிகளுடன் நடுவில் திருவையாறுடையார், ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகியார் திருக்கோயிலுளளது. இதனைக் கட்டியவன் ஜெயமாணிக்க வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துக் குற்றாலம் உடையான் ரிஷபதேவன் திருச்சிற்றம்பலம்முடையானான காராணை விழுப்பரையன் ஆவான். இக்கோயிலைக் கட்டியது 3ஆம் குலோத்துங்க சோழன் காலமாகும்.

2. அவ்வாறே புதுக்கோட்டை ஆலங்குடி வட்டம் செம்பாட்டூரில் ஒரு திருவையாறுடையார் கோயில் இருக்கிறது.

3. பெரம்பலூர் அருகே குறும்பலூர் என்ற ஊரிலும் பஞ்சநதீஸ்வர், தர்மசம்வர்த்தினி மூல மூர்த்தங்களைக் கொண்ட கோயில் உள்ளது.

4. இன்றும், நெய்வேலி புதிய நடராஜர் கோயிலிலும் ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகியார் எழுந்தருளியுள்ளனர்.

பழமை நினைவுகள்:

திருக்கோயிலில் சாயரக்ஷை (மாலை) தீபாராதனை சமயம் "படாகை" என்னும் நகரா அடிப்பதுண்டு. அதனை அடிப்பதால் சர்வமங்களம் ஏற்படும் என வேதாகமம் உரைக்கிறது. இன்று துவாரபாலகர் அருகில் நட்ஷத்திர மின்விளக்கு எரியும் இடத்தில் விளக்குப்படி மாலை நூற்றுக்கணக்கான அகல்விளக்குகள் பொருத்தி எரியும்பொழுது தெய்வக்களை வீசும்.

இறைவன் வீதிஉலா வரும் சமயம் காலையில் சுவாமிக்கு முன்பாக குடை, ஆலவட்டம், தோரணம், பதாகை, கொம்பு, திருச்சின்னம் பூதம் வகையறாவுடன் வருவதும், இரவு வீதி உலாவில் வரும்பொழுது 15 களை தீவர்த்திகள் இருபுறமும் சுடர்விட்டுப் பிரகாசிக்க வருவதும் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். மாலை வழிபாட்டு நேரத்தே தேவரடியார்கள் சதிர் ஆடியதுமுண்டு. "வலம் வந்த மடவார்கள் நடமாடிய ஊர் " என்பதை ஞானசம்பந்தர் வாக்கால் அறியலாம். அம்மன் கோயில் முன்மண்டப கிழ்ப்புற சுவர் ஓரத்தே தூணில் பெரிய ஆஞ்சநேயர் மட்டும் மக்கள் வழிபாட்டில் உள்ளது. இது முன்பு பழைய கோயிலில் இருந்த அதே தூணாகும். இடம் மாறியுள்ளது. சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர்.

நவராத்திரி காலங்களில் 10 நாட்களும் அம்மன் கோயிலில் பொம்மலாட்டம் நடைபெறும். சுவர் ஓரம் பரண் அமைத்து வெள்ளைத் திரைச்சிலை கட்டி உள்ளே எண்ணெய் விளக்கு வெளிச்சத்தில் தோல், அட்டை பொம்மைகள் கை, கால்களை ஆட்டி பேசுவது போல் இராமாயண நிகழ்ச்சிகளை ஒருவர் பாடிப்படிக்க சுத்தமத்தளம் இசைக்க நடைபெறும். இதனைக் குழந்தைகள் முதல் முதியவர் வரை யாவரும் வேடிக்கையாகக் கண்டு ரசிப்பர்.

மார்கழி திருவாதிரை, ஆனித்திருமஞ்சன காலத்தேனி நடராஜர் புறப்பட்டு வீதிவலம் வந்து உள்ளே புகுங்காலத்து "மட்டையடி" என ஒன்று நடைபெறும். அதாவது, சுவாமி தாசி

வீட்டிற்குச் சென்று வருவதாகவும் சிவகாம சுந்தரி அம்மன் கதவை சாத்திக் கொண்டு பெருமானை உள்ளே வரவொட்டாமல் தடுப்பதாகவும் "ஊடல்" காட்சி நிகழ்த்துவது வேடிக்கையாக இருக்கும். இருவருக்குமிடையே தம்பிரான் தோழராக உள்ள சுந்தரர் தூது போய் (ஓதுவார்) இருவருக்குமிடையே தூதராகச் சென்று பாட, இருவரையும் சேர்த்து வைக்கும் காட்சி சிறப்பாக இருக்கும்.

சுந்தரருக்காக சிவபெருமான் தூதுசென்றதாக வரலாறு இருக்க இங்கு சிவபெருமானுக்காக சுந்தரர் தூதுபோவது எவ்வாறு பொருந்தும்? எனப் பலரையும் கேட்க அவர்கள் புரியவில்லை, நல்ல வினாதான் என்றார்களே தவிர தக்க பதில் வரவில்லை.

திருவருளை நயந்து வந்தித்தபோது திருவருள் விளக்கமாக விடை கிடைத்தது: சரஸ்வதி மகால் நூலகர் N. விசுவநாதன் அவர்கள் "தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தே தியாகராஜ விலாசம் மராட்டிய மொழி தெலுங்குலிபிச் சுவடியில் விளக்கம் உள்ளது. பரவையாரிடம் பரமன் தூதுசென்றதால் (கமலாம்பாள்) விரகதாபம் கொள்ள அம்மையின் ஊடல் தன்னால்தான் என்பதை உணர்ந்த சுந்தரரே மன்னிப்பு வேண்டி இருவருக்கு மிடையே பேசிப் பாடி ஊடலைத் தீர்த்து வைப்பதாகக் கூறப்பட்டுள்ளது" என்றார்.

மோட்ச தீபம்:

கிழக்கு ராஜகோபுரத்தில் மாடங்கள் தோறும் சிலநாட்கள் இருபுறமும் விளக்கெறியும். காரணம்: விபரம் புரிந்தவர்கள் நம்வீட்டில் யாரும் இறந்துவிட்டால் அன்று கோபுரத்தில் தீபம் போடச் செய்வர். அதனைத்தான் மோட்ச தீபம் என்பர். இதன் பொருள் இறந்தவர் ஆவி இறைவனடியில் மோட்சம் சேரும் எனும் உயரிய சமய நம்பிக்கையின் அடிப்படையில் இன்றும் பலர்செய்து வருகின்றனர்.

## திருக்கோயில்கள் ஆட்சி:

பிறைவளரும் செஞ்சடையார் பேணுசிவாலயம் எல்லாம்
நிறைபெறும் பூசனைவிளங்க நீடுதிருத்தொண் டர்தமைக்
குறையிரந்து வேண்டுவென குறிப்பின்வழிக் கொடுத்தருளி
முறைபுரிந்து திருநீற்று முதல்நெறியே பாலிப்பார்

*திருக்கோயில்களைக் கட்டிய பண்டையப் பெருமக்கள் அதனைத்தாமே நிர்வகிக்காமல் தக்கவர் மூலமாக நிர்வகித்தனர். அருள்நிலையமாதலின் அருளாளராகிய துறவிகளிடம் அரசர்கள் கோயில்களை ஒப்படைத்தனர். இராஜராஜன் தான் கட்டிய பெருங்கோயிலைத் தன் குருவின் மூலம் நிர்வாகம் செய்தான்.*

*[1]16-ஆம் நூற்றாண்டில் திருவாரூரில் வாழ்ந்த சிதம்பரநாத தேசிகர் சிறந்த ஞானியாக வருங்கால நன்மை தீமைகளை உணர்த்த வல்லவராயிருந்தார். அவரே, கமலை ஞானப் பிரகாசரானார். தருமை ஆதின ஸ்தாபகர் குருஞானசம்பந்தரின் குருவாவர். கி.பி. 1565ல் 610 பாடல்களைக் கொண்ட திருமழபாடி புராணம் இவரால் பாடப்பெற்றது.*

*அக்காலத்தாண்ட தஞ்சையரசன் கிருஷ்ண மகராஜையன் ஆணையால் கமலை ஞானப்பிரகாசர் திருவாரூர், சிக்கல், வடகுடி, ஓடாச்சேரி கோயில்களை நிர்வகிக்கும் கண்காணிப்பாளராக அமர்த்தப்பட்டார், (கல்வெட்டு 104/1911) "ஆதினத்துறவிகள் ஆண்டவனுக்கே தம்மை அர்ப்பணித்தவர்கள். தவறு ஏற்படாதுபாதுகாப்பர்"எனும் நம்பிக்கையில் ஆதினத் துறவிகள் பலரிடம் கோயில்கள் பலவும் கண்காணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவர் தம்மாணவர்களுள் குருஞான சம்பந்தரிடம் பலவற்றை ஒப்படைத்தார். அவையே தருமபுர ஆதினத் திருக்கோயில்களாகும்.*

---

* ஞானாரம் ; 1991 மலர் 7 குரலை 1, 2 பக்கம் 11

தமிழ் இலக்கிய வரலாறு மு. கோவிந்தசாமி, பாரிநிலையம், சென்னை 1969 2பாகம் பக்கம் 69

சில விதிவிலக்கு: அதாவது, சிதம்பரம் திருக்கோயில் தில்லை மூவாயிரவராகிய தீட்சதர்களே நிர்வகித்து வருவதுபோல, மதுரை மூவாயிரம் பட்டர்மார்கள் வசமிருந்ததுபோல, திருவையாறு திருக்கோயிலும் 24 சிவாச்சாரியார்கள் நிர்வாகத்தில் இருந்து வந்தது. அதனால்தானோ சிவபெருமானே ஐயாறதனில் சைவனாக சிவாச்சாரியராக வந்தார். காலப்போக்கில் நலிவடைய ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சிவாச்சாரியார்களின் ஒற்றுமைக் குலைவால் நிர்வகிக்க இயலாது போயிற்று, அதுபோது மாவட்ட அதிகாரியாக இருந்த வெள்ளையன் நிலைமையறிந்து திருக்கோயில் நிர்வாகத்திற்கு முற்றுந்துறந்த துறவிகளே சிறந்தவர்கள் எனக்கருதி திருவாவடுதுறை, தருமபுர ஆதீனங்களிடம் சில கோயில்களை நிர்வாகம் செய்ய மனமுவந்து வழங்கினான். அம்முறையில் திருவையாறு திருக்கோயில் நிர்வாகம் தருமை ஆதீனவசம் வந்தது என்பர். எனினும் இன்றும் சிவாச்சாரியார்கள் குடும்பத்தாரிடம் ஸ்தானிகபாத்தியம் எட்டுபங்கு சரிபாகமாக ஏற்று நடத்தி வருகின்றனர். இன்று வெளி விசுவநாதர் கோயில் மட்டும் அவர்கள் வசம் உள்ளது.

நித்திய பூசை:

திருக்கோயிலில் உறையும் இறைவனும் மனிதனைப் போலவே துயிலெழுந்து நீராடி, உணவுண்டு, மக்களைக் காத்து, கலையின்பங்களை அனுபவித்து உறங்கச் செல்வதாகக் கருதி ஆகமங்கள் கூறும் முறைப்படி வழிபாடுகள் நடைபெறுகின்றன. இவ்வித வழிபாடுகள் கோயில்களின் வருவாய்க்குத் தகுந்தபடி ஆறுகாலம், நான்கு காலம், இரண்டு காலம், ஒரு காலம் என நிகழ்கிறது. ஐயாறப்பருக்கும் அறம் வளர்த்த நாயகிக்கும் நாள்தோறும் உஷக்காலம் காலை 6 மணி, காலைசந்தி 9 மணி, உச்சிக்காலம் 12 மணி, சாயரக்ஷை மாலை 5 மணி, இரண்டாம் காலம் இரவு 7 மணி, அர்த்த ஜாமம் இரவு 9 மணி, என ஆறுகால பூசைகள் முறையாக நடைபெறுகின்றன. இவைத் தவிர மாதப்பிறப்பு, பிரதோஷம், கார்த்திகை, அமாவாசை போன்ற நாட்களில் பூசை நடைபெறும்

கட்டளைகள்:

ஐயாறப்பர் கோயிலில் பூசைப் பொருள்களுக்குத் தேவையாகும் செலவு கோயிலுக்குரிய நிலங்கள் மூலம் கிடைக்கும் நெல்லுடன் இட வாடகை வருவாயைக் கொண்டு, கோயில் நிர்வாகம் திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்தாரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுதவிர, சில குடும்பத்தினர், மன்னர்கள் நிரந்தரக் கட்டளைகள் ஏற்படுத்தி சில வழிபாடுகளில் பங்கு வகித்து வருகின்றனர். இவ்வாறு ஐயாறப்பன் கோயிலில் நிலவுகின்ற கட்டளைகள் வருமாறு:

1. தொண்டைமான் கட்டளை, 2. மேலை அரண்மனைக் கட்டளை, 3. அறம் வளர்த்த நாயகியார் கட்டளை, 4. மானோஜியப்பா கட்டளை, 5. பச்சையப்ப முதலியார் கட்டளை, 6. குமரக்கட்டளை, 7. பிரதோஷக் கட்டளை, 8. மாதபூசைக் கட்டளை, 9. புனுகுக்காப்புக் கட்டளை, 10. புதுக்கோயில் கட்டளை என்பனவாகும். இதுதவிர உ.வே.சாமிநாதய்யர் குறிப்பில் காணப்படும் கட்டளைகள்:

11. மாக்காப்புக் கட்டளை 1வேலி, 12. சோமவாரக் கட்டளை அரைக்கால்வேலி, 13. சுக்ரவாரக் கட்டளை 15 மா, 14. அன்னாபிஷேகக் கட்டளை, 15. மனையவிளக்குக் கட்டளை 21/4 வேலி, 16. அர்த்தஜாமக் கட்டளை 11/4 வேலி, 17. அணைக்குடிக்கட்டளை, 18. எண்ணெய்க்காப்புக் கட்டளை என்றெல்லாம் உள்ளன. இதற்குரிய கட்டளைதாரரின் பரம்பரையினரோ, மாறி சொத்தை அனுபவிப்பவர்களோ, 'கோயில் சொத்து குல நாசம்' எனும் ஆன்றோர் மொழிக்குப் பயந்து தன் குலம் செழிக்கவும், ஆன்மீகம் தழைக்கவும், திருக்கோயில் நன்கு இயங்கவும், கட்டளை தாரர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். யாவரும் ஒத்துழைத்தால் ஐயாறப்பர் கோயில் நன்கு விளங்கி, நம் ஊரும் நம் குடியும் செழித்து உயர்ந்து ஓங்கி வளரும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

ஐயாற்றில் புறச் சமய மக்கள்:

இன்றைய சைவ சமயத்திற்கு ஒவ்வாத நெறிமுறைகளைக் கொண்ட காளாமுகச் சமயம் என்று ஒன்று இருந்தது. "வீரசைவர்" போன்றே "காளாமுகர்"என்பார் ஒருசாராராவார். இவர்கள் ஐயாற்றுப் பகுதியில் 19-ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்தனர் என்பதற்குத் தக்க ஆதாரங்கள் உள்ளன. வரலாற்று ஆய்வாளர்களுக்குக் கிடைத்தற்கரிய செய்திகள் இவை.

*சைவம் என்பது வாமம், தக்ஷிணம், சித்தாந்தம், என மூன்று வகைப்படும். காபாலிகம், காளாமுகம், அகோரம் முதலான ஆகமங்கள் வாமம் எனும் வகையுள் அடங்கும்.

காளாமுகர்: கருப்பு முகமுடையார், காளா ஆனனர். பாசுபதர் காபாலிகர் எனும் வடநாட்டுச் சைவம் சார்ந்தவர் காளாமுகர். அவர்களது கொள்கைகள்:

சுடுகாட்டில் தங்குவது, மண்டை ஓட்டில் உண்பது, மாமிசம் புசிப்பது, சுடுகாட்டுச் சாம்பலை அணிவது போன்ற வாமமார்க்கத்தை உடைய இவர்கள் ஐயாற்றில் வாழ்ந்தார்கள். இங்குள்ள சுடுகாட்டுச் சாமி மடம் இதற்குச் சான்றாகும். சதானந்தசாமி எனும் சுடுகாட்டுச் சாமிகள் சதா சுடுகாட்டில் தான் தங்கியிருந்தார் சுடுகாட்டுச் சாம்பலையே அணிவார் கொடுப்பார் கஞ்சா பங்கியடிப்பார் தம்மை மறந்த நிலையில் இருப்பார். இவரை ஒத்த கொள்கையுடையார் பலரும் இங்கு வந்து தங்குவர். எனவே காளாமுகச் சைவர்தம் கேந்திர ஸ்தானமாக ஐயாறு இருந்தது என்பதற்கு இங்குள்ள சுடுகாட்டுச் சாமியார் மடமே தக்க சான்றாகும். இங்கு கார்த்திகை மாதத்தே இக்கொள்கையுடைய இருக்கூட்டத்தார் நிறைய வருவதைப் பார்த்திருக்கின்றோம். வழக்கற்றநெறி, நடைமுறைக்கு ஒவ்வாத நெறிமுறைகளைக் கொண்ட இக்கூட்டம் நாளடைவில் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

* சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம். S.P. சபாரத்தினம் சைவ சித்தாந்த நூற்பதிப்பகம் சென்னை 1992 பக்கம் 8

மாற்றுச் சமய,மத மக்கள்:

இந்து சமயத்தே நெருங்கிய தொடர்புடைய வைணவ அந்தணர்கள் ஓரிருவரைத் தவிர வேறு யாரும் ஐயாற்றில் இல்லை யென்றே கூறலாம். காரணம் ஆயும்பொழுது ஐயாற்றில் ஒரு காலத்தே ஏற்பட்ட கொடிய காய்ச்சலால் வைணவர் பலரும் ஒரே சமயம் இறந்துபடவே அவர்கள் பயந்து, இவ்வூர் நாம் வாழ்வதற்கு உரியதல்ல; சிவன் சங்காரக் கடவுள். எனவே இவ்வெல்லையில் நாம் வாழக் கூடாது; நமக்கு ராசி இல்லை எனக் கருதி தமக்கென காவிரி ஆற்றின் தென்கரையில் புது அக்ரஹாரம் என ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு தனியாக ராமர்கோவிலும் கட்டிக் கொண்டு வைணவ அந்தணர்கள் பலரும் அங்கு சென்று வாழ்வாராயினர். "புது அக்ரஹாரம்" என்ற சொல்லே இதனை மெய்ப்பிக்கும். இது போல் கோர்ட்டு பக்கம் சோலையில் ராதாருக்மணி சமேத கிருஷ்ணன் கோயில் ஒன்று மராட்டிய மன்னர் காலத்தே கட்டப்பெற்றுள்ளதும் இவர்களுக்காகவே மற்றைய வைணவர்கள் திருநெய்த்தானம், கல்யாணபுரம் போன்ற ஊர்களில் பெருமாள்கோவில் உள்ளதால் வழிபாட்டு வசதிக்காக அங்கு இடம் பெயர்ந்து வாழ்வதாகக் கொள்ளலாம். திருவையாற்று இறைவர்க்குத் திருமாலே தேவியாக உள்ளதால் இங்கு பெருமாள் கோயில் இல்லை "அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே" எனும் அப்பர் பெருமான் வாக்குச் சான்றாகும்.

முகம்மதிய மக்கள் தமக்கென தனியே பந்தர் நடுக்கடை போன்ற பகுதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவ்விடங்களில் தான் தனியாக வாழ்ந்து வந்தனர். இன்று எங்கும் கலந்து வாழத் தலைப்படுகின்றனர். அவர்களுக்கென "பள்ளிவாசல்" மிகப் பெரிய அளவில் நடுக்கடையில் உள்ளது. தம் இன மக்களோடு இணைந்து வாழற்கும் அவரவர் கலாச்சார பண்பாட்டிற்கும் உகந்த வசதியான இடம் அதுவே என்பது சொல்லாமலே தெரிய வரும். எனவே, ஒருங்கிணைந்து தனியோரிடத்து வாழலே அவரவர் நாகரிகத்திற்கேற்றதாகும்.

கிறித்துவ மக்களும் அவ்வளவாக ஐயாற்றில் இல்லை எனலாம். ஊரின் வடகிழக்கு மூலையில் மாதா கோயில் 1863ல் தோற்றுவித்து 1976ல் பெரிதாக விரிவுபடுத்தப் பெற்று நடுநிலைப் பள்ளியையும் அமைத்துக் கொண்டு, குறிப்பிட்டோர் சிலரே வாழ்ந்து வருகின்றனர். இதனைக் கட்டத் தொடங்கிய காலத்து எதிர்ப்பு தோன்றியது ஐயாறப்பர் வீதிவலம் வரும் வழியின் நடுவில் கட்டப்படுவதைத் தடுத்தும் ஆட்சேபித்தும் வழக்கு நடைபெற்றது. வெள்ளையர் ஆட்சிக் காலமாதலின் அவர்களுக்கே சாதகமாயிற்று. கோயில் இருந்தும் ஐயாற்றின் எல்லையில் இல்லாமல் கிறித்துவர்கள் திருநெய்த்தானம் சாலை, திருப்பழனம் சாலைப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். திருப்பூந்துருத்தியில் நெருக்கமாக வாழ்கின்றனர்.

காரணம் ஆயும்பொழுது, அனுபவ வாயிலாக ஓர் உண்மை புலனாகிறது: மனோதத்துவ ரீதியில் அவரவர் சமய, மத நம்பிக்கையின் ஆழ்ந்த தோய்வு பிடிப்புக் காரணமாக இருக்கலாம். "இங்கு நம்மவர் நெருக்கமாக வாழவில்லை, வாழ்ந்தாலும் வளமாக வாழ முடியவில்லை, உயர முடிவதில்லை, சுருங்கி விடுகின்றனர். எனவே, ஏதோ ஒரு சக்தி ஐயாற்று மண்ணின் எல்லையில் இருப்பதால் நம்மை இருக்க விடுவதில்லை. எனவே, இப்பகுதி நமக்கு உகந்ததில்லை" எனக் கருதி அவரவர் தாமே வேறிடங்களுக்குத் தங்கி அங்கு நெருக்கமாக வாழத் தலைப்பட்டுவிட்டனர் போலும். எனவே, ஐயாற்றுப் பகுதி புறச்சமயத்தாருக்குப் புறம்பானது என்பது அனுபவம் காட்டும் உண்மையாகிறது.

## ஐயாற்றுச் சூரிய தீர்த்தத்தே அன்றாடம் நிகழும் அற்புத நிகழ்ச்சி:

### 1. உண்மைச் சம்பவம்:

அன்று சிலாதர், செப்பேசர், அகத்தியர், அப்பர் பெருமான் ஆகியோர் நாளும் இச்சூரிய குளத்தே நீராடி கயிலை சென்றார்கள்.

இன்றோ, கயிலைப் பரம்பொருளே ஐயாறப்பரும் அறம் வளர்த்தாளுமாக வந்து நாளும் இக்குளத்தில் அர்த்த ஜாமத்தே நீராடும் அற்புதம் செய்கிறார்கள். இன்றும் நடைபெறுகிறது என்பதற்குச் சான்று நேரில் கண்ட காட்சி:

1993 ஜனவரி மாதம் ஒருநாள் திருவையாறு திருக்கோயில் யானைப் பாகரின் உறவினர் கருணாகரன் என்பவர் மலையாளத்தில் இருந்து இங்கு வந்திருந்தார். அன்று இரவு ஐயாறப்பர் கோவில் வாசலில் பச்சையப்பர் மண்டபத்தே படுத்துள்ளார். அவர் ஒரு மந்திரவாதி இரவு 12 மணிக்கு ஜபம் செய்து கொண்டுள்ளார். எதிரில் படுத்திருந்த யானை பிளிருகிறது. இவ்வொலி கேட்டு விழித்துப் பார்க்கிறார். ஓர் ஆண் உருவம் பட்டாடை உடுத்திக் கொண்டு கோயிலின் உள்ளிருந்து வருவது தெரிகிறது. இவர் முகத்தை உற்றுப் பார்க்கிறது., பின் வேகமாகத் திருக்குளம் நோக்கிச் செல்கிறது., அடுத்து சற்று நேரத்திற்கெல்லாம் மறுமுறை யானை பிளிருகிறது. மலையாளி பார்க்கிறார். யானை துதிக்கையைத் தூக்கி வணங்கி ஒலிகேட்கிறது., அம்மன் கோயிலிலிருந்து அழகிய அம்மா வேகமாகக் குளம் நோக்கிச் செல்கிறார்கள். அப்பனுடன் அம்மையும் சேர்ந்து நீராழி மண்டப எதிர்துறையில் மூன்று முழுக்குப் போடுகிறார்கள். தண்ணீர் அலையெவ தத்தளிக்கும் இனிய ஒலி கேட்கிறது. துணியை மூன்று கும்மு கும்மி பிழிந்து கட்டிக் கொள்கிறார்கள்.

இதனைப் பார்த்த மலையாளி இனி இங்கு நாம் படுக்கக் கூடாது என, உடன் இருந்த மணி என்பவரை எழுப்பி உடனே உள்ளே அழைத்துச் சென்று படுக்கிறார். சற்று நேரத்திற்கெல்லாம் மூலத்தானப் பித்தளைக் கதவு சாத்திக் கொள்ளும் மணிச் சத்தம் கேட்கிறது., வெளியில் அம்மன் சிரிப்பொலி கேட்கிறது. சிரித்துக் கொண்டே அம்மன் கோயிலுக்குச் செல்கிறார்கள்.

என்னே விந்தை! அந்த மலையாளி விடிந்து சொல்கிறார்: " யானும் பல தலங்கள் சென்றுள்ளேன். இந்த ஐயாறப்பரின் அற்புத லீலையைப் போல் எங்கும் பார்த்ததில்லை. இத்தீர்த்தம் எவ்வளவு பெரிய புனிதத் தீர்த்தம் புண்ணியத்தீர்த்தம். இதன்

செய்கிறார்கள். அது அவர்களுக்கு எவ்வளவு பெரிய பாவம் என்பது இப்பொழுது தெரியாது" என்று கூறினார்.

2. மற்றொரு உண்மை நிகழ்ச்சி: அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோயிலில் ஒரு பூனை வெள்ளை கறுப்பு நிறம். 1993 மார்ச் மாதம் நாள்தோறும் ஐயாறப்பர் மூலத்தானத்தை வலம் வருவதும், அர்த்த ஜாமப் பூஜை சமயம் பிரகாரம் வலம் வருவதும், பள்ளியறைப் பால் அருந்துவதும், காலையில் பள்ளியறை திறந்ததும் உள்புகுந்து அம்மையப்பர் மஞ்சத்தை வலம் வருவதும், விந்தையாக உள்ளது. தேவரோ, முனிவரோ முற்பிறவி பாக்கியைச் செலுத்த பூனை வடிவில் வந்து ஐயாறப்பரை நாளும் வழிபடுகின்றனர் போலும். புராணங்களில்தான் நாய், மான், மாடு வழிபடுவதைப் படித்துள்ளோம். இதனை இன்று நேரில் நாம் காணுகிறோம். என்னே விந்தை! இதுவும் இறைவன் திருவிளையாடலே. மேலும் பல உண்மை நிகழ்ச்சிகள்:

3. ஒரு சமயம் மகான் சமயபுரம் சாமிகள், ஐந்து பேருடன் அருள்மிகு ஐயாறப்பர் ஆலய வழிபாட்டிற்கு வந்தார்கள். மதியம் 12 மணிக்கு உச்சிக்கால வழிபாடு முடிந்து அறம் வளர்த்த நாயகி கோயில் மண்டபத்தே படுத்திருக்கிறார்கள். மூவர் உறங்கிக் கொண்டுள்ளனர். சமயபுரம் சாமிகளும், சாவித்திரி என்னும் தாயாரும் அமர்ந்துள்ளனர். ஆதிபராசக்தி அறம் வளர்த்தாள் தாய் வடிவில் வந்து இருவர் முகத்திலும் தம் வாயில் இருந்த தாம்பூலத்தை உமிழ்ந்துவிட்டுப் போய்விட்டாள். இது கணநேரத்தில் நிகழ்ந்தது. உடனே, "கம்" என்று மணம் வீச, உறங்கியவர்கள் விழித்துக் கொண்டார்கள். செய்தியறிந்து வந்தது அன்னையே என, "ஓம் சக்தி அம்மாவே சரணம் அம்மா" எனப் பரிவுடன் வணங்கி அன்னையின் அற்புதம் கண்டு மகிழ்ந்தார்கள்.

4. திருவையாறு வடக்கு மடவளாகத்தே "விசாலாட்சி" அம்மாள் என்பவர் நாள் தவறாது தர்மசம்வர்த்தினியை வழிபடும் நியதியுடையவர்கள். 1990ல் ஒருநாள் மாலை 4 மணிக்கு தரிசனத்திற்கு வந்தவர்கள் சந்நிதியில் வழிபட்டுப் பிரகாரம் செல்வதற்கு முயன்றபோது ஜனநடமாட்டம் யாரும் இல்லையே

என அஞ்சி சற்று தேங்கிய போது. பட்டுப்புடவை சரசரக்க முன்னர் ஒரு அம்மாள் செல்வது தெரிந்ததாம். பிரகாரம் முடிவில் சுற்றி முன் வந்தபோது முன் சென்ற அம்மையைக் காணவில்லை. தர்மாம்பாள்தான் நமக்குத் துணை வந்தாள் என்று கருதினார்களாம். இவ்வாறே மற்றொரு சமயம் பகல் 12 மணிக்கு வழிபாட்டிற்குச் சென்றபோது உச்சிப் போதில் வருகின்றோமே என்ற அச்சத்தோடு பிரகாரம் வரும்போது ஒரு ஐந்து வயதுப் பெண் குழந்தை ஒன்று ஓடி வந்து ஆட்டம் காட்டியதாம். "வழிவிடம்மா வழிவிடம்மா" என விசாலாட்சி அம்மாள் கூற சிரித்துக் கொண்டே அக்குழந்தை சிறிது தூரம் ஓட்டம் காட்டி மறைந்ததாம். இவ்வாறு தம் அனுபவ உண்மையைக் கூறினார்கள்.

5. திருவையாற்றில் காவியுடைச் சாமியார்கள் பலர் இருந்தாலும் கோவிந்தசாமி சுவாமிகள் எனும் பரதேசி 90 வயது இருக்கும். அவர் சதா ஆழ்ந்த தியான நிலையில் இருப்பார் ஒருவேளையே உணவு. ஐயாறப்பரே அவருக்கு உயிர்., காவிரிக்கரை புஷ்யமண்டபத்தில் சுவாமி அமரும் மேடையில் தங்கி இருப்பார். 25.10.1992 தீபாவளி அன்று அதிகாலை தியான நிலையில் இருந்தார். 4 மணி இருக்கும் வயதான அந்தணர் ஒருவர் வந்து தட்டி எழுப்பி ஒரு பொட்டலத்தைக் கொடுத்தார். உனக்குத் தீபாவளி இல்லையா? இதை நீயும் எடுத்துக் கொள், எல்லோருக்கும் கொடு என்று சொல்லிய கிழவர் பளிச்சென்று ஒளி காட்டி மறைந்தார். எப்படிப்பட்ட கருணை உள்ளம். இந்த செம்பொற்சோதிப் பெருமான் இந்த நாயிற்கு இரங்கி வந்தானே அவன் அருட்பெருஞ்சோதி ஆண்டவன்தான். தனிப்பெரும் கருணை உள்ளவன் என்பதைக் காட்டிவிட்டான் ஐயா! என்றார்,

## உண்மைச் சம்பவங்கள்

### 6. மனித வடிவில் வந்த அன்னை

அன்னையின் சித்தாடல்கள் தான் எத்தனை-எத்தனை அடியோம் இல்லத்தே 1981 ஆடி மாதம் ஆதிபராசக்தி படத்திற்கு இலட்சார்ச்சனை நாமே செய்வோம். படத்திற்கு அருட்சக்தி மிகுமே என்று பவழமல்லிகை மலரால் 1008 அர்ச்சனை நாள்

தோறும் 3 முறை செய்து வந்தோம். இலட்சம் பூர்த்தியாகும் சமயம் ஒரு நாள் வழிபாடு நடந்து கொண்டுள்ள போதே நண்பரின் மனைவி வள்ளியம்மை வந்து "சார்" என் பூசை செய்கிறீர்களா நல்லா செய்யுங்கோ என்று சொல்லியபடி சிரித்துக் கொண்டே மனைவி பத்மாவிடம் பேச அடுக்களை பக்கம் சென்றார்கள். சிறிது நேரத்தில் அருச்சனை முடிந்து கற்பூரார்த்திக்கு மனைவியையும், வள்ளியம்மாளையும் அழைத்தேன். மனைவி வள்ளியம்மா இப்பொழுது எங்கே வந்தார்கள். எனக்கேட்க சிறிது நேரத்திற்கு முன்தானே என்னிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே உன்னிடம் வந்தார்கள் என்றேன். மனைவி இல்லை இல்லை என அம்மா ஆதிபராசக்தி அறம் வளர்த்தாளே நம் அருச்சனை கண்டு மகிழ்வந்துள்ளாள் என வியந்து மகிழ்ந்தோம்.

## 7. குழந்தையும் தெய்வமும்

1985 ஒரு நாள் இரவு மணி 1 இருக்கும். கண் விழித்தேன் வீட்டு முற்றத்தே நிலவு காய்கிறது. பௌர்ணமி நாள் ஏதோ மென்மையான ஓசை இனிமையாகக் கேட்கிறது. ஏழ மனமில்லை வீட்டு வாசற்படி பக்கமிருந்து சிறிய உருவம் தெரிகிறது. ஐந்து வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை ஒன்று மெல்லிய பாதத்தால் சதங்கை ஒலியோடு நடந்து வருவது தெரிகிறது. அருகில் வந்து நின்று சிரிக்கிறது."காலை மாலை 108 மந்திரம் படி என்னை மறக்காதே" என்று சொல்லி பூசை அறைப்பக்கம் புகைபோல் மறைந்தது. மனைவியை எழுப்பிக் கண்டதை சொன்னேன். கனவாயிருக்கும் என்றாள் அல்ல--அல்ல நனவே இப்பொழுது பார்த்தேன் என்றேன். நாயினும் கடைப்பட்ட அடியேனுக்கா அன்னையின் அருட்காட்சி அன்னையின் கருணையே கருணை எனப் பெருமிதம் கொண்டோம்.

## 8. மிதந்த அம்மன் சிலை

அம்மாள் அக்ரகாரம் எனும் கிராமம் ஐயாற்றின் கிழக்கே 1கி.மீ. தூரத்திலுள்ளது. அங்கு சிவன்கோயில் வைத்தியநாதர் தையல்நாயகி. ஊர் ஒதுப்புறமான கோயில் 1992 ல் மூலவர்தையல் நாயகி சிலை திருட்டுப் போய் விட்டது. ஊர்மக்கள்

கவலையுற்றனர் அம்மா! சக்தியுள்ளவளானால் திருடியவனுக்கு சோதனை கொடுத்து மனதை மாற்று என வேண்டிக் கொண்டனர். உள்ளூர் ஆள் எடுத்தவன் கொல்லையில் புதைத்து வைத்துள்ளான். ஓரிரு மாதங்கள் அவனுக்கு உறக்கமே இல்லை. திடீல் மூச்சுத்திணரல் ஒரு நாள் ஏற்பட்டது. துணைவனிடம் சொல்லி அம்பாள் சிலையை அப்புறப்படுத்தி அங்கிருந்த கிணறு ஒன்றில் போட்டுள்ளனர். என்ன அதிசயம்! அம்மன் கற்சிலை மிதந்தது கண்டனர். உடனே நடு-நடுங்கி அம்மா! எங்களை மன்னித்து விடு-எடுத்த இடத்திலேயே உன்னை வைத்து விடுகிறோம். என அன்று இரவு கோயிலில் எடுத்து வைத்து விட்டனர். மறுநாள் அவர்களே தாம் பார்த்ததை வியந்து பேசிக் கொண்டனராம். என்ன விந்தை அம்பாள் அக்ரகாரம் தான் அம்மாளக்ரகாரமென வழங்கிவருகிறது. அதுசரியல்ல அம்பாள் அக்கிரகாரம் தான் இது என்பதை நிருபித்துவிட்டாள்.

## 9. புற்றுநோய் நீக்கிய ஐயாறன்

அருள்மிகு ஐயாறப்பர் கோயில் அலுவலர் விசுவநாதன் 40 ஆண்டுகளாக கோயிலில் பணியாற்றிவருகிறார். ஊழ்வினைக் காரணமாக அவருக்கு வலது கழுத்துப் பாகத்தில் கட்டி-புற்றுநோய் (Cancer) ஏற்பட்டு அவதியுற்றார். ஏழை எனினும் அன்பர்கள் தொடர்பால் அடையாறு அரசு புற்றுநோய் மருத்துவ மனையில் 1990 டிசம்பரில் சேர்க்கப் பெற்றார். சிலநாட்களில் அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார்கள். இவருக்குப்பயம் எனினும் சதா ஐயாறப்பர் நினைவாகவே இருந்தார். அறுவை சிகிச்சை செய்யும் முதல் நாள் இரவுக் கனவு, ஐந்தாம் திருநாள் இடபவாகனக் காட்சி, சுவாமி வீதிவலம் வந்து அதிகாலை கோயிலினுள் நுழைகின்ற காட்சி, தீபாராதனை கண்டு கண்விழித்துக் கொண்டார் அறுவைச் சிகிச்சை எளிதாக முடிகிறது.

ரேடியம் சிகிச்சைக்கு வசதியில்லை தீர்ந்துவிடுவார் என்றே அனைவரும் நம்பினார்கள். இவர்மட்டும் நம்பிக்கையுடன் ஐயாறப்பருக்கு 48 நாட்கள் நெய்தீபம் போட்டால் சௌகரியமாகி

விடும் என நினைத்து, திருவையாறு தன் பெண்ணிற்குக் கடிதம் எழுதுகிறார். அன்று இரவு கனவு விசுவநாதன் கையில் நெய்யை எடுத்துக் கொண்டு கோயிலுக்கு வருகிறார். குருக்கள்மார் வாசலில் நிற்கிறார்கள். இவர் சந்நிதி முன்வந்து நிற்கிறார். உள்ளிருந்து அறம்வளர்த்த நாயகி மீனாட்சி கொண்டையுடன் பட்டுப்புடவை சரசரக்க மடிசார் கட்டிக் கொண்டு உள்ளிருந்து வந்து இவரிடம் நெய்யைப் பெற்றுக்கொண்டு விளக்கு போடுகிறார். இறைவன் சிரிக்கிறார். கண் விழிக்கிறார். மறுநாள்

5-2-1991 அன்று, அடையாறு மருத்துவ மனைக்கு இவரது உறவினர் பொறியியல் வல்லுணர் ஒருவர் வந்து பரிந்துரை செய்து ரேடியம் ட்ரீட்மெண்ட் கொடுக்கிறார்கள் நலமாகி வீடுவந்து சேர்ந்து இன்றும் கோயில்பணியிலிருந்து வருகிறார். யாவும் ஐயாறப்பன் திருவருளே என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

## 10. மூலவர்--சித்தேசரா ?

1993 சமையல் வேலை செய்யும் அன்பர் நாகராஜய்யர் புஷ்யமண்டபத்தெரு வடநாடு முழுவதும் சுற்றியவர். ஐயாறப்பர் சந்நிதி முன்வந்து வணங்குகிறார். சித்தேசர் ஆலயத்தே அகப்பேய்ச்சித்தர் இங்கு அமர்ந்துள்ளார் என எழுதியுள்ளதைப் பார்த்து இது உண்மையா? என ஐயாறப்பாரிடம் வந்து கேட்கிறார். குருக்கள் கொடுத்த விபூதிப் பிரசாதம். சட்டைப்பையில் உள்ளது. வீட்டிற்குச் சென்று உறங்குகிறார். ஜாமக்கனவு ஐயாறப்பர் மூலஸ்தானக் காட்சி கிடைக்கிறது. சிறிது நேரத்தில் சுயம்பு லிங்கம் நகர்கிறது. அதன் கீழே ஆழமான பெட்டியிலிருந்து மிக நீண்ட சடைமுடிகள், தாடி, பொன்னிறத்துடன் தகதகக்க பழுத்து முதிர்ந்த மகான் கை நகங்கள் நீண்டுவளைந்து செக்க சிவந்த திருமேனி செம்பொற்சோதியாய் அமர்ந்தபடியே மேல்வரக் காண்கிறார். இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ஆண்டுகளாக இங்குள்ள என்னை ஏனப்பா எழுப்பினாய் எனக் கேட்கிறார். பயந்து கண் விழிக்கிறார். 15-1-94 நேரில் கூறிய செய்தி.

11. மூலவர் சுயம்பா ?

*1991 மே மாதம் ஒருநாள் வடக்கு மடவளாகம் திருமதி லைக்ஷ்மி·லெக்ஷ்மணன் (பாம்பே) அவர்கள் பிரணதார்திஹரா! உங்களைச் "சுயம்பு லிங்கம்" என்கிறார்களே எப்படி இருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை என வருந்திக் கேட்டபொழுது அன்றிரவே கனவில் சோமாஸ்கந்தக் குருக்களும், யோகவனக் குருக்களும் குடம்குடமாகப் பாலபிஷேகம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆவிடையார் மேல் நடுத்தர வயதுடை அழகிய ஐயர் இடுப்பளவில் நின்று கொண்டு தம்பூணூலை மேலும் கீழுமாக இழுத்துக் கொண்டு சிரித்துக் கொண்டே என்னைத் தெரியவில்லையா? என்பது போல் பார்க்கிறார். மெய்சிலிர்த்துப் போனேன் என்றார்கள்.*

12. ஐயாறப்பனான--யானையின் மதம் தெளியவைத்த ஐயாறப்பர்

*திருவையாறு ஐயாறப்பர் கோயில் யானையின் பெயர் ஐயாறப்பன் 13993 முதல் கோயில் யானை மதங்கொண்டு கட்டுக் கடங்காமல் திரிந்தது. யாரும் நெருங்க முடியவில்லை கோயிற் கதவுகள் மூடப்பட்டன வனஇலாக்கா அதிகாரிகள், யானை மருத்துவர்கள் சென்னையிலிருந்து வந்து மயக்க ஊசிபோட பலமுறை முயன்றனர் தப்பிவிட்டது. கோயிற்கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டது. தூண் மறைவிலிருந்த ஓசைபடாது துப்பாக்கிகொண்டு 9 முறை மயக்க ஊசிசெலுத்தினர் 15993 அன்று ஐயறிவுடைய யானை என்ன நினைத்ததோ ஐயாறப்பர் மூலத்தானம் கருவறை முன்னுள்ள பித்தளை நந்திவரை சென்று இரும்பு கைப்பிடியில் முன்கால் இரண்டையும் ஊன்றி துதிக்கையத் தூக்கிவிட்டு அபயக்குரல் எழுப்பி கண்ணீரை விட்டு! 1மணி நேரம் நின்று விட்டு வணக்கம் செய்து பின்புறமாகவே வந்து மயங்கி விழுந்துவிட்டது. பின் சங்கிலியால் பிணிக்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டால் நாம் இறப்பது உறுதி என அஞ்சிய யானை ஐயாறப்பரைப் புகலடைந்தது. 20 ஆண்டுகள் தொண்டு செய்த யானையல்லவா? அலமந்தபோதாக அஞ்சேல்*

என்று அருள் செய்வான் ஐயாறன் என்பதை யானையை காத்ததன் மூலம் உலகிற்குக் காட்டிவிட்டார். இன்று நலமாகவுள்ளது. ஓம்சக்தி

குறிப்பு : நமக்கு தெரிந்த சிலவே இவை அன்று முதல் இன்று வரை அடியார் பொருட்டு அம்மையப்பரின் திருவிளையாடல்கள் எத்தனை எத்தனையோ நடந்துள்ளன. இன்றும் நடந்து கொண்டுள்ளன. இனியும் நடக்கும்.

நிறைவுரை:

இதுகாறும், ஐயாற்றுக் கோயில் ஒன்றனுள் ஐந்து திருக் கோயில்கள் சிறந்து விளங்கக் கண்டோம் இது ஒரு புதுமை காசி விசுவநாதர் உட்கோயில் தலமரச்சிறப்பு தீர்த்தங்களின் பெருமை அம்மன் கோயில்கள் வழிபாட்டிற்கு வந்தகாலம். வெளியூர்களில் ஐயாறப்பர் கோயில்கள் போன்ற நல்ல திறனாய்வுச் செய்திகள். பழமை நினைவுகள் அதிசயம் ஆனால் உண்மை அரிதில் கேட்டறிந்த உண்மைச் சம்பவங்கள் யாவும் அறிவுக் களஞ்சியமாக நினைத்தாலே இனிக்கும் செய்திகளாகத் திகழக் கண்டோம். அதனால் திருக்கோயில்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல திருக்கோயிலிற் சிறந்த திருவையாறாகத் திகழ்கிறது என்பது சாலப் பொருத்தமேயன்றோ!

## திருவையாற்றில் காணவேண்டிய இடங்கள்

1. அருள்மிகு ஐயாறப்பர் திருக்கோயில்
2. தியாகய்யர் சமாதி கோயில்
3. தியாகய்யர் வாழ்ந்த இல்லம்
4. கல்யாணமகால் (அரசர் கல்லூரி)
5. பூசப்படித்துறை மற்றும் அறுபத்து மூவர் மடம்
6. நசர்மகால்

"முதலாகும் வேத முழுதா கமமாகப்
பதியான வீசன் பகர்ந்த இரண்டும் .... திருமூலர்

"ஓதுதே வேதம் உணர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி .... அப்பர்

ஆகமமாகி நின்றண்ணிப்பான் தாள் வாழ்க

மன்னு மாமலை மகேந்திர மதனுள்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்....மாணிவாசர் !



• பொருளடக்கம்

## 4. வேதம் ஆகமம்தத்துவம் விளக்கும் திருவையாறு

முன்னுரை வேதம் வகையும் விளக்கமும் ஆகமம் வகையும் விளக்கமும்--மனித உடலும் திருக்கோயிலமைப்பும் சிவலிங்கம் அருள்மிகு ஐயாறப்பர்--சுயம்பு க்ஷேத்திரங்கள் ஐயாறப்பரின் தனிச்சிறப்பு--வேதம்தன்னைத்தானே பூசித்த பெருமான்--சைவத்தின் வகை--அறம் வளர்த்த நாயகி வேதம் 64 சக்தி பீடங்களில் ஒன்று-ஆட்கொண்டார் சிவாகம தத்துவம்- விஞ்ஞானம்--பஞ்சநதக்ஷேத்திர தத்துவம்--ஜப்பேஸ்வரம் சப்தஸ்தான க்ஷேத்திரங்கள்--சிவலிங்கம் பற்றி மெய்ஞானமும் விஞ்ஞானமும், மந்திர சக்தியின் ஆற்றலை வியந்த விஞ்ஞானம் நிறைவுரை

# 4. வேதம், ஆகமம், தத்துவம் விளக்கும் திருவையாறு

உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திற்கும் முக்கியமான சமய நூல் ஒவ்வொன்றுள்ளது. நமது இந்து மதத்திற்கு வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாஸம், புராணம், உபநிஷத் எனப் பல நூற்கள் இருக்கின்றன.

## 1. வேதம்

'வேதம்' என்ற சொல்லின் தாது அல்லது பகுதி வித் என்பதாகும். விதுஹூ/வித்-அறிவு. வேதம் என்ற சொல்லுக்கு அறிவுநூல் என்பது பொருள். தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது 'மறை'யெனப் பெயர் பெற்றது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பது தொல்காப்பியச் சூத்திரம். ஆசிரியனிடம் கேட்டுத் தெளிய வேண்டிய நூலாதனின் இதனைச் 'சுருதி' எனவும் கூறுவர். எல்லாம் வல்ல சிவபெருமான் தன்னுடைய திசை நோக்கிய (கி)தத்புருஷம், (தெ)அகோரம், (வ)வாமதேவம், (மே)சத்யோஜாதம் எனும் திருமுகங்களினின்றும் முறையே 21 சாகைகள் கொண்ட *'இருக்' வேதத்தை சுமந்து என்ற முனிவர் வழியாகவும் 100 சாகைகளைக் கொண்ட 'யஜுர்' வேதத்தை வைசம்பாயனர் என்ற முனிவர் வழியாகவும், 1000 சாகைகளைக் கொண்ட 'சாம' வேதத்தை சைமினி என்ற முனிவர் வழியாகவும், 9 சாகைகளைக் கொண்ட 'அதர்வண' வேதத்தைப் பயிலர் என்ற முனிவர் வழியாகவும் உலகிற்கு அருளிச் செய்தார். இந்நான்கு வேதங்களையும் வியாசர் வெளியுலகிற்குத் தொகுக்குத் தந்தார். ஆதலின் அவர் 'வேத வியாசர்' எனப்பட்டார். நான்மறைச் செம்பொருள் யாது?

* சித்தாந்த வித்தகர்-குமரி-பூமணி அவர்கள் நேரில் கூறியவை 16-2-93

1. இருக் வேதம்*. :

இருக் என்பதற்கு துதித்தல் அல்லது வழிபடுதல் என்பது பொருள். இறைவனைத் துதிப்பாடல்கள் பாடி வணங்குவதற்குரிய வழிகளை இதில் வகுத்துக் காட்டப்பட்டுள்ளது. இது பத்து மண்டலங்களைக் கொண்டுள்ளது. ஒன்று முதல் ஏழு மண்டலங்களில் இறைவனை அக்கினி என்ற பெயராலும், பத்தாவது மண்டலத்தில் பிரமன், இந்திரன் என்ற பெயர்களாலும் பாடப்பட்டுள்ளது.

2. யஜுர் வேதம்:

யாஜ் எனும் பதத்திற்கு யாகம் என்பது பொருள். யாகம், பலி, தானம் முதலிய கிரியைகளைச் செய்ய வேண்டிய முறைகள் இதில் விளக்கப்பட்டுள்ளன. அமாவாசை, பௌர்ணமி காலங்களில் செய்ய வேண்டிய வேள்விகளைப் பற்றியும், பிதிர்கர்மம் முதலியன செய்ய வேண்டிய விதங்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. அது ஏழு காண்டங்களை உடையது. மிகச் சிறப்பு வாய்ந்த 'ருத்ரம்' இதில் அமைந்துள்ளது. பதினொரு அநுவாகங்களையுடைய திருஉருத்திரம் வேதத்தின் கண்ணாகும்.

3. ஸாம வேதம்:

ஸாமம் என்னும் இன்னிசையால் பாடப்பட்டது. இதில் பரமேஸ்வரனை அக்கினி, இந்திரன் முதலான பெயர்களால் பாடப் பெற்றிருக்கிறது. பாபத்தை நீக்கிப்பலனைக் கொடுக்கும் பாடல்கள் இதில் அமைந்திருக்கின்றன. இசையுடன் இதனைப் பாடுவதால் பாபம் நீங்குகிறது.

4. அதர்வணம்:

இதில் மந்திரம் உச்சரிக்க வேண்டிய முறைகளையும், விரோதிகளின் அழிவின் பொருட்டுச் செய்ய வேண்டிய கிரியை முறைகளைப் பற்றியும் கூறி இருப்பதோடு வேத சாரக் கிரியை களையும், அனுஷ்டானங்களையும் பற்றிய தோத்திரங்களும் உள்ளன.

---

* இந்துமத இணைப்பு விளக்கம் – ஆறுமுகநாவலர்

எல்லாம் வல்ல சிவபெருமான் அனைத்து உயிர்களுக்கும் அறம்,பொருள்,இன்பம், வீடு எனும் உண்மைப் பொருள்களை அடைய வேண்டும் என்பதற்காகவே, காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள 28 சிவாகமங்களையும், இருக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் தமது மேல், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் ஐந்து முகங்கள் வழியாக அருளிச் செய்தார் என்பதை காரணாகமத்தால் அறிகிறோம். இந்த சிவாகம. வேதங்கள் சிவபெருமானுடைய திருவாக்காகும். வேதங் களும் சிவாகமங்களும் நித்தியமானவை என்பது சைவ சித்தாந்தத்தின் கோட்பாடு.

## 2. ஆகமம்

* 'ஆகமம்' என்ற சொல்லை ஆ+கமம் எனப் பிரிக்கலாம். ஆ ஆன்மாக்களின், கமம் பாசங்களை நீக்கம் செய்து முத்திப் பேற்றை அருளுவது என்பது பொருளாகும்.

1. மேற்குநோக்கிய சத்தியோஜாத முகத்திலிருந்து காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம்,அஜிதம் என்ற ஆகமங்கள் தோன்றின.

2. வடக்கு நோக்கிய வாமதேவ முகத்திலிருந்து தீப்தம், சூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான்; சுப்ரபேதம் என்ற ஆகமங்கள் தோன்றின.

3. ,தெற்கு நோக்கிய அகோர முகத்திலிருந்து விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், அநிலம், வீரம் என்ற ஆகமங்கள் தோன்றின.

4. கிழக்கு நோக்கிய தத்புருஷ முகத்திலிருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், பிம்பம் என்ற ஆகமங்கள் தோன்றின.

---

* இந்துமத இணைப்பு விளக்கம்:- மகாவித்துவான் கே. ஆறுமுக நாவலர் இந்துமத அறநிலைய வெளியீடு, சென்னை 1963, பக்கம் 5-7,
சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம், டாக்டர் எஸ்பி. சபாரெத்தினம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை வெளியீடு 1992, பக்-17,18

5. மேல்நோக்கிய ஈசான முகத்திலிருந்து ப்ரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் என்ற ஆகமங்கள் தோன்றின.

இவ்விருபத்தெட்டு ஆகமங்களுள் பத்து ஆகமங்கள் சிவபேதங்களாகவும், பின் பதினெட்டு ஆகமங்களுள் ருத்ரபேதங்களாகவும் குறிக்கப் பெறும்.

கிரியா பாதத்தில் கர்ஷணம் (உழுதல்) முதல் பிரதிஷ்டை வரையில் உள்ள கிரியைகளும், நித்திய நைமித்திக பூஜைகளும், திருவிழா முறைகளும், சமய, விசேஷ, நிர்வாண தீக்ஷை விதிகளும் கூறப்பட்டுள்ளன.

யோக பாதத்தில் ஆத்மசுத்தி, அந்தர்யாகம், தியானம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன.

ஞான பாதத்தில் தத்வத்ரயம் எனப்படும் முப்பொருள் உண்மை, அதாவது பதி, பசு, பாச லட்சணங்கள் கூறப் பட்டுள்ளன. அவையே சந்தான குரவர்களால் இயற்றப்பட்ட 14 சைவசித்தாந்த சாத்திரங்களாகும். மேலும், ஆகமங்களில் தத்வரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூபம், ஆத்ம தரிசனம், ஆத்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவ போகம் எனும் தசகாரியங்களது இலக்கணங்களும் உரைக்கப் பட்டுள்ளன.

விஷ்ணுவைக் கூறும் ஆகமங்கள் வைஷ்ணவாகமங் களாகும். அவை, பாஞ்சராத்தி ராகமம், வைகானச ஆகமம் என இருவகைப்படும்.

ஆகமங்களில் சொல்லப்படும் பொருள்களில் மிகவும் முக்கியமானவை மந்திரங்களும், தந்திரங்களும் (முத்திரைகளும்) ஆகும். இவை ஆலய நித்திய, நைமித்திய பூஜைகளுக்கு இன்றியமை யாத சாதனங்களாகும்.

திருக்கோயில் அமைப்பு, விக்கிரக அமைப்பு சிவவழிபாட்டிற்குரிய இலக்கணங்கள் இவைகளைக் கூறுவதே சிவாகமங்கள். ஆகம முறைப்படித்தான் கோயில்கள் கட்டி வழிபடப் பெறல் வேண்டும் என்பது விதி. * திருவையாறு கோயில்

* Sri Panchamathiswaraswami Temple, Thiruvaiyaru- Dharamapuram Adhinam Pub. 309, 1965, Page-11

ஆறுகாலபூஜை, நாள்,மாத,வருட விழாக்கள் யாவும் காமிகாகம, காரணாகம முறைப்படியே நடைபெற்று வருகின்றன.

கோயில்கள் நமது உடம்பின் வடிவிலேயே அமைக்கப் பட்டிருக்கின்றன. இதனை, "க்ஷேத்திரம் சரீரப் பிரஸ்தாரம்" என்பர். ஆலயம் மனிதர் உடம்பு போல அமைக்கப்பட்டிருக்கிறது என்பது இதன் பொருள். மனித உடம்பு போன்றதே கோயில் அதனை ஓர் தெய்வ புருஷனாகக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| மனித உறுப்பும் | கோயில் அமைப்பும் |
| பாதங்கள் | ராஜகோபுரம், ஸ்தூலலிங்கம் |
| முழங்கால் | ஆஸ்தான மண்டபம். |
| துடை | நிருத்த மண்டபம். |
| தொப்புள் | பலிபீடம், கொடிமரம். |
| மார்பு | நடராசர், மகாமண்டபம். |
| கழுத்து | நந்தி, அர்த்த மண்டபம். |
| வாய் | ஸ்நபன மண்டப வாசல். |
| மூக்கு | ஸ்நபன மண்டபம் |
| இடது செவி | சண்டேசர். |
| வலது செவி | தெட்சணாமூர்த்தி. |
| புருவ மத்தி | சிவலிங்கம். |
| தலை | கர்ப்பக்கிரகம். |
| தலையில் உச்சி | விமானம். |
| கைகள் | பிரகாரங்கள். |

சிவலிங்கம்: ஆகமத்தில் பிம்பங்களின் அமைப்பு, அளவு முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அளப்பரிய இறைவனுக்கு அடையாளமாக ஓர் அளவையில் செய்து வைப்பதே இலிங்கமாகும். இலிங்கம் = குறி. அடையாளம் என்பது பொருள், நிஷ்கள லிங்கம் கர்ப்பகிரக மூர்த்தி. அதன் அளவைக் கொண்டு நான்கு விதமாகக் கூறப்பட்டுள்ளன. அளவைப் பொருத்து அவை ஸமகண்டம், வர்த்தமானம், சைவாதிக்கம், திரிராசிகம் என்று நான்கு விதம். அடிபாகம், நடுபாகம், மேல்பாகம், இன்னின்ன அளவில் இருப்பதைக் குறித்து இந்தப் பாகுபாடுகள் கூறப்பட்டுள்ளன. திருவையாறு ஐயாறப்பர் மூலவர் திருமேனி

எவ்வகையைச் சார்ந்தது, என்பதைக் காண்போம். அவை உண்டான காரணத்தைக் கொண்டு மானுஷம், ஆர்ஷம், தைவிகம், சுயம்பு எனப்படும்.

அருள்மிகு ஐயாறப்பர்: மேற்கூறிய நான்கு வகையில் மனிதர், மன்னர்களால் பிரதிஷ்டை செய்யப்பெறும் திருமேனி "மானுஷம்" எனவும், வியாசர் போன்ற முனிவர்களால் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப் பெறும் திருமேனி "தைவிகம்" என்றும் தெய்வம் தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிற இடத்தில் உள்ளது "தைவிகம் அல்லது சுயம்பு" எனவும் கூறப்படும்.

சுயம்பு லிங்கத்திற்குரிய ஆகமங்கள்: காரணம், வாதுளம், சூக்ஷ்மம், சுப்ரபேதம் என்பவையாம். "சுயம்பு" என்பது தானாகவே தோன்றியது. எனவே ஐயாறப்பர் சுயம்பு வடிவில் தானாகவே தோன்றியவர் என்பதை நியமேசர் என்னும் சித்தர் முலம் கரிகாலனுக்குத் தன்னை வெளிக்காட்டி ஆலயம் எழுப்ப வைத்து உலகிற்கு அறிவித்த ஒப்பற்ற மூர்த்தி.

ஆகமம்: மண்ணுலகில் ஸ்கந்த காலோத்திரம், "வீராகமம்" இவைகளிற் "அஷ்ட ஷஷ்டி மகாக்ஷேத்திரம் ஸ்வயம்புஸ்தான முக்யதே" என்றபடி 86 சிவக்ஷேத்திரம் ஸ்வயம்புமானதில் இது முக்கியமானதாகும்.

* "லலிதாகமம்" ஞான பாதத்தில்: பூமியில் இருக்கிற தானாகத் தோன்றிய ஸ்வயம்வித்த சிவக்ஷேத்திரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. கைவல்லிய சைலத்தில் — ஸ்ரீகண்டன்
2. ஹிமயத்தில் — கேதாரன்
3. காசீபுரியில் — விஸ்வநாதன்
4. ஸ்ரீசைலத்தில் — மல்லிகார்ஜுனன்
5. பிரயாகையில் — நீலகண்டேசன்

---

* ஸ்ரீதத்துவ நிதி : மைசூர் ராஜஸ்ரீ கிருஷ்ண ராஜ மஹாராஜா இயற்றி தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம் ஸ்ரீராம்ஹரண்ய சாஸ்திரியால் மொழி பெயர்த்த சகம். க.அமுதா, மூன்றாம் பாகம் பக்கம்-254,

| | |
|---|---|
| 6. பஞ்சவடியில் | வடேசுவரன் |
| 7. ஹரிஹரபுரத்தில் | சங்கரநாராயணன் |
| 8. விரிஞ்சிபுரியில் | மார்கேசன் |
| 9. மதுரையில் | சொக்கநாதன் |
| 10. கும்பகோணத்தில் | கும்பேசன் |
| 11. ஸ்ரீரங்கத்தில் | சர்வேசன் |
| 12. பஞ்சநதியில் | கிரீசுவரன் |

என சுயம்பு ஸ்தல வரிசையில் பஞ்சநதியில் கிரீசுவரனாக குறிப்பிடப்பட்டுள்ளது. பஞ்சநதம் என்பதே முன் பஞ்சநதி என ஊர்ப் பெயராக இருந்தது. அப்பொழுது (பஞ்சநதீஸ்வரர்) கிரீஸ்வரனாக இருந்தார். திருவையாறு என ஊர்ப்பெயர் மாறியபொழுது ஐயாறப்பர் ஆனார். இது உண்மையாகும்.

ஆகமம் "லயம் கச்சந்தி பூதானி சம்ஹாரே நிகிலம் யத:
ஸ்ருஷ்டிகாலே புன: ஸ்ருஷ்டி: தஸ்மாத் லிங்கமுதாஹ்ருதம்"

இந்த சிவாகம வசனத்தை அனுசரித்து மகாப்ரளய காலத்தில் சகல தேவதைகளும் கரையான் ரூபமாக இந்த லிங்கத்தில் அந்தர்கதத்தை அடைந்தார்கள் என்று புராணம் கூறுகிறது.

* "பிரியவரதனுக்கு ஐயாறப்பர் ஒளி வடிவில் தோன்றி செம்பொற்ஜோதியாய்க் காட்சி அளித்தார். அச்சிவலிங்கத்தின் துவாரங்களில் துர்வாசர், கௌதமர், சதாநந்தர் ததீசி, வசிட்டர் முதலான சிவபக்த சிகாமணிகளையும் கண்டு ஆனந்தமடைந்தார். இந்தச் சேஷத்திரத்திலுள்ள மகாலிங்கம் வல்மீக ரூபமாக உள்ளது என்பதற்கு மேற்குறிப்பிட்ட புராணம் சான்றாகும்.

ஸ்ருஷ்டி காலத்தில் எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கும் தன்மையும், மகாப்பிரளய காலத்தில் எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக் கொள்ளும் தன்மையுமிருக்கிறபடியால் அப்பர்சாமிகள், "அறிவும் அந்தமுமான ஐயாறன் அடித்தலமே" என்று பாடினார் எனவே மகாபுரளயத்திலும் அழிவில்லாத்தலம் என்று அறிகிறோம். எனவே ஐயாறும், ஐயாறப்பரும் காலத்தால் மிகப் பெருமை வாய்ந்தவர் என்பது இதனால் தெரிகிறது.

* பஞ்சநத மான்மியம், ஆலய வரலாற்றுரைத்த அத்யாயம் பக்கம் 49

* சிவாகமம் புவனந்நியாகத்தில்:

"ஜப்பேச புவனாய நம:

என்று சொல்லப்படுவதனாலேயே வேத சிவாகமங்களைச் சொல்வதற்கு முன்பே ஆவிர்ப்பவித்த க்ஷேத்திரம் என்பதை அறியலாம். ஜப்பேஸ்வரத்தில் (திருவையாற்றில்) இறைவன் "திரிசூலி" என்ற பெயரோடு விளங்குகிறான்.

தேவியை நோக்கி இறைவன்:

"திரிசூலிசைவ நாம்நாகம் விஷ்ணு அஜாப்யாம் சஸேவித:
தாப்யாம்சஹ வசாம்யத்ர லிங்கேஸ்மின் சர்வதா சிவே"

"பிரம்ம விஷ்ணுக்களால் சேவிக்கப்பட்டவனாய் அவர்களுடன் எப்பொழுதும் இந்த லிங்கத்தில் வசிக்கிறேன்" என்று கூறுவதால் திரிமூர்த்திகள் இவ்விடத்தில் ஒன்றாக விளங்குகிறார்கள். "ஸர்வதா" என்பதை வைத்து அப்பர் ஸ்வாமிகள் திருவையாறு அகலாத செம்பொற் ஜோதி என்றும் கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன் என்றும் மற்ற க்ஷேத்திரங்களை விட மேன்மையாகவே பாடியிருக்கிறார்.

ஐயாறப்பரின் தனிச்சிறப்பு :

வேதம்: "நமஸ்தே ருத்ர மன்யவே!" என்று கூறுகிறது.

அநாதியான வேதம் நமஸ்காரம் உனக்கு என்று எந்தத் தெய்வத்தையும் சொல்லவில்லை. இறைவன் திருக்கரங்கள் சேர்ந்து அஞ்சலி பண்ணாதது. எதையும் பிறரிடம் அபேக்ஷிக்காதது என்றதால் ஐயாறனை, மணிவாசகப் பெருமான் "மையார் வளை சிலம்ப .........சேர்ந்தறியாக்கையானை" என்று பாடினார். அதனால் வேதமும் மணிவாசகப் பெருமான் வாக்கும் ஐயாறனைவிட உலகில் உயர்ந்த தெய்வம் இல்லை, என்று சித்தாந்தப்படுத்துகிறது.

தன்னைத்தானே பூசித்த பெருமான்:

மணிவாசகப் பெருமான், "ஐயாறதனில் சைவனாகியும்" என்று பாடுகிறார். அருள்மிகு ஐயாறப்பர் ஆதிசைவனாக வந்து

---

* ஸ்ரீபஞ்சநத க்ஷேத்திர உத்க்ருஷ்ட வைபவம் ம. சுந்தரக்குருக்கள் 1971

தன்னைத் தானே பூஜை செய்து கொண்டார் என்று [illegible] குறிப்பிடுகிறது.

'சைவம்' ஐந்து விதமாக வரும். 1. அநாதிசைவம் 2. ஆதிசைவம் 3. மஹாசைவம் 4. அநுசைவம் 5. அவாந்திரசைவம் என்று ஐந்து வகை. இவற்றுள் அநாதிசைவர் சிவன். ஆதிசைவர் இறைவன் திருமுகத்திலிருந்து தோன்றியவர்கள், அதாவது சிவஸ்ருஷ்டியில் உண்டானவர்கள். மற்றவர்கள் ப்ரும்ம ஸ்ருஷ்டியில் உண்டானவர்கள். ஆதி சைவர்களைத் தவிர மற்ற ஏனையோர் தீக்ஷை பெற்றுக் கொண்டு ஆத்மார்த்த பூஜை செய்யலாம். பரார்த்தமான ஆலயத்தில் பூஜை செய்யக் கூடாது. ஆதிசைவர்கள் ஆத்மார்த்தம், பரார்த்தம் இரண்டுக்கும் உரியவர்கள்.

ஆகமம்: "ஏகாசார்யேண கர்த்தவ்யம்
ஏகதேவாலயே ஸ்திதம்" என்று சொல்கிறது.

திருவையாற்றில் அன்றொருநாள் ஆதி சைவர் ஒருவர் காசிக்குச் சென்றார். அவர் முறை வரும்போது யாரும் பூஜை பண்ணாததால் இறைவன் தானே காசிக்குச் சென்ற சிவாச்சாரிய ரூபத்துடன் வந்து பூஜை செய்து கொண்டிருந்தார். காசிக்குச் சென்ற சிவாச்சாரியாரும் ஒருநாள் வந்து சேர, அந்த அர்ச்சகர் உள்ளே வா என்று அழைத்து உள்ளே சென்றதும் ஜோதி வடிவமாக மஹாலிங்கத்தில் மறைந்தார். அன்றைய நாள் சித்திரை மாதம் ஆயில்ய நட்சத்திரம் கூடிய தினம். இறைவன் அசரீரியாக, 'நீ காசியிலிருந்து கொண்டு வந்த ஸ்படிக லிங்கத்தை அம்பிகையுடன் சேர்த்து பிரதிஷ்டை செய்து பிரதிவருஷம்

"சோஹம் பாவேன பூஜயேத்" என்ற சிவாகம வசனத்தை சித்தாந்தப்படுத்தவும் அன்யாச்சாரியன் பூஜை செய்யக் கூடாது என்று சிவாகம வசனத்தை அனுசரித்தும் உன் வடிவமாக வந்து பூஜையைச் செய்து கொண்டோம். இதன்படி ஆண்டுதோறும் "தன்னைத்தான் பூஜை" என்ற பெயருடன் பூஜை செய்வாயாக" என அநுக்ரஹித்தார். சிவாகமத்தை அனுசரித்து இன்றைக்கும் இந்த க்ஷேத்திரத்தில் அபத்நீகன், அதீக்ஷிதன், கர்ப்பதீக்ஷை உள்ளவன் பாண்டகத்தி ஆகும் வரையில் இறைவனைத் தொடுவதும், பூஜை செய்வதும் இல்லை.

அருள்மிகு அறம் வளர்த்த நாயகி : தர்மசம்வர்த்தனி:

"அரியலால் தேவியில்லை, ஐயன் ஐயாறனார்க்கே" என்பது அப்பர் தேவாரம். சைவசித்தாந்தம் விஷ்ணுவே சக்தி சக்தியே விஷ்ணு எனக் கூறுகிறது. முத்தொழிலையும் செய்யும் அன்னையே சிவத்திலிருந்து தோன்றிய சக்தியே காக்கும் விஷ்ணு வாகவுள்ளாள். அவளே ஐயாற்றில் அறம் வளர்த்த நாயகியாக, தர்மஸம்வர்த்தனியாகவுள்ளாள் இந்த க்ஷேத்திரத்திலுள்ள அர்த்தநாரீஸ்வர வடிவம் வலது பாகத்தில் அம்பாளை உடையது (மூலஸ்தானம் மேற்கு கோஷ்டத்தே உள்ளது) அது விஷ்ணுவிற்குக் கொடுக்கப்பட்ட பாகம். அப்பாகம் சக்தி உருவமாக உள்ளதால் சக்தியே விஷ்ணு, விஷ்ணுவே சக்தி என்பதறியலாம். சத்யோஜாத முகமூர்த்தங்களில் "ஹரிஹர மூர்த்தி" என்பதொன்று. அம்பிகையின் அம்சமாகத் திருமாலைத் தனது உடலில் இடது பாகம் இடம் பெறச் செய்து அருள்பாலிக்கின்றான். திருமாலே அம்பிகையாகவுள்ளதால் மற்ற ஆலயங்களில் இல்லாமல் பிரதி வெள்ளிக்கிழமை மகாலெஷ்மிக்கு உற்சவம் தனிச்சிறப்பாக நடைபெறுகிறது. அதன் காரணம் விஷ்ணுவே சக்தி வடிவமாக வுள்ளதால் தன் மனைவி லஷ்மியிடம் "பிரதி வெள்ளிக்கிழமை பிரதக்ஷிணம் செய்து என்னைத் தரிசனம் செய்" என்று சொன்னபடி இன்றைக்கும் வெள்ளி இரவு அம்பாள் சன்னதிக்கு லெக்ஷ்மி வந்ததும் அம்பாளுக்குத் தீபாராதனை நடக்கிறது. இதனைக் கண்டு தரிசித்தவர்கள் சகல பாக்யத்தையும் அடைவார்கள். முதலில் திரிபுரசுந்தரி என்ற பெயரும் அம்பாளுக்கு உண்டு. அவள் ஜீவகோடிகளின் தீய குணங்கள் (ஆணவம், கன்மம், மாயை) ஆகிய மூன்றையும் அழித்து நிர்குண சிவத்தோடு ஒன்று படுத்துகிறாள். சக்தியின் அனுக்கிரகத்தால் சிவத்தையடைய முடியும் என சிவாகமங்கள் கூறுகின்றன. மேலும் இங்கு அம்பிகை திரிசூலி பீடத்தேயுள்ளாள்.

வேதம்: "யக்ஞோவை விஷ்ணு:" என்று சொல்கிறது. யக்ஞத்தால் சகலதர்மங்களும் விருத்தி ஆகின்றன. தர்மத்தால் யக்ஞமும், யக்ஞத்தால் தர்மமும் விருத்தியாகின்றன. அதனால்

யக்யரூபமான விஷ்ணுவே 'தர்மசம்வர்த்தினி' என்ற பெயருடன் அறம் வளர்த்த நாயகியாக விளங்குகிறாள். இதை மனத்திற் கொண்டே

"ஓதிய ஞானமும் ஞானப் பொருளும் ஒலி சிறந்த
வேதியர் வேதமும் வேள்வியுமாவன......ஐயாறனடித்தலமே" என

அப்பர் சுவாமிகளும் ஐயாறன் அடித்தலத்தில் சகலவேத ஆகம புராண சாஸ்திரங்களும் நிறைந்து இருக்கின்றன என்று. பாடியுள்ளார்.

* அறம் வளர்த்த நாயகியின் சன்னதி: 64 சக்தி பீடங்களில் ஒன்றாகும்.

| | |
|---|---|
| 1. கோலாபுரத்திலுள்ள | லெக்ஷ்மி பீடம் |
| 2. மாதுபுரத்திலுள்ள | ரேணுகா பீடம் |
| 3. இலங்கையிலுள்ள | ஜ்வாலாமுகி பீடமும் |
| 4. காஞ்சியிலுள்ள | அன்னபூரணி பீடமும் |
| 5. நேபாளத்திலுள்ள | இரகசிய காளி பீடமும் |
| 6. மதுரையிலுள்ள | மீனாட்சி பீடமும் |
| 7. வேதாரணியத்திலுள்ள | சுந்தரி பீடமும் ஏகாம்பர பீடமும் . |
| 8. புஷ்கரத்திலுள்ள | காயத்திரி பீடமும் |
| 9. கிரியிலுள்ள | சாரதா பீடமும் |
| 10. கமலாலயத்திலுள்ள | கமலை பீடமும் |
| 11. பஞ்சநதத்திலுள்ள | திரிசூல பீடமும் உள்ளன |

என்பதை வடமொழியிலுள்ள தேவிபாகவ்தத்தில் காணலாம்.

## ஆட்கொண்டார்:

"அஞ்சேல் என்று அருள் செய்வான் அமருள் கோயில்" என ஞானசம்பந்தர் வாக்கின்படி. ஐயாற்றில் மறிக்கும் ஜீவகோடிகளை "அஞ்சேல்" எனக் காக்கின்றார். உதாரணமாக சுசரிதன் எனும் அந்தணச் சிறுவனைக் காப்பதற்காக எமனைச் சங்கரித்தார். பின் பிரும்மா முதலிய தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி எமனைப் பிழைக்கச் செய்து, இத்தலத்தில் இறக்கும் ஆன்மாக்களைச் சிவகணங்கள் சிவலோகம் அழைத்துச்

* பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் : சோடச அவதானம் தி.க. சுப்ராயச் செட்டியார் உரை சர்வசித்து மேடாவி பக்கம் 277

செல்லும். நீ இவ்விடம் வரவேண்டாம் என அதிகார ரூபமான நந்திகேஸ்வரரை தக்ஷிண துவாரத்தில் ஜீவகோடிகள் எமபயம் அடையாமல் இருக்க சூசகுண்டன் உய்யக்கொண்டாராக அபிதாங்கன் ஆட்கொண்டாராக இருவரையும் நிற்கச் செய்தார். அவர் சன்னதியில் குங்குலியப் புகை போடப்படுகிறது.

சிவாகமத்தில்: "தூபம் பாபஹரம் ப்ரோக்தம்" என்று சொன்னதனால் தூபோபசாரம் பாபத்தைப் போக்கடிக்கிறது. திருவையாற்றில் இறந்தவர்களையும், இங்கிருந்து கிளம்பும் குங்குலியப் புகையைப் பார்க்கக் கூடிய தூரத்தில் இறந்தவர் களையும், எமன் பாதிப்பதில்லை. ஆதலின் எங்குமில்லாத சிறப்பு இத்தலத்திற்கு உண்டு. அதனால்தான் ஆட்கொண்டார் சன்னதி யில் சதா குங்குலியம் புகைந்துக் கொண்டிருக்கிறது.

ஆகமம்: "சர்வஸ்வம் சர்வதாப்யாயு: சிவகார்ய நியுஞ்சத:
நவித்ம, சிம்பலம் தஸ்யபவ பந்த விமோக்ஷத:"

தன்னுடைய திரவியங்கள் எல்லாவற்றையும், தன் ஆயுளையும் சிவதர்மத்தில் ஈடுபட்டுச் செய்யும் அன்பர்களுக்கு சம்சார சாகர விடுதலையும், முக்தியுமளிக்கிறார்ன். இக் கருத்தை,

"களிந்துக் கலந்தோர் காதற்க சிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்றஇப் பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கும் ஐயாற னடித்தலமே".

ஐயாற்றுக் காவிரியில் குளித்துத் தொழுகின்ற தம் பக்தர்களுக்கு ஐயாறன் வானவருலகில் தேவாமிர்தத்தை ஊட்டித் தேவர்களோடு சேர்ந்து வாழும் செல்வத்தை அளிக்கிறான் என அருமையாகக் கூறுகிறார் அப்பர் பெருமான்.

நம் இந்து சமயத்திற்கு சாத்திரப்படியே ஆலயமும் மூர்த் தங்களும் அமைப்பது வழக்கம். விக்கிரகங்களில் அமைப்பைப் பற்றி தியான ஸ்லோகங்கள் விளக்குகின்றன. அதே ஸ்லோகங் களில் ஒவ்வொரு விக்ரகமும் அமைக்கப்பட வேண்டிய விதங் களும் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக தட்சிணாமூர்த்தி உருவம் எப்படி இருக்க வேண்டும் என்பதை ஒரு தியான ஸ்லோகம்

காட்டுகிறது. நான்கு கரங்கள், சின்முத்திரை, உடுக்கை, அக்னி, ஏடு, இவற்றை உடையனவாயின் வலது காலை முயலகன் என்ற பூதத்தின் மீது ஊன்றி இடது காலை வலது கால் துடையில் ஏற்றி உட்கார்ந்திருக்கும். பின்புறம், ஆலவிருக்ஷம் பக்கத்தில் ஜனகாதி முனிவர் நால்வர் இவ்வாறு அமைக்கப்பட வேண்டும். ஆகமத்தில் குறிப்பிடப்படும் ஒவ்வொன்றிலும் உயரிய உண்மைப் பொருள் பொதிந்து கிடக்கும்.

"தோற்றம் துடியதனில்............. உண்மை விளக்கம்".

எச்செயலும் அர்த்தத்துடன் கூடியனவாகவே இருக்கும். இதன் உண்மையை, நம்மில் பலரும் அறிதற்கு இயலா நிலையில் ஆக்கப்பட்டுள்ளோம். அறிவிப்பார் இன்மையால் அறிகிலோம். மறைப்பொருளை ஒருவாறு நாம் உணர்ந்தால் மற்றவர்க்கும் உணர்த்துவோம். ஏதோ எல்லோரும் செய்கிறார்கள் நாமும் செய்கிறோம் என்றில்லாமல் சைவர் ஒவ்வொருவரும் உணர்ந் திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வேத ஆகமங்களை இதுவரை சிறிது விளக்கினோம்.

## தத்துவம் விஞ்ஞானம் உணர்த்தும் திருவையாறு

**தத்துவம்:** தத்துவம் = உண்மை, உள் + மெய் = உண்மை. மறைந்து கிடக்கும் உட்பொருளை வெளிப்படுத்திக் காட்டுவதையே "தத்துவம்" என்கிறோம்.

**விஞ்ஞானம்:** வித்தை என்பது விஞ்சையாகி, விஞ்சை விஞ்ஞான மாயிற்று. கட்புலனுக்கு அறிய ஒண்ணாத நுண்பொருளைத் தன்னகத்தே கொண்டு விந்தை மிகு செயலை வெளிப் படுத்திக் காட்டுவது விஞ்ஞானம்.

## * திருவையாறென்னும் பஞ்சநத க்ஷேத்திரத் தத்துவம்.

உலகில் அட்டமூர்த்தி ஸ்ரூபமாய் சிவன் விளங்குகிறார். அண்டபிண்டங்களின் பிரிவினையின்படி அட்டமூர்த்தி ஸ்வரூப விமர்சனம்.

* ஸ்ரீபஞ்சநதக்ஷேத்திரத் தத்துவம் : பிரம்மஸ்ரீ. அருட்கவி சுப்பிரமணிய அய்யர் 1949, தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகம் எண் T 582

| அட்டமூர்த்தங்கள் | அண்டம் | பிண்டம் |
|---|---|---|
| 1. பிரிதிவி | காஞ்சீபுரம் | மூலாதாரம் |
| 2. அப்பு | ஜம்புகேஸ்வரம் | ஸ்வாதிஸ்டானம் |
| 3. தேஜஸ் | அருணாசலம் | மணிபூரகம் |
| 4. வாயு | காளஹஸ்த்தி | அநாஹதம் |
| 5. ஆகாசம் | சிதம்பரம் | விசுத்தி |
| 6. ஸூரியன் | சூர்யமண்டலம் | பிங்கலை |
| 7. சந்திரன் | சந்திர மண்டலம் | இடைகலை |
| 8. எஜமானன் | திருவையாறு | ஆஞ்ஞை |

*ஆகவே திருவையாறு என்னும் பஞ்சநத க்ஷேத்திரம் ஸ்தூல அண்டத்தில் யஜமான் க்ஷேத்திரமாகவும், ஸூக்ஷ்ம பிண்டத்தில் ஆக்ஞாரூப மான சேக்ஷத்திரமாகவும் விளங்குகின்ற இதன் உண்மை, தத்துவ ஆராய்ச்சியில் நன்கு விளங்கும்.*

## ஜப்பேஸ்வரர்:

*மூலஸ்தானத்திற்குப் பின்பாகத்தில் நிருதிமூலைக்கும் மேற்குத் திசைக்கும் மத்தியில் (மஹாவிஷ்ணு ஸ்தானத்தில்) இருக்கின்றார். ஜப்பேய்வர மண்டபத்தில் ஆதிவிநாயகர், ஸூக்ஷ்ம பஞ்சபூதலிங்கங்கள், ஸ்ப்தமாதர்கள் பிரதிஷ்டிக்கப்படுள்ளனர். ஜப்பியேஸ்வரர் ஸகலவிதமான மந்திரங்களின் ஜபஸித்தியை வெகுசீக்கிரத்தில் அருளுபவர். இம்மண்டபத்தில் விளங்கும் ஸூக்ஷ்ம பஞ்சபூதலிங்கங்கள் அபஞ்சீக்ருத பூதலிங்கங்களாகும்.*

இனி இத்தத்துவத்தை ஆராயத் தொடங்குவோம்:

*'பஞ்சநதம்: ஆக்ஞாஸ்தானமாகும் புருவ மத்தி. இது மானஸீக சேக்ஷத்திரம். இந்த ஸ்தானத்தில் ஐந்து சிறு நதிகள் ஒருங்கேவந்து சேருகின்றன. அவையாவன:*

*1) கங்கை ஸஹஸ்ராரதள கமலமாகும். பிரஹ்ம சந்த்ர ,தானத்திலிருந்து கீழ்நோக்கிப் பெருகும் சைதன்ய அம்ருததாரை.*

*2) ஸௌர்யபுஷ்கரணி பிங்கலை*

*3) சந்த்ராம்ருத நதி இடகலை*

*4) கௌரி முலைப்பாலாறு; கௌரி என்றால் வாக்காகும். வாக்கின் குகமண்டலம் மத்திமை. இது விசுத்திச் சக்கிரத்*

திலுள்ளது. இதனின்று மேல் நோக்கி எழும் ஆத்மகோசர விருத்திக்குப் பாலாறு என்று பெயர்.

5) ரிஷபநதி நந்திவாய் நுரை. நந்தியென்பது பரிசுத்த ஜீவன். நந்தியின் வாய் சுத்தாந்தக்கரண மெனப்படும். இத்தகைய அந்தக்கரண விருத்தியே ரிஷபநதியாகும்.

மேற்கூறிய ஐந்து சிறு நதிகளும் புருவமத்தியாகும் ஆக்ஞாஸ்தானத்தில் ஒன்று சேருகின்றன. இவையே யோகசித்தியாம்.

### ஸப்தஸ்தான க்ஷேத்திரங்கள்

| | | |
|---|---|---|
| 1. திருப்பழனம் | ஜாக்கிரம் | அகாரம் |
| 2. திருச்சோற்றுத்துரை | ஸ்வப்பனம் | உகாரம் |
| 3. திருவேதிகுடி | ஸுஷுப்தி | மகாரம் |
| 4. திருக்கண்டியூர் | துரியம் | அர்த்தமாத்திரை |
| 5. திருப்பூந்துருத்தி | துரியாதீதம் | நாதம் |
| 6. திருநெய்த்தானம் | அதீதோதிதம் | பிந்து |
| 7. திருவையாறு | ஸன்மயம் | உன்மனீ |

## சிவலிங்கம் பற்றி அறிவிக்கும் மெய்ஞானமும், விஞ்ஞானமும்

*சிவலிங்கம்: அனைத்தும் அதனுள் அடங்குவது ஒடுங்குவது. லயித்தல் லயிங்கம் லிங்கமாயிற்று. [சிவலிங்கம்: சைவசித்தாந்த விழுப்பொருளாகிய முப்பொருள் உண்மையை உணர்த்துவதாகும். கருவறையில் வீற்றிருக்கும் சிவலிங்க மூர்த்தி பதி. அதனை எதிர் நோக்கி கிடக்கும் நந்தி பசு நந்தியின் பின்புறம் அமைந்துள்ள பலிபீடம் பாசம் எனும் முப்பொருள் உண்மையை உணர்த்தும்.

இதனையே திருமூலர்:

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்து கொள்வார்கட்கே. திருமந்திரம் 2411

என்றார்.

---

* இந்தமத இணைப்பு விளக்கம் :- மகாவித்துவான் கே. ஆறுமுக நாவலர் பக்கம்

## சிவலிங்கத்தில் மூன்று பாகம்:

கீழ்பாக பீடம் பிர்மபாகம், ஆவுடையார் விஷ்ணு பாகம், பாணம் ருத்ர பாகம், சக்தி அம்பாள் ஞானசக்தி பீடத்திலிருக்கிறாள். ஆகவே, பீடம் ஆதார நிலையில் ஞான சக்தி. அதன் இணைப்பு இல்லையெனில் உலகம் இயங்காது. இதனை அஷ்டபந்தனம் எனும் எட்டு விதமான மருந்துப் பொருள்களால் இணைப்பது முறை. அது சாமியின் அருட்சக்தியை எடுத்து பீடத்திற்குக் கொடுக்கிறது. ஒயரில் கரண்டு சென்று ஒளி தருவது போல மந்திர எழுத்துக்களைக் கொண்ட செப்புத் தகட்டை யந்திரமாக அடியில் அமைத்து உள்ளதால் அருள் தேங்கியுள்ள அவ்விடத்திலிருந்து மருந்து இழுத்து வணங்கும் நாம் நிற்கும் இடத்திற்குக் கொண்டு வந்து (Earth) பூமி வழியாக அருட் சக்தியைத் தருகிறது. ஒப்பற்ற இத்தத்துவ அமைப்பை உடையதே நம் சிவலிங்க வடிவம். அதனை உருவமும், அருவமும் இன்றி உரு அருவ வடிவில் அமைத்துள்ளனர்.

## விஞ்ஞானம்;

அணு உலக ஆராய்ச்சியாளர், அணுவுக்கு அணுவாக எவ்விடத்தும் விளங்கும் எலக்ட்ரானைப் பரிசோதித்துப் பார்த்ததில் பச்சை நிறமான ஒரு வட்டத்தின் நடுவில் ஒரு ஜோதி துலங்கக் கண்டனர். இப்பச்சை வடிவம் ஆவுடையாரையும் ஜோதி வடிவம் சிவலிங்கத்தினையும் காட்டின. ஆகவே எலக்ட்ரான் வியாபித்த உலகமெங்கும் சிவலிங்க வடிவமே தோன்றுவதாலும் இறைவன் கொண்ட அரு உருவத் தோற்றம் சிவலிங்கமே என்பதை விஞ்ஞான உலகம் உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது.

## மந்திர சக்தியின் ஆற்றலைக் கண்டு வியந்த விஞ்ஞானம்

மந்திரம் மன்+ஸ்திரம். மன் = மனத்தினால் நினைப்பவரை, ஸ்திரம் நிலை பெறச்செய்வது. இத்தகைய ஆற்றல் தமிழ் மறையாம் பன்னிரு திருமுறைப் பாடல்களுக்கும், வடமொழி மந்திரஸ்லோகங்களுக்கும் உண்டு. இதற்குச் சான்றாக ஒவ்வொன்று காண்போம்.

1. திருத்தொண்டர் புராணத்திற்கு உரை எழுதிய கோவை சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் 'ஆச்சாள் புரம்' என வழங்கும் நல்லூர் பெருமணம் தலத்திற்கு திருஞானசம்பந்தர் திருவிழாவைக் கண்டு தரிசிக்கச் சென்றிருந்தார்கள். கடும் வெய்யிலில் பகல் பன்னிரெண்டு மணிக்கு ஞானசம்பந்தர் வீதிஉலா வந்துகொண்டிருந்தார். வைகாசி மாதம் வெய்யிலின் கொடுமையால் பவனியில் முன் செல்லும் இசைவாணர்களும், எடுபிடி ஆட்களும் வேத பாராயண மறையவர்களும் உடன் வர இயலாது. ஆங்காங்கே அமைத்திருந்த பந்தரிலும், வீடுகளிலும் ஒதுங்கி வருவாராயினர். வீதியில் ஸ்வாமி தூக்கி வருவோரும்,அர்ச்சகருந்தான், விடாது போவாராயினர். பின்பற்றி வந்த தேவாரப் பாராயண ஓதுவார் திருக்கூட்டத்தாரும் விடாது பின் வருவாராயினர். அது பொழுது தேவார அய்யா (ஓதுவார்) அவர்கள் 'சிந்திப்பரியன' எனும் பதிகத்துள்ள "சுழலார் துயர்" வெயிற்சுட்டிடும் போது......எனும் திருவையாற்று மேகராகக் குறிஞ்சிப் பண்ணை மனம் உருகி ஓதினார். என்னே அதிசயம்! ஐந்து கணங்களுக்குள் மேகம் சூழ்ந்து சூரியனை மறைத்தது. அதன் பின் அன்று முழுவதும் வெயிலே காணப்படவில்லை.

*2. நாம் வழிபடும் ஒவ்வொரு விக்கிரகங்களின் (மூர்த்தி) அமைப்பிற்கும் தியான சுலோகங்கள் உண்டு. நாம் பூஜை செய்யும்போது இந்தத் தியான ஸ்லோகத்தில் கூறப்பட்ட வடிவத்தைதத் தியானம் செய்து பதிய வைத்துப் பூஜை செய்ய வேண்டும். இதில் ஒரு உண்மை உள்ளது. ஒவ்வொரு தேவதைக்கும் மந்திர ஒலிகள் கூறப்படுகின்றன. இந்த மந்திரங்கள் பெரும்பாலும் வேத மந்திரங்கள். அவற்றைச் 'சந்தஸ்' தவறாமல் உச்சரிப்பதால் அந்தந்த தேவதைகளின் உருவங்களே சூஷ்ம சலனத்தால் ஆவிர்பவித்து சாதகனின் மந்திர திருஷ்டியில் தோன்றுமாம். இந்த

---

* 1. திருத்தொண்டர் புராணம்: திரு.சி.கே.எஸ் உரை திருநாவுக்கரசு நாயனார் புராணம் 1650 பக்கம் 643.

2. திரியுகம் கண்ட தேவிமாலையும்,சக்திகவசமும்: கட்டுரை எஸ். நாராயணசாமி திருவாடுதுறை ஆதீன வெளியீடு 1988.

ரகசியத்தை மேனாட்டு விஞ்ஞானிக்ள் நேரில் செய்து பார்த்தார்கள் என்றும், சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க விஞ்ஞானிகள் ஓசையின் சூக்ஷ்ம சல்னங்களை ஆராய்ந்து கண்டுபிடித்தார்கள் என்றும் எழுதியிருக்கிறார்கள். அதாவது : பைரவ மந்திரத்தை சந்தஸ்ஸோடு பாடச்செய்து அதன் சலனத்தால் ஓர் மனிதனும் நாயும் தென்பட்டதாக எழுதியுள்ளார்கள். எனவே, மந்திரத்தை முறையாக உச்சரித்தால் இறைக்காட்சி கிட்டும்என்ற உண்மையை விஞ்ஞானம் வெளிப் படுத்திக் காட்டிவிட்டது.

நிறைவுரை: திருவையாறு அன்றுமுதல் இன்றுவரை வேத ஆகம விற்பன்னர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வீதிகளில் வேத முழக்கமும், கோயில்களில் ஆகமபந்ததியும் குறையாமல் முறையாக வழிபாடுகள் நடைபெறுகின்றன. சுயம்பு ஸ்தலங்களில் மேலானதும் 64 சக்தி பீடங்களில் சாம்பவி பீடமும் உள்ள தலமென்பதுணர்ந்தோம்.

விஞ்ஞானமும் மெய்ஞானமும் மந்திர சக்தி துணை கொண்டு இறைவனைக் கண்ட வரலாற்றைக் கண்டோம். வேத ஆகமம் பற்றிய செய்திகளை நாம் ஐயாறன் திருவருள் கொண்டுதான் ஓரளவாவது உணர்ந்து உணர்த்த முடிந்தது. அதற்கு ஐயாற்றெம் 'பெருமானுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். ஓம் சக்தி

* * * * * *

* * * *

* *

"ஆதிபுராணனாய் நின்றாய் நீயே!"



● பொருளடக்கம்

## 5. புராணம் புகழும் திருவையாறு

முன்னுரை :

புராணம் தரும் உண்மை--ஆதிபுராண வரலாறு--திருவையாற்றுப் புராணத்தோற்றம் திருவையாற்றுத் தலபுராணங்கள்--பஞ்சநத மான்மியம், ஜெப்பேசப்புராண அத்தியாச் சுருக்கங்கள், திருவையாற்றுப்புராணம் செய்யுள் நடை--இதிலுள்ள சருக்கங்களின் சுருக்கம் நிறைவுரை

# 5. புராணம் புகழும் திருவையாறு

## புராணம்:

புராணம் என்பதற்குப் "பழைய வரலாறு" என்பது பொருள். இதனைத்"தொன்மம்" என்று தொல்காப்பியம் கூறும். பழமைக்குப் பழமையாக இறைவன் விளங்குகிறான் என்பதை உணர்த்துவது புராணம். பரமனருள் பெற்ற முன்னோர் பலரது வரலாற்றைப் பின்னோராகியநாமும் உணர்ந்து நடப்பதற்கு உதவுவன புராணங்களாகும். மேலும், சாத்திரஉண்மைகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கி அவற்றைக் கதைவடிவில் நமக்களித்து எளிதில் அதன் உண்மைகளையுணர்ந்து அதன்படிநாம் வாழ்வதற்கு வழி வகை செய்யவல்லனவும் புராணங்களாகும்.

## புராணம் தரும் உண்மை:

வடநாடு, தென்னாடு என்ற வேற்றுமையின்றி, சமய உண்மைகள் நம்நாடுமுழுவதும் பரவி நிற்பதற்கு காரணம் புராணங்களே. அதனால்தான்எண்ணிறந்த சமய நோக்குடைய புராணங்கள் பெருகின. அதனால்விண்ணுலகும்மண்ணுலகும் புராணவுலகில் சமவாழ்வு நடத்தின. விண்ணவரும்மண்ணவரும் தம்மில் கலந்து உறவாடினர். தேவர்களும்,முனிவர்களும், விஞ்சையரும் நம்நாட்டுப் பண்பமைந்த மக்களாகவாழ்ந்தனர், என்பன ....போன்ற பல உண்மைகளைப் புராணங்கள் நமக்குஅறிவுறுத்துகின்றன.

## ஆதி புராண வரலாறு:

திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்லசிவபெருமான் திருநந்திதேவருக்குப் பதினெண் புராணங் களையும் திருவாய்மலர்ந்தருள, அவர் சனற்குமார மாமுனிவருக் கருளிச் செய்ய, அவர்வியாச முனிவருக்கு விளம்ப, அவர் சூத முனிவருக்குச் சொல்ல, சூத முனிவர் நைமிசாரண் யவாசிகளாகிய அத்தரி முதலான முனிபுங்கவர்களுக்கு உரைத்தருளினார் என்பதே ஆதி புராண வரலாறாகும்.

## திருவையாற்றுப் புராணத் தோற்றம்:

ஒரு சமயம், நைமிசாரண்யத்தில் மரவுரிதரித்தவரும், விபூதி,உருத்திராட்ச தாரணத்தோடு சதா பஞ்சாட்சர மியைந்த உள்ளத்தினருமாகிய அத்திரி, ததீசி, உபமன்யு, அகத்தியர், ஆங்கிரசர், புலத்தியர், கவுதமர், மார்க்கண்டர், வசிட்டர். காசிபர், சனற்குமாரர், நாரதர், துர்வாசர், விசுவாமித்திரர், பார்க்கவர், பராசார், சநாதநர் , சனகர், சதாநந்தர், வாமதேவர், சுகர், பாணி, கவுண்டின்னியர், திரணதூ மாக்கினி, செமதக்கினி என்ற அருந்தவ முனிவர்கள் கூடிச் செய்த யாக முடிவில் சதா ஐந்தெழுத்தோதும் சிந்தையுடைய "சூதமாமுனிவர்" வந்து சேர்ந்தார்.

அத்திரி முதலான அம்முனிபுங்கவர்கள், முறைப்படி அவரை வணங்கிவரவேற்று, மறைமுழுதும் உணர்ந்த முதல்வ: சூதபுராணிக! யாங்கள் உய்யும் வண்ணம் பதினென் புராணங்களான பிரமம், பதுமம், விண்டு, சைவம், பாகவதம், பவிடியம், மார்க்கண்டேயம், நாரதம், அக்கினேயம், பிரமகை வர்த்தம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மற்சம், காருடம், பிரமாண்டம் என்னும் இவற்றுள் ஒன்றான பிரமகை வர்த்தத்திலுள்ள 64 அத்தியாயங்களோடு கூடிய ஸ்ரீமத் பஞ்சநத மான்மியத்தை எமக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டு மெனக்கேட்டுக் கொண்டார்கள்.

அவரும் நன்று நன்றென வேட்டவர் மலங்கள் வாட்டி, வெம்பவத்தை வீட்டி,முத்தி கொடுக்கின்ற ஸ்ரீபஞ்சநத மான்மியத்தை ஆதியில் சூரியவம்சத்தில் பிறந்த தேவவர்ம ராசன் என்பவன் சிவபக்த சிகாமணியாகியசுமந்து மகரிஷியிடம் கேட்ட பொழுது அவரும் மகிழ்ந்து "உன்னைவிடஉத்தமர் உலகில் எவருமில்லை, இந்த பஞ்சநத மகாத்மியசிரவணபடனாதிகளால் யாவரும் உத்கிருஷ்ட (மேலான) பதவியையடைகிறார்கள். இந்த தலத்தின் பெருமையைப் பூர்வபுண்ணியமில்லாதவர்கள் கேட்க மாட்டார்கள். பரமசிவனானவர் பிரிவின்றி எக்காலமும் திருவையாறகலாத செம்பொற் ஜோதியாக இருந்து வருகிறார். அவரையும் அத்தல மேன்மையும் பற்றிச் சொல்கிறேன்கேள்" என்றார்.

ஆதி காலத்தில் பார்வதி தேவியார் பரமசிவனை நோக்கி "தேவதேவா! பஞ்சநதத் தலத்தின் மான்மியத்தை எனக்குச் சொல்லியருள வேண்டும்"எனக் கேட்ட பொழுது "உமா! பூர்வத்தில் காவேரி தீரத்தில் வாசம் செய்தவனும் பிரமனோத்த மனுமான நாத சன்மாவிடம் அவன் மனைவி அனவத்தியாதேவி கேட்டு அறிந்தவற்றைத் தெரிந்துகொள்: அவள், "சுவாமி! உலகத்தில் தரிசித்த அளவில் முத்தியையும், ஸ்நானத்தளவில் பாப விமோசனங்களையும் கொடுக்கக் கூடியதலங்களையும், தீர்த்தங் களையும் அடியேற்குத்திருவாய் மலர்ந்தருளவேண்டும்" எனக் கேட்டதற்கு நாதசன்மா," பெண்கள் நாயகமே!மரணத்தால் முத்தி கொடுக்கிற காசி, திருகோகர்ணம், சோமநாதம், விருபாக்ஷம், திருக்கேதாரம், மல்லிகார்சுனம், திருவேகம்பம், திருக்காளத்தி, விருத்தாசலம், அருணாசலம், சீர்காழி, வைத்தீஸ்வரன்கோயில், திருவெண்காடு, திருவாரூர், வேதாரண்யம், கௌரிமாயூரம், திருவிடைமருதூர், கும்பகோணம், சுவாமிமலை, திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமேஸ்வரம், முதலாக மற்றுமுள்ள தலங்களைப் பல்கால் தரிசித்து அடையும் பலனை, ஒருமுறை தெரிசித்தளவில் கொடுக்கத்தக்க திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந் துருத்தி, திருநெய்த்தானம் என்கிற சப்த தலங்களுள் முதன்மை யானது திருவையாறு. இதன் மான்மியத்தை, (சிறப்பை) மூர்த்திதல தீர்த்தமகிமையை உனக்கு உரைக்கிறேன் கேள், என பரமசிவன் பார்வதிக்குக்கூறிய அதை இப்பொழுது உங்களுக்கு உரைக்கிறேன் என்று சூதபுராணிகர் அப்படியே கூறத் தொடங்கினார். அவர் உரைத்தவைகளே திருவையாற்றுத்தலப் புராணமாகும்.

## திருவையாற்றுத் தல புராணங்கள்

**1. திருவையாற்றுப் புராணம்: (கி.பி.1605)**

இதனை 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த (கி.பி. 1605) மெய்கண்டார்வழிவந்த 'திருவம்பலவன்' என்பவரால் 12 சருக்கங்களுடன் 2029 திருவிருத்தங்களைக் கொண்ட பழம் பெரும் நூல் இயற்றப்பட்டது. தஞ்சை சரஸ்வதிமஹால் நூல் நிலையத்தே இதன் ஏட்டுப்படி உள்ளது. தஞ்சை மன்னன்

அச்சுதப்பநாயக்கர் காலத்து அவர் அமைச்சர் கோவிந்த தீக்ஷிதரின் ஆதரவில் கி.பி. 1605ல் எழுதியதாக அவையடக்கப் பாடல் மூலம் அறிகிறோம். இதன் முன்பாதியைசரஸ்வதி மஹால் நூலகம் கி.பி.1991ல் வெளியிட்டுள்ளது. விலை ரூ.44(1039 செய்யுள்கள் மட்டும் உள்ளன).

**2. பஞ்சநதமான்மியம் ஜெப்பேசமான்மியம் கி.பி. 1885ல்:**

தஞ்சை சமஸ்தான வித்வான் திருவையாறு முத்து ஜோஸ்யர் குமாரர் ஸ்ரீசாமா சாஸ்திரி அவர்களால் வடமொழியிலிருந்து மொழிபெயர்த்ததனை திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மாணாக்கர் வல்லமாநகர் தி. கந்தசாமி உபாத்யாயர் அவர்களால் தென்மொழியில் வசனமாகத்தூய தமிழ்நடையில் திருவையாறு ஜோதிர் விலாஸ் அச்சுக்கூடத்தில் பார்த்திப வருஷம் கார்த்திகை மாதம் கி.பி. 1885ல் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

**3. பஞ்சநத மான்மியம் என்னும் திருவையாற்றுப் புராணம் கி.பி1907:-**

கரந்தை வெங்கட்ராம சாஸ்திரியால் மொழிப் பெயர்த்து, கரந்தை சோலைமுத்துப் பிள்ளை அவர்களால் நல்ல தமிழில் மொழிப் பெயர்த்து எழுதிய நூல். மேற்கண்ட நூலும் இதுவும் ஒன்றே.

**4. திருவையாற்றுப் புராணம்:**

செப்பேசபுராணம் என வழங்கும் முதற் புராணம். மதுரை திருப்பரங்குன்றம், ஸ்ரீலஸ்ரீநிரம்பவழகிய தேசிகரின் மாணாக்கர் செங்கை மாவட்ட சிவன்பாக்கம் ஞானக்கூத்தரால் இயற்றப்பட்டு 437 செய்யுட்களையும், உரைநடைகளையும் கொண்ட நூலாக இலங்குகின்றது. தருமபுர ஆதீன ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிக மஹா சன்னிதானத்தின் ஆக்ஞைப்படி திருவாதி தேவஸ்தானம் கட்டளை விசாரணை சோமசுந்தரத் தம்பிரான் அவர்களால் சென்னை மீனாட்சிபிரஸில் 1930ல் பதிப்பிக்கப்பெற்றது.

கிடைத்தற்கரிய திருவையாற்றுப் புராணங்கள் இவை நான்கையும் தேடிக்கண்டு பிடித்து பலநாட்கள் ஆய்ந்து ஒப்பீடு செய்து பார்த்தோம். இக்காலத்தே புராண நூல்களை விரும்பிப்

படிப்போர் குறைவு. ஆதலின், யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் அப்புராணங்களில்உள்ள அத்தியாயச் செய்திகளைச் சுருக்கி, அவற்றின் திரண்டபிழிவினை மட்டும் ஈண்டு தந்துள்ளோம்.

## திருவையாற்றுத் தல புராணம், பஞ்சநத மான்மியம், ஜெப்பேச புராணம் ஆகிய இவற்றின் சுருக்கம் வருமாறு:

**1. வது துஷ்பிரவர்த்தி முக்தி அடைந்த அத்தியாயம்:**

துஷ்பிரவர்த்தி என்னும் பாபி மாத்ருகமனஞ் செய்து பிதாவையும் கொன்ற பாபம் திருவையாறு வந்து, மாகமாதத்தே காவிரியில் நீராடியதால் நீங்கி முக்தி அடைந்தான். (கோயில் சுவரில் ஓவியமாக உள்ளது)

**2. வது சிவப்பிரியர் சாமீப சாருபமடைந்த அத்தியாயம்:**

சிவப்பிரியர் என்னும் அந்தணர் இத்தலத்தில் 5 ஆண்டுகள் காவிரி நீராடி, மஹாமஹத்தன்று தான தர்மங்களை நிறையச் செய்து, தினம் முப்பதாயிரம் பஞ்சாட்சரம் ஜபித்து, சாமீப சாருப்ய பதவி கிட்டியது.

சுதர்மா என்பவர் நாள்தோறும் வேதம் ஓதி எல்லா யாகங்களும் இங்கு செய்ய அவருக்குச் சுவர்க்கம் கிடைத்தது.

**3. வது சுரதமகாராஜன் புத்திரனடைந்த அத்தியாயம்:**

அயோத்தியை ஆண்ட சுரதமகாராஜனுக்கு துர்வாசரால் இத்தலத்தே கைலாச தரிசனமும், சிவதத்தன் என்ற புத்திர பேறும், சிவபதவியும் கிடைக்கப் பெற்றது. நன்றியுடன் சுரதமகாராஜாவும் மகன் சிவதத்தனும் பேரனும், சைத்திரோச்சவம், ரதோத்சவம் செய்து வழிபட்டார்கள். (கோயில் சுவரில் ஓவியமாக உள்ளது)

**4. வது சுசரிதன் எமபயம் நீங்கி முத்தி அடைந்த அத்தியாயம்:**

சுசரிதன் என்னும் சிறுவன் எமனுக்குப் பயந்து இத்தலமடைந்து பஞ்சாட்சரம் ஜபித்த மகிமையால், சிவபெருமான் நந்திகேஸ்வரரைக் கொண்டு இயமனைக் குத்திச் சிவபதவியளித்து, இயமனை எப்போதும் இத்தலத்தே வராமல் தடுத்தது.

**5. வது இலக்குமிதேவி வரலாறு உரைத்த அத்தியாயம்:**

*கௌதமரிஷிக்காக பரமன் உத்தரபாகத்தே இலக்குமியை ஸ்தாபித்து ஐயாற்றில் வசிப்பவர்களுக்கு அன்னம், தனம், பானாதிகளைக் குறைவின்றி கொடுத்து வரச்சொல்லியும், கௌதமரிடம் நீர் இவ்விலக்குமியை வழிபட பஞ்சமகனும் என்றும் சொன்னார். தேவேந்திரனும் அசுரவதையால் அவதியுற தன் குலகுரு வியாழ பகவான் அருளியபடி இங்கு வந்து இலக்குமிக்கு 'அமிர்தகும்பம்' நிறுவி அபிடேகம் செய்தும் ஸப்த மாதர் பிரதிட்டையும் செய்து வழிபட்டு அசுரரை வெற்றிப் பெற்றான் என்ற நிகழ்ச்சி.*

**6. வது கௌதமர் வரமடைந்த அத்தியாயம்:**

*கௌதமமுனிவரின் அதிதி பூஜைக்குத் திருச்சோற்றுத் துறையில், நெல்லை அரிசியாகவே விளையச் செய்த அற்புத நிகழ்ச்சியைக் கூறுகிறது.*

**7. வது சதானந்தர் தவசித்தியடைந்த அத்தியாயம்:**

*கௌதமபுத்திரர் சதானந்தர் பூஜித்துத் தபசு செய்தபின் அவருக்குச் சிவபெருமான் காட்சியும், ஞான சித்தியும் பெற்றார் என்ற நிகழ்ச்சியைக் கூறுகிறது.*

**8. வது ஜப்பேசுவரம் என்று பெயர் வந்த காரணமுரைத்த அத்தியாயம்:**

*கோரதபசியாய் மலையைத் தின்ற சிலாதரிஷிக்குக் காட்சி தந்து, துர்வாசரால் உபதேசம் பெறச் செய்து திருவையாற்றில் ஆதி விநாயகருக்கும் ஸப்த மாதருக்கும் மத்தியில் அமர்ந்து தபசு செய்து, ஜெபசித்தி அடைந்த தலமாதலின் 'ஜெப்பேஸ்வரம்' எனப் பெயர் வந்த காரணம் உரைத்தது.*

**9. வது 'பஞ்சநதம்' என்று பெயர் வந்த காரணமுரைத்த அத்தியாயம்:**

*சிலாதரிஷிக்குச் சைலாதி நந்தி முகத்துடன் பிறந்து கடுந்தவம் மியற்றி பெருமானால் சூரிய, சந்திர, கங்கை, கொங்கை, நந்திநீர், எனும் ஐந்தனால் பஞ்சநதியால் அபிஷேகம் செய்து கொண்டு நந்திகேஸ்வர் என, திட்சாநாமமும், பஞ்சநதம் என்ற தலப்பெயரும் வந்த காரணம் உரைத்தது.*

**10. வது காவேரி வரலாறுரைத்த அத்தியாயம்:**

*அகத்தியரால் சையமலையிலிருந்து விடுபட்ட காவிரி இத்தலத்தே தங்கியதால் சமுத்திரராசன் இங்கு ஐயாறப்பரை வழிபட்டு, காவிரியை அழைத்துப் போய் சுவேத வனத்தில் (திருவெண்காட்டில்) மணம் செய்து கொண்டதை உரைத்தது. (சுவர் ஓவியம் உள்ளது)*

**11. வது சிவதாசப்பிராமணன் முத்தியடைந்த அத்தியாயம்:**

*காசிக்கு சென்ற சிவதாசரை யேரண்டபகூழி விழுங்க, பஞ்சநதீசர் அதை வெட்டி ஒரு குளத்தில் முழுகச் செய்து இத்தலத்தில் விசுவநாதர், விசாலாட்சியாகத் தான் காட்சி கொடுத்து காவிரியே கங்கை என்று சொல்லி சிவதாசப் பிராமணனுக்கு முத்தி கொடுத்தது. (சுவரில் ஓவியமாக உள்ளது)*

**12. வது துர்த்தமன் முத்தி அடைந்த அத்தியாயம்:**

*துர்த்தமன் என்னும் பிராமணன் காவிரியில் துலா ஸ்நானம் செய்பவர் முட்டையைத் திருடி ஓட, சேவகன் துரத்தப் பயத்தால் காவிரியில் விழுந்து மூழ்கி ஓடியதால் பாபந்தீர்ந்து நற்கதி அடைந்தான். (சுவரில் ஓவியமாக உள்ளது)*

13. *துஷ்பிரக்ஞன் என்னும் பிராமணன் வலைச்சியுடன் கூடி மது, மாமிசம் உண்டு அவளுடன் சித்திரைத் தேருக்கு இங்கு வந்து திருடனால் வெட்டுண்டு இறந்ததால் கைலாசம் அடைந்தான்.*

14. *பாபஞ்செய்தவர் அடையும் ஜன்ம வரலாறு உரைத்தது: உதாரணத்திற்கு: கொலை பாதகம் செய்தவன் கழுதை, பன்றி, நாயாகவும், கள்குடியன் கோட்டான் எறும்பு, ஈயாகவும், தான்யம் திருடியவன் பெருச்சாளியாகவும் அடைவர். இப்பாதகம் தீர பஞ்சநதத்தில் துலாமாத காவிரி ஸ்நானம் செய்தால் நீங்கும் என்றது.*

15. *மரணக்குறி சொன்னது: கழுகு, புறா, காகம், தலையில் பட்டால் ஆறு மாதத்தில் மரணம். தேகத்தில் [illegible] கண்டால் ஒரு மாதத்தில் மரணம். இவை [illegible] தங்கி தரிசிக்கப் பலன் [illegible]*

16. ஆலய வரலாறு உரைத்தது:

திருவையாறு அநேக கற்பங்களாக அழியாத ஸ்தலம். இங்கு சூரிய வம்ச அயோத்தி மன்னன் மனுச் சக்கரவர்த்தி புதல்வன் பிரிய விரதனுக்கு ஐயாறப்பர் மஹாலிங்க வடிவமாக உலகு ஊடுருவிய ஜோதி வடிவில் செம்பொற் சோதியாகக் காட்சி கொடுத்தது.

17. நாத சர்மாவுக்கும் அவள் பாரியாள் அனவந்தியா தேவிக்கும், சிவன் கலியில் பாபம் செய்தவர்கள இங்கு ஸ்நானமும், தரிசனமும், தக்ஷிணாமூர்த்தி சன்னிதியில் பஞ்சாட்சர ஜபமும் செய்தால் எல்லாப் பாபங்களும் நிவர்த்தி ஆகும் என்றது.

18. தகாத வஸ்த்துக்களை உண்பதினால் வரும் பாபங்களும் ஐயாற்றில் ஸ்நான தரிசனத்தால் நீங்குமென்றது.

19. காஞ்சியில் வசிக்கும் விரஜனென்னும் வேதியனுக்குக் காஞ்சி கம்பா நதியை இங்கு வரவழைத்தும் (அம்மன் கோயிலில் கம்பா கூபம் உள்ளது) புத்திரப் பேறளித்தும் முத்தி கொடுத்தது.

20. நந்தி முதலான மகரிஷிகள் ஜெப்பேஸ்வர மண்டபத்தில் தபசு செய்தமையால் தபசித்தி அடைந்து முத்தி பெறச் செய்தது.

21. சிவஜன்ம வேதியனுக்கு (என்புருக்கி டி.பி.) க்ஷயரோகம் நீங்கச் செய்தது. "பிரணதார்த்திஹரா" என அவன் அழைத்தமையால் இவரும் பிரணதார்த்திஹரரானார்.

22. பிரகலாத வம்சத்தவனான சர்வ விஜயனானவன், இங்கு ஒளிந்து கொண்டு இறைவனைப் பூஜித்த இந்திரனுடன் போர் செய்ய, சிவபெருமான் ஆட்கொண்டாராகிய கால பைரவரால் சர்வ விஜயனைக் கொன்றது.

23. சுசிகரன் என்னும் வேதியனுக்கு, "மகர சங்கராந்தியன்று காவிரியில் ஸ்நானம் செய்து இங்கு என்னைத் தரிசித்தால் கலியணுகாமல் முக்தியடைவார்கள்" என்று சிவன் சொன்னது.

24. தருமசேது என்பவர், தன் தாய் தந்தைகளின் ஹஸ்தியைக் கட்டி இராமேஸ்வரம் போக நினைத்து இங்கு வந்து தங்கியதால் அவர்கள் சிவனுலகை அடைந்தது. வேறு எங்காவது இறந்தவர்களின் தலைமயிராவது சாம்பலாவது திருவையாற்றில் இரண்டு கடிகை அளவு தங்குமாயின் அவர்கள் சிவலோக பதவி அடைவது உறுதி. (அதனால்தான் நம்பிக்கையுடன் இன்றும் பலர் வெளியூரிலிருந்து இங்கு வந்து கருமகாரியம செயகின்றனர்.)

25. புண்டரன் என்னும் பிராமணன், பதிதபிராமணனுக்கு வேதாத்தியனஞ் செய்து வைத்த பாவத்தால் மான் ஜென்மமும், அக்காலத்தில் நல்ல அறிவுடன் ஞானத்தை போதித்தமையால் மானிட அறிவும் உண்டானதென்று சொல்லியது. கழுதை, நாய், மான், முள்ளம்பன்றி இவை உத்தம ஜென்மத்தை அடைந்தன. (சுவர் ஓவியம்)

26. ஜைகிஷ்வ்விய சந்நியாசியுடன் தேவலர் பஞ்சநதம் அடைந்தது, சுருக்கமான ஆஹாரம், காவேரி ஸ்நானம், இந்திரிய நிக்கிரகம், நல்லறிவு, ஜெப்பியேசுவரிடத்தில் மனோ லயத்துடன் 'ஸோஹம்பாவனை' செய்தால் ஈஸ்வரன் திருவடியை அடைவது நிச்சயம் எனக் கூறியது.

27. தேவலர் ஜப்பேசுவர மண்டபத்தில் ஒரு காலால் நின்று கடுந்தவம் புரிந்ததும், காஷாயமின்றி கிரகஸ்தாஸ்ரமத்திலிருந்து என்னை வணங்கினாலே மோட்ஷம் கிடைக்கும்.

28. அவிஹிதாசாரன் முக்தி அடைந்தது: அவன் மகாபாபி, பிராமணர்கள் திரவியத்தைக் கொள்ளையடித்துத் தீயவர்களுக்குக் கொடுத்துப் பிரமராட்ஷஸனால் பிடிக்கப் பட்டான்.. அவன் தந்தை தாவலர் வசிட்டரை அணுகி மகன் படும் அவத்தைக்குப் பரிகாரம் கேட்க, அவர் பஞ்சநத தலத்தை அடைந்து மார்கழி மாதத்தில் ஆருத்ரா நட்சத்திரத்தில் உதய காலத்தே காவிரியில் நீராடி தர்மாம்பாளையும் பிரணதார்த்தி கரரையும் தரிசித்தால் பிரம்மராட்ஸஸி போகும்என்றவாறு செய்ய நீங்கியது.

29. துர்பதன் என்னும் பிராமணன் வேசியர் நட்பு, கொள்ளை, சுராபானம், தாய் தந்தையரை அவமதித்த பாவம் இவற்றுடன் மகரசங்கராந்தி புண்ணியகாலத்தில் இங்கு காவிரி நீராடி ஐயாறப்பரை வணங்கி சாலை ஓரம் மரத்தடியில் படுத்திருக்க இடி விழுந்து இறந்தான், ஆயினும் அவன் உடலில் இருந்து ஒரு ஜோதி கிளம்பி கோயில் ஐயாறப்பருடன் இணைந்தது. உடல் சந்திரசேகரராக எழுந்து கோயில் துவார பாலகருடன் இணைந்தது. எனவே, சங்கராந்தியன்று காவிரியில் ஸ்நானம் செய்தால் சிவலோகம் அடைவது திண்ணம். திருவையாறு புஷ்ய மண்டபத்துறை உயர்வு கூறியது. சங்கரன் + அந்தி = சங்கராந்தி

30. ஆச்சார விகலன் முக்தி அடைந்தது. கௌசிக கோத்திரத்தில் பிறந்த தீய பழக்கம் அத்தனையும் உள்ளவன் வேசை மாதரோடு சங்க்ராந்தியன்று ஜலகிரீடை செய்தான், ஆயினும், புசமண்டபத்தே ஐயாறப்பரை வழிபட்டு வீதி வலம் வந்து ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்திருக்க மரணம் சம்பவித்தது. அது சமயம் ஐயாறப்பர் அருகில் வந்து அவன் வலது செவியில் பஞ்சாட்சரத்தை உபதேசிக்க ஈஸ்வரனோடு ஐக்கியம் ஆயினான்.

31. வேதப்பிரியர் மோட்சம் அடைந்தது: வேதப்பிரியர் துர்வாசர் வாக்கால் ஐயாற்றில் தவம் இருந்து இறைவனிடம் இனி எனக்கு எத்தனை ஜென்மம் எனக் கேட்க அவர் நூறு என்று சொல்ல நடுங்கிஇச்சென்மத்துடன் முடித்துத் தர வேண்டினார். இறைவன் தாரக உபதேசம் செய்ய அதனை ஜெபித்து அவர் முக்தியுலகை அடைந்தார். என்பன போன்ற பல செய்திகள் தருகின்றன.

## திருவையாற்றுப் புராணச் செய்யுள் நூலின் சுருக்கம்
## ஆசிரியர் ஸ்ரீ ஞானக்கூத்தர்.

1. பதிகச் சருக்கம்:

எல்லாம் வல்ல கயிலைப் பரமன் தானவர் துயர்நீக்கி, வானவரை வானோடு வாழச் செய்த காலை, வானவர் தருக்கு மிகுந்து இறுமாந்திருந்தனர். பரமனும் பரமேட்டியும் இயக்கர்

உருவில் சென்று சிறு துரும்பு ஒன்றை வைத்து தீக்கடவுளையும், காற்றுக் கடவுளையும் அதனை அழிக்க ஏவ, இருவரும் இயலாது ஓடி ஒளிந்தனர். பின்னர் இந்திரன் வந்து 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற உண்மையை உணர்ந்து, தேவர்களோடு அம்மை யப்பரைப் பணிந்து பேறு பெற்றனன் என்பதை இச்சருக்கம் கூறுகிறது.

**2. குறுமுனிச்சருக்கம்:**

சூரியவருணன் என்பவனுடைய வீரியம் விழுந்த கும்பத்தில் பிறந்தவரும், முத்தமிழையும் பன்னிரெண்டு நாட்டவரும் அறியச் சொன்னவரும், சிவபெருமானிடம் சிவதரு மோத்திர நூலையும், முருகனிடம் ஞான யோகத்தைக் கற்றவரும், பன்னிரெண்டு மாணாக்கர்களுக்கு ஐந்து இலக்கணங்களைப் போதித்தவருமான அகத்திய மாமுனிவர் திருவையாறு திருத்தலம் வந்தடைந்து சூரிய புட்கரணியில் நீராடி, செம்பொற்ஜோதி வாணரை வணங்கித், தோத்தரித்து பன்னீராயிரம் பஞ்சாட்சரம் ஜெபித்து அட்டாங்க யோகத்தில் பஞ்சாக்கினி மத்தியில் யோக நிட்டை கூடியிருந்தார்.

அவரது அரிய தவத்திற்கு இரங்கிய ஐயாறன், அம்மை அப்பராகக் காட்சி தந்து, "உனக்கு வேண்டிய வரம் கேள்" என அகத்தியர், "சுவாமி! அடியேன் தங்கள் திருவடிக்கீழ் அடங்கி நின்று தோத்திரம் செய்ய ஒரு சிறிய வடிவம் தந்தருள வேண்டும்" என அவரும் "இனி உன் பெயர் குறுமுனி என்று வழங்குவதாக " எனக் கட்டளையிட்டுக் குறுவடிவம் அருளினார்.

**3. கயிலாயச் சருக்கம்:**

ஐயாறன் அகத்தியனிடம் மேலும் என்ன வேண்டும் எனக் கேட்க 'இன்பக் கடலே! என் மனம் கயிலையைக் காண விழைகிறது' என்று கூறிப் பணிய " முனிவனே! நமது ஐம்பத மந்திரத்தை ஓதிக்கொண்டு சூரிய தீர்த்தத்தில் மூழ்கினால் பிரகாசமான வெள்ளி வெற்பையும் நம்மையும் காண்பாய், நித்திய சித்தன் ஆவாய்" என்று அருளினார். (திருநாவுக்கரசர் கயிலை அருகில் உள்ள குளத்தில் மூழ்கி ஐயாற்றை வந்தடைந்தார்) ஆனால் அகத்தியரோ ஐயாற்று சூரிய தீர்த்தத்தில் மூழ்கி கயிலை

சென்றார். என்னே விந்தை! அங்கு சிவ குமாரர்களோடு இறைவனைத் தரிசித்த அகத்தியர் இறைவன் கட்டளையால் தென்திசையைச் சமப்படுத்த மீளவும் இங்கு வந்தார். வந்தவர் திருக்குற்றாலத்தே திருமாலைக் குறுக்கி சிவலிங்க வடிவமாக்கி பொதியமலை பக்கத்தே ஓர் குருந்தமரத்தடியில் யோக நித்திரை கொண்டிருந்தார்.

4. காவிரிச் சருக்கம்:

அகத்தியர் பொதியமலையில் தவத்தொடு சிவ பூஜையும் செய்துகொண்டு பலநாட்கள் தங்கியபின், தலயாத்திரையாக திருவெண்காட்டை வந்தடைந்தார். அங்கு சுவேதாரண்யப் பெருமானை வழிபட்டு இருக்குங்கால் ஒருநாள் கடலரசன் வந்து அகத்தியரைப் பணிந்து, கவேர அரசன் பாவை காவேரி, பேரழகும் பெருங்குணமும் படைத்தவள். அவளுக்குப் பெண் வடிவமும் உண்டு. நதி வடிவமும் உண்டு. தீர்த்த வடிவில் அவளை எனக்கு அளித்தால் உயிர்கள் நன்மை பெற்று வாழும், யானும் இன்புற்று வாழ்வேன்," என்றான்.

அகத்தியரும் சரியென ஏற்று சையமலை அடைந்து, கவேரனைப் பார்த்து சமுத்திரராசன் தூய்மை அடைதற் பொருட்டு பொன்னியின் புனித நதி வடிவத்தை தாம் கொண்டு செல்வதாகக் கூறி தமது கமண்டலத்தே செறித்து ஐயாறு வந்து ஓர் இடத்தே தவம் இருந்தார். அச்சமயம் விநாயகர் காகமாக வந்து கமண்டலத்தைக் கவிழ்க்க நீர் சூரிய புஷ்கரணியில் அமிழ்ந்து சத கலையுடன் சப்த சாகரத்தை அடைந்தது. அகத்தியர் ஐயாற்றில் ஐயாறப்பரை பல்நாள் வழிபட்டுப் பின், திருச்சாய்காடு என்னும் தலத்தை அடைந்து கடலரசனை அழைத்து வந்து ஐயாற்றில் சத கலையுடன் கூடிய காவேரியை ஐயாறப்பர் முன் திருமணம் செய்து வைத்தார். (மேட்டுத் தெருவில் அக்கடலரசனாகிய சப்த சாகரத் தீர்த்தமுள்ளது.)

5. பஞ்சநதிச் சருக்கம்:

அனாதி நித்த முத்தச் சித்துருவான சிவபெருமான் மங்கள வடிவில் பஞ்சநதத் தலத்தில் மகாலிங்கமாக உள்ளார் புனிதத்தலம் ஜெப்பேச்சுவரம் திருவையாற்றுச் சம்புவின்

பெருமை செப்பரியது. பரமசிவத்தின் திருக்கரத்தால் படைக்கப் பட்டது திருவையாறு. மாபாதகன் ஐயாறா ஐயாறா! என்று அழைததால் அக்கணமே அவன் பாவம் அகல்கிறது. முத்தி தரும் தலங்களில் சிறந்த தலம். திருக்கேதாரத்திலும் உயரியது. காவிரியோ கங்கையினும் புனிதமானது. இத்தலத்தே பிறந்தார், வதிந்தார், இறந்தார யாவரும் புத்தியும், சித்தியும் பத்தியும் முத்தியும் அடைவர். கங்கை போன்ற புனித நதிகளில் பலநாள் ஆடினாலும் துலா(ஐப்பசி) மாதத்தே ஐயாற்றுக் காவிரித் துறையில் ஒருநாள் ஆடினாலே அப்பலனைப் பெறுவர். பஞ்சமா பாதகங்களையும் போக்கவல்லது. இவ்வாலயத்தே தாமரை நூலிட்டுப் பசுவின் நெய்யால் ஒரு விளக்கிட்டார். இறைவன் உலகத்து ஓர் ஊழி காலம் வாழ்வர். இத்தலத்தே முறையாக சிவபூஜை மகேஸ்வர பூஜை, வேள்வி, தேவர் கடன், பிதிர் கடன் செய்பவர் கிடைத்தற்கரிய பேரின்பம் பெறுவர் என்பது உறுதி.

**6. சிலாதமுனிச் சருக்கம்:**

முன்னொரு காலத்தில் இறையருளால் சிலாத முனிவர் பாவிகள். இருக்கும் எமலோகம் சென்றார். அங்கு காலன் இவ்ரை வணங்கித் தாங்கள் இரப்போர்க்கு இல்லையென்றபடியால் கல்லை உணவாகக் உண்டு, அனுபவத்தால் அப்பாவம் விலக வேண்டும் என்றான். மேலும் நரகில் அதோ கதியில் வருந்து வோரை நோக்கிக் கேட்க அவர்கள் "மூவேழ் தலைமுறையினரைப் பிண்டதர்ப்பணாதிகளால் கரையேற்றற்குரிய நன்மக்களைப் பெறாதவர்கள் அதலின் அவர்களின் கதி இது" என்றதும் நடுநடுங்கிப் போனார். அதனைப் பெறும் வழியறிந்த சிலாதர் திருவையாறு அடைந்து பஞ்சநதிவாணரை முறைப்படி வணங்கி கல்லையே தூளாக்கி உணவாக உண்டு கடுந்தவம் இருந்தார். கருணைக் கடலான ஐயாறப்பர் காட்சி நல்கி சகலகலைகளிலும் வல்ல சத்குமாரனைத் தந்தோம். அவன் 16 ஆண்டளவும் உன்னோடு இருப்பான். வேள்வி செய்யும் நிலத்தில் உழும் கொழுமுனையில் அவனைக் காணலாம் என வரமீந்தார். அவ்வாறே சிலாதர் தம் பத்தினியுடன் பூமியில் பொன்னேர் பூட்டி [illegible] ஓர் [illegible]

இருக்கக் கண்டு மகிழ்ந்தனர். செப்பேச்சுவரன் எனப் பெயர் சூட்டி சகல கலைகளிலும் வல்லவனாய் வளர்ந்து வர தமக்குப் 14 வயதானதும் தம் பெற்றோர் மனக் கவலை அறிந்து மகன் கடுந்தவம் புரிந்து இறைக்காட்சி கிடைக்கப் பெற்றான். அப்பொழுது இறைவனிடம் வரமாக," மறைகள் நிந்தனை சைவ நிந்தனை" ஆய 16 பேறுகளையும் பெற்று பெற்றோர் மகிழ இருந்தான்.

**7. நந்திகேசுவரச் சருக்கம்:**

சிலாத முனிவரின் திருக்குமாரராகிய செப்பேச்சுவரரின் கடுந்தவத்திற்கு இரங்கி சிவபெருமான் தாமே ஐந்து நதிகளால் அபிடேகித்து "திருநந்தித்தேவர்" என திட்சாநாமம் சூட்டி கயிலாயத்தே தமது சாருப்பிய பதவியும் சிவகணத் தலைமையும், முதற்குருவாம் தகுதியும் தந்தருளினார்.

நந்தியெம்பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் வேறு பாடு தெரியாத உமையம்மை தம் நாதருக்கு விண்ணப்பிக்க இதனை உணர்ந்த நந்திதேவர் மீள ஐயாற்றை அடைந்து ஐயாறப்பரை வழிபட்டு கவிமுகத்தைப் பெற்று மீண்டார். அக்காலை ஸ்ரீகண்டர்பால் 28 ஆகமங்களையும் கேட்டுணர்ந்து குருசந்தான பரம்பரையை நிலைநாட்டினார்.

**8. நியமேசச் சருக்கம்:**

திருவுறையூரில் கரிகாற்சோழன் மனுமுறை தவறாது சிவனேயம் மலிய ஆட்சி புரிந்து வருவானாயினன். திக் விஜயமாக வடநாடு புக்கு இமயத்தே தன் வெற்றிக்கொடி நாட்டி காசி, காஞ்சி முதலான தலங்களை வழிபட்டு மேற்திசை நோக்கி வருவானாயினன். வரும்வழியில் பஞ்சநதிக்கண் மகாதேவரைத் தொழவரலும் தேர் புதைந்து திகைத்தான். பல கம்மியர் முயன்றும் முடியவில்லை. அமைச்சர்கள் இஃது ஓர் சிவயோகியின் செயலாகும் என்றனர். சரியென பூமியை ஆழமாக அகழ்ந்து பார்க்க சிவலிங்கம், சக்தி, சிவகுமாரர், சப்தமாதர், சண்டேசர், சூரியன் உருவங்களுடன் ஓர் முனிவரையும் காணக் கண்டான். அப்பொழுது கரிகாற் பெருவளவர் அம்முனிவர் பாதத்தே வீழ்ந்து

பணிந்தான். முனிவரும் மனங்கனிந்து தண்டம் ஒன்று அளித்து மன்னா! திருநந்தி தேவர் போன்ற பலராலும் பூசிக்கப் பெற்ற இம்மகாலிங்கத்திற்குக் கோயில் கட்டி இந்நகரத்தையும் புணருத்தாரணம் செய்யக் கடவாய் என்று அருளினார். நியமேசராகிய அகப்பைச் சித்தர் எனும் மகாயோகியின் கட்டளைப்படி நந்தியின் குளம்படியில் பொன், வெல்லம், கருங்கல் ஆகியவற்றைக் கொண்டு நகரையும் ஆலயத்தையும் புதுக்கிக் கட்டினான் கரிகாற்சோழன். சைவ ஆகமப்படி சோழர் குலத்தார் பிரதிட்டை செய்து நித்திய நைமித்தக விசேட பூஜை உற்சவங்கள் இவைக்கு வேண்டிய நிவந்தங்களும் அளித்து கரிகாற்சோழன் இறையருட் காட்சி கண்டு ஆனந்தமுற்றான்.

**9. வாகீசச் சருக்கம்:**

திருநாவுக்கரசு நாயனார் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் குலத்தில் புகழனார் மாதினியாருக்கும் திலகவதியாருக்குப் பின்பிறந்தவர். பிள்ளைத் திருநாமம் மருள் நீக்கியார். சமணம் சார்ந்து தருமசேனராகி, சிவ பெருமானால் சூலை தவிர்ந்து திருநாவுக்கரசராய் சமணரின் இரக்கமற்ற இடர்ப் பாடுகளையெல்லாம் திருவருளால் வென்றார். இன்னிலையில் தலயாத்திரை மேற்கொண்டு ஐயாற்றுத் திங்களூரில் அப்பூதி அடிகளின் மகன் விடம் தீர்த்து, திருவீழி மிழலையில் படிக்காசுப் பெற்றுப் பஞ்சம் தவிர்த்து, மறைக்கதவம் திறந்து காளத்திமேவி காசிக்குச் சென்றார். அப்படியே கைலை காண அவாவி உடல் தேய்ந்து உள்ளந் தேயாமல் ஐயன் ஐயாற்றில் மாதர் பிறைக் கண்ணியனாய் கயிலைக் காட்சி நல்கிப் பூந்துருத்தியில் மடம் கண்டு புகலூர் மேவி புண்ணியனடி பொருந்தினார்.

**10. சம்பந்தச் சருக்கம்:**

சீர்மிகு சீர்காழிப் பதியில் சிவபாத இருதையர் தம் தவ மகனாய்த் தோன்றி அம்மையின் ஞானப்பால் அருந்தி ஞானசம்பந்தரானார். தமிழ் வேதமாக தோடுடைய செவியனைப் பாடி பலத்தலங்கள் வர கோலக்காவில் தாளமும் பிறதலங்களில் பொற்கிழியும் பெற்றார். அப்பருடன் பஞ்சமகற்றி மறைக்கதவும் திறந்தார். பாண்டியனைச் சைவராக்கி சமணரை அனல்வாதம்

புனல்வாதத்தால் வென்று, பூந்துருத்தி வந்து இடர் செய்த வைணவரைக் கலக்கி மாயனைச் சிவனாகப்பாடினார். ஐந்து வைணவரைச் சைவராக்கி சிவபூஜை செய்யும் உரிமை நல்கினார். ஐயாறு வந்து பல்கால் பாடி மயிலையில் பூம்பாவை எலும்பைப் பெண்ணாக்கி, பெருமணத்தே மணக்கோலத்தோடு அரனை எய்தினார்.

**11. வண்தொண்டர்ச் சருக்கம்:**

கைலையில் இருந்த ஆலால சுந்தரர் அரண் அருளால் திருமுனைப்பாடி நாட்டு திருநாவலூரில் ஆதிசைவர் குலத்தே சடையனார். இசைஞானி மகவாய் அவதாரம் செய்தார். திருவருட்டு-துறையில் ஆவணம் காட்டித் தடுத்தாட்கொண்டு திருவாரூரில் பரவையை மணந்து குண்டையூரில் நெல் பெற்று ஆரூரரால் பரவையார் புலவி நீக்கியிருந்தார். ஒற்றியூரில் சங்கிலியை மணந்து கண்ணிழந்து ஆரூரில் கண் பெற்றார். சேரமான் பெருமானாருடன் நட்புப்பூண்டு ஐயாறு வர, கண்டியூரில் "காவிரி கரைபுரண்டோடக் கண்டு ஐயாறனைக் காவிரிக் கோட்டத்தடிகளோ" எனப் பாடி காவிரி வழிவிட வணங்கி கொடுங்கோளூர் சென்று நண்பருடன் கயிலை மேவினார்.

**12. சைவச் சருக்கம்:**


திருஐயாற்றில் ஆதி சைவர்கள் 24பேரில் ஒருவர் காசிக்குச் சென்றார். மற்றய ஆதிசைவர் அவரது உரிமையைக் கவர மனைவியின் வேண்டுகோளுக்காக ஐயாறதனில் சைவனாக வந்து ஐயாறன் தன்னைத்தானே பூசித்தார் என்ற அருள் வரலாற்றுடன் புராணம் நிறைவு பெறுகிறது.

**நிறைவுரை:**

இதுகாறும் திருவையாற்றுத் தல புராணங்கள் மூர்த்தி, தல தீர்த்த விசேடத்தால் மக்களைக் கவர்ந்து தம்மாட்டு வரச் செய்து அவர்களைப் புனிதப் படுத்தி அனுப்பும் ஆற்றல் வாய்ந்தவை என்பது கண்டோம். இன்றும் தெய்வமணம் கமழும் திருவையாறாகவே திகழக் காண்கிறோம். மெய் சக்தி.

செப்பேட்டு ஆவணம் :

"திருவையாற்றுச் சீர்மை திருவையாறு புண்ணிய பூமியாய்
மண்ணெல்லாம் சிவலிங்கம், மனிதர் எல்லாம் தேவர்கள்
ஜலமெலாம் கங்கை"



• பொருளடக்கம்

## 6. கல்வெட்டில் நிலைத்த திருவையாறு

முன்னுரை : கல்வெட்டு--கல்வெட்டின் பயன்--திருவையாற்றுக் கல்வெட்டளித்த மாமன்னர்கள்--கொடைகள்--அணிகலன்கள் திருப்பரிகலன்கள்--நிலங்கள்--ஊழியப் பெயரும் பங்கும்--திருவையாறு திருக்கோயிலில் கி.பி. 1894ல் படியெடுத்த 44கல்வெட்டுக் களின் சுருக்கமும் அமைந்த இடமும்--கி.பி. 1918ல் படியெடுத்த 23 கல்வெட்டுக்களின் சுருக்கமும் அமைந்த இடமும் 1924ல் கிடைத்த ஒன்று--குடிமக்கள் தம் பிற்காலக் கல்வெட்டுக்கள் பச்சையப்ப முதலியார் கல்வெட்டு--கல்லணைக் கல்வெட்டு--செப்பேட்டுச் சாசனம்--நிறைவுரை

# 6. கல்வெட்டில் நிலைத்த திருவையாறு

*முன்னுரை:* *"கல்வெட்டு" என்பது கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களையும் அதன் செய்திகளையும் குறிக்கும். கல்லில் எழுத்தைப் பொறிப்பதைத் திருவையாறு கல்வெட்டுக்கள் 'சிலாலேகை செய்தல்' 'கல்லில் வெட்டுதல் என்று குறிக்கின்றன. தமிழகத்தில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை திருக்கோயில் சுவர்களில் பதிவு அலுவலகங்களைப் போல் நிரந்தரப் பதிவகமாகவுள்ளன.*

*திருவையாற்றைப் பொருத்தவரை எத்தனை கல்வெட்டுக்கள் உள்ளன என்பது முடிவாகத் தெரியவில்லை, சுமார் 150 கல்வெட்டுக்கள் இருக்கலாம். கி.பி. 1894 ல் இந்திய அரசால் 44 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டு அவற்றின் வாசகங்கள் தென்னிந்திய சாசனங்கள் தொகுதி 5 ல்* (South Indian Inscription Vol. V) *ல் 512 முதல் 555 முடியும் எண்களாக வெளிவந்துள்ளன.* (A.R.No: *213257/1894)*

*அடுத்து கி.பி. 1918 ல் 23 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டு அவற்றின் செய்தி, குறிப்புகள் அவ்வாண்டு அறிக்கையில் 135 முதல் 157 முடிய எண்களாக வெளிவந்துள்ளன. 1924 ல் ஒரு கல்வெட்டு படியெடுக்கப்பட்டு அதன் குறிப்பு அவ்வாண்டு 426 ஆக வெளிவந்துள்ளது.*

*திருவையாற்றில் காணப்படும் கல்வெட்டுக்களில் பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகரர், தஞ்சை நாயக்கர், மராட்டியர் ஆகிய குலத்தினர் குறிக்கப்படுகின்றனர். இக்கல்வெட்டுக்கள் சுமார் 9 ம் நூற்றாண்டு முதல் 14 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவையாகும்.*

* *திருவையாறு: சு. இராசகோபால் எம்.ஏ., தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு 1976 பக்கம் 75*

கல்வெட்டின் பயன்: தொன்மையுற்ற செய்திகளை அறிதற்குச் சாலச் சிறந்த கருவியாகும். கல்வெட்டுக்களில் கர்ண பரம்பரைச் செய்தி, புராணம், இலக்கியச் செய்திகள் இவை காணப்படும். ஒவ்வொரு கல்வெட்டும் அநேகமாக ஒரு மன்னனது வீரச் செயல்களைச் சிறப்பிக்கும். சோழரது மெய்க்கீர்த்தி அவர்களது அரிய செய்திகளை மட்டும் விளங்கு பாண்டியரது மெய்க்கீர்த்திஅன்னார் வீரச் செயலையும், முன்னோரது செயலையும் இணைத்துச் சொல்லும் பல்லவர் மெய்க்கீர்த்திதறு கணாண்மை ததும்பி நிற்கும்

ராஜராஜன் காலத்திற்கு முன் இருந்த கல்வெட்டுக்கள் மெய்க்கீர்த்தியின்றியே சாசனம் தொடங்கும். அதனை ஏற்படுத்தியவன் ராஜராஜன் ஆவான்.

கல்வெட்டுக்களினால் தமிழ்நாட்டு வெற்றி வேந்தர்களின் பெருமையும், அக்காலத்து நாகரிக மேம்பாடுகளும், நாட்டு வரலாறு, மன்னரது வெற்றி, ஆட்சிச் சிறப்பு, கோயில் மேற் பார்வை, கிராம ஆட்சி, திருப்பணிகள், அறவோர் வரலாறு என்பனவற்றைப் பற்றித் தெளிவாக அறியலாம். இச்செய்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டினால் பண்டைத் தமிழகத்தின் அரசியல், வரலாற்றுக் கலாச்சாரச் செய்திகள் போன்ற பல அரிய கருத்துக்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

## திருவையாற்றுக் கல்வெட்டளித்த மன்னர்கள்:

### தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன்: கி.பி. 825 850)

இவனுடைய கல்வெட்டு ஒன்று புதிதாகப் படிக்கப்பட்டுள்ளது. இவன் தெள்ளாறு என்ற இடத்தில் பாண்டிய மன்னனை வென்றதால் இப்பெயர் பெற்றான்.

### 2. கோபரகேசரி வர்மன்:

எப்படிப் பாண்டிய மன்னர்கள் தங்களைச் சடையவர்மன், மாறவர்மன் என்று மாறி மாறி அழைத்துக் கொண்டார்களோ அது போலச் சோழர்களும் தங்களைப் பரகேசரி என்றும் இராஜகேசரி என்று மாறி மாறி அழைத்துக்

கொண்டனர். திருவையாற்றில் கோபரகேசரி என்று துவங்கும் கல்வெட்டுக்கள் 4 உள்ளன. இவை 2,3,4,14 ஆட்சி ஆண்டுகளைச் சேர்ந்தவை.

### 3. கோராஜ கேசரிவர்மன்:

இங்கு, "கோராசகேசரிவர்மன்" எனத் துவங்குகிற கல்வெட்டுக்கள் 17 உள்ளன. அதன் எழுத்தமைதி கொண்டு கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்று சொல்லலாம். இந்நூற்றாண்டுகளில் ஆண்ட ராஜகேசரி பட்டமுடைய மன்னர்கள் ஆதித்தன், கண்டராதித்தன், சுந்தரசோழன் ஆகியோர் ஆவர்.

### 4. மதுரை கொண்ட பரகேசரி: (907 - 953)

முதலாம் பராந்தக சோழனே மதுரை கொண்ட பரகேசரி என அழைக்கப்படுபவன். மதுரை வரை சென்று பாண்டியன் இரண்டாம் இராச சிம்மனைத் தோற்கடித்து இலங்கைக்கு ஓடச் செய்தான். இவ்வெற்றியின் காரணமாக மதுரை கொண்ட பரகேசரி என்று அழைக்கப்பட்டான். இவனது ஆட்சி ஆண்டு 14 - 40 க்குள் உள்ள கல்வெட்டுக்கள் இங்கு திருவையாற்றில் 9 உள்ளன.

### 5. வீரபாண்டியன் தலை கொண்ட கோபரகேசரி: (கி.பி. 970-980)

இவன் முதலாம் இராஜராஜனின் அண்ணன். ஆதித்த கரிகாலன் என அழைக்கப்பட்டவன். இவன் பல இடங்களிலும் வீரபாண்டியன் தலை கொண்ட கோபரகேசரி என்றே அழைக்கப்படுகிறான். சிறந்த வெற்றி வீரன். பகைவர்களின் சூழ்ச்சியால் கொல்லப்பட்டான். திருவையாற்றிலுள்ள "வீரபாண்டியன் தலைகொண்ட கோபரகேசரி" என்று துவங்கும் கல்வெட்டில் ஆட்சியாண்டுப் பகுதி கிடைக்கவில்லை.

### 6. முதலாம் இராசராசன்:(கி.பி. 985 --1014)

இவனது கல்வெட்டுக்கள் "திருமகள் போலப் பெருநிலச் செல்வியும் தனக்கே யுரிமை பூண்டமை" என்ற மெய்க்கீர்த்தியுடன் துவங்குகின்றன. திருவையாற்றில் இச்சிறப்பு வாய்ந்த [illegible]

கல்வெட்டுக்கள் 21 வது ஆட்சி ஆண்டு முதல் 29வது ஆட்சி யாண்டு வரை காணப்படுகின்றன

தனது ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் பல போர்க்களங்களில் வெற்றிகளைக் குவிப்பதிலும், ஆட்சி முறையில் பல சிறப்புக்களைச் செய்வதிலுமாகக், கவனத்தைச் செலுத்திய இம்மன்னனின் பிற்காலக் கல்வெட்டுக்கள் கோயில்களை முடித்துச் சிறப்புச் செய்ததைக் குறிக்கின்றன.

இவனது பட்டத்தரசி ஒலோகமாதேவி தன் கணவன் தஞ்சை பெரிய கோயிலை எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் தானும் ஒரு கோயிலைத் திருவையாற்றில் எடுத்துள்ளாள். அதுவே இன்று "வடகயிலாயம்" எனப்படும் ஒலோகமாதேவீச்சுரமாகும்.

## 7. முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 1012--1044)

இவன் முதலாம் இராஜராஜனின் மைந்தன். இவனது கல்வெட்டுக்கள் 'திருமன்னிவளர" என்ற மெய்க்கீர்த்தியுடன் துவங்குகின்றன. ஐயாறப்பன் கோயிலில் இவனது கல்வெட்டுக் களை வடகயிலாயம், தென் கயிலாயம் ஆகிய கோயில்களில் காணலாம். இவனது அரசியார் பஞ்சவன் மாதேவியார் எடுப்பித்த திருக்கற்றளியே "தென்கயிலாய"மாகும்.

## 8. இராஜாதிராஜன் (கி.பி. 1018--1054)

முதலாம் இராஜேந்திரனின் மூத்த மைந்தன், அஸ்வமேதயாகம் செய்தவன்; மனுநெறி வழுவாது ஆண்டவன், இவனது கல்வெட்டு ஒன்று வடகயிலாயத்தில் காணப்படுகிறது. "திங்களேர் தருதன்றொங்கல் வெண்குடை" என்று துவங்கும் மெய்க்கீர்த்தியுடன் கூடிய 32 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இதில் சிவனின் வெற்றிகளும் சிறப்புகளும் உள்ளன. S.I.I. Vol. V 520

## 9. பரகேசரி இரண்டாம் இராஜேந்திரன் (கி.பி. 1050 63)

முதலாம் இராஜேந்திரனின் இரண்டாவது மைந்தன் இவன். முதலாம் மைந்தன் இராஜாதிராஜன் கொப்பத்தில்

சாளுக்கியருடன் இட்ட கடும் போரில் யானை மீது மரணம் எய்தவே சிதறி ஓடிய சோழர் படைகளை ஒன்று திரட்டி, வரவிருந்த தோல்வியை வெற்றியாக மாற்றிய பெருமை இவனுக்குண்டு. இவனது வெற்றிகளைக் கூறும் சிதைந்த மெய்க்கீர்த்தியுடன் ஒரு கல்வெட்டு தென்கயிலாயத்தில் உள்ளது. இது இவரது 3 வது ஆட்சியாண்டைச் சேர்ந்தது. "திருமாது புவியெனும் மெய்க்கீர்த்தி" S.I.I. Vol. V 512

10. விக்கிரமசோழன் (கி.பி. 1118 1135):

முதற்குலோத்துங்கனின் மனைவி மதுராந்தகி வயிற்றில் பிறந்தவன். இவன் திருவையாற்றில் உட்கிழைக் கோபுரத்தை எடுத்தான் என்பதை உணர்த்தும் வண்ணம் அக்கோபுரத்தில் "ஸ்வஸ்திஸ்ரீ" இத்திருக்கோபுரம் விக்ரம சோழனதே"--என்றொரு கல்வெட்டு உள்ளது. 'பூமாது புணர, புவிமாது வளர.... என்று தொடங்கும் மெய்கீர்த்தி தில்லையில் இவன் செய்த திருப்பணிகள் ஏராளம்.

11. மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178--1218)

"புயல் பெருக வளம் பெருக பொய்யாத நான்மறையின்" என்று துவங்கும் மெய்க்கீர்த்தியுடன் கல்வெட்டு ஒன்று இங்குள்ளது. இம் மெய்க்கீர்த்தி 3 ஆம் குலோத்துங்க சோழனுடையதாகும். இக்கல்வெட்டு இவனது 3 ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்ததாகும். இவன் சிறந்த வெற்றிவீரன், பாண்டியர்களை வென்று மதுரையிலும், சேரரை வென்று கருவூரிலும், முடிசூடிக் கொண்டு திரிபுவனதேவன் என்ற பெயர் பெற்றான். இப்பெயரின் நினைவாக கும்பகோணம் அருகில் "திரிபுவன வீரேச்வரம்" என்ற ஒப்பரும் கோயிலை எடுப்பித்தான். (A.R.E. 142/1918)

12. மூன்றாம் இராசராசன் (கி.பி. 1218 1256)

சோழர்களது வீழ்ச்சிக் காலத்தில் ஆட்சி புரிந்தவன் இவன் காடவர்கோன் கோப்பெருஞ்சிங்கனால் சிறைபிடிக்கப் பட்டு சேந்தமங்கலத்தில் சிறை வைக்கப்பட்டான். பிறகு போசள

(Hoysala) மன்னன் சோமேஸ்வரனால் சிறை மீட்கப்பட்டான். (A.R.E 145/1918) ஒரு கல்வெட்டு இவனது சீர்மன்னி என்று துவங்கும் மெய்க்கீர்த்தியுடன் உள்ளது. ஆட்சியாண்டு தெரியவில்லை.

13. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்: (கி.பி. 1251)

இவன் கி.பி. 1251 ல் முடிசூட்டப்பெற்று, பெரும் படையெடுப்புகள் நிகழ்த்தி பல இடங்களையும் அடிப்படுத்தினான். தளர்ச்சியுற்றிருந்த சோழப் பேரரசு வீழ்ச்சியடைந்து இவனது ஆளுகைக்குட்பட்டது. இவன் பிற்காலப் பாண்டியருள் சிறந்தவன். இவன் ஆட்சி குமரி முதல் நெல்லூர் வரை பரவியிருந்ததை இவனது கல்வெட்டுக்கள் அப்பகுதியில் பரவியிருந்தமை கொண்டு அறியலாம்.

திருவையாற்றில் ஒரு கல்வெட்டு, 'கோச்சடையன் பன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் சுந்தரபாண்டிய தேவர்' என்று இவனைக் குறிப்பிடுகிறது. இதில் இவனது 2 வது ஆட்சி ஆண்டு குறிப்பிடப்படுகிறது. (S.I.I. Vol V 553)

14. விஜயநகர மன்னர்கள்: (கி.பி. 1381 15558)

திருவையாற்றில் விஜய நகர மன்னர்களது மூன்று கல்வெட்டுக்களள் உள்ளன. இவை சக வருஷம் 1303, 13550, 1480, ஆகியவற்றைக் குறிக்கின்றன. இவை கி.பி.. 1381, 1428, 1558 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்தவவையாகும். முதல் கல்வெட்டு வீரஸ்ரவண உடையாருடையது, 2 வது வீரப்பிரதாப தேவராயர் 3 வது கல்வெட்டு சதாசிவ ராயரதாகும். கல்வெட்டுக்கள் 552, 554, 555

15. தஞ்சை நாயக்க மன்னர்கள் : (கி.பி. 1530 1673)

தஞ்சை நாயக்க மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சேவப்ப நாயக்கர் கி.பி. 1530 60 அச்சுதப்ப நாயக்கர் கி.பி. 1560 1614 ரகுநாத நாயக்கர் கி.பி. 1600 1634 விஜயராகவ நாயக்கர் கி.பி.1633 1673, ஆகியோராவர். திருவையாறு பூசப்படித்துறை மண்டபத்தில் உள்ள வடமொழிக் கல்வெட்டு அச்சுதராயர் காலத்தியது. A.R.E 426/1924

## 3. திருப்பரிகலன்கள்

சோழர் காலத்தில் திருக்கோயில்களின் நிலவிய திருப்பரிகலன்களின் (பாத்திரம்) பெயர்கள் பல கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. அவைகளின் பெயரே நமக்குப் புதுமையாக இருக்கின்றன. அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

பொன்னால் ஆகியவை

பொற்றளிகை, ஒட்டிவட்டில், மடல், மாறவட்டில், சாமரக்கை, ஈச்சொப்பிகை, பள்ளித்தொங்கல், மகுடம்

வெள்ளியால் ஆனவை

தளிகை, மண்டை, வெள்ளிக்கலசம், சட்டுவம், கைக் கோளம், ஆகியவை

செம்பால் ஆனவை

தளிகை, பலித்தாலம், மூக்கில்லாதகை, வட்டகை, செப்பு, காளம் இரண்டு, துத்துரு, கலசம், பாவைக் கண்ணாடி

தராவால் செய்யப்பட்டவை

கெண்டி, சங்கு, கால்கள், சட்டிக்கால்கள், அட்டனைக் கால்கள், ஆக்கு பானைக்கால்கள், தூப்பரத்திரம், திருச்சத்திரம், சருவம், சருவசட்டிகள், இலைத்தட்டுகள், சட்டுவம், காகமுகிழ், தூபமணி, சேகண்டிகை, கைமணி, ஏறிமணி முதலியவையாகும்.

## 4. நிலங்கள்

நிலக்கொடைகள், நொந்தா விளக்கிற்காகவும், இறைவன் திருவமுது படிக்காகவும், பிராமணர்களை உண்பிப்பதற்காகவும், பணியாளர்களுக்கு வழங்குவதற்காகவும், கோயில்களுக்குக் கொடுக்கப்பட்டன. பிராமணர்களை உண்பிப்பதற்காகக் கொடுத்த நிலக்கொடைகள் திருவையாற்றுக் கல்வெட்டுக்களால் காணப்படுகின்றன.

ஐயாற்று இறைவனுக்குப் பணி செய்த ஊழியர்கள்

ஓலோகமாதேவியார் கல்வெட்டில் ஊழியர்களும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பங்கும் தெளிவாகக் குறிக்கப்படுகின்றன. ஒரு பங்கு என்பது 1/2 வேலி 2 மா (12. மா) வாகும்.

5. ஊழியப் பெயர்களும் பங்கும் கையாண்ட இசைக்கருவிகளும்

*ஆர்யபோகம் (4) மாணிகள் 6 பேர் (1/2 X 6 = 3) திருக்கல் 1/2 பதியிலார் 32 பேர் (1½ X 32 = 48) நட்டுவர் 4 பங்கு, கர்னர் 2 பங்கு மெய்மட்டு 2, மோவியன் 2, வங்கியன் 2, வீணைக்காரன் 2, உடுக்கைவாசிப்பவன் 2, உவச்சு, தலைப்பறை, மத்தளம் 3 பேர், தாளம், , கறடிகை, கண்டை 6 பேர், திமலை, கைமணி 13½ பங்கு குசவன் 1/2 பங்கு வண்ணத்தான் 1/2, வள்ளாளன் 1/2, காச்சுவன் 1/2, கொல்லன் 1/2, மரத்தச்சன் 1/2, ஊர் பறையன் 1/4, திருவாராதனை செய்வார் 1 ½ பங்கு*

பின்வரும் ஊழியர்களுக்கு ஊதியம் நெல்லாகவே குறிக்கப்பட்டுள்ளது:

*நந்தவனக் குடிகள் 6 பேர், நிர்மாலிய, நீர் போகட்டுவான், திருப்பள்ளித்தாமம் 3 பேர், திருமெழுகிடுவார் 4 பேர், நாயகம் செய்வான், (மெய்க்காப்பாளர்) விறகிடுவான் 2 பேர், கவரிப்பிணா 16 பேர். அதாவது ஆசாரிய போகம், திருவிளக்குச் சீலையிடும் வண்ணான், இசைக்கருவி வாசிப்போர், நட்டவம் காந்தர்வர்கள் போன்றோர்.*

திருவையாறு கல்வெட்டுக்களின் சுருக்கம்

*கி.பி. 1894 ல் இந்திய அரசால் 44 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டது. அவற்றின் வாசகங்கள் தென்னிந்திய கல்வெட்டுக்கள் தொகுதி 5* (South Indian Inscription Vol V) *ல் 512 முதல் 555 முடியும் எண்களாக வெளிவந்துள்ளன. அவைகளின் குறிப்புகள்* (Topographical list: Inscriptions of Madras Presidency Vol II V. Rengacharya 1919 Tanjore District - Tanjore Taluk Page 1425

1. 512/1894 (தமிழ்) தென்கயிலாயம் கிழக்குச்சுவரிலுள்ள கல்வெட்டு:

முதலாம் இராஜேந்திரனின் இரண்டாவது மைந்தன்) கோ.பரகேசரிவர்மன் என்கிற இரண்டாம் இராஜேந்திரதேவன் (கி.பி. 1050 63) 9வது ஆட்சியாண்டு கல்வெட்டு தென்கயிலாயத்தே உள்ளது. தந்தி சக்தி விடங்கியார் 164 பொற்காசுகள் அளித்தமையும், இங்குள்ள நடராஜர் திருமேனியை ஆடவல்லான் என்றும், தேவியை இவர் நம்பிராட்டியார் என்றும் குறிக்கிறது.

2. 513/1894 ல் (கிரந்த எழுத்து) அதே சுவரில் உள்ள கல்வெட்டு:

இராஜாதிராஜா அன்னிய மகுடேஸ்ரேணி ரத்னேசு சாசனம் இராஜேந்திர சோழ பரமேஸ்வரன் (கி.பி. 1011 1043) பரகேசரிவர்மன் என்கிற இராஜேந்திர "சோழன் திருமகள் போல பெருநிலச் செல்வியும்"....

3. 514/1894 வடகயிலாயம் முன்மண்டபக் கிழக்குச் சுவர் வாயிற்படி வலப்புறமுள்ளவை:

இராஜராஜனின் பெண்மக்களில் ஒருத்தி குந்தவை. இவள் கீழ்சாளுக்கிய மன்னன் விமலாதித்தனுக்கு மணம் முடிக்கப் பட்டாள். அவ்விமலாதித்தன் தன் மாமியார் கட்டிய ஓலோக மாதேவிஸ்வரத்து மகாதேவர்க்குக் கொடைகள் கொடுத் துள்ளான். இதனை கோராஜகேசரிவர்மன் என்கிற முதல் ராஜராஜதேவர்க்கு யாண்டு 29 வது விஷ்ணுவர்த்தன மகா ராஜராகிய விமலாதித்த தேவர் வடகரை ராஜேந்திர சிங்க வளநாட்டு இப் பொய்கை நாட்டுத் தேவதானம் திருவையாற்று மஹாதேவர்க்கு குடுத்த வெள்ளிக் கவசம் எட்டு நிறை 1148 என்ற வரிகள் உணர்த்துகின்றன.

4. 515/„ வடகயிலாயம் வாயிற்படி இடப்புறச் சுவரிலுள்ளது:

கோ.பரகேசரிவர்மன் என்கிற முதலாம் இராஜேந்திர சோழ தேவருக்கு யாண்டு நாலாவது தந்திசக்தி விடங்கியாரான ஓலோகமாதேவியார் அருளிச் செய்ய சக்கடிசமுதையன் செம்பியன் மாதேவிப் பெருந்தட்டார் தட்டாரக்காணி அளிக்கப்பெற்றார்.

5. 516/,, வடகயிலாயம் அதன் இடப்புறச் சுவர் மேலிடம்:

கோ.ராஜகேசரிவர்மன் என்கிற முதலாம் இராஜராஜ தேவன் இருபத்தி இரண்டாம் ஆட்சியாண்டில் இக்கோயிலில் விளக்கு எரிக்க ஒருவர் சாவாமூவாப் பேராடுகள் அளித்தார். ஓலோகமாதேவிச்சுரம் (வடகயிலாயம் கோயிலில்) தங்கம், மணிகளை நிறுக்க உதவிய துலாக்கோலுக்கு 'ஓலோகவிடங்கன்' என்றும், அள்க்க உதவிய உழக்கிற்கு ஓலோவிடங்கள் நாழி என்றும் அறிகிறோம்.

6. 517/,, அதேசுவர்

கோ.ராஜகேசரிவர்மன் என்கிற முதலாம் இராஜராஜ தேவன் 21 ம் ஆட்சியாண்டு பெரும்புலியூர்குடி. மன்றாடி. அய்யாறன் வள்வன் என்பவன் இரண்டு விளக்கு எரிக்க 192 குடிநீங்காச் சாவாமூவாப் பேராடுகள் அளித்தான்.

7. 518/,, மேற்படி அதே சுவர் மேலிடம்

முதலாம் இராஜராஜதேவன் 21 ஆம் ஆட்சியாண்டு

ஓலோகமாதேவி ஐயாறப்பன் கோவிலுக்குச் சொந்தமான நிலம் ஒன்றை விலைக்கு வாங்கி ஓலோகமாதேவிஸ்வரத்துக் கொடுத்துள்ளாள். நிலம் வாங்கிய விதம், விற்ற விபரம் தெளிவாக உள்ளது. கோயிலுக்குக் கோயில் விற்பனை நிகழ்வதால் சண்டேஸ்வரிடையே விற்பனை நிகழ்கிறது. "திருவையாற்று இருந்தருளிய திரிபுவன சண்டே தேவகன்மிகளோம் விற்றுக் கொடுத்து நில விலையாவனம்". "ஐயாறப்பர் திருக்கோயில் தேவகன்மிகள், ஓலோகமாதேவிஸ்வர மகாதேவ கன்மிகளுக்கு 3 வேலி நிலத்தை வேலி ஒன்று 100 கழஞ்சு பொன் வீதம் விற்றனர்.

8. 519/1894 ல் வடகயிலாயம் மேல்புறச் சுவர் மீது உள்ளவை:

கோப்பரகேசரி வர்மரான முதலாம் இராஜேந்திர சோழ தேவர்க்கு ஆட்சியாண்டு 3 ஒது ஓலோகமாதேவிஸ்வரஜை வழிபட 100 க்கு மேற்பட்ட பொற்பூக்களையும் ஓலோகமாதேவி கொடுத்துள்ளார்.

9. 520/„ வடகயிலாயம் வடக்குச் சுவர் மீது உள்ளவை:

முதலாம் இராஜேந்திரனின் மகள் அம்மங்காதேவியை மணந்த சாளுக்கிய மன்னன் பிள்ளையார் விஷ்ணுவர்த்தன தேவர் எனும் முதற் குலோத்துங்கனால் 150 செங்கழுநீர் பூக்கள் பொன்னால் செய்து ஓலோக மாதேவீச்சுர உடையாருக்குத் தரப்பெற்றன. முதலாம் இராஜேந்திரனின் மூத்தமைந்தன் கோ.ராஜகேசரிவர்மனாகிய இராஜாதிராஜதேவன் (கி.பி. 1018 54) இவனது கல்வெட்டு வடகயிலாயத்தே "திங்களேர்தரு" எனும் மெய்க்கீர்த்தியுடன் 32 வது ஆட்சியாண்டு கல்வெட்டு உள்ளது. இதில் இவனது வெற்றியும் சிறப்பும் பெண் அதிகாரிகளும் விஷ்ணுவர்த்தன தேவரும் குறிப்பிடப்படுகிறார். மேலும் ஆடவல்லான் சண்டேஸ்வரர் குறிக்கப்படுகின்றனர். பொற்கொள்கைத் தேவர் சூல தேவர் உருவம் பொன்னாலானவை குறிக்கப்படுகிறது.

10. 521/„ வடகயிலாம் மேற்கு தெற்கு சுவர்களில் உள்ளவை

கோ.ராஜகேசரிவர்மனாகிய முதலாம் ராஜராஜதேவர் 24 வது ஆட்சியாண்டு "நம்பிராட்டியார் தந்திசத்தி விடங்கியரான் ஸ்ரீஓலோகமாதேவியார் வடகரை இராஜேந்திர ஸிம்ஹ வள நாட்டுப் பொய்கை நாட்டு திருவையாற்றுப் பால் நாம் எடுப்பித்(த) திருக்கற்றளி ஓலோகமாதேவி ஸ்வரமுடையார்" என்றும் (கி.பி. 985--1014) இக்கோயிலில் செய்து வைத்த உற்சவமூர்த்தி 'ஓலோகவிடங்கத் தேவர்' என்றும் இதன் தேவி ஓலோகவிடங்கத் தேவர் நம்பிராட்டியார்' என்றும் இவர்கள் இடையில் உள்ள கந்தன், 'பிள்ளையார் சுப்பிரமணிய தேவர்' என்றும் அழைக்கப்படுகிறார். மற்றும் தங்க நகைகளும் பாத்திரங்களும்

11. 522/„ பஞ்சநதீஸ்வரர் கோயில் தென்புறச் சுவர் மீதுள்ள கல்வெட்டு

"மதுரை கொண்ட கோப்பரகேசரி" எனத் தொடங்கும் கல்வெட்டு முதற் பராந்தகசோழனே மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன் என அழைக்கப்படுபவன் (கி.பி. 905 947) மதுரை வரை சென்று இரண்டாம் இராஜசிம்மனைத் தோற்கடித்து இலங்கைக்கு [illegible]ச் செய்தான் இவ்வெற்றியின் காரணமாக மதுரை

கொண்ட பரகேசரி எனப் பட்டம் பெற்றான். திருவையாற்றில் இப்பட்டம் தொடங்கும் கல்வெட்டு சுமார் 9 உள்ளன. ஒருவிளக்கு அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது.

12. 523/ பஞ்சநதீஸ்வரர் கோயில் மேற்குப் புறச் சுவர் மீதுள்ள கல்வெட்டு

கி.பி. 9 , 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு கோ.ராஜகேசரியின் 10 வது ஆண்டு கல்வெட்டு இறைவனுக்கு திருஅமிர்துக்கும், ஒரு பிராமணனை என்றென்றும் உண்பிப்பதற்காகவும் 6 மாக்காணி நீர், நிலம் கொடுக்கப்பட்டதையும் திருவையாற்று விஷ்ணு பண்டாரகருக்கு நொந்தா விளக்குக் கொடுத்ததையும் குறிக்கிறது.

13. 524/,, அதே இடம் மேற்குப் புறச் சுவர்

மதுரை கொண்ட கோப்பரகேசரி (கி.பி. 905--947) 22 ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் பராந்தகனின் அரசியற் பெயர்களையும், சுற்றத்தார் கொடைகளையும் அறிகிறோம். 'நம்பிராட்டியார் சோழமாதேவியார் தங்களாச்சி பெருமாள் திருவரங்கி விளக்கு ஒன்று அளித்துள்ளதைக் குறிக்கிறது.

14. 525/,, மேற்படி அதே இடம் அதே சுவர்

மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மன் (கி.பி.905--947 கடைசியாண்டு) எனத் தொடங்கும் கல்வெட்டு நொந்தா விளக்கு தராநிலை விளக்கு 95 பலம் எடையில் பராந்தகன் மாமியார் நங்குரி, நங்கையார் மகளார் சோழப் பெருமான் அடிகள் தேவியார் சோழ சிகாமணியார் குடுத்தது குறிக்கப்பட்டுள்ளது.

15. 526/,, மேற்படி வடக்கு சுவர்

மதுரை கொண்ட கோப்பரகேசரி எனத் தொடங்கும் கல்வெட்டு இதில் 16 வது ஆட்சியாண்டில் திருவையாறு மகாதேவர்க்கு நொந்தா விளக்கிற்கு சாவாமூவாப் பேராடு 96 குடுத்தது தெரிகிறது.

16. 527/ „ அதே இடம் அதே சுவர்

*கோராஜகேசரிவர்மனின் கடைசியாண்டு.. பஞ்சராத்தி திருவிளக்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இது கூடு போன்ற அமைப்பையுடையது. விளக்கெரிய நெய் அட்டுவதற்கு மயக்கி கொடுத்த நிலம் கீழ்பார்க்கு எல்லை........*

17. 528/ அதே இடம் அதே சுவர்

*சரிவர்மனுக்கு யாண்டு 9 வது குமரகாணிச்சி குமர நாரணி திருவையாற்று மகாதேவர்க்கு திருவிளக்கிற்கு குடுத்த பொன் 10*

18. 529/1894 ல் அதே இடம் அதே சுவர்

*கோ.ராஜகேசரிவர்மருக்கு யாண்டு 9 வது முதலாம் இராஜராஜனின் அண்ணன் ஆதித்த கரிகாலன். இவன் பல இடங்களில் வீரபாண்டியத் தலை கொண்ட கோப்பரகேசரி என்றே அழைக்கப்படுகிறான். இங்குள்ள கல்வெட்டும் இவ்வாறே துவங்குகிறது.*

19. 530/1894 ல் பஞ்சநதீஸ்வரர்கோயில் மண்டபம் சுற்றியுள்ள சுவரில் உள்ள கல் ஒன்றில்

*கோப்பரகேசரியின் 4 வது ஆண்டு கல்வெட்டு தஞ்சை மாடிகை வாணிகன் ஒருவன் இருபிராமணர்களை உண்பிப்பதற்காக நிலம் குடுத்ததைக் குறிக்கிறது.*

20. 531/1894 ல் அதே இடம் மற்றொரு கல்லில்

*மதுரை ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மனுக்கு யாண்டு 40 (கி.பி. 905--47) திருவையாற்றுப் பிரானார் அந்நிமதன் சாமிகள் சிஷ்யவர் பரசிஷ்ய வசிஷ்டவர்க்கத்து திரு ஆராதனை*

21. 532/ 1894 ல் அதே இடம் அதே கல்லில் முடிவுறாத கல்வெட்டு

*மதுரரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மனுக்கு கி.பி. 905--47) யாண்டு 39--மகாதேவ பண்டாரர்க்கு சந்தாதித்தவள் உழக்கு நெய்யால் நந்த விளக்கு எரிக்க இப்புலியூர் ஆத்ரேயுன் விநாசகன்*

22. 533/,, பஞ்சநதீஸ்வரர் கோயில் மண்டப முன்தென்புறச் சுவரின் மேல் உள்ள கல்வெட்டு:

*கோப்பரகேசரி எனத்துவங்கும் கல்வெட்டு 'புன்செய்திடல் கல்வி அகழி திருத்தி மயக்கி கொடுத்த நிலத்திற் கெல்லை' கோப்பரகேசரி 3 வது ஆட்சி ஆண்டு சத்திரம் புறத்தார் வாய்க்கால், அசக்கியான் வேலிக்கு கிழக்கோடிய வாய்க்கால், குறிக்கப்படடுகின்றன. இதில் மூன்று விளக்கெரிக்க நிலம் கொடுத்ததைக் குறிக்கிறது.*

23. 534/,, அதே இடம் அதே சுவர்

*கோ. ராஜகேசரிவர்மனுக்கு யாண்டு 17 வது திருவையாறு மகாதேவர்க்கு நந்தாவிளக்கு இரண்டிற்கு திருவையாற்று தேவதானம் அந்தனூர் ஊராரிடை..... அட்டுவதான நெந்நாழி நிலமளித்ததைக் குறிக்கிறது. (அந்தனூர் என்பது இன்று அந்தணர்குறிச்சி என வழங்குகிறது.*

24. 535/ ,, அதே இடம் அதேசுவரில் உள்ள க்ல்வெட்டு

*கோ.ராஜகேசரியின் 21 வது ஆண்டு கல்வெட்டில் இடைப்பனங்காட்டு வாய்க்கால் மதனின் கிழ் வாய்க்கால் ஆகியவை குறிக்கப்படுகின்றன. ஒரு விளக்கெரிக்க நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.*

25/536 ,, அதே இடம் அதே சுவர்

*கோ.ராஜகேசரிவர்மருக்கு யாண்டு 26 திருவையாறு மகாதேவர்க்கு தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் காளையன் கோயிலில் தராநிலை விளக்கு 300 பலம் எடையில் ஒன்று செய்து கொடுக்கப்பட்டது. பன்மாகேஸ்வரர் ரட்சை சந்ராதித்தவள் ஒரு நந்தாவிளக்கு நிசதி உழக்கு நெய் எரிவதற்கு கொடுத்த சாவாமூவாப் பேராடு 100*

26. 537/,, அதே இடம் அதே சுவர்

*கோ.ராஜகேசரியின் 19 வது ஆண்டு கல்வெட்டு அந்தனூர் பாய்ந்த, தியாகமுக வாய்க்கால் நின்றுபோன வாய்க்கால்கள் குறிக்கப்படுகின்றன, குலோத்துங்கசோழன் 16 ஆம் ஆட்சியாண்டு*

கல்வெட்டு சுட்சிப்பட்டு குதிரைச்சேரி அம்மாக்கன்னனார் மகளார் சோழப்பெருமான் அடிகள் தேவியார் அழிசிக் காட்டடிகள் அய்யாறப்பனுக்கு நொந்தா விளக்கிற்காக 33 கழஞ்சு பொன்னுக்கு நிலத்தை விலைக்குப் பெற்று நன்கொடை கொடுத்துள்ளார்.

27. 538/ ,, அதே இடம் அதே சுவர்

கோ. ராஜகேசரிவர்மர் யாண்டு 19 திருவையாறு மகாதேவர்க்கு சந்ராதித்தவள் நந்தாவிளக்கு நிசதி நெய் எரிவதற்கு சோழப் பெருமான் அடிகள் தேவ--நாட்டு அழுந்தூர் திருநாரண மகாதேவி கொடுத்த சாவா மூவாப் பேராடு 180 ஐயாறப்பர் கோயிலில் இருந்த ஜேஸ்டையார் குறிக்கப்படுகிறார்.

28. 539/,, அதே இடம் அதே சுவர்

வீரபாண்டியன் தலைக்கொண்ட கோப்பரகேசரிவர்மர் திருவையாறு மகாதேவ பண்டாரகர்க்கு ச்சந்தராதித்தவள் நிசதம் உழக்கு நெய்யால் இரவும் பகலும் எரிப்பதாக தராநிலை விளக்கு 800 பலம் எடையில் செய்து கொடுக்கப்பட்டது.

29. 540/1894 அதே சுவரில்

மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மர்க்கு (கி.பி. 90547) யாண்டு 31 இருமுடிச்சோழ பல்லவராயனான நம்மன் ஐயாறடிகள் திருவையாறுடையார் மருவூர் பாற் கொம்பல்ஏரி கல்லி களை[illegible] காடுவெட்டி வயக்கின நிலம் 'ரு' வேலி திருநியமதனஸ்வாமிகள் சிஷ்ய ப்ர சிஷ்யவர்க்கத்தார் வசம் சிவயோகிகள் சந்திராதித்தவள் உண்பதாக

30. 541/1894 அதே சுவரில்

மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மருக்கு 14 யாண்டு திருவையாறுடைய மகாதேவருக்கு நம்பிராட்டியார் திருபுவனம் மாதேவியார் சந்திராதித்தவள் நிசதி உழக்கு நெய்யால் ஒரு நொந்தா விளக்கு இரவும் பகலும் எரிய வைத்த பொன் 30 கழஞ்சு

31. 542/ „ அதே சுவரில்

கோராஜகேசரிவர்மருக்கு யாண்டு 25 அழிசெக்காட்டு இலுப்பையூர் சாலையன் மருதக்கன் திருவையாற்று மகாதேவர்க்கு ஒரு நொந்தா விளக்கு எரிக்க கழஞ்சு 30 சிவபுரி நகரத்தோம் திருவையாறனால் நிசதி ஆழாக்கு நெய் கொண்டு அட்டுவோம் --விளக்கு நரா I

32 543/ „ அதே சுவரில்

கோ.ராஜகேசரியின் 17 வது ஆட்சியாண்டு கல்வெட்டு சோழப் பெருமான் அடிகள் போகியார் (சோழ மன்னனின் அரசு நாயகி) நாட்டிய நங்கை மார்த்தாண்டபுரத்து நக்கன் அய்யாறடிகள் அய்யாறப்பனுக்கு நந்தா விளக்கிற்காக 30 கழஞ்சு பொன் குடுத்ததைக் குறிக்கிறது.

33. 544/ „ அதே சுவரில்

கோ.ராஜகேசரியின் கல்வெட்டில் இரையான் வாய்க்கால் I குறிக்கப்படுகிறது. மணலூர்ந்து (மணலூரில்) திருவையாற்று மகாதேவர்க்கு குடுத்த நிலம் 10 மா இப்பொன் 30 ன் கழஞ்சுக்கு இறையிலி விற்றுக் குடுத்த நிலம் 7 மாவும் எப்பேறுபட்ட இறையும் எச்சோறும் வெட்டி வேதினையும் செந்நீர் வெட்டியும் தேவ வெட்டியும் காத்துக்குடுப்போமானோம்'

34. 545/ „ அதே சுவரில்

கோப்பரகேசரி ஆண்டு 2 திருவையாறு மகாதேவர்க்கு திறைமூர் (பெரமூர்) குமரமார்த்தாண்டபுரத்து சாத்தன்கவிரி ஒரு நொந்தா விளக்கு சந்திராதித்தவள் எரிவதற்கு குடுத்த சாவாமூவாப் பேராடு 120

35. 546/ „ அதே சுவரில்

கோராஜகேசரிவர்மருக்கு யாண்டு 25 திருவையாற்று மகாதேவர்க்கு திருவாரூர் வியாபாரி காடன் கா ஒரு நொந்தா விளக்கெரிக்க உழக்கு நெய் 30 கழஞ்சு பொன் கொடுத்ததைக் குறிக்கிறது.

அடுத்து கி.பி. 1918 ல் 23 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டு அவற்றின் செய்தி குறிப்புகள் அவ்வாண்டு அறிக்கையில் 135 முதல் 157 முடிய எண்களாக வெளி வந்துள்ளன. (Annual Report on Epigraphy 1918 and No 1172, Home (Educatin) 5th September 1918, Page 102, 103. அவற்றின் குறிப்புகள்:

45 கல்வெட்டு எண் 135/1918

*திருவையாறு பஞ்சநதீசுவரர் திருக்கோயில் நடுப்புறத் தெற்மதிலில் ராஜகேசரிவர்மன் என்கிற இராஜராஜதேவர் ஆட்சி 5 ஆம் ஆண்டில் 25 கழஞ்சு பொன் திருவையாறு பரம மகாதேவனுக்கு விளக்கெரிக்கக் கொடுத்து முன்பணமாக (வியாபாரிகள்) சிவபுரி வணிகர்களிடம் (நகரத்தார்) இப்பொன் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டது.*

46 எண் 136/1918 அதே சுவர்.

*சோழர் மதுரை கொண்ட பரகேசரிவர்மன் (என்கிற முதற் பராந்தகன்) ஆட்சி 20 ஆம் ஆண்டு விளக்கெரிக்கவும், சுவரின் முடிவிலும் அடியிலும் கட்டுவதற்காகவும் பொன் வழங்கப் பட்டது.*

47 137/1918 அதே சுவர்

*சோழர் அதே அரசர் தம் 16 ஆம் ஆட்சி யாண்டில் திருவையாறு மகாதேவர்க்கு விளக்கெரிக்க 96 வெள்ளாடு களையும் வாணகப்பாடி பெண்ணையாற்றங் வடகரையிலுள்ள இருங்கண்ட புரத்தைச் சேர்ந்த நக்கன் நம்பன் என்பவனால் வழங்கப்பட்டது.*

48 138/1918 திருவையாறு பஞ்சநதீசுவரர் திருக்கோயில் மேற்குச் சுவர்

*அதே அரசர்தம் 20 ஆம் ஆட்சியாண்டு திருவையாறு மகாதேவர்க்கு சுவற்றின் முடிவைக் கட்டுவதற்கு நிலம் வழங்குதல் குறித்துப் பதிவு செய்யப்படுகிறது.*

49 139/ 1918 அதே திருக்கோயிலின் வடக்குச் சுவர்

அதே அரசர்தம் 18 ஆம் ஆட்சியாண்டு சிதலமானது. விளக்கெரிக்கப் பொன்னளிக்கப்பட்டது. இது மலைநாட்டு சோகாலியாலில் குறிக்கப்பட்டுள்ளது.

50 140/1918 அதே கோயில் இரண்டாம் பிரகாரம் வராண்டாவில் தென்புறம் அடிப்பாகத்தே

(திருபுவனசக்)ரவர்த்தி கோனேரின்மை கொண்டான் கடைசியாண்டு கோயிலின் மத்தியில் கட்டப்படவேண்டியது பொய்கை நாடுடை ராஜராஜ வளநாட்டுடையாரால் திருவை யாறுடையார்க்கு நாட்டியமாடி சேவை செய்யும் பெண்கள் அனுபவிக்க நிலம் அளிக்கப்பட்டது. இதில் பதிவாகியுள்ளது.

51 141/1918 அதே சுவர் அடிப்புறம்

அதே மன்னர் அதே ஆட்சியாண்டு சிதலமானது. 140 ல் கண்டதன்படி வரவு செலவு செய்ய பதிவு செய்யப்பட்டுள்ளது.

52 142/1918 ஐயாறப்பர் கோயில் திருச்சுற்று மாளிகை மேல் அதிட்டானப்பகுதி - அதே பிரகாரத்தின் மேல்புறச்சுவர் அடிப்பாகம் (அம்மன் கோயில் பற்றிய செய்தி)

பரகேசரி வர்மன் என்கிற திரிபுவனச்சக்கரவர்த்தி 3 ஆம் குலோத்துங்க சோழ தேவர்க்கு மூன்றாமாண்டு "டிய பெருக...... மெய்கீர்த்தி) (கோனேரின்மை கொண்டான்) சிதலமானது. மர ஆசாரிகள் சிதலமான இடங்களைச் சரிசெய்ய உரிமை கடமை பெற்றவர்கள். 1. திருவையாறுடையார் 2. ஆளுடைய நாச்சியார் 3 உலகமாதேவி ஈஸ்வரமுடையார், மற்றும் 4. திரிபுவன மாதேவி ஈஸ்வரமுடையார் . 5. திருக்காமகோட்ட முடைய உலகுடை நாச்சியார் ஆகிய ஐந்து தெய்வங்களைக் குறிக்கின்றன. அம்மன் கோயிலின் பின்புறம் இடிந்து இன்று இல்லாத கோயிலில் உறைந்த தெய்வங்களைக் குறிப்பனவாக இருக்கலாம். உலகமாதேவீஸ்வரம் (வடகயிலாயம்) பக்கலில் திரிபுவனமாதேவிஸ்வரம் என்ற கோயில் ஒன்று இருந்துள்ளது. இடிபாடுகளினால் தெரிய வருகிறது.

53 143/1918 சொக்கட்டான் மண்டபத்தின் (நடராஜா எதிர்சிற்ப மண்டபம்) கிழக்குச் சுவற்றில் காணப்படுகிறது.

*மதுரை கொண்ட பரகேசரிவர்மன் 39 ஆம் ஆட்சியாண்டு விளக்கெரிக்க நிவந்தங்கள் அளிக்கப்பட்டது பதிவாகியுள்ளது.*

54 144/1918 அதே இடத்தில் மற்றொரு கல்வெட்டு

*மதுரை (கொண்டபர) கேசரி வர்மன் என்கிற முதற் பராந்தக சோழன் 40 ஆம் ஆட்சியாண்டு (சிதலமானது) இவனது தேவி லாடராயருடைய பெண்ணான அரசி அறிஞ்சிகையால் ஒரு பிராமணன் நாளும் சுவையுடன் கூடிய உண்வுண்ண நிலம் அளிக்கப் பதிவு செய்திருப்பது காணப்படுகிறது.*

55 145/1918 அதே கோயில் மூன்றாம் பிரகார வடக்குச் சுவர்

*இரர்ஜகேசரி வர்மன் என்கிற இராஜராஜ தேவர் (கி.பி. 1218--1256) இறுதியாண்டு "சீர்மன்னி" எனத் துவங்கும் மெய்க்கீர்த்தியுடன் கூடியது. திருப்பள்ளியெழுச்சிக்காக நிவந்தம் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது*

56 146/1918 அதே சுவர் ,

*திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் எனும் 3ஆம் குலோத்துங்கனின் பதினோறாம் ஆட்சி யாண்டு 45 ம் நாள் விக்கிரமசோழ வளநாட்டு ஞான சமுத்திரச் சதுர்வேதி மங்கலம் பிராமணர்களுக்கும் அவர்களது பல்வேறு பணிகளுக்கும் கோயில் சிப்பந்திகளுக்கும் இக்கிராமத்தைத் தானமாக அளிக்கப்பட்டது.*

57 147/1918 அதே கோயில் மேலக் கோபுரத்தின் ஓர் கல்வெட்டு

*சோழர் ராஜகேசரி வர்மன் என்கிற இராஜராஜனின் 3 ஆம் ஆட்சியாண்டு மும்முடிச் சோழன் மனைவி பஞ்சவன் மாதேவியாரால திருவையாறுடையார்க்கு ஒரு 'வெண்சாமரம் கொடுத்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது.*

58 148/1918 அதே கோயில் தென்கயிலாயத்தில் கிழக்குப் பக்கம்

சோழ மன்னர் பரகேசரி வர்மர் என்கிற ராஜேந்திர சோழ தேவர் (நாள் சிதலமாகியுள்ளது) பலவகை ஆபரணங்கள் திருக் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட விபரம் பதிவாகியுள்ளது.

59 149/1918 அதே இடம்

தமிழ்ப்பாடல் தென்கயிலாயமுடைய இறைவர் தென் கயிலாயமுடையார் என்றே அழைக்கப்படுகிறது. ஐயாற்றிலுள்ள பஞ்சநதி வாணர் அஞ்சலை உமையார் ஆகிய தெய்வங்களை வீவாசலைச் சேர்ந்த வாணவன் மாறாயன் மீட்டதாகக் குறிக்கப் படுகிறது. (அக்காலத்தும் சிலைத் திருட்டு இருந்தது போலும்)

60. 150/1918 அதே ஆலயம் மேற்குச் சுவர்.

இராசகேசரி வர்மன் என்கிற திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவர் தம் ஆறாம் ஆட்சியாண்டு திருவையாறு தென்கயிலாயமுடையார் திரிபுவனமுடைய வளநாட்டு பொய்கை நாட்டுத் திருவையாறு சேர்ந்த வடசாத்தமங்கலத்திலுள்ள அம்மங்கை நாச்சியார் என்கிற புவனமுழுதுடையாள் விளக்கெரிக்க 20 காசுகள் கொடுக்கப்பட்டுள்ளது.

61. 151/1918 அதே சுவர்

சோழன் பரகேசரிவர்மன் என்கிற திரிபுவனச் சக்கர வர்த்திகள் இராஜராஜ சோழ தேவர்தம் ஆறாம் ஆட்சியாண்டு அதே கோயிலுக்கு விளக்கெரிக்க 20 காசுகள் அளிக்கப் பட்டுள்ளது.

62. 152/1918 அதே கோயில் உத்தரகயிலாயத் தென் பிரகாரம்

சோழர் பரகேசரிவர்மர் என்கிற இராஜேந்திரசோழ தேவர் 3 ஆம் ஆட்சியாண்டு இராஜேந்திர சோழ தேவர் மனைவி உலகமாதேவியாரால் உலகமாதேவீஸ்வரமுடையார்க்கு இரா ஜேந்திர சிங்கவளநாட்டு தந்தி சக்தி விடங்கியார் விளக்கெரிக்க 7 வெண்கல விளக்கு கொடுக்கப்பட்டது குறிக்கப்பட்டுள்ளது.

63. 153/1918 அதே இடம்

*பரகேசரிவர்மன் என்கிற உடையார் இராஜேந்திர சோழதேவர் 22 ஆம் ஆட்சியாண்டு அதே குறிப்பு.*

64. 154/1918 அதே இடம்

*பரகேசரிவர்மர் என்கிற உடையார் இராஜேந்திர சோழ தேவர் 21 ஆம் ஆட்சியாண்டு (உலகமாதேவியாரால்) தங்க ஆபரணங்களும், நகைகளும் உலகமாதேவீஸ்வரமுடையார்க்கு வழங்கப்பட்டது.*

65. 155/1918 அதே இடம்

*முதலாம் இராஜராஜனின் வரலாற்று அறிமுகத்தில் ஒருபகுதி அடங்கியுள்ளது. இராஜேந்திர தேவரின் 25 ஆம் ஆட்சியாண்டில் பலவிதமான ஆபரணங்களில் அதில் ஒரு பகுதி இவனுமம் கொடுக்கப்பட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது.*

66. 156/1918 அதே கோயில் வட்க்கு, மேற்கு தென்புறச் சுவரில்

*சோழர் இராஜகேசரிவர்மன் என்கிற இராஜராஜதேவர் (இராஜராஜன் I) 24 ஆம் ஆட்சியாண்டு உலகமாதேவிஸ்வர முடையார் ராஜராஜ தேவர் மனைவி தந்தி சக்தி வடங்கியாரான உலகமாதேவியாரால் இராஜசிம்ம வளநாட்டிலுள்ள பொய்கை நாட்டில் தேவதானமாக கற்கோயில் கட்டுவதற்காக நிலம் நிவந்தமாக அளிக்கப்பட்டது. ஒலோகமாதேவியார் தன் கணவரது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட 12 தின விழாக்களுக்கான நிவந்தம் அளித்துள்ளதை "உடையார் திங்கள் சதயவிழாப் பன்னிரண்டனுக்கு நெல் நூற்றிருபதின் கலத்துக்கு பங்கு இரண்டும்" என்ற கல்வெட்டு வரிகளால் அறிகிறோம். அத்துடன் தெளிவான வாய்பாடு ஒன்றும் கிடைக்கிறது. 100 குழி மா; 2000 குழி 1 வேலி; 20 மா 1 வேலி (அ) நிலம்)*

67. 157/1918 பழைய தருமாம்பிகா கோயில் மேற்குப் பிரகாரத்தில் கீழ்புறச்சுவரில்

*சோழ இராஜகேசரி வர்மன் என்கிற திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவர் 3 ஆம் ஆட்சியாண்டு*

*85 ம் நாள் (அதிகம் சிதலமானது போக) திருவையாறு திருக்காம கோட்டமுடைய உலகுடை நாச்சியாருக்காக உலகமுழுதுடைய வளநாடு திருவையாறு அநபாய நல்லூர் என்ற ஊரில் நிலம் தற்போதுள்ள நிலத்துடன் மேலும் 10 வேலி தேவதானமாக அளிக்கப்பட்டது. முட்டின்றி வழிபாடு நடக்கவும் மற்றவை களுக்கும் போதாதென்று மேற்கொண்டு இந்தப் பத்துவேலி நிலம் அளிக்கப்பட்டது குறிக்கப்பட்டுள்ளது.*

*(கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் தேவதானம் திருவையாறு என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் இராஜராஜன் காலம் தொடங்கி குலோத்துங்க சோழன் காலம் வரை இராசேந்திர சிங்க வளநாட்டு பொய்கை நாட்டுத் தேவதானம் திருவையாறு என்று குறிப்பிடப் படுகிறது.*

## பழம்பெரும் தஞ்சாவூர் பகுதியை வழிவழி ஆண்டு ஐயாற்றிற்கு அரும்பணி ஆற்றிய அரச பரம்பரையினர்:

| அரசர்கள் | ஆட்சிக்காலம் |
|---|---|
| பல்லவர்கள் ஆட்சிக்காலம் | கி.பி. 600 850 வரை |
| தொள்ளாறெறிந்த நந்திவர்மன் | கி.பி. 825 850 வரை |
| முற்காலச் சோழர்கள் | |
| கரிகாற்சோழன் | சங்ககாலம் |
| விஜயாலயசோழன் | கி.பி. 850 871 வரை |
| முதலாம் ஆதித்த சோழன் | கி.பி. 871 907 வரை |
| முதற் பராந்தகன் | கி.பி. 907 953 வரை |
| இரண்டாம் பராந்தகன் | கி.பி. 954 - 970 வரை |
| பிற்காலச் சோழர்கள் | |
| ஆதித்த கரிகாலன் 2 | கி.பி. 970 980 வரை |
| முதல் இராஜராஜ சோழன் | கி.பி. 985 1014 வரை |
| இராஜேந்திர சோழன் இராஜராஜனின் மகன்) | கி.பி. 1012 1044 வரை |
| (இவனே 5 ஆண்டுகளுக்கு மேல் முதற்குலோத்துங்கனானான்) | |
| இராஜாதிராஜன் | கி.பி. 1018 1054 வரை |

| | |
|---|---|
| பரகேசரி 2 ம் ராஜேந்திரன் | கி.பி. 1050 1063 வரை |
| குலோத்துங்கன் | கி.பி. 1070 1120 வரை |
| விக்கிரம சோழன் | கி.பி. 1118 1135 வரை |
| மூன்றாம் குலோத்துங்கன் | கி.பி. 1178 1279 வரை |
| பிற்காலப் பாண்டியர்கள் | |
| சடையவர்மன் குலசேகர பாண்டியன் | கி.பி. 1190 1216 வரை |
| மாறவர்மன் சுந்தரபாண்டியன் | கி.பி. 1216 1238 வரை |
| சடையவர்மன் சுந்தரபாண்டியன் | கி.பி. 1238 1253 வரை |
| விஜயநகர மன்னர்கள் | கி.பி. 1381 1558 வரை |
| வீரச்ரவன உடையார் | கி.பி. 1381 |
| வீரப்பிரதாபதேவர் | கி.பி. 1428, |
| சதாசிவராயர் | கி.பி. 1558 |
| நாயக்கமன்னர்கள் காலம் | கி.பி. 1532 1673 வரை |
| 1. செவ்வப்ப நாயக்கர் | கி.பி. 1532 1560 வரை |
| 2. அச்சுதப்ப நாயக்கர் | கி.பி. 1560 1600 வரை |
| 3. இரகுநாத நாயக்கர் | கி.பி. 1600 1634 வரை |
| 4. விஜயராகவ நாயக்கர் | கி.பி. 1633 1673 வரை |
| 5. முத்துவீரப்ப நாயக்கர் | கி.பி. 1682 1689 வரை |

# தஞ்சை மராட்டிய மன்னர் பரம்பரை : கி.பி. 658 855

1. ஷாஜி போன்ஸ்லே (கி.பி. 1658–60 இருமனைவியர்

முதல் மனைவி ஜீஜாபாய் மகன்

சத்ரபதி வீர சிவாஜி (1674 ஜூன் 4ல் மராட்டிய மன்னனானான்)

சத்ரபதி ராம் மகராஜ்சாகேப்

இரண்டாம் மனைவி துர்க்காபாய் மகன்

2. வெங்கோஜி என்கிற ஏகோஜி (1676–83)
மனைவி தீபாம்பாள் இவர்களுக்கு மூன்று மகன்கள்

3. இரண்டாம் சகஜி 1
(ஷாஜி) 1684–1712

4. முதல் சரபோஜி (1712–1728) (2)

8. சாஹூஜி சவாய் சகஜி (காட்டுராஜா) 1738–1739

5. முதல் துளஜா (துக்கோஜி) 1727–1735 (3)

6. பாவாசாகிப் எனும் இரண்டாம் ஏகோஜி 1736–37
(இரு மனைவியர்)

முதல் மனைவி சுஜான்பாய் (வாரிசில்லை)
7. ஆட்சி நடத்தினாள் (1737–38)

2 வது மனைவி அன்னபூர்ணாமகன்

9. பிரதாப சிம்மன் 1739–63 (இரு மனைவியர்)

முதல் மனைவி சக்கவார்பாய்மகன்
11. அமரசிம்மன் 1789–98

2 ஆம் மனைவி யமுனாம்பாள் மகன்
10. இரண்டாம் துளசா 1763–87

12. இரண்டாம் சரபோஜி (சுவீகார மகன்) 1798–1832
29–06–1798 ல் அரசராக்கப்பட்டார்
மனைவியர் : யமுனாம்பாபாயி, அகல்யாபாயி

13. இரண்டாம் சிவாஜி 1835–55
பலமனைவியர், காமாட்சிபாயிஷா, இலட்சுமிபாயி, சீதாபாயிலாகுபாயி

காஞ்சீபுரம் வள்ளல் பச்சையப்ப முதலியாருடைய தர்மங்கள்:

*தமிழகத்தே இவர் தர்மம் இல்லாத இடங்களே இல்லை யெனலாம். அத்தகைய புண்ணிய புருஷர் திருவையாற்றில் கடைசிகாலம் வரை தங்கி அருள்மிகு ஐயாறப்பர் கோயில் முன் மண்டபத்திருப்பணி செய்துள்ளார். அவரது இருமனைவியா ரோடு கூடிய் சிலைகள் முன்மண்டபத் தூண்களில் உள்ளன காணலாம். அருள்மிகு ஐயாறப்பர்சன்னதி நித்திய கட்டளைத் தர்மம் பற்றிய கல்வெட்டு பச்சையப்பர் மண்டப இரட்டை விநாயகர் பக்கத்தில் உள்ளது. தர்மநிதி லட்சம் வராகன் வராகன் 31/2 ரூபாய். இன்றைய மதிப்பு 31/2 லட்சமாகும்.*

69. கல்வெட்டு திருவையாறு

*காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாருடைய தர்மங்கள் சகலருக்கும் பிரசித்தமாகத் தெரியும் பொருட்டும், நிரந்தரமான ஞாபகத்தின் பொருட்டும் செய்யும் விளம்பரமாவது:- இறந்துபோன புண்ணிய புருஷராகிய மேற்படி பச்சையப்ப முதலியாரவர்களாலே வைக்கப்பட்டிருக்கும் லக்ஷம் வராகனுக்கு வரப்பட்ட வட்டிப்பணத்தில் நின்றும் திருவையாரில் பஞ்சநத சுவாமி சன்னிதியில் நித்திய கட்டளை தர்மம் நடப்பிக்கிறதற்கு வருஷம் க ரு (15 வராகன் ள உ ய (120) யூரிலிருக்கும் சத்திரத்தில் சதாவர்த்திக்கு வருஷத்துக்கு வராகன் உ ள ச ய (240) யையூரிலிருக்கும் மதுரைத் திருஞான சம்பந்தமூர்த்தி அதீனத்தைச் சார்ந்த மடத்தில் மகேஸ்வரபூஜை நடக்கிறதற்கும் வருஷத்துக்கு வராகன் ங ய (30) இந்த தர்மங்கள் சுனம் பொருந்திய சுப்ரீம் கோர்ட்டுக்கு வரன் மேண்டு அதிகாரிகளால் தாம் விசாரணைக் கர்த்தர்களாக நியமிக்கப்பட்டு சென்னைப் பட்டனத்திலிருக்கும் இந்து சபையாரவர்களுடைய உத்தரவின்படி சாலிவாகன சகாப்தம் சு எ ள சா ய ச (1764) (கி.பி. 1842) ம் வருஷத்துக்கு சரியான சுபகிருது வருஷம் முதல் நடந்து வருகிறதுகள். யை முலதனம் சுப்ரீம் கோர்ட்டு அதிகாரிகளுடைய உத்தரவின்படி சென்னப்பட்டினத்திலிருக்கும் ஜெனல்திரே யென்னும் கவான்மெண்டாருடைய பொக்கிஷத்தி வைக்கப்*

பட்டிருக்கிறது. மேற்படி தர்மம் கிரமமாக நடவாவிட்டால் தர்மத்தில் சிரத்தையுள்ளவர்கள் மேற்படி சபையாரவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுவது.

மேற்படி லக்ஷம் வராகன் போக இந்த மிகுதிப் பணத்துக்கு வரப்பட்ட வட்டியில் அனுகூலமாகும் போது வைதூரில் இந்துப் பிள்ளைகளுக்கு இந்தத் தேசத்தில் விளங்கா நின்ற விவகாரச சாஸ்த்ரங்களாற்கிற்தற்கு மீ க்கு ய (10) வராகன் சம்பளத்தில் ஒரு பண்டிதரையும், இங்கிலீஷ் பாஷை கற்பிக்கிறதற்கு ரூ. (5) வராகன் சம்பளத்தில் ஒரு உபாத்தியாயரையும் நியமித்து வித்தியாசாலை யேற்படுத்தப்படும்.

## குடிமக்களின் பிற்காலக் கல்வெட்டுகள்

ஐயாற்று இறைவர்க்கு மன்னர்கள் எழுதி வைத்துக் கொடுத்தது போன்றே குடி மக்கள் எழுதி வைத்த பிற்காலக் கல்வெட்டுக்களும் சிலஉள. அவற்றைப் பார்ப்போம். ஆட்கொண்டார் சந்நிதியில் சுவர் ஓரம் தனியாகப் புதைத்துள்ள

70. கல்வெட்டு:--

சாலிவாகன க அ 22 விகாரி வருஷம் ஆடி மாதம் க அ (அதாவது கி.பி. 1900) ஆட்கொண்டார் ஓலமிட்ட பிள்ளையார் வல்லபை கணபதி இம்மூன்று சந்நிதியிலும் ராப்பகல் அகண்ட தீபமும் ஆட்கொண்டார் சந்நிதியில் (இ) ரா முழுதும் சந்திரிகையுள்ளபொழுதும் லாந்தர் தீபமும் விளங்கும்படி தருமபுர ஆதீனத்தார் உத்தரவின்படி ஆள்கொண்டார் பரதேசி ரு அள (ரூ. 800) கொடுத்திருக்கிறது. தவறினால் தருமவான்கள் அதை விசாரித்து ஒழுங்கா நடத்திவரக் கேட்டுக் கொள்ளுகிறது. சரவணபவன் துணை.

இரண்டாவது அவ்தூத ஆள்கொண்ட சந்நியாசி யினுடைய விருப்பத்தை இடையூரு செய்யாமலிருக்கும்படிக்கு கலெக்டர் 26.2.1896 உத்தரவும் செய்யப்பட்டிருக்கிறது.

71.ஆட்கொண்டார் சந்நிதி மேல்புறம் புதைந்துள்ள சிறிய கல்வெட்டு:

*சார்வதி வருஷம் (கி.பி. 1901) திருவாதி பிச்சையப்ப ...... மகன், முனுசாமி ரு. 180 பஞ்சநதீஸ் வரசுவாமி ...... ந்து சப்ரிஜிஸ்டராபீசில் ரிஜிஸ்டர் செய்தது. அதன் வட்டி அமிதுகை கொண்டு ஆள்குண்டேசுர சாமிக்கு எப்போதும் சாசுவதமா அர்த்த சாம .....................து.*

72. முத்திமண்டபம் ஆதிவிநாயகர் பக்கத்தில் நிருத்தி வைத்துள்ள தனி கல்வெட்டு :

*திருவாதி பஞ்சநதேஸ்வரர் ஆலயம் தட்சணாமூர்த்தி ஆலய ஆதிவிநாயகர் முந்நில் என்றும் எட்டு நூலிழை திரியுடனிராபகல் அறுபது நாழியும் தவறாமல் நேத்திர தீபம் பிரகாசித்து வருவதற்கு தஞ்சாவூர் தாலுக்கா முகாசா மணக்கரம்பை கிராமம் அம்மன்பேட்டை கணபதி ஐயருடைய உத்திரவுபடி அவர் பதிவிரதை கண்ணம்மாளாலும் அவாள் புத்ரிகள் பிரகத்குசாம்பாள் மோகனும்பாளாலும் இனாம்விட்ட நிலத்தின் எல்லை ஷை கிராமம் நடவழிக்கு கிழக்கு, குளத்துக்கும் பூநிலத்து மேற்கு, கண்ணிக்கு தெற்கு வடக்குள் தைக்கால் நிலம் குழி 22அ, கட்டுக்கரைக்கு கிழக்கு கிருஷ்ண ஐயருடைய நிலதுக்கு மேற்கு மணக்கரம்பைக்கு தெற்கு, கண்ணிக்கு வடக்கு, இதற்குள் நிலம் குரி ள 22 ஆக நருய (350) குழி நிலத்தையும் தருமபுரம் ஆதீனத்தாருத்திரவின்படி க சு ள (கி.பி. 1900) வருஷம் ஆகஸ்டு மாதம் உ ய ச (24 ஆம் தேதி) இனும் சாசனம் செய்து ரிஜிஸ்டரானது.*

*ஷை சந்திரஜபம் செய்யவரும் புண்ணியஸ்தர்கள் கவனித்து ஷை தீபம் சரிவர மேல்கண்ட நடவாவிட்டால் தயவுசெய்து அம்மம்பேட்டை கணபதி ஐயர் வீட்டில் தெரிவிக்கவும். பஞ்சநதீஸ்வரர் சந்நதி அகண்டதீபம் பிரகாசிப்பது போல் ஆதிவிநாயகர் முந்நிலும் அப்படிப் பிரகாசிக்க வேண்டுமென்று இரண்டாவது ஆள்கொண்ட சுவாமிகள் நோக்கித் தயம் செய்தார். அப்படியே நிறைவேறிரினது சரவண பவாந்துணை.*

(இவை மூன்றும் கி.பி.1900 ஒரே காலத்தியவை. சித்த மகாபுருஷர் அூட்கொண்டார்சாமிகள் தாமும் , பிறரைக் கொண்டும் செய்து வைத்த தர்மங்கள் இவை என்பது அறிகிறோம்)

73. முச்சந்தி மண்டபம் : கெஜேந்திர (மகா) லெக்குமி சந்நிதியிலுள்ள கல்வெட்டு

(கி.பி.1860) ரவுத்திரி இ அர்ப்பசி மீ ரு உ (5 ஆம் தேதி) திருவாதி பஞ்சநதீஸ்ர சாமி கொவில் மூலஸ்தானம் மகாலெட்சுமி அம்மனுக்காக தஞ்சை நகறம் மங்களவிலாசம் மீனாபாயி அம்மாளால் குடுகிய நகைகளின் விபர :

கல்விழைச்ச கிஜ்ஸட்டிகை, ல து ன ஒட்டியாணம், பொன்வங்கி, காசு (மாலை) ன்டிம் ............... செஞ்சு கொடுக்கப் பட்டுவே ... ரு மூனு வயிர மூக்குத்தி, யெழச்ச புலாக்கு கா .........

74. கல்லணையில் இன்று காணப்பெறும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலக் கல்வெட்டுக்கள்

க அள ங ய (கி.பி. 1830) வருஷம் அவிணக்கரையில் கண்வாய் கட்டினது பிறதான கலெக்டராகிய கிணற் சல்விதுரை யவர்கள் னானிலாடுவ I சாக்கிரதை செய்தவர்கள் மறுமத்து மத்தஷக்கம் றாமசாமிநாயக்கர், அகுறயேட்டுபேயகாற் அண்ணு கதவு அப்பா, தாசில்தார் பட்டாட்றுமய்யற், அவின வகையறா பெஷக்காற் அப்புனய்யங்காற், தாலுகா மேஷெதிரி வறதப் பனாயக்கற்

செலவு ரூ ய எ சு எ ள ரு ய

(கல்லணை நீளம் 1100 அடி செலவு ரூ. 076750

75. குடமுருட்டி, திருவையாறு பாலம் போன்று வெண்ணாற்றுப் பாலக் கல்வெட்டு

வீரசிம்மவாத்தினால் சோழ தேசத்தின் சிம்மாசனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற க்ஷத்திரிய பூபாலராகிய இஸ்வயினெஸ் ஸ்ரீமந்தராஜஸ்ரீ சிவாஜி மகா இராஜாச்சத்ரபதி சாய்பவர்களித்த பாலத்தை ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன தளளருயஅ துன்முகி வருஷத்தில் லெப்டினன்று கற்னல் மக்ளின் பிறசிடென்னாயிருக்

STONE INSCRIPTIONS COPIED IN 1924 Page 79

426 On the base of the Pushyamandaba at Thiruvaiyaru same taluk and same district.

| | |
|---|---|
| Dynasty | : Thanjavur Nayakas |
| King | : Achyuta, son of Chevvappa |
| Date | : Manmatha, Vrishabha, DUVADASAI |
| Language | : Grantha and Sanskrit |
| Remarks | : Eulogises the king and states that the made Several gifts to the temble of Rangesa at Srirangam, that be reconstructed the dam across the kaveri which had been breached, and that he made the Hiranyagarbha gift. |

கிடைத்தற்கரிய செப்பேட்டு ஆவணச் செய்தி


*"திருவையாற்றுச் சீர்மை திருவையாற்றுச் சதுர்மத்தியம் திருவையாறு புண்ணிய பூமியாய் மண்ணெல்லாம் சிவலிங்கம் மனிதர் எல்லாம் தேவர்கள் ஜலமெல்லாம் கங்கையாகிய 56 தேசத்துக்கும் மேலான சோழ மண்டலத்தில்" எனக் குறிப்பிடப்படுகிறது.*

நிறைவுரை

*கல்லெழுத்துக்கள் அழியாச் சாசனங்களாகும். இதனைப் பதியத் திருக்கோயிலையே தேர்ந்தெடுத்துள்ளார்கள். காரணம் எந்த இடம் அழிந்தாலும் மாறினாலும் திருக்கோயில்கள் அழியாது; மாறாது என்பதனால். நூற்றுக்கணக்கான ஆண்டுகளானாலும் அக்கால மன்னர், மக்கள், வாழ்க்கை உண்மைகளை உள்ளது உள்ளபடி உணர முடிகிறது. அம்முறையில் திருவையாற்றுத் திருக்கோயில் கல்வெட்டுக்கள்மூலம் யார் யார்காலத்து என்ன என்ன நடைபெற்றுள்ளது என்பதறிந்து பெருவியப்பும் பெரு மிதமும் கொள்கிறோம். கல்வெட்டுக்கள் கலப்படம் செய்ய முடியாத நிரந்தப் பதிவகமன்றோ! என்னதான் விஞ்ஞானம் வளர்ந்திருந்தாலும் முன்னோர்தம் மூளைக்கு ஈடாகு முடியுமா? ஓம் சக்தி!*

சிவ. சிவ

"திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென்தமிழின் தேன்பாகாகும்
திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான்
செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த
எழுதிய அருள் தெய்வநூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாயம்
மலர்ந்தருளும் சிறப்பிற்றாமல்"



▼ பொருளடக்கம்

## 7. திருமுறை பாடும் திருவையாறு

பன்னிரு திருமுறை - 1, 2, 3 திருமுறைகள் - ஞான சம்பந்தரின் ஐயாற்றுப்பதிகங்கள் ஐந்தனது சுருக்கமும் விளக்கமும் 4,5,6 திருமுறைகள் நாவுக்கரசரின் ஐயாற்றுப் பதிகங்கள் பனிரெண்டின் சுருக்கமும் விளக்கமும் 7ஆம் திருமுறை சுந்தரரின் ஒரு பதிகத்தின் சுருக்கமும் விளக்கமும் 8ஆம் திருமுறை மணிவாசகரின் திருவாசகத்தில் மூன்று மாணிக்கங்களின் சுருக்கமும் விளக்கமும் 10ஆம் திருமுறை திருமூல திருமந்திரத்தின் இரண்டு மந்திரப்பொருள் 11 ஆம் திருமுறை ஐயடிகள் காடவர்கோனின் ஒரு பாடலது விளக்கம் 12ஆம் திருமுறை சேக்கிழாரின்பெரியபுராணத்தே திருவையாறு இடம் பெற்றுள்ள புராணங்களும் அதன் விளக்கங்களும் நிறைவுரை.

# 7. திருமுறை பாடும் திருவையாறு

(1). திருமுறை: திருதெய்வத் தன்மை, முறைநூல் அதாவது கடவுளின் வடிவு, தன்மை, அவர் வீற்றிருக்கும் இடம், வழிபடும் முறை, வழிபட்டோர் வரலாறு, பயன் முதலியவற்றை முறைபடுத்திக் கூறும் அருள்நூல் திருமுறையாகும்.

(2) பன்னிருதிருமுறை: பசுகரணம் முற்றிலும் நீங்கிப் பதிகரணம் உற்ற தூய உள்ளமுடைய மெய்யடியார்களால் சிவபெருமான் மீது கொண்ட ஆராக் காதலினால் (பக்தியினால்) உள்ளங்கசிந்துருகிப் பாடப்பெற்ற தோத்திரங்களான தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களின் தொகுதியே பன்னிரு திருமுறைகளாகும்.

சைவ சமயத்தின் 12 திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளைத் "தேவாரம்" எனும் பொதுப்பெயராக இயம்புவது மரபாயினும்

1,2,3 ஆம் திருமுறைகள் ஞானசம்பந்தர் பாடியவை 4158 "திருக்கடைக்காப்பு" என்றும்

4,5,6 ஆம் திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடியவை 3066 " தேவாரம்" என்றும் ,

7 ஆம் திருமுறை சுந்தரமூர்த்தி பாடியவை 1024 "திருப்பாட்டு" என்றும்,

8ஆம் திருமுறை மணிவாசகர்பாடியவை 1058 "திருவாசகம்" திருக்கோவையார் என்றும்

9ஆம் திருமுறை திருமாளிகைத் தேவர் முதலிய 9 பேர் பாடியவை 301 "திருவிசைப்பா" என்றும்

10ஆம் திருமுறை திருமூலர் அருளியவை 3083 " திரு மந்திரம்" என்றும்

11ஆம் திருமுறை இறையனார் முதல் 12 பேர் அருளிய 1100ம் "11ஆம் திருமுறை" என்றும்

12-ஆம் திருமுறை சேக்கிழார் அருளிய 4286 "திருத்தொண்டர்புராணம்" என்றும் வழங்கப்பெறும். ஆக 27 சமயச் சான்றோர்களால் அருளப் பெற்ற 19176 திருப்பாடல்களைக் கொண்ட 12 நூல்களின் தொகுப்பே பன்னிரு திருமுறையாகும்.

இவையாவும் தஞ்சை மாமன்னன் இராசராசனால் 7-ஆம் நூற்றாண்டு தொடங்கி 15ம் நூற்றாண்டு வரை பல அருளாளர் தம் அருட்பாக்களையெல்லாம் நம்பியாண்டார் நம்பி மூலம் முறைப்படுத்தப்பட்டு அவை, தமிழ் திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றது. மூவர் முதலிகளது தேவாரம் தலமுறையாகவும் பண்ணடைவுமுறையிலும் தொகுக்கப்பெற்றிருக்கும். இவற்றைத் தமிழிசைக் கருவூலமெனலாம். சம்பந்தர் 24 பண்களும், நாவுக்கரசர் 10 பண்களும், சுந்தரர் 16 பண்களும பாடியுள்ளனர்.

## திருமுறையின் சிறப்பு:

தமிழும்சிவமும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதது. தமிழேசிவம், சிவமே தமிழ். சைவத்தமிழ் இலக்கியங்களில் மேலான 12 திருமுறைகளிடத்திலும் இறைவன் திருவோலக்க முற்றிருக்கிறான். சிவபரம்பொருள் திருமுறைகளையே தம் சரீரமாக்க் கொண்டு சாந்நித்திய முற்றிருக்கிறார். அதனால்தான் ஆன்மார்த்த சிவபூஜையில் திருமுறைகளையும் மூர்த்தியாகக் கொண்டு வழிபடுகின்றனர். திருமுறை இலக்கியங்களுக்குத் சிவனைப் போன்றே ஆக்கல், அளித்தல், அழித்தல் தன்மையுண்டு. இதனை ஓதினவர்க்குத் துன்ப நீக்கம், இன்ப ஆக்கம், சிவஞானப்பேறு ஆகியவற்றை வழங்குகின்றன. இதனை இறந்தவர் பிழைத்தல், விடம் நீக்கம், முதலையுண்டபாலனை மீட்டல், எலும்புப் பெண்ணாதல் போன்ற பல அரிய சித்துக்களைச் செய்து காட்டியிருத்தால் அறியலாம். எனவே, பன்னிரு திருமுறைகள திருவையாற்றை எவ்வாறு பாடுகின்றன என்பனவற்றை அவற்றின் பாத்திறம் கொண்டு பார்ப்போம்.

## பன்னிரு திருமுறைகளில் திருவையாற்றுப் பண்களும்--பதிகங்களும்

| எண் | திருமுறை | ஆசிரியர் | பதிகம் | பண் | பாடல்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | முதல் திருமுறை | சம்பந்தர் | கலையார்மதி | தக்கராகம் (காம்போதி) | 11 |
| 02. | முதல் திருமுறை | சம்பந்தர் | பணிந்தவர் | வியாழக்குறிச்சி (சௌராஷ்ரம்) | 11 |
| 03 | முதல் திருமுறை | சம்பந்தர் | புலனைந்தும் | மேகராகக்குறிஞ்சி (நீலாம்பரி) | 11 |
| 04. | 2ஆம் திருமுறை | சம்பந்தர் | கோடல்கோங்கம் | இந்தளம் (நாதநாமக்கிரியை) | 12 |
| 05. | 2ஆம் திருமுறை | சம்பந்தர் | திருத்திகழ் | இந்தளம் (நாதநாமக்கிரியை) | 11 |
| 06 | 4ஆம் திருமுறை | நாவுக்கரசர் | மாதர்பிறை | காந்தாரம் (நவரோஸ்) | 11 |
| 07. | 4ஆம் திருமுறை | நாவுக்கரசர் | விடகிலேன் | பழந்தக்கராகம் (ஆரபி) | 10 |
| 08. | 4ஆம் திருமுறை | நாவுக்கரசர் | கங்கையைச் | திருநேரிசை (அரிகாம்போதி) | 10 |
| 09. | 4ஆம் திருமுறை | நாவுக்கரசர் | குண்டனாய் | திருநேரிசை (அரிகாம்போதி) | 10 |
| 10. | 4ஆம் திருமுறை | நாவுக்கரசர் | தானலாது | திருநேரிசை (அரிகாம்போதி) | 10 |
| 11. | 4ஆம் திருமுறை | நாவுக்கரசர் | குறுவித்தவா | திருவிருத்தம் (பைரவி) | 10 |
| 12. | 4ஆம் திருமுறை | நாவுக்கரசர் | சிந்திப்பரியன | திருவிருத்தம் (பைரவி) | 20 |
| 13. | 4ஆம் திருமுறை | நாவுக்கரசர் | அந்திவட்டத் | திருவிருத்தம் (பைரவி) | 2 |

| எண் | திருமுறை | ஆசிரியர் | பதிகம் | பண் | பாடல்கள் |
|---|---|---|---|---|---|
| 14. | 5ஆம் திருமுறை | நாவுக்கரசர் | சிந்தைவாய் | திருக்குறுந்தொகை (மாயாமாளவகௌளம்) | 10 |
| 15 | 5ஆம் திருமுறை | நாவுக்கரசர் | சிந்தைவண்ண | திருக்குறுந்தொகை (மாயாமாளவகௌளம்) | 10 |
| 16 | 6ஆம் திருமுறை | நாவுக்கரசர் | ஆரார் திரிபுரங்கள் | திருத்தாண்டகம் (மோகனம்) | 10 |
| 17. | 6ஆம் திருமுறை | நாவுக்கரசர் | ஓசைஒலியெலாம் | திருக்குறுந்தொகை (மாயாமாளவகௌளம்) | 11 |
| 18. | 6ஆம் திருமுறை | நாவுக்கரசர் | பொய்யாறா | பல்வகைத் தாண்டகம் | 1 |
| 19. | 7ஆம் திருமுறை | சுந்தரர் | பரவும் பரிசொன் | காந்தாரபஞ்சமம் (கேதார கௌளம்) | 11 |
| 20. | 8ஆம் திருமுறை | மணிவாசகர் | கையார்வளை | திரு அம்மானை | 1 |
| 21. | 8ஆம் திருமுறை | மணிவாசகர் | முத்துநல்தாமம் | திருபொற்சுண்ணம் | 1 |
| 22. | 8ஆம் திருமுறை | மணிவாசகர் | கையால்தொழுதுன் | ஆசைப்பத்து | 1 |
| | 9ஆம் திருமுறையில் ஐயாறு இடம் பெறவில்லை | | | | |
| 23. | 10 ஆம் திருமுறை | திருமூலர் | ஆரறிவார் எங்கள் | திருமந்திரம் | 1 |
| 24 | 11 ஆம் திருமுறை | ஐயடிகள் | குந்திநடந்து | க்ஷேத்திரவெண்பா | 1 |
| 25. | 12 ஆம் திருமுறை | சேக்கிழார் | வெள்ளிவெற்பின | திருநாவுக்கரசு புராணம் | 3 |
| | | | | | 200 |

திருச்சிற்றம்பலம்
பதிகச்சிறப்பு

1,2,3 திருமுறைகள் ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற திருக்கடைக்காப்பு காலம் கி.பி. 601 650

அவரது பதிகங்களில் இயற்கை வனப்பு, இசை நுட்பம், நாட்டின் நிலை, மக்கள் நிலை, பழக்கவழக்கங்கள், செய்யுள் நலம், செய்யுள் நயம், அகத்துறைப் பாடலினிமை முதலிய பொருள் களும், அகக்கண் கொண்டு நோக்குவார்க்கு இறைவன் திருவருள் நெறியென்ற செம்பொருளும் காணப்பெறும்.

ஞானசம்பந்தரின் ஒவ்வொரு பதிகத்திலும் 7 ஆம் செய்யுளில் அட்டவீரட்டத்தில் ஒன்றும் 8 ஆம் செய்யுளில் மலையெடுத்த இராவணனையும் 9 ல் மாலொடு அயன் காணாநிலையும், 10 ல் சமணர் சாக்கியர் பற்றியும் 11 ல் பலஸ்ருதியாக வியனுலகடைவீர் ஆணை நமதே என்றெல்லாம் கடைக்காப்பாக அமைந்திருக்கும் சிறப்பைக் காணலாம். ஒன்று இரண்டு திருமுறைகளில் உள்ள திருவையாற்றுப் பதிகங்களின் சீர்த்தியைக் காண்போம். மூன்றாம் திருமுறையில் திருவையாறு இடம்பெறக் காணோம்.

திருஞானசம்பந்தப்பெருமான் தொண்டர் எதிர்கொள்ள முத்துப்பல்லக்கில் திருவையாற்றை வந்தடைந்தார். அந்நகரை முன்னின்று இறைஞ்சினார். "அஞ்சேல்" என்றருள் செய்வான் அமர்ந்த கோயிலை அணுகினார். நீடுகோபுரம் தொழுதார். உள்ளே புகுந்து ஐயாறப்பரைப்புந்தி நிறை செந்தமிழின் சந்த இசையில் பாடினார். பலநாட்கள் தங்கியிருந்து ஐயாற்றையும் ஐயாறனின் பேரருளையும் நன்கு மாந்தி அனுபவித்து ஐந்து பதிகங்கள் பாடினார்.

## பதிகச் சுருக்கம்

முதல் திருமுறை : பண் ; தக்கராகம் பதிக எண் : 36

1. பதிகம் : "கலையார் மதியோ்":

இப்பதிகப்பாடல் பத்தும் இறைவன் இடம் திருவையாறு என்கிறது. பாடல்கள் தோறும் இறைவனது மதி, கொன்றை, கங்கை, வன்னி, கொக்கிறகு, தலைமாலை முதலிய அணிவகைகளும் அவர் வீரமும் அறிவிக்கப்படுகின்றன.

முதல் திருமுறைதிருவிராகம் பண்:வியாழக்குறிஞ்சிபதிக எண்:20

2. பதிகம் :"பணிந்தவருவினை":

அடியார்களின் அருவினைகளை அருள் செய்யத் துணிந்தவன்; அரவொடு ஆமை ஓட்டைப் பிணிந்தவன் திரிபுரமெரித்தவன், யானைத்தோலை உரித்துப் போர்த்தியவன், பிரமன் சிரம்கொய்தவன், பிறையணிந்த சடையில் பாம்பையும், கொன்றையையும் சூடியவன், உமையொரு பாதியன், என்போன்ற அந்தணர் வணங்கும் அன்பரை உரிமையாக உடையவன் தலம் ஐயாறு .

முதல் திருமுறைபண்: மேகராகக் குறிஞ்சிபதிக எண் 130

3. பதிகம் :"புலனைந்தும் பொறிகலங்கி"

*மிகச்சிறந்த பதிகம் பதிகச் சிறப்பு:*

1. நாடு வளம் பெற இதனை ஓத மழைபொழியும் சக்தி வாய்ந்த பதிகம்

2. தனிமனித வாழ்க்கை சிவப்பேறு பெற அருளும் திறம்கொண்ட பதிகம்

3. ஐயாற்று மக்கள் ஆடற்கலையில் சிறந்து விளங்கியதை அறிவிக்கும் பதிகம்

4. ஐயாற்றெம்பெருமான் அற்புதக் கூத்துத் தொழில் வல்ல கூத்தப்பெருமான் என்பதை இதுவரை யாரும் கண்டுணர்த்தாத

வகையில் (தற்காலத்திறனாய்வாளர் போல) திருவருவ உள்நின்றுணர்த்த மூன்று பதிகங்கள் வாயிலாக வெளிப்படுத்திய அருமைப்பாடுடையது.

## பதிகச் சுருக்கம்

1. ஞானசம்பந்தப் பெருமான் ஐயாற்றெம் பெருமானிடம் பொதிந்துள்ள ஒப்பற்ற தனிப்பெரும் அருளாற்றலை அவர்தம் அருட் கண்ணால் அறிந்துணர்ந்தவாறு புலப்படுத்துகின்றார். உயர்ந்த உண்மை.

2. சிவனடியார்களின் உயிர்போம் இறுதிக் காலத்தே அவர்களின் ஐம்புல அறிவுகளும் தன்னிலை கெட்டு, கபம் மேலிட்டு உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் காலத்தே ஐயாறப்பர் தாமே வலியவந்து, "அஞ்சேல்" என அபயமளித்துத் திருவருட்பேற்றை வழங்குவார். அத்தகைய பெருமான் அமர்ந்த திருக்கோயில் என்பதை அருமையாகத் தெளிவு படுத்துகிறார் முதல் இரண்டு அடிகளில். இதோ பாடல்:

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந் திட்டைம் மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய் வான்அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சி
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே" 130 1

ஆடற்கலை மகளிர் : அடுத்த இரண்டு அடிகளில்

3. இக்கோயிலில் வலம்வரும் மடந்தையர் கூட்ட முடிவு முழங்க நடனமாடி வரும் அழகைக் கண்டார். வியந்தார், மகிழ்ந்தார், பாடினார். அருமையான கற்பனையுதயமாகியது. பக்க வாத்திய முழவு அதிரும் ஒலி கேட்டு மந்திகள், மழை வரப்போகிறது. இதோ இடி இடிக்கிறதே என அஞ்சி மரத்தின் உச்சியில் ஏறிக்கொண்டு மழைமேக கூட்டம் உளதா என வானத்தில் மேகத்தைப் பார்த்து ஏமாறும் வளஞ்செறிந்த திருவையாறு எனப்பாடினார்.

அடுத்து வரும் பாடல்களில் இன்மொழி பேசும் மட்ந்தையரே பலியிடுங்கள் கங்காளர், விடையேறும் சங்கரனார், கொன்றையணி தத்துவனார், நெறிகாட்டும் விகிர்தனார் வருகிறார் என்றெல்லாம் பாடியுள்ளார்.

ஞானசம்பந்தர் வீதி வழி வருகிறார். ஆங்கே தேரோடும் வீதியில் உள்ள பல நடன அரங்குகளில் நடனம் பயிற்றப்படுவதும் காண்கிறார். தாம் கண்ட அனுபவத்தை இயற்கையோடு இணைந்த ஊரழகை ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

"காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார் வீதித்
தேரோடும் அரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே" 130 5

அக்காலத்து இத்திருவையாற்று இளம் மகளிர் தாமே பாடலுக்கு இசை அமைத்துப் பாடும் அளவிற்கு இசைஞானம் பெற்றிருந்தார்கள். காரிகையார் காந்தாரப் பண்ணில் தாமே இசை அமைத்துப் பாடவும், அதற்கேற்பச் சேயிழையார் நடமாடும் அழகையும் தாம் நேரில் கண்டு மகிழ்கிறார். எப்படி ஆடுகிறார்கள்? "தரணதீம் தோம் தாம்" எனும் அலாரிப்புடன் ஆடுவதைத் தம் ஆடற்கலை ஞானத்தோடு நமக்கு அறிவிக்கிறார்.

"காந்தாரம் இசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே" 130 6

"நட்டுவாங்கம்" எவ்வாறு நடைபெறுகிறது என்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார். நட்டுவனார் அவிநயக்கோல் கொண்டு ஆட்டுவதற்கேற்ப வளையணி மகளிரும், நகையணி மகளிரும் நடனமாடுகின்றனர்.

"கோலாடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்திலின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே" 130 9

இவ்வாறே, ஊரெல்லாம் தெருவெல்லாம், கோயிலெல்லாம் இசையும் கூத்தும் இணைந்து களிநடம் புரியக் கண்டார் ஞானசம்பந்தப் பெருமான். கண்ணுதலான் ஆடுகின்ற ஆனந்தக் கூத்தையும் அதனோடு ஒப்பிட்டு நோக்கினார்.

இம்மண்ணிற்குத் தனிப்பெரும் கலை ஆற்றல் இருக்கிறது என்பதை அப்பொழுதே கண்டுணர்ந்தார். எனவே, இவ்வூர்த்தலைவன் ஐயாற்றெம்பெருமானும் இவ்வாற்றல் மிக்குடையனாய் இருத்தல் வேண்டுமே என்ற கண்ணோட்டத்தில் (ஒப்பீட்டாய்வின் அடிப்படையில்) "கோடல் கோங்கம்" என்ற பதிகம் உணர்வோடு வெளிவந்தது.

இரண்டாம் திருமுறைபண் : இந்தளம் பதிக எண் 142

4. பதிகம்: "கோடல் கோங்கம் " .......

கோடல்கோங் கங்குளிர் கூவிளமாலை குலாயசீர்
ஒடுகங் கையொளி வெண்பிறை சூடு மொருவனார்
பாடல் வீணைமுழ வங்குழன் மொந்தை பண்ணாகவே
ஆடு மாறுவல் லானுமை யாறுடை யையனே

## கருத்து : ஒரு திறனாய்வு

காந்தள், கோங்கு, வில்வம், கங்கை, பிறை ஆகிய ஐந்தையும் சூடிய ஐயாறன், பாடல், வீணை, முழவம், குழல் பறை ஆகிய ஐந்து வாத்தியத்துடன் பண்ணொடு பொருந்த ஆடவும் வல்லவன் என்பதனை நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகிறார் சம்பந்தர்

இதனால் நமக்கு ஒரு உண்மையும் புலப்படுகிறது. அதனால்தான் ஐயாற்றில் தியாகய்யர் போன்ற இசை ஞானிகள் தோன்றி இன்றளவும் சதா இசை முழங்கிக் கொண்டுள்ளனர் போலும் என அறிகிறோம். மற்றொன்று ஐயாற்றில் தஞ்சை மாமன்னன் இராசராசன் காலத்தே, நக்கன் அம்பலக்கூத்தி, நக்கன் பொன்னு, நக்கன் அருண்மொழி போன்ற ஆடல்மகளிர் பலர் ஆலயத்தே இருந்தனர் என்பதும், இங்கிருந்து தஞ்சை பெரிய கோயிலுக்கு 20 தளிச்சேரிப் பெண்கள் சென்றிருந்தனர் என்பதும் இக்கோயில் கல்வெட்டால் அறிகிறோம். பாடலுக்கு மட்டுமல்ல ஆடலுக்கும் தலைசிறந்த நகரமாயிலங்கியது ஐயாறு என்பதறிகிறோம். ஐயாற்றிறைவனே

"ஆடுமாறு வல்லானு மையாறுடை ஐயனே!"

எத்தகைய ஆடலை ஆடுகிறார் என்பதையும் ஈற்றுப் பாடலின் முதலடியில் அறிவிக்கிறார் ஞானசம்பந்தப் பெருமான்.

"பலிதி ரிந்துழல் பண்டங்கன் மேயவை யாற்றினைக்
கலிக டந்தகை யான்கடற் காழியர் காவலன்
ஒலிகொள் சம்பந்த னொண்டமிழ் பத்தும் வல்லார்கள் போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர் பெறுவார் களே. ஞானசம் 142 - 12

* பண்டாரங்கக் கூத்து:

பண்டங்கன் என்பது "பாண்டரங்கம்" என்ற ஒருவகைக் கூத்தாகும். கூத்துவகை பதினொன்றில் முக்கண்ணன் ஆடும் கூத்து பாண்டரங்கக் கூத்தாகும். அதனை சதா ஆடிக் கொண்டுள்ளான் நம் ஐயாறன் என்பதை அறிகிறோம். அதற்கு அகச்சான்றாக "பற்றார் பசுபதி பாண்டரங்கா என்றேன் நானே .... ஐயாறன்னே" என அப்பரடிகளும்,

கலித்தொகை : கடவுள் வாழ்த்து

ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து.....
மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பாண்டரங்க மாடுங்காற் பணையாழி லணைமென்றோள்
வண்டற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ; 8 10

என வருவதும் காணலாம்.

கூத்து எங்கும் நிறைந்த சிவமூர்த்திக்கே உரியது ஐந்தொழிற் கூத்தாகும். இவை தில்லையில் மட்டுமல்ல எல்லாத் தலங்களிலும் பரமேஸ்வரனது திருநடனம் வணங்கப் படுகிறதென்றாலும் சிறப்பாக ஆரூரிலும், ஐயாற்றிலும் இருஊர் எம்மான்களும் குறிப்பிட்ட நடனத்தை ஆடிக் கொண்டுள்ளனர். இதனை தமிழ்த் திருமுறையில் ஞானசம்பந்தப் பெருமான் வாக்கால் நாம் அறியும்பொழுது ஒரு வியப்பும் மகிழ்வும் கொள்கிறோம்.

---

* சிலப்பதிகாரம் - அரங்கேற்றுக்காதை வரி 14.2 உ.வே.சா. 1944
கலித்தொகை - கடவுள் வாழ்த்து பாகனேரி காசி விசுவநாதன் பதிப்பு

"ஆரூரமர்ந்த அரசே போற்றி, சீரார் திருவையாறா போற்றி" என இணைத்து மணிவாசகப் பெருமான் கூறுதற்கேற்ப திருவாரூர் தியாகேசர் அஜபாநடனம் ஆடுவது போலவே, ஐயாற்று ஐயாறப்பரும் 'பாண்டரங்கம்' எனும் கூத்தை ஆடுகின்றார். தியாகராஜர் - தியாகவிடங்கர் (சோமாஸ்கந்தர்)

ஐயாறப்பர் ஓலோகவிடங்கர் (சோமாஸ்கந்தர்)
"அந்திப்பிறை யணிந்தாடும் ஐயாறன் அடித்தலமே"
"ஆடல் அமர்ந்துரைகின்ற ஐயாறு" என அப்பர் பெருமான் கூறுவதற்கேற்ப

தியாகவிடங்கர் அமர்ந்து கொண்டே ஆடும் "அஜபாநடனம்" போலவே, ஐயாறப்பராகிய ஓலோகவிடங்கரும் அமர்ந்தாடும் "பாண்டாரங்கக்" கூத்தை ஆடுகின்றனர் என்பதை அறிகிறோம். தியாகராஜர் ஆடும் அஜபா நடனம் புகழுடன் விளங்குகிறது. ஐயாறப்பர் ஆடும் பாண்டரங்கம் இன்றும் உலா வந்து உள்நுழையும் போது ஆடும் கூத்தாகும். எனவே, அது பாண்டாரங்கம் கூத்து என்ற பெயர் அறியாமலேயே இன்றும் நடைபெற்று வருகிறது. இனியாவது இதன் பெயரை யாவரும் அறிந்து கொள்ள வேண்டுகிறோம்.

எனவே, ஞானசம்பந்தப் பெருமான் அக்கூத்தோடு தாமும் ஒன்றி மயங்கி, ஆழங்காற்படுகின்றார் என்பதனைச் சேக்கிழார், "பாடினார், ஆடினார் பண்பினொடுங் கண் பொழிநீர் பாய" எனப் பாடித்தாம் அனுபவித்த இன்பத்தை நாமும் அனுபவிக்கச் செய்கின்றார்.

ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஐயாற்றெம்பெருமான் ஆடும் கூத்து அவரது அகக் கண்களில் அப்படியே நன்கு தெரிகிறது. தக்கபக்க வாத்தியங்களும் அவர் காதுகளில் ஒலிக்கின்றன. அவை என்னென்ன என்பதை

"பாடல் வீணை முழவம் குழல் மொந்தை பண்ணாகவே
ஆடுமாறு வல்லானும் ஐயாறுடை ஐயனே"

எனத்தாம் அறிந்து கூறியதோடு அவர் ஆடும் பாண்டரங்கக் கூத்தோடு தாமும் இணைந்த நிலையில் அவ்வாடல்

*சந்தத்தோடு, அவரே ஆடிப்பாடுகிறார். அது மட்டுமல்ல அவரோடு நம்மையும் பாடவைத்து ஆடவைக்கின்றார் இதோ பாருங்கள் பதிகம் முழுதும். ஆடுவது போலவே அமைந்துள்ளது. சந்த இனிமை என்ன அருமை*

*இரண்டாம் திருமுறைதிருவிராகம் பண் இந்தளம் பதிக எண் 168. 5. பதிகம்: திருத்திகழ் மலைச்சிறுமி*

கட்டுவட மெட்டுமுறு வட்டமுழ வத்தின்
கொட்டுகர மிட்டவொலி தட்டும்வகை நந்திக்
கிட்டமிக நட்டமவை யிட்டவ ரிடஞ்சீர்
வட்டமதி லுட்டிகமும் வண்திருவை யாறே.

*அதாவது எட்டுவடங் கொண்டு கட்டிய முழவங்கொண்டு நந்திதேவர் கொட்ட பெருவிருப்புடன் திருக்கூத்து வகைகளை யன் ஆடுமிடம் மதில் சூழ்ந்த கோயிலுடைத் திருவையாறேயாகும்.*

"வென்றிமிகு தாரகன தாருயிர் மடங்கக்
கன்றிவரு கோபமிகு காளிகத மோவ
நின்றுநட மாடியிட நீடுமலர் மேலால்
மன்றன்மலி யும்பொழில் கொள்வண்திரு வையாறே 168 5

*தாரகாசுரனின் உயிர் மடிய, கோபத்தோடு வரும் காளியின் சினம் நீங்க, எதிர் நடமாடிய ஐயனின் இடம் சோலை சூழ்ந்த திருவையாறு என்றெல்லாம் ஐயாற்றண்ணல் தம் அற்புதச் சிறப்பை ஆடலழகை ஞானசம்பந்தப் பெருமான் இதுவரை ஐந்து பதிகங்களில் தாம் பாடியுள்ளதைப் பார்த்தோம். பாடல்களின் திறம் என்னே அருமை!*

## 4,5,6 திருமுறைகள்:

*திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற "தேவாரம்" ஆகும்.*

*காலம் கி.பி. 600 681*

*தேவாரம்: தே : தெய்வத்தின் மீது, வாரம் அன்பால் பாடுவது. தொல்காப்பியத்தும், சிலப்பதிகாரத்தும் 'வாரப்பாடல்' பற்றிய குறிப்புகள் வருகின்றன. எனவே தேவனைப் பற்றிய*

தேவாரப் பாடல்கள்: பசு போத மற்று இறையருளால் மொழியப் பெற்றனவாயும், இறைவன் அருளை உயிர்கள் எய்துதற்குக் காரணமாயும், இறைவன் . அருட்டிறத்தை எடுத்தியம்ப வல்லதாயுமுள்ளது.

திருநாவுக்கரசெனினும், அப்பர் எனினும் ஒருவரே. "சொற்குறுதிக்கு அப்பர்" என்பர். இவரது பாடல்கள் அகவிருளைப் போக்கி உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாக்கும். அனுபவ உண்மை நிறைந்தவை, தெய்வமணம், கமழுபவை, திரு நேரிசை, குறுந்தொகை போன்ற பலபாக்களுக்கு உரமும், ஊக்கமும் அளித்துள்ளார். "தாண்டகம்" இவரால் சிறப்புப் பெற்றதால். தாண்டகவேந்தர் எனப்பட்டார். பதிகம் என்பதற் கேற்ப பத்து பாடல்களே இருக்கும். பத்தாவது பாடலில் இராவணனை அடர்ந்த வீரம் பேசப்படும். முன்னமிவர் வாகீச முனிவராயிருந்த காலத்து எதிரில் இராவணன் கயிலையைத் தூக்கி இடர்ப்படுவதைக் கண்டார். வருந்தி, இரங்கி 'சாமகானம் பாடு' என உதவியதற்குப் பரிசாக இப்பிறவிக் கிடைத்தது. அதனால் இராவணனை மறவாது பாடுகிறார் போலும்.

தேவாரத்தைப் பண்ணாங்கமாகவும் பாடலாம். சுத்தாங்கமாகவும் பாடலாம் என்பதற்காகவே திருநேரிசை, திருவிருத்தம், திருத்தாண்டகம் எனப் பலப் புது வழிகளில் பாடிக் காட்டியுள்ளார். இசையில் இதுவரை எவரும் செய்யாத புதுமுறை.

### திருப்பதிக வரலாறு

கயிலை மலையைக் காணக் காதலித்த கலைவாய்மைக் காவலனாராகிய நாவுக்கரசர் கால் தேய, கைதேய, மார்பு நைய, எலும்பு முறிய தவழ்ந்து சென்றார். இந்நிலையில் பரமர் முனிவராகத் தோன்றி, "மானுடர் கயிலை காண இயலாது. மீள்வதே உன் கடன்" என்றவுடன் "ஆளும் நாயகன் கயிலை கண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்றார். இவரது உறுதிக்கண்ட இறைவர், 'நாவுக்கரசரே எழுந்திரு' என்று கூறிக் கயிலைக் கோலத்தை ஐயாற்றில் காண்க என்றார். அங்கிருந்த குளத்தில் மூழ்கி, உலகெலாம் வியக்குமாறு

திருவையாற்றில் எழுந்து நின்றார். அவர் கண்களில் பட்ட யாவும் 'சிவசக்தி ' வடிவமாகவே காட்சியளித்தன. 'வெள்ளி வெற்பில் கயிலைப் பரமனின் காட்சியைக் கண்களால் முகந்து கொண்டார். உருகினார்., ஆடினார் பாடினார். அழுதார், அவர் கண்ட காட்சியை உள்ளவாறு அகம் களித்துப் பாடினார். அப் பாடல் இதோ நான்காம் திருமுறை "கண்டறியாதன கண்டேன்" பண் காந்தாரம்

6. பதிகம் : மாதர் பிறைக் கண்ணியானை:

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்." 1

அருமையான திருப்பதிகம், சிவநேயச் செல்வர்கள் அனைவரும் அன்றாடம் அறிந்துணர்ந்து பாடும் அற்புதப் பதிகம். அப்பர் பெருமான் கயிலையைக் கண்ட களிபேருவகையில் எல்லை கடந்த ஆனந்தாதீதத்தில் அனுபூதியாகத்தாம் கண்டுணர்ந்த வற்றைத் தெள்ளத் தெளிவாகப் பாடும் கயிலைப் பதிகம். மாதொரு பாகனாய்த் தலையில் பிறைசூடி சந்திரசேகரராய்க் காட்சியருளிய குறிப்பைப் பாடல்தோறும் தெரிவிக்கின்றார்.

## பொருள் விளக்கம்

"மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி" வளர்தலும் தேய்தலுமில்லாத அழகிய மூன்றாம்பிறைச் சந்திரனை, கண்ணி = தலைமாலையாக அணிந்தவன் என்பது பொருள். இவ்வாறே ஒவ்வொரு பாடலிலும் 2. போழிளங் கண்ணி, 3. எரிபிறைக் கண்ணி, 4. பிறைஇளங் கண்ணி, 5. ஏடுமதி, 6. தண்மதி, 7. கடிமதி, 8. விரும்புமதி, 9. முற்பிறை, 10. திங்கள்மதி, 11. வளர்மதி என்றெல்லாம் சிறப்பித்துப் பாடுகிறார். இவ்வளவு சிறப்பித்ததன் உட்பொருள் என்னவாக இருக்கும் என ஆய்ந்தபோது கிடைத்தப் பல உண்மைப் பொருள்கள்:-

1. தன்னை அடைக்கலம் அடைந்தாரை அழிவினின்றும் காப்பாற்றி நலன் பல நல்குபவன் என்றும்,

2. பிறையையும் பாம்பையும் தன் சடையில் ஒன்றாக அணிந்துள்ளதால் நீதியின் திருவுரு என்ற அவனது இயல்பினையும்,

3. இறைவனது ஐம்பெரும் தொழில்களுள் இது காத்தல் தொழிலைச் சுட்டிக்காட்டுவதாகவும்,

4. எளியோர் பெரியோரை அடைந்தால் சிறப்பினை அடைவர் என்ற உண்மையையும்,

5. தன்னை அடைக்கலம் அடைந்தோரின் மனக்கோணலை நீக்குவான் என்ற உயர்ந்த பொருளையும் நமக்கு உணர்த்துகின்றன.

"போதொடு நீர்சுமந்தேத்தி புகுவார் அவர்பின் புகுவேன்":

*கயிலாயமாகக் காட்சித்தரும் ஐயாற்றுத் திருக் கோயிலினுள் புகுகின்றதைப் பாடுகின்றார். அவருக்கு முன்னே அடியார் பலரும் பூவும் நீரும் சுமந்துகொண்டு இறைவன் இறை வியை (மலையான்மகளொடு) இணைத்துப் பாடிக் கொண்டே செல்கிறார்கள். அவர்களின் பின்னே யானும் புகுகின்றேன்.*

"யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது"

*இமயமலையில் இருந்த யான் திடீரென ஐயாற்றை எப்படி வந்தடைந்தேன்? கால்தேய்வு போன்ற உறுப்பழிவுச் சுவடுகள் ஏதுமின்றி எவ்வாறு வந்தடைந்தேன்? திங்கு நீங்கிய யாக்கையுடன் பாதச் சுவடுகூட மண்ணில் ஏதுமின்றி எங்கும் பதியாமல் இங்கு எங்ஙனம் எழுந்தேன்? உடல் நலிவு ஏதுமின்றி மற்றவர்களுக்குத் தெரியாமல் ஒளியுடல் கொண்டு பிரணவ தேகத்துடன் திருவருள் துணைகொண்டே ஐயாற்றை வந்தடைந்தேன் என்று தமக்கு ஏற்பட்ட அதிஅற்புத ஆச்சரிய உணர்வை "யாதும் சுவடுபடாமல் ஐயாறடைந்தேன்" என அனுபூதிநிலையில் பாடுகிறார். எனவே, இது ஓர் அற்புதம். அற்புதம் என்பது விளக்கமுடியாதது; அதிசயம் விளக்கமுடியும்.*

"காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்"

அவர் ஐயாற்றை வந்தடைந்த சமயம் தம் கண்களிற் கண்ட காட்சிகளாகக் களிறு தன் பெண் யானையுடன் வருவதைப் பார்த்தேன். (இதே போல் பாடல்தோறும்) கோழி, குயில், மயில், அன்றில், பன்றி, குரங்கு, நாரை, கிளி, பசு போன்ற உயிரினங்கள் பலவும் ஆணும், பெண்ணுமாய் கூடி மகிழ்ந்து வருவதைக் கண்டேன் எனப் பாடுகிறார். யாவற்றையும் சிவசக்தி வடிவாகக் கண்டார். சிவசத்து சதசத்திற்குக் காட்சி தருகிறது. எனவே, அனுபூதி சித்தியாயிற்று.

"கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்"

உலகுயிர்கள் ஆணும் பெண்ணுமாய், அன்பும் இன்பமும் உற்றுக் கூடிக்குலவித் தோன்றிய காட்சி, சிவமும் சக்தியும் கலந்த சிவயோகக் காட்சியாக, சிவானந்தக் காட்சியாக, அவருக்கு புலப்படவே, 'கண்டறியாதன கண்டேன்' எனக் கனிந்துரைக்கின்றார். மாலயனும் காண்டற்கரிய திருவடிக் காட்சியும், பிறைக் கண்ணியுடைய திருமுடிக்காட்சியும், அம்மையப்பராய் இணைந்து வந்த காட்சியும் வாழ்வில் யாரும் கண்டதறியாதனவாய், தமக்குக் கிடைத்த இன்ப அனுபவமாய் முகிழ்க்கவே "கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என எக்களிப்போடு பாடுகிறார். காணாதன காட்டலும் கேளாதன கேட்பித்தலும் திருவடிக் காட்சியின் விளைவு. / தாம் காணும் பொருள்களிடத்தெல்லாம் இறைவனைக் காண்பதென்பது எல்லார்க்கும் எளிதில் ஏற்படும் நிலையல்ல. பரிபக்குவமுள்ள ஆன்மாக்களுக்கு மட்டுமே ஏற்படும் நிலையாகும். இறைவனைக் கண்டு அதன் சிறப்பியல்புகளை அனுபவ பூர்வமாய் இவர் போற்றப்பட்டிருப்பதுபோல் வேறு எவரும் போற்றக் கண்டிலம்.

நான்காம் திருமுறை : "ஐயாறர்க் காளாய் நான் உய்ந்தேனே"
பண் : பழந்தக்கராகம்

7. பதிகம் : விடகிலேனடி நாயேன் . . .

ஐயாற்றில் ஒரு வாவியில் உலகெலாம் வியப்பத் தாம் எழுந்த திருவருட் பெருமையும், தம் பெறலரும் பேறும் எண்ணிப் பாடிய பதிகம், இதில் கைலைநாதன் முன்னிலை; ஐயாறர் படர்க்கை

கண்ணானாய் மணியானாய் கருத்தானாய் யருத்தானாய்...
அண்ணான ஐயாறர்க் காளாய்நா னுய்ந்தேனே... 6

ஈற்றடி அனைவர் உள்ளமும் உருக்கும் தகையவாய் அமைந்துள்ளமை காண்க.

முந்திரையும் புனற்பொன்னி மொய்பவளம் கொழித்துந்த...

நான்காம் திருமுறை : "ஐயன் ஐயாறனாரே" திருநேரிசை

8. பதிகம் : கங்கையைச் சடையுள் வைத்தாய் ....

சிவபிரானின் திருவுருவ அடையாளங்களையும், சிறப்பியல்புகளையும் அருளிச் செயல்களையும் வியந்து எடுத்துக் கூறுகின்றது. இப்பதிகத்தில் வரும்

"இரப்பவர்க் கீயவைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாங் கடுநர கங்கள் வைத்தார்
பரப்புநீர்க் கங்கை தன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தா ரையனை யாறனாரே" 10

இச்செய்திகள் இற்றை ஞான்றுச் சமுதாய வாழ்வில் நாம் அடிக்கடி நினைவு கூர்ந்து, 'பொன்னும் மணியும்' போற், போற்றி வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுதற்கு உரியனவாம்.

நான்காம் திருமுறை : "திருவையாறமர்ந்த தேன்"திருநேரிசை

9. பதிகம் " "குண்டனாய்ச் சமணரோடே . . . .

இப்பதிகம் முழுதும் அப்பர் பெருமான், தாம் சமண சமயத்தில் இருந்து வாணாளை வீணாக்கியதை எண்ணி வருந்திப் புலம்புகின்றார். இதில் சமண சமயக் கோட்பாடுகளையும் தாம் எவ்வாறெல்லாம் உணர்வின்றி அவரோடு உறவு கொண்டிருந் தேன் என்பதையும் வருந்தி நெஞ்சிற்கு அறிவுறுத்துகிறார்.

பாசிப்பல் மாசுமெய்யர் பலமிலாச் சமணரோடு
நேசத்தால் இருந்தநெஞ்சை நீக்குமா றறியமாட்டேன
தேசத்தார் பரவியேத்துந் திருவையா றமர்ந்ததேனை
வாசத்தால் வணங்கவல்லார் வல்வினை மாயுமன்றே 4

அவரது உள்மனம் மிகப்பெரிய தவறு செய்துவிட்டதாயும், அதற்கு மாற்றில்லை எனவும் எண்ணி வருந்துகின்றார்.

நான்காம் திருமுறை : "ஐயன் ஐயாறனார்க்கே"திருநேரிசை

## 10. பதிகம் : "தானலாதுலகமில்லை . . . ."

அவன் உலகமாய் உள்ளான். உலகம் அவன் அடிமை. கருதுவார்க்கு வானுலகளிப்பான். தொண்டு செயவார்க்கு உள்ளத்திருப்பான். அனுபூதியில் கண்டவர்க்கு அருள்வான்.

"எரியலால் உருவமில்லை யேறலா லேறவில்லை
கரியலாற் போர்வையில்லை காண்டகு சோதியார்க்குப
பிரிவிலா வமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென்றேதநும்
அரியலால் தேவியில்லை யையனை யாறனார்க்கே 5

அடியார்க்கு அருள்கொடுப்பவன் கயிலை மலையான்.

நான்காம் திருமுறை : "தொண்டனேனை நன்பொன்னடிக்கீ ழெனையே செறித்தவா"திருவிருத்தம் (பைரவி)

## 11. பதிகம் : குறுவித்தவா குற்றநோய் . . . .

சிவபிரான் சூலைநோய் மடுத்தருளித் தம்மை ஆட்கொண்ட திறனைத் திருநாவுக்கரசர் மிகவும் வியந்து எடுத்துக்கூறிப் புகழ்ந்து போற்றுகின்ற பதிகம்.

"மறப்பித்த வாவல்லை நோய்வினை காட்டி மறப்பிததநோய
துறப்பித்த வாதுக்க நோய்வினை தீர்ப்பா னுகந்தருளி
சிறப்பித்த வாறடி யேனையை யாற னடிமைக்களே
சிறப்பித்த வாதொண்ட னேனைத்தன் பொன்னடிக் கீழெனையே 6

நான்காம் திருமுறை : "ஐயாறனடித்தலமே திருவிருத்தம்

12. இரட்டைப்பதிகம் : "சிந்திப்பரியன சிந்திப்பவர்க்கு....

"சிந்திப் பரியன சிந்திப் பவர்க்கு சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடுமை யாறனடித்தலமே" 1

ஐயாறன் அடித்தலம் அவ்வளவு எளிய தலமல்ல. சிந்திப்பரிய தலமாதலின் இருபது திருப்பாடல்களில் சிந்தித்துள்ளார். ஐயாறன் திருவடிகள் சிந்திப்பதற்கு அரியன, சிந்தித்தவர் மனத்தே செழுந்தேனைப் பொழிவன , முத்தியளிப்பன, பழவினை தீர்ப்பன ஐயாறன் திருவடிகளைப் புகலாகக்கொண்டால் நம்மைக்கடைத்தேற்றும் தலம் ஐயாறன் அடித்தலம். வேறெங்கும் காட்டாற்கரிய இறைவனது அடியுள்ள இடம் ஐயாறன் அடித்தலமாகும். திருவடிச் சிறப்புடைய இப்பதிகம் ஒவ்வொரு பாடலும், மிக்க இனிமையும், உருக்கமும் வாய்ந்தன. இப்பதிகத்தில் 'எழுவாய் இருவாய்', 'களித்துக்கலந்ததோர்', 'உற்றா ரிலாதார்க்கு', 'பேணித தொழுமவர்', 'ஓதிய ஞானமும்' எனத் தொடங்கும் பாடல்கள் எவருள்ளத்தையும் கொள்ளை கொண்டு கரைவிக்கும் இயல்பின. இதில் 19 வது பாடல் அருட்சக்திமிக்க வலுவுடைய பாடல், தெய்வீகப்பாடல்; உடனே பலன் தருவது என்பதற்குச் சான்று:

"சுழலார் துயர் வெயிற்சுட்டிடும்போது அடித்தொண்டர் துன்னும் நிழலாவன" எனும் இத்திருப்பாட்டில் அனுபவமாகக் கண்டதோர் உண்மை:

*திருத்தொண்டர் புராணத்திற்கு உரை எழுதிய கோவை சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதியுள்ள குறிப்புகள்:

"பல ஆண்டுகளுக்கு முன் ஆச்சாள்புரம் என வழங்கும் நல்லூர்ப் பெருமணம் தலத்திற்கு ஆளுடைப்பிள்ளையாரது

* திருத்தொண்டர் புராணம் (சி.கே.எஸ். உரை) திருநாவுக்கரசு நாயனார் புராணம் (செய்யுள் 1650 பக். 643 )

திருநாள் தரிசிக்கச் சென்றிருந்தேன். கடும் வெயிலில் 16, 17 நாழிகையளவில் நாயனார் திருவீதிப்புறப்பாடு செய்து திருவீதி எழுந்தருளினர். வைகாசி மாதம் ஆதலால் வெயிலின் கொடுமையால் பவனியில் முன்செல்லும் இசைவாணர்களும், குடை, கொடிச் சின்னம் பிடிப்போர்களும், பின் செல்லும் வேதபாராயண மறையவர்களும், உடன் வரலாற்றாது அங்கங்கும் பக்கங்களில் வீடுகளில் அமைத்த பந்தரிடை ஒதுங்கி வருவர்ராயினர். பின்பற்றி வந்த தேவார பாராயணத் திருக் கூட்டத்தாரும் விடாது பின்பற்றலானார். ஆயினும், வெயிலின் கொடுமையினால் நிற்கவும் மாட்டாது, அன்புநிலையின் நியதியினால் விட்டு நீங்கவும் மாட்டாது வருந்தினர். அடியேனும் உடன் நின்றேன். அது போழ்து தேவார ஐயா, அவர்கள் இத்திருப்பாட்டினை மனமுருகி ஓதினார். 5 கணங்களுக்குள் மேகம் சூழ்ந்து ஞாயிற்றை மறைத்தது. பின் அந்நாள் முழுவதும் ஞாயிறு காணப்படவில்லை. இஃது அடியேன் உடனிருந்து கண்ட காட்சி. இதனைச் சில அன்பர்களிடத்தில் பேசிப் போற்றிக் கொண்டிருந்தேன். கேட்டு மகிழ்ந்த அன்பர்கள் சில ஆண்டுகள் கழித்துத் திருப்புக்கொளியூர் அவினாசியில் நாயனாரது திருநாளின்போது இவ்வாறு கொடிய வெயில் பொறுக்கலாற்றாது அந்நிகழ்ச்சியினை நினைத்து இத் திருப் பாட்டினை ஓதினர் உடன் அதன் பயனைப் பெற்றதனையும் மகிழ்ந்து எனக்கறிவித்தனர்.

நான்காம் திருமுறை : 13 பதிகம் "அந்திவட்டத் திங்கள் ."திருவிருத்தம்

இரண்டு பாடல்களே உள்ளன.

"அந்தி வட்டத் திங்கட்கண்ணியன் ஐயாறமர்ந்து தந்தென்
புந்தி வட்டத் திடைப்புக்கு நின்றானையும் பொய் என்பனோ?"
சிந்தி வட்டச் சடைக்கற்றை யலம்பச் சிறிதலர்ந்த
நந்திவட்டத் தொடு கொன்றை வளாவிய நம்பனையே!

என்ற வரிகள் இறைவன் ஒருவன் உளன் என்பது பொயர். என்ற சமணர் கூறி வந்ததை ஏற்க முடியாமல் திருநாவுக்கரசர் இடர்ப்படுவதைப் புலப்படுத்துகிறது.

ஐந்தாம் திருமுறை: "ஐயாறரே" (மாயாமாளவகௌளை) திருக்குறுந்தொகை

14. பதிகம் : சிந்தை வாய்தலுளான்

நெஞ்ச மென்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்ச மென்பதோர் வான்கழிப் பட்டு நான்
துஞ்சும் போழ்து நின் னாமத் திருவெழுத்
தஞ்சந் தோன்ற அருளுமை யாறரே 3

இதில் நெஞ்சை நீள்கயமாக (குளம்) உருவகம் செய்து அதன் கழியாக வஞ்சம் என்பதனைக் குறிப்பிடும் திருநாவுக்கரசர் துஞ்சும் பொழுதும் நின்னாமத் திருவெழுத்து ஐந்தும் தோன்ற அருளும் ஐயாறரே என்று இறைவனை வேண்டிக் கொள்வது நாமும் இறக்கும் போது ஐந்தெழுத்தை மறவாது ஓதி ஐயாறன் அருளைப்பெற வேண்டும் என்பதை நமக்கு இதன் மூலம் அறிவுறுத்துகிறார்.

ஐந்தாம் திருமுறை: "வண்ணமு மாவர் ஐயாறரே"... திருக்குறுந்தொகை

15. பதிகம்: "சிந்தை வண்ணத்தராய்......

இப்பதிகம் ஐயாறப்பரின் பல்வகைப் பண்புகளாகிய வண்ண நலன்களைப் பாரித்து உரைத்துப் பாடிப்பரவுகிறது.

விரும்பும் வண்ணமும் வேதத்தின் வண்ணமும்
கரும்பின் இன்மொழிக் காரிகை வண்ணமும்
விரும்பு வார்வினை தீர்த்திடும் வண்ணமும்
அரும்பின் வண்ணமு மாவரை யாறரே . 7

ஆறாம் திருமுறை : ஐயாறனே! என்றென்றே நானரற்றி நைகின்றேனே! திருத்தாண்டகம்

16 பதிகம் : ஆரார் திரிபுரங்கள் நீறாநோக்கும்...

திருவையாற்றுத் திருத்தாண்டகங்கள் இரண்டு உள்ளன. ஒவ்வொரு பாடலிலும் "ஐயாறண்ணே என்றென்றே நானரற்றி நைகின்றேனே" என நைந்துருகிப் பாடிப் போற்றுகிறார். நாவரசர்.

விண்ணோர் தலைவனே யென்றேன் நானே
விளங்கும் இளம்பிறையா யென்றேன் நானே....
அண்ணா ஐ யாறனே யென்றேன் நானே
யென்றென்றே நானரற்றி நைகின்றேனே 7

எவ்வாறெல்லாம் இறைவனை வாய்மணக்க நாவினிக்க, உளங்கனிய, அழைக்க முடியுமோ அவ்வாறெல்லாம் தன்மையில் அழைத்தேன் நானே என உளமுருகிப் பாடுகிறார்.

ஆறாம் திருமுறை: "திருவையாறாகலாத செம்பொற் சோதீ" திருத்தாண்டகம்

17. பதிகம்: "ஓசையொலியெலாம் ஆனாய் நீயே....

ஓசையொலியெலா மானாய் நீயே
உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே....
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 1

இத்தாண்டகம் பெரியோர்களால் சிறந்ததாகத் தேர்ந்தெடுத்து பாடிப் பரவி வருவதாகும். இறைவனது பல்வேறு நிலைகளையும் திருவருட்குறிப்பால் உணர்ந்து இறைவனை முன்னிலைப் படுத்திப் பாடும், பதிகம் முழுதும் இறைவன் தனக்கு நல்லூரில் திருவடி தீக்கை அளித்தக் குறிப்பை நன்றி மறவாது புலப்படுத்துகின்ற அருமையே அருமை.

"எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. ....7

ஏழாம் திருமுறை சுந்தரரால் பாடப்பெற்ற திருப்பாட்டாகும்.
காலம் கி.பி. 690 710

சுந்தரர் பாடல்களில் கவிநயம், சொல்நயம், பொருள்நயம், மிக்குக் காணப்படும். "நயத்திற்குச் சுந்தரர்" என்பர். இவரது பதிகங்களில் இறைவன் இயல்பும், உயிர்களின் இயல்பும், உயிர் வாழ்க்கையின் இயல்பும், உயிர்கள் இறைவன் திருவருளைப் பெறுதலின் இயல்பும் இனிய செந்தமிழ் நடையில் கூறப்படுகின்றன. இறுதிப் பாட்டில் பதிக ஓதுபயன் கூறும்.

சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனாருடன் மலைநாடு செல்லுங்கால் காவிரித் தென்கரைத் திருக்கண்டியூரை வணங்கி வெளியே வரும்பொழுது 'திருவையாறு' எதிரே தோன்றியது. சேரமான் திருவையாறு சென்று வழிபட விரும்பினார். சுந்தரர் காவிரியில் வெள்ளம் கரைபுரண்டோடியது கண்டு ஐயாறனைக் "காவிரிக் கோட்டத்தையாறுடைய அடிகளோ" என அழைத்து ஆறு வழிவிலகப் பாடிய அற்புதப் பதிகம் அவர் பாடிய பண்களில் "காந்தாரம் பஞ்சமம்" பதிகம் இஃதொன்றே.

7ம் திருமுறை பண்: காந்தார பஞ்சமம் (கேதார கௌளை) பதிக எண் 77

18. பதிகம் : "பரவும் பரிசொன்றறியேன்...."

பரவும் பரிசொன் றறியேன்நான் பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைத்தாலும் எய்த நினையமாட்டேன் நான்
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ் கரும்பாலை
அரவந், திரைக்கா விரிக் கோட்டத்து ஐயா றுடைய அடிகளோ!"

கருத்து:

பொய்யாக்காவிரி வெள்ளத்தே பாக்கு தென்னங் குலைகள் அடித்துச் செல்லும் ஒலியோடு கரும்பாலைகளின் ஓசையும் சேர்ந்து, ஒலிக்கும் அலைகளையுடைய காவிரிக் கரையில் அமைந்த ஐயாற்றில் எழுந்தருளிய பெருமானே! காவிரிக் கோட்டத்தே அமர்ந்துள்ள ஐயாறா! உன்னைத் துதிக்கும் வகையறியாதவன் நான். பண்டு தொட்டுப் பழகியும் உன் தன்மைப்

புரியாதவன். இரவு பகலாக நினைத்தும் உன்னை அடைதற்குரிய வழிதெரியாதவனாய் உள்ளேன்.

*தாராசுரச் சிற்பச் சான்று :

"ஐயாறுடைய அடிகளோ" என அழைத்தபோது ஐயாற்றிறைவர் ஒன்றும் உணர்வால் அனைவரும் கேட்க "ஓலம்" என மொழிந்தருளினமையால் பொன்னிநதி மேல்பால் மலையென ஒதுங்கி நின்று ஆரூரற்கு நெறிகாட்டியது. இந்நிகழ்ச்சியைத் தாராசுரம் இராசராஜேச்சுரத் திருக்கோயில் விமானத்தின் அரைப்பட்டிகையில் அமைக்கப்பெற்றுள்ள திருத்தொண்டத் தொகை யடியார்களின் வரலாற்றுச் சிற்பங்களில் ஒன்றாகிய "உடைய நம்பிக்கு ஓலமென்றருளினபடி" என்ற தலைப்பிலமைந்துள்ள சிற்பத்தில் காணலாம்.

*சிற்பக் காட்சி:

இதன் கண், இடமிருந்து வலம் கண்டியூர்த் திருக் கோயிலும், சேரமான் பெருமாள் கைகுவித்து இறைஞ்சி உடன் நிற்க காவிரியின் தென்கரையில் நின்று கொண்டு வடகரை யிலுள்ள திருவையாற்றுக் கோயிலை எதிர்நோக்கிய நிலையில் வலத்திருக்கையினால் அழைத்து நிற்கும் நம்பியாரூரரும், அடுத்துக் காவிரியாறும், அதன் பெருவெள்ளம் மேல் பால் நிற்க நடுவில் வழியுண்டாகும்படி அதன் வடகரையிலுள்ள திருவையாற்றுக் கோயிலினின்றும் "ஓலம்" என்றதோர் ஓசை தோன்றி விரிந்த அடையாளமும், அதன்படி ஆற்றின் நடுவிலே வழியமைந் துள்ளமையும், காவிரியாற்றுப் பெருவெள்ளத்தில் மீன்களும், மரங்கள் முதலியனவும் செறிந்துள்ளமையும் காணப்படுகிறது.

பதிகச் சுருக்கம்:

ஐயாறுடைய அடிகளே! எங்கு சென்றாலும் அங்கங்கே வந்து என் மனத்தமர்ந்திருந்து முதல்நாள் பழகிய பழக்கம் போலவே கடைசிநாள் வரை பழகிக் காக்கக் கூடியவன். ஐயாறனே என்றும், கூடிப்பிரியேன் உன் அருள்வழி நின்றும்

* திருவையாறு கும்பாபிஷேக மலர் 1971. சுந்தரர் - பக்கம் 124

சிறிதும் விலகேன் என்றும், அடியேன் தவறேதும் செய்தேன் இல்லை, தவறிருப்பின் தீர்த்தருள்வதும் உன் கடன்தானே, ஆதியும் அந்தமுமான தலைவா பாம்பணி பரமா! தொழுவார் துயர் தீர்ப்பவனே! வடகரையில் உன்திருக்கோயிலைக் கண்டும் வழிபடற்கு இயலாத யான் மிக்கப் பெரும் பசியுடைய ஒருவன் உணவாதற்குரிய நெற்கதிரைக் கண்டு அதனை அரிசியாக்கி சமைத்துண்ணும் வாய்ப்பினைப் பெற முடியாதவன் போன்ற நிலையில் உள்ளேன், யான். ஆற்று வெள்ளத்தில் எதிர்த்து நீந்தமாட்டாதவனாயும் உள்ளேன்.

"கதிர்கொள் பசியே யொத்தே ஞான் கண்டேனும்மைக் காணாதேன்
எதிர்த்து நீந்த மாட்டேன் நான் எம்மான்றம்மான் தம்மானே" 9

எனப்பாடுவார். மேலும், அடியார்களாகிய நாங்கள் கூச்சத்துடன் இருந்தாலும் குணம் கூற மறுக்கின்றேன். குறிப்பறியாதவரோ நீர்? உன் தொண்டனாகிய நான் நும்மொடு பிணங்கியும் உம்மை உணரப் பெற்றிலேன். நும்மை காணாத இந்நிலையில் மீண்டும் திருவாரூரே. திரும்பிச் சென்று விடலாம் என்று எண்ணும் நிலைக்கு வந்துவிட்டேன். இனி உன் கடன் என

"கூடி யடியா ரிருந்தாலும் குணமொன்றில் லீர் குறிப்பில்லீர்
ஊடியிருந்தும் உணர்கிலேனும்மை....... தேடியெங்கும்
காண்கிலேன் திருவாரூரே சிந்திப்பன்
என வருந்திப் பாடியதும் காவிரி வெள்ளம் ஓங்கி உயர்ந்து
விலகி வழிவிட்டது என்பதனை அறிகிறோம்.

எட்டாம் திருமுறை:

மணிவாசகரால் அருளப்பெற்ற திருவாசகம்

காலம் கி.பி. 850 925

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டின் திருவாதவூர் எங்கோனாகிய **மணிவாசகப் பெருமானாரால்** அருளிச் செய்யப்பெற்றவை திருவாசகமாகும். இதில் பதி, பசு, பாச இலக்கணங்கள் பசுத்தன்மை கெடுதல், இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநி பாதம், அடியாரிலக்கணம் முதலிய பல சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை உள்ளடக்கிப் பாடியுள்ளார்கள்.

நயங்கள், அணிகள், உவமைகள், சுவைகள், பழமொழிகள் முதலியன அடிகள் வாக்கில் செறிந்துள்ளன. இயற்கைப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் கடவுள் வடிவாகவும், சக்தி சிவமயமாகவும், உவமித்து விவரித்தலில் அடிகள் வல்லுநர். மகளிர் விளையாட்டுக்கள் மூலம் கடவுளுணர்ச்சியைப் புகுத்திக் காட்டும் புது உத்தியைக் கையாண்டுள்ளார். பூவல்லி, அம்மானை, கோத்தும்பி, திருப்பொற் சுண்ணம், பொன்னூசல் போன்ற பாடல்களைப் பாடுவதில் அடிகளுக்கு நிகர் அடிகளே. சுருங்கக் கூறின், அடிகள் திருவாக்கு மெய்யுணர்வையும், உள்ளக் கனிவையும், முத்தியையும் நல்கும் பெற்றித்தாகும்.

மணிவாசகப் பெருமான் திருவையாற்றிலிருந்து கொண்டு எப்பகுதியையும் பாடவில்லையென்றாலும் திருவம்மானை, திருப் பொற் சுண்ணம், ஆசைப்பத்து, ஆய பகுதிகளில் இருந்த இடத்தில் இருந்து கொண்டே ஐயாற்றெம்மானை நினைந்து மிக உயர்த்தி மிக உருக்கமாகப் பாடியுள்ளதைக் காணலாம்.

அண்ணாமலையில் அருளிய திருவம்மானை:

"கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்கும் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க்கல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய்"

கையில் அணிந்திருக்கும் வளையல்கள் ஒலிக்கவும், காதில் அணிந்திருக்கும் தோடுகள் அசையவும், கருமையான கூந்தல் புரளவும், அணிந்துள்ள மலர்களினின்று தேன்பெருகவும் அதை நாடிய வண்டுகள் ரீங்காரமிடவும் செய்கின்ற அம்மையும் செந்நிற மேனியும் வெண்ணீறணிந்திருப்பவனும், யாரையும் இருகரங் குவித்து வணங்காத கையையுடையவனும், எங்கும் நிறைந்திருப் பவனும், அன்பர்க்கு உண்மைப் பொருளாய் இருப்பவனும், அன்பர் அல்லாதார்க்கு இருந்தும் இல்லாதவன் போன்ற பேரறிஞனுமாகிய ஐயாற்றில் அமர்ந்திருக்கும் அப்பனை (ஐயாறப்பனை) அம்மையீர் அம்மானை ஆட்டத்தில் அவன் புகழைப்பாடி ஆடுவோமாக.

## இப்பாடலின் ஒரு தனிச்சிறப்பு:

*அம்மானை ஆட்டத்தில் பெண்களின் வளையல், குழை, கூந்தல், மலர் வண்டு இவைகள்தாம் ஆடி , ஆடி ஒலிக்கின்றன. இவ்வைந்தும் அம்மையின் செயலாகவும், 1. செக்கச்சிவந்த மேனியனாயும், 2. வெண்ணீற்றுப் பூச்சுடையனாயும், 3. யாரையும் வணங்குதலறியாக் கையனாயும், 4. எங்கும் பரந்துள்ளவனாயும் 5. அன்பர்க்கு அன்பனாயும் 6. அன்பரல்லாதார்க்கு அல்லாத வேதியனாயுமுள்ள இவ்வாறும் அப்பனின் செயலாகவும் கொள்வர். அம்மையும் அப்பனும் ஐந்தும் ஆறுமாக உமையொரு கூறுடைய ஐயாறனாய் ஐயாற்றில் அமர்ந்த இவரைப் பாடுவோம் என்ற ஒரு பொருளும் நமக்குக் கிடைப்பது ஒரு தனிச் சிறப்புடைமையன்றோ!*

## மற்றொரு முக்கிய செய்தி:

*"சேர்ந்தறியாக்கையானை" என்பதற்கு, அறிஞர் பெரு மக்களின் தனிக்கருத்து: மூத்த திருக்கோயில் சிதம்பரம். நாள்தோறும் பிறதலங்களின் மூர்த்திகள் யாவும் உலகிலுள்ள எல்லாச் சிவகலைகளும் ஒருசேர அர்த்தயாமத்தில் சிதம்பரம் வந்து வணங்கி அம் மூர்த்தியுள் ஒடுங்குகின்றனவாம். திருவையாற்று ஐயாறப்பர் மட்டும் சேர்ந்தறியாக்கையனாய் இருகரங்குவித்து எவரையும் வணங்குதற்கு அவசியமில்லாத வனாய்ச் "சேர்ந்தறியாக்கையனாய்" இங்குள்ளான் என்ற அரிய பொருளையும் வழங்குவர். ஆன்றோர் இவர் திருவையாறகலாத செம்பொற்சோதியல்லவா*

## தில்லையில் அருளிய திருப்பொற் சுண்ணம்:

*பலவகை மணப்பொருள்களை உரலில் இட்டு மகளிரால் இடிக்கப்படுவது பொற்சுண்ணம். இது பொன்போன்றே நிறமுடையது. பொன்னும் சிறிது சேர்த்து இறைவன் திருமஞ்சனத்திற்காக இடிக்கப் பெறுவது. இதனை பெண்கள் பாடிக் கொண்டே இடிப்பார்கள். இதற்கு சுண்ணப் பாட்டு என்று பெயர்.*

முத்து நல்தாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல்தீபம் வைம்மின்!
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டு இசைமின்!
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொள்மின்!
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
ஆடற்பொன் சுண்ணம் இடித்தும் நாமே!

*பெண்களே! நம் இல்லந்தேடி ஐயாறன் வருகின்றான். அவனை வரவேற்க அழகிய முத்து மாலைகளையும் பூமாலைகளையும் தொங்கவிடுங்கள்! முளைக்குடத்தையும், தூபகலசத்தையும் தீபத்தையும் வையுங்கள்! சத்தி, சோமி, பூமா, சரசுவதி எல்லோரும் கூடிப் பல்லாண்டு பாடுங்கள். சித்தி, கௌரி, பார்வதி, கங்கா எல்லோரும் வந்து சாமரம் வீசுங்கள். ஐயாற்றெம் பெருமானாகிய நம் தந்தையின் பெருமைகளைப் பாடி அவனுக்காக நாம் பொற்சுண்ணம் இடிப்போமடி வாருங்கள்.*

*வந்துவிட்டார் வந்து விட்டார். இதோ நம் ஐயாற்றெம்பெருமான். அவர் புகழ்பாடி மணத்தூள் இடிப்போம். அவர்மீது தூவுவோம். என மகளிர் ஒருவரையொருவர் கூவி அழைத்துக் குதூகலிக்கின்ற இதன் அழகே அழகு.*

## திருப்பெருந்துறையிலருளிய ஆசைப்பத்து

கையால் தொழுது உன்கழல் சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு
எய்யாது என்தன் தலைமேல் வைத்துஎம்
பெருமான் பெருமான் என்று
ஐயா என்தன் வாயால் அரற்றி
அழல்சேர் மெழுகு ஒப்ப
ஐயாற்று அரசே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே! 8

*எம்பெருமானே! மனம், மொழி, மெய்கள் பொருந்த இருகரங்குவித்து உன்னை என்றும் வணங்கவும், சிவந்த உன் [illegible] தழுவிக் கொள்[illegible] இறுகும்*

தளராமல் என்தலைமேல் வைத்துக் கொண்டு மகிழ்ச்சியில் திளைத்தாடவும் அருள்புரிவாய், மேலும், ஆனந்தாதீதத்தில் எம்பெருமானே! எம்பெருமானே! ஐயா! ஐயா! ஐயாற்றரசே என்றெல்லாம் வாயினால் புலம்பியும், கண்களாற் கசிந்து கண்ணீர் மல்கியும், தழலது கண்ட மெழுகாய் உள்ளமுருகவும், துரியாதீத நிலையில் நிற்கவும் நான் ஆசைப்படுகிறேன். அம்மானே அருள் புரிவாயர்க.

ஏம் தலைவனே! என்னிடம் பொருந்தியுள்ள இவ்வாசை தனைக் கண்டீரா? பேராசையைப் பார்த்திரா! பொருத்தமான ஆசைதான் என்றாலும் யாருக்கும் எளிதில் இந்நிலை ஏற்படாது. எளியேனாகிய எனக்கு இந்நிலை ஏற்பட கருணை பாலிக்க வேண்டுகின்றேன. அது நீர் நினைத்தால் தான் கிட்டும். உன் அருள்துணை ஒன்று மட்டும் இருந்தால் போதும், இந்நிலை இயல்பாக வந்து விடும் எனறெலலாம் ஐயாற்றெம்மானை நமக்காக அம்மானையிலும் பொறசுண்ணததிலும் ஆடிப்பாடிய மணிவாசகப் பெருமான் ஆராக காதலின் விளைவை அன்பின் முதிர்ச்சியை இவ்வொசைப் பறநிலும் கொட்டித் தீர்தது விடுகிறார். என்னே அருமை பாட்டின் இனிமை

**பத்தாம் திருமுறை:**
**திருமூல்தேவர் அருளிய திருமந்திரம்**

தேவாரமூவர் காலத்திற்கு முந்தியவர் திருமூலர் வாக்குப்படி "ஒப்பில் ஏழுகோடி யுகமிருந்தேனே" அவர்க்கு ஆண்டுக்கணக்கே இல்லை எனலாம். திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தமர்ந்து, ஆண்டுக்கொரு திருப்பாடலாக மூவாயிரம் மந்திரங்கள் அருளிச் செய்தவர்.

சிவனுக்கு இணையான தெய்வமோ ஒப்பான நிகரான தெய்வமோ எங்கு தேடினும் கிட்டா இல்லை இது ஐயாறனின் பொன்னவிர் சடை முடி பிரகாரததே பரந்து விரிந்து கிடந்தலை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

"சிவனோ டொக்கும் தெய்வந் தேடினும் இல்லை
அவனோ டொப்பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவளச் சடைமுடித் தாமரையானே!"

'சிவன்' எனும் சொல், 'மங்கலம்' அல்லது 'நன்மை' என்று பொருள்படும். "சிவம் நன்மை குறுணி முத்தி" என்பது சூடாமணி நிகண்டு. "எல்லா உயிர்களுக்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவம்" என்று திருக்கோவையாருக்கு உரை எழுதிய பேராசிரியர் கூறுகிறார். உண்மை, அறிவு, இன்பம் (சச்சிதானந்தம்) என்னும் மூன்றின் நிலைக்களமே சிவமாகும். எப்பொருள் அறிவுமயமாயிருந்தது அனைத்துயிர்களுடைய அறிவை விளக்குமோ அதுவே சிவம்; எப்பொருள் எல்லா உயிர்களும் நுகர்கின்ற இன்பத்துக்கு இடமாய் நிற்குமோ அதுவே சிவம்.

"சிவனெனும் நாமம் தமக்கேயுரிய செம்மேனியம்மான்" ஐயாற்று செம்பொற் சோதிப் பெருமான் இதனைத் திருமூலர் தம் வாக்கில்

ஆர்அறி வார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆர்அறி வார் அவ் வகலமும் நீளமும்
பேர்அறி யாதபெருஞ் சுடர் ஒன் றதின்
வேர்அறியாமை விளம்புகின்றேனே. திருமந்திரம் 32

எங்கள் சிவபெருமானது திருவருளின் பெருமையை முற்ற உணர்வார் எவருமிலர். அவரது பரப்பையும் எவராலும் உணர முடியாது. சொல்லுக்கும் பொருளுக்கும் அகப்படாத பேரறிவுப் பெருஞ்சுடராய்ச் செம்பொற் சோதியாய் உள்ளது. அதனை ஒப்புமை இல்லாத மெய் நிலையை அறியாமல் நான் கூறத் தொடங்கினேன், என திருமூலரே செம்பொற்சோதிப் பெருமானை வியந்து கூறியதாகக் கொள்வோம்.

11 ஆம் திருமுறையில் "ஐயடிகள் காடவர்கோன்" பாடிய க்ஷேத்திர வெண்பா: "குந்தி நடந்து...."

(இவரது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டென்பர்)

ஐயடிகள் காடவர்கோன்

பல்லவர்குல மன்னர் மரபில் தோன்றியவர், கலியும், பகையும் நீங்கக் காஞ்சியில் சிவநெறியால் நீதியொடு அரசோச்சி வந்தவர். தென்தமிழும், வட மொழியும் பன்னுகலை பணி செய்யவும், அண்டர்பிரான் அமர்ந்துறையும் ஆலயங்கள் பலகண்டிறைஞ்சவும் விரும்பினார். அதற்கு அரசாட்சி இன்னலுடையதெனக் கருதித், தன் மகனிடம் ஆட்சிப் பொறுப்பைத் தந்து திருக்கோயில் பல செல்வாராயினர். முதலில் திருச்சிற்றம்பலத்தே ஆடல்புரியும் செஞ்சடை நிருத்தனார் திருக்கோயில் புக்கு, திருக்கூத்தன் புகழைச் செந்தமிழின் வெண்பாவால் பாடினார். அடுத்து அவருக்குச் சிறப்புறத் தெரிந்த கோயில் ஐயாறாகும்.

திருமுறைகளில் ஐயாறு பலபடப் பலராலும், சிறப்பிக்கப் பெற்றிருந்தாலும், ஐயடிகள் காடவர்கோனால் "ஐயாறு" என்பதற்கு ஐ +று "ஐந்தெழுத்தை ஓதுதலின் வழியாக இன்பம் எய்தி வீடு தரும் ஐயாறு" எனும் அரும்பொருளை உணர்த்தப் பெறும் அருமைப்பாட்டை அறிகிறோம். ஐயாற்றின் அருமை பெருமை களை அவர் நன்கறிந்து கொண்டு தமக்கும் பிறர்க்குமாக அறிவுறுத்துகின்றார். யாக்கைநிலை யாமை யாவரும் அறிந்த ஒன்றுதான் எனினும், முதுமை முதிர்ந்தால் எந்நிலை நேரும் அதன் இயல்பு எத்தகைய், அந்நேரத்து நாம் செய்ய வேண்டிய கடமைதான் என்ன, என்பதையெல்லாம் சுருக்கமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

' குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி யேங்கி நுரைத்தேறி வந்து ந்தி
ஐயாறா வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை"

அற்புதப் பாடல்; ஐயடிகள் காடவர்கோன் நாயனாரால் கண்டறிந்துரைத்த கருவூலமாகிய வெண்பா இது. கருவூர் செல்லா வழியைச் சொல்லித் தருகிறது:

முதலடியில், குந்தி நடக்கும் முறையும், குனிந்த நிலையில் ஒருகை கோலூன்றிச் செல்லும் செலவும், கிழப்பருவத்தின் முதிர்ந்த நிலையை உணர்த்தப்படுகிறது.

இரண்டாமடியில் நொந்து, இருமி ஏங்கி, நுரைத்தேறி என்பன மூப்புப் பிணியின் கொடுமையைத் தெரிவிக்கின்றன.

மூன்றாமடியில் அமைந்த ஐயாறு என்பது ஐப்பகுதியாகிய கபம் கட்டி தொண்டை வழி பாய்ந்தால் சொல்லெழாது பேச முடியாத நிலை தோன்றுமாதலினால் முன்னறிவிப்பாக நான்காமடியில் ஐயாற்று ஐயாறரை "ஐயாறா" என வாயால் அழைத்துப் பழகு என நல்லுபதேசம் செய்கிறார். இதே கருத்தை 'ஐமேலுந்தி அலமந்தபோதாக அஞ்சேல் என்றருள் செய்வான் அமருங் கோயில்' என ஞானசம்பந்தரும், "ஐயாறே ஐயாறே என்பீராகில் அல்லல் தீர்ந்து அமருலகம் ஆளலாமே" என அப்பர் சுவாமிகளும் கூறுவது ஒப்ப நோக்கத் தக்கதாம். ஐயாற்றுக்கேயுரிய சீர்சால் சிறப்புக்கள் இவை.

பன்னிரண்டாம் திருமுறை:

*சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம்*

*காலம் : 12 ஆம் நூற்றாண்டு*

தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் பிறந்தவர். அனபாயன் எனும் குலோத்துங்க சோழனின் அமைச்சராக இருந்தவர். மன்னன் ஜைனம் சார்ந்திருந்தவனைச் சைவ சமயம் சாரப் பெரியபுராணம் பாடினார். சிலப்பதிகாரம் போன்று இதனையும் தமிழ்நாட்டு (National Epic) தேசிய காவியம் என்பர். "பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட பாடிய கவிவளவரானார்" செயற்கரிய செயல்களைச் செய்து வீடுபேறு பெற்ற 63 நாயன்மார்களது வரலாறு பெரியபுராணம் ஆகும். இதனில் திருவையாறு பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே விரவி வந்துள்ளவற்றைக் காண்போம்.

எடுத்த எடுப்பிலேயே சேக்கிழார் பெருமான் திருமலைச் சிறப்பில் உபமன்யு முனிவர் தன்னுடன் சூழ இருந்த சுத்தயோகியர், வான்திசை எட்டியும் மேற்பட வந்த தென்திசைப்

புண்ணியம் யாதென வினவ, தென்திசைக்குப் பெருமை சேர்க்கும் திருத்தலங்கள் பல உள்ளன. என்றருளி,

"நங்கள் நாதனாம் நந்திதவம் செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணிமலரக் கனல் மலர்ச்
செங்கை யாளர் ஐயாறுந் திகழ்வது."

என்று முனிவர் மூலமாகத் திருவையாற்றின் பழம்பெருமையைச் சேக்கிழார் பெருமான் அருளிப் போந்துள்ளார்.

திருநாவுக்கரசு நாயனார் புராணம்:

திருநாவுக்கரசர் தம் வாழ்க்கையில் செயற்கரிய செயல் ஒன்றைச் செய்தார். இதுவரை நாயன்மார்கள் பலரும் காளத்தியை கயிலையாகக் கருதி தலயாத்திரையை முடித்துக் கொள்வர். இவரோ தமது 80 வயதில் காளத்தி சென்று வழிபட்டவர், கயிலையையும் காண விழைந்தார்.

"பேணு திருக் கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலம்
காணுமது காதலித்தார் கலைவாய்மைக் காவலனார்"

என்பார் சேக்கிழார்

இமயக் கொடுமுடியாகிய எவரெஸ்ட் சிகரத்தை (29.5.1953) எட்டிப் பிடித்த டென்சிங், ஹில்லேரி போன்று சந்திர மண்டலத்தில் முதன்முதலில் (21.7.1969) காலடி எடுத்து வைத்த ஆம்ஸ்ட்ராங் போல விஞ்ஞானம் பெருகியுள்ள இக்காலத்திலும் சென்று அடையச் சிரமமாக உள்ள கயிலாயமலையை 7 ஆம் நூற்றாண்டிலேயே இன்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்பே அப்பர் சுவாமிகள் காலினால் நடந்து சென்றார்கள். என்றால், இதற்குக் காரணமென்ன? திட்பம் திருவருட் • சக்தியோடு கூடிய உளத்திட்டம் தான் காரணமாயிற்று.

கயிலை காணும் காதலே ஊக்கமும் உறுதியும் தந்தது., அதுதுடன் இறையருளும் உறுதுணையாகக் கொண்டு, கால்தேய்ந்து, மார்புதேய்ந்து, புரண்டு சென்றவர், செயலற்றுக் கிடந்தார். (Men Power) மனித சக்தி ஓய்ந்துவிட்டது, என்பதைச் சேக்கிழார்.

"மெய்ப்பு றத்தில் உறுப்ப ழிந்தபின் மெல்ல உவந்து முயற்சியும்
தப்பு றச்செய லின்றி அந்நெறி தங்கி னார்தமி ழாளியார்"

என்பார். "தமிழாளியார்" எனும் அருந்தமிழ்ப் பெயரைச் சேக்கிழார் அப்பரடிகட்குச் சூட்டுகிறார். நாவுக்கு அரசர் அல்லவா? தமிழால் ஆளும் தகைமையரானார். எனும் கருத்தில் "தமிழாளியார்" என்றார்.

அல்லலுற்று வருகின்ற அப்பர் சுவாமிகளின் அரும்பெரும் பத்திமையைப் பரமன் நன்கு அறிவான். நினைத்திருந்தால் அங்கேயே கயிலையைக் காட்டி ஆட்கொண்டிருக்கலாம், காரைக்கால் அம்மையார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோர் மானிடச் சட்டையோடு கயிலை வந்தாரை ஏற்றுக் கொண்ட பரமன், நாவுக்கரசருக்கு மட்டும், 'மானுடப் பான்மையோர் அடைவதற்கு எளிதோ கயிலைமால் வரை மீள்வதே உமக்குக் கடன்! என்றாரே ஏன்? காரணமில்லாமல் தடுத்து நிறுத்துவாரா பரமன்?

"ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே"

என்பார் சுந்தரர்.

காரைக்கால் அம்மையார் தம் மானிடச் சட்டையை உதிர்த்து மும்மலமயக்கம் ஏதும் இன்றிச் சுத்த மாயா சரீரத்தோடு (பேய் வடிவில்) பிரணவதேகமாக மிதந்து சென்றார். ஏற்றுக் கொண்டார் இறைவன். அப்பர் சுவாமிகளுக்கு அந்நிலை இனிக் கிட்டி வரவும், மன்னுதீந்தமிழால் தன்னை மேலும் போற்றிசைத்து வரவும், பரமன் இச்சை கொண்டான். அதனால்தான் "தடம் பொய்கை ஒன்றைக் கையில் கொண்டு வந்ததாகக்" கருத்தாழத்துடன் கூடிய பாடலைத் தருகிறார் தெய்வச் சேக்கிழார்.

"அன்ன தன்மையர் கயிலையை அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த
நன்னெடும்புனல் தடமும் ஒன றுடன்கொடு நடந்தார்
பன்ன கம்புனை பரமரோர் முனிவராம் படியால்"

இப்பொழுது பிரணவ தேகம் அதாவது ஒளியுடல் பெறுதற்கான தகுதி இவருக்கு இருக்கிறதா? என்பதற்கு இறைவன் சிறுதேர்வு ஒன்றனை வைக்கிறான். இவரும் வெல்கிறார். அதுதான் "மானுடத்தியல்பினர் நீர் அமரரும் அணுகுதற்கரிய கயிலையை நீர் காண்பதரிது; மீள்வதே உம் கடன்" என்ற பரமனின் வார்த்தையையே

"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கைக் கண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டுமீ ளேன்" என மறுத்தார். 366

மறுத்தார், அது உரிமை மறுப்பு; உள்ள உறைப்புடன் கூடியதாக தன்னம்பிக்கையுடன் இருந்தது கண்டு மகிழ்ந்தான் பரமன் உடன் மறைந்தான்., விசும்பிடைக் கரந்து நீள்மொழியால் (அசரீரியாக )வானொலி மூலம்.

"ஓங்கு நாவினுக் கரசனே! எழுந்திர் என்றுரைப்பத்
தீங்கு நீங்கிய யாக்கைகொண் டெழுந்தொளி திகழ்வார்" 367

என்பது சேக்கிழார் பெருமான் கூற்று அல்லவே அல்ல, அவரது உள்ளத்து அமர்ந்துரைக்கும் தெய்வ நாயகனின் திருவாக்காகும். அதுதான் பரமன் பாங்காக அப்பர் பெருமான் கயிலை காணத் தகுதியுடைய ராகத் தேய்ந்த கைகால் நலமுடன் தீங்கு நீங்கிய உடம்புடன் ஒளி உடம்புடன் திகழச் செய்தார். பிரணவ தேகம், ஒளியுடல் கிடைத்துவிட்டது. அதனால் தெய்வீகத் திருவுரு அடைந்த "திருநாவுக்கரசே எழுந்திரு" என்றார். அதாவது மலபரிபாகமற்ற தெய்வயாக்கை எய்தினார். இப்பொழுது தன் கருத்தை அப்பர் பெருமான் இறைவனிடம்

"அண்ண லே எனை ஆண்டுகொண் டருளிய அமுதே!
விண்ணி லே மறைந்த தருள்புரி வேதநா யகனே!
கண்ணி னால் திருக் கயிலையில் இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்புரி" எனப் பணிந்தார். 368

பணிந்து விண்ணப்பித்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட பரமேட்டி; திருநாவுக்கரசருக்காக தடம் ஒன்று கொண்டு வந்தார் அல்லவா, அதுதான் இன்று கயிலைமால்வரை சார்ந்துள்ள 'மானசரோவர்' எனும் தடாகமாகும். அப்பர் மூழ்க

பெருமான் தோற்றுவித்த தடாகம் (விசாலமான ஏரி) எனக் கொள்வதில் தவறேதும் இல்லையே. இன்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன் தோற்றுவித்த பழமை வாய்ந்தது. எனவே பெருமான் ..............................."இப்பொய்கை

முழுகி நம்மைநீ கயிலையில் இருந்தஅம் முறைமை
பழுதில் சீர்த்திரு வையாற்றிற் காண்" எனப் பணிந்தார் 369

ஏற்றினார் அருள் தலைமிசைக் கொண்டெழுந் திறைஞ்சி
வேற்று மாகி விண் ணாகி நின்றார் மொழி விரும்பி
வேற்றாகிவிண்ணாகி கயிலாயப் பதிகம் பாடினார். 370

ஆதி தேவர்தந் திருவருட் பெருமையார் அறிந்தார்
போத மாதவர் பனிமலர்ப் பொய்கையில் மூழ்கி
மாதொர் பாகனார் மகிழும்ஐ யாற்றிலோர் வாவி
மீது தோன்றிவந் தெழுந்தனர் உலகெலாம் வியப்ப 371

இமயமலை அருகில் உள்ள தடம் புனல் மூழ்கியவர் திருவையாற்று மலர்ப்பொய்கையில் எழுந்தார் என்றால் யார் ஏற்றுக் கொள்வார். உலகியல் நோக்கில் அறிவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் தெரியாது. தெய்வீக ஆற்றல் தெளிந்தாருக்கே இஃது சாலும். எளிய மக்கள் இதனை ஏற்றுக் கொள்ளும் தரமல்லர். அன்று சுந்தரர் பெண்ணையாற்றில் பொன்னைப் போட்டு திருவாரூர் குளத்தில் எடுத்தார் அல்லவா, அது போன்று அருள்வலியுடையார்க்கே அது சாலும் என்பது விளங்க; எழுந்தனர் உலகெலாம் வியப்ப என்றார். நம் போன்றார் நிலையில் வைத்துக் காணில் அதன் உண்மைப் புலப்படா. எனவே இறையருள் துணையுடன் அப்பர் பெருமான் நீங்கு நீங்கிய யாக்கையுடன் ஒளியுடலோடு யாதும் சுவடுபடாமல் திரு ஐயாற்றுத் திருக்குளத்தில் தோன்றி எழுந்தார். ஊர் தெரிகிறது., கொடியுடை வீதிகள் தெரிகின்றன. திருவையாறுடை நாயகர் தெரிகிறார். அவர் சேவடிகளில் பணிய விரைகிறார்.

"மிடையும் நீள்கொடி வீதிகள் விளங்கிய ஐயாறு
உடைய நாயகர் சேவடி பணியவந் துறுவார் 373

அடடா! அவர் கண்ணில் பட்ட யாவும் சிவசக்தி வடிவாகவே காட்சியளித்தன. கங்கை முதலான தெய்வத்

தீர்த்தங்கள் யாவும் இங்கு வந்து வணங்கி நிற்கவும் தேவகணங்கள் போற்றிசைக்கவும் கண்டார். வெள்ளி வெற்பர்ம் கயிலை மலை இரண்டாகி விட்டதோ என யாவரும் சிந்தை வியக்கும் நிலையில் நந்தியெம்பெருமான் சந்நிதி முன் நின்றார். கயிலாயமாகிய வெள்ளிமலை மீது மரகதக்கொடி படர்ந்துள்ளது போன்று, பவளமேனிப் பரமன், பசுமை மேனி மலைமகளுடன் வீற்றிருக்கும் கோலத்தை திருநாவுக்கரசர் கண்டார் என்பதை தெய்வச் சேக்கிழார் தம் வாக்கில்

"வெள்ளி வெற்பின் மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூட வீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்" 379

திருவையாற்றுத் திருக்கோயிலே கயிலாயமலையாயக் காட்சி அளிக்க உமையொரு பாகன் அமர்ந்துள்ள காட்சியில் திளைத்து மகிழ்ந்து நிற்கின்ற போதே கயிலாயக் காட்சியைப் பெருமான் (திரைப்படங்களில் உண்மைக் காட்சி சிறிது சிறிதாக மறைந்து பழைய காட்சியாக மாறுவது போல) தூரமதாக்கினார். இப்பொழுது கயிலாயம் மறைந்து உண்மைத் திருவையாறு தெரியக் கண்டார்.

"தூய தொண்டருந் தொழுதெதிர் நிற்கஅக் கோலம்
சேய தாக்கினார் திருவையாறு அமர்ந்தமை திகழ 382

ஐயர் கோலங்காட்டி மறைய தொண்டர்தம் மகிழ்ச்சி மறைந்து தாம் கண்ட அனுபூதி நிலையை

"மாதர்பிறைக் கண்ணியானை மலையான்மகளொடும்" என்னும்,
கோதறு தண்டமிழ்ச் சொல்லால் குலவு திருப்பதிகங்கள்
வேத முதல்வர்ஐ யாற்றில் விரவுஞ் சராசரம் எல்லாம்
காதல் துணையொடுங்கூடக் கண்டேன்" எனப்பாடி நின்றார். 384

வாழ்க்கையில் கிடைத்தற்கரிய பெரும்பேறாகக் கயிலைக் காட்சியைக் கண்ட அப்பர் அடிகள் ஐயாறப்பரை மறவாது பலநாட்கள் தங்கி திருத்தாண்டகம், குறுந்தொகை, நேரிசை, விருத்தங்கள் பலவும் பாடி, தொண்டு பல செய்து கொண்டு

'அண்டர்பிரான் திருவையாறமந்தனர் 'நாவுக்கரசர்' என முடிக்கின்றார். அதன்பின் நெய்த்தானம், மழபாடி பணிந்து பூந்துருத்தி, சேர்ந்திருந்தார், என்றெல்லாம் திருத்தொண்டர் புராணத்தே தெய்வச் சேக்கிழாரின் திருவாக்குப் பதிவாகியுள்ளது.

அடுத்து திருஞானசம்பந்தர் புராணம்:

*திருப்பழனத்திலிருந்து ஞானசம்பந்தப்பிள்ளையார் தாமரைத் தடாகம் சூழ்ந்த திருவையாற்றை வந்தடைந்தார்.*

*"அழனக்க பங்கய வாவி ஐயாறு சென்றடைகின்றார்" 299*

*திருவையாற்றில் வாழும் தொண்டர்கள் யாவரும் ஊரை அலங்கரித்து " ஞானபோனகர்" வந்தார் என்ற களிப்பு மீதூற ஆடல் பாடலுடன் எதிர்கொண்டு அழைத்தனர் என்பதை.*

"மாடநிரை மணிவீதித் திருவையாற்றினில் வாழு மல்கு தொண்டர்
நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர் வந்து நண்ணினார்" 300

*ஞானசம்பந்தப் பெருமானும் முத்துப்பல்லக்கிலின்றும் கீழே இறங்கித் தொண்டர் புடைசூழ நந்தி திருவருள் பெற்ற நன்னகரை முன்னிறைஞ்சி நன்னும் போதில், "ஐந்து புலன் நிலைகலங்கும் இடத்தஞ்சேல் / என்பார்தம் ஐயாறு" என புலனைந்தும் பதிகம் பாடினார். இதில் எங்குமில்லாத தனிப்பெருங் கூத்தாடுந் திறத்தன் ஐயாறன் என்பதைத் திருவருட் திறத்தால் கண்டுணர்ந்து பாடினார் ஞானசம்பந்தப் பெருமான். இவ்வரிய நிகழ்ச்சி, அப்படியே சேக்கிழார் பெருமான் மனக்கண்ணில் நன்கு பதிந்துவிட்டது.*

"கோடல் கோங்கக் குளிர் கூவிளம்" என்னுந் திருப்பதிகக் குலவுமாலை
நீடுபெருந் திருக்கூத்து நிறைந்துரு உள்ளத்து நிலைமை தோன்ற
ஆடுமா றதுவல்லான் ஐயாற்றெம் ஐயனே"

*என்று நின்று பாடினார் ஆடினார் பண்பினொடுங் கண்பொழி நீர் பரந்து பாய. 303*

*சேக்கிழாரும் ஞானசம்பந்தரோடு தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டு பாடுகின்றதைப் பார்க்கின்றோம். அருளாளர்தம் அகக் கண்களுக்கு ஐயாறன் "பாண்டரங்கம்" எனும் அருமைக் கூத்து*

ஆடுமாறது வல்லான் ஐயாற்றெம் ஐயனே" எனத் தெளிவாகத் தெரிகிறது.

## கழறிற்றறிவார் புராணம்:

சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனாருடன் மலை நாட்டுக்குச் செல்லும் பொழுது திருக்கண்டியூர் வணங்கி வெளியே வரும்பொழுது திருவையாறு எதிர்தோன்ற சேரமான் பெருமானார் அங்கு சென்று இறைவனை வணங்க வேண்டு மெனக் கூறுகிறார். ஓடம் செல்லமுடியா நிலையில் காவிரி வெள்ளம் பெருகிச் சென்றாலும் சுந்தரரும் ஐயாறன் திருவடி தொழ நினைந்து உருகிப் பாடினார். பரவும் பரிசொன்றறியேன் நான்..... காவிரிக்கோட்டத்தையாறுடை அடிகளோ" என அழைத்துப் பாடினார். காவிரி வழிவிலகச் சென்று பணிந்து மீண்டனர். என்பதறிகிறோம்.

## நிறைவுரை:

இதுகாறும் சைவத் திருமுறை இலக்கியங்கள் பன்னிரண்டும் நமக்குப் பல நயப்பொருள்களை நல்கியவற்றைக் கண்டோம். தமிழிசைக் கலையின் பெட்டகம் என்பதுணர்ந்தோம். அரியபல சாத்திர உண்மைகள் தத்துவ விளக்கங்கள் பல்வேற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளவற்றை அறிந்தோம். நம் நாட்டு அறிஞர் சொன்ன அதே கருத்தை வேற்று நாட்டு அறிஞனும் சொல்லலாம். "Great minds always think together" என்று சொல்வார்கள். அதுபோல ஒருவருக்குத் தோன்றும் உண்மை மற்றொருவருக்குத் தோன்றக் கூடாதென்பதில்லை. ஆயின் அவை காலத்தால் இடத்தால் வேறுபட்டிருக்கலாம். இவ்வாறே அருளாளர் தம் அறிவில் உதிக்கும் உண்மைப் பொருள் திருவருள் ஞானம் கைவரப்பெற்ற மற்றொரு அடியார் கருத்திலும் உதித்து வெளிவரும் பாங்கை தெய்வத் திருமுறைகள் மூலம் கண்டுணர்ந்து மகிழ்ந்தோம். எனவே திருமுறைகள் நம் சைவத் தமிழர்களுக்குக் கிடைத்த பெறவரும் திருவருட் கருவூலம் என்பதை யாரும் மறக்க முடியாது; மறுக்கவும் முடியாது. ஓம் சக்தி!

தமிழ்க்குருநாதர்
அகத்தியர் வணக்கம்

" சந்தனப் பொதியிற் றடவரைச் செந்தமிழ்ப்
பரமா சாரியன் பூதங்கள்
சிரமேற் கொள்ளுந் திகழ்தரற் பொருட்டே'



பொருளடக்கம்

## 8. இலக்கியம் பேசும் திருவையாறு

*இலக்கியம் -- ஐயாற்றிலக்கியங்கள் -- தமிழ், வடமொழி, தெலுங்கு இலக்கியங்கள் -- பத்துப்பாட்டு -- திருவையாற்றுப் புராணங்கள் -- திருத்தொண்டர் -- புராணம் -- பதிற்றுப்பந்தாதி தர்மசம்வர்த்தனிமாலை-திருவையாற்றுத் திருப்புகழ்-விண்ணப்பக் கலிவெண்பா--திருவையாற்று முருகன் மும்மணிமாலை-- திருவை . யாற்றுச் சிவன் திருப்பதிகம்--அறம் வளர்த்த நாயகியார் பதிகம்-- அப்பர் ஐம்மணிமாலை--வேலவனாற்றுப்படை--சிவபஞ்சரத்தின ஸ்லோகங்கள் (வடமொழி)--பஞ்சநந்த ஸ்தல புராணம் பஞ்சநந்தீச ஸ்துதி--பிரணதார்த்திஹ்ராஷ்டகம்--திருவையாற்று க்ஷேத்திரக் கிருதிகள் (தெலுங்கு) வசையாழி இசை இலக்கியங்கள் நிறைவுரை*

# 8. இலக்கியம் பேசும் திருவையாறு

'இலக்கியம்' என்பது இலக்கு + இயம் எனப் பிரிந்து 1. குறிக்கோளை நல்க வல்லது. 2. காலத்தை இன்பாக்கவல்லது, 3. நம்மையறியாமலேயே நம் வாழ்க்கையை வழிப்படுத்த வல்லது என்றெல்லாம் பொருள் கொள்ளும் வகையில் அமைந்த ஒரு சொல்லாகும்.

திருவையாறு தமிழ்ப்பயிரும், பக்திப் பயிரும் விளையும் நிலக்களமாக் கொண்ட ஊர். நீர்வளம், நிலவளம் போன்று, இலக்கிய இலக்கணவளம் செறிந்த ஊராகும். அருளாளர் பலரும் வந்து போற்றிசைத்த பொற்பதி. இத்தகைய பதியைப் புகழ்ந்து பேசும் இலக்கியங்கள் பற்பல, அவையாவும் சைவ இலக்கியங் களாகவேயுள்ளன. சங்க காலம் தொடங்கி இக்காலம் வரையில், பற்பல இலக்கியங்கள் தோன்றி திருவையாற்றைப் பலவாறாகச் சிறப்பித்துப் பேசியுள்ளன. வடமொழி, தெலுங்கு, மொழியிலுங் கூட ஐயாற்று இலக்கியங்கள் உள்ளன. அவைதாம் என்னென்ன என்பதைக் காண்போம்.

| | நூற்பெயர் | ஆசிரியர் |
|---|---|---|
| 1. | பத்துப்பாட்டு, பட்டினப்பாலை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| 2. | திருத்தொண்டர் புராணம் | சேக்கிழார் |
| 3. | திருவையாற்றுப் புராணம் | திருவம்பலவன் |
| 4. | செப்பேச புராணம் | ஞானக்கூத்தர் |
| 5. | ஐயா திருவையாறா | பட்டினத்தார் |
| 6. | திருவையாற்றுத் திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| 7. | அருட்செம்பொற் சோதியே | தாயுமானவர் |
| 8. | விண்ணப்பக்கலி வெண்பா | இராமலிங்க சாமிகள் |
| 9. | திருவையாற்றுப் பதிகம் | தண்டபாணி சுவாமிகள் |
| 10. | திருவையாற்று மும்மணிக்கோவை | தண்டபாணி சுவாமிகள் |
| 11. | பதிற்றுப்பத்தந்தாதி | முத்துசாமிபாரதி |
| 12. | தர்மசர்ம்வர்த்தனிமாலை | சிவஞானன் |
| 13. | அப்பர் ஐம்மணிமாலை | சுந்தரேச வாண்டையார் |
| 14. | அறம் வளர்த்த நாயகி பதிகம் | ஐயாறனடிமை |
| 15. | திருவையாறு வேலவனாற்றுப்படை | சுப்பிரமணியனார் |

வடமொழி இலக்கியங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிவபஞ்சரத்ன ஸ்லோகங்கள் | கவிகுருதாஸ் |
| 2. | பஞ்சநத ஸ்தல புராணம் | அல்லூரி குப்பண்ணா |
| 3. | பஞ்சநதீச பஞ்சகம் | மஹரிஷிப் |
| 4. | ப்ரணதார்த்தி ஹராஷ்டகம் | தேவலக்ருதர் |
| 5. | ஐப்யேசுவர அஷ்டகம் | கௌதமர் |
| 6. | வடமொழி இசை இலக்கியம் | தீக்ஷிதர்கிருதிகள் |

தெலுங்கிசை இலக்கியம்

திருவையாறு க்ஷேத்திரகிருதிகள்--தியாகராஜர்

சைவத் திருமுறை இலக்கியங்கள் பன்னிரண்டிலும் அவற்றின் ஆசிரியர்களால் ஐயாற்றையும் ஐயாற்று இறைவனைப் பற்றியும் பண்ணிசையால் போற்றிசைக்கப்பட்டுள்ளன. எனவே அதனைத் தனித்தலைப்பாக "திருமுறைபாடும் திருவையாறு" எனக் குறிப்பிட்டுள்ளோம்.

அடுத்து, இலக்கிய வரிசை எனப்பார்த்தால் திருவை யாற்றுப் புராணங்கள் தமிழ்ச் செய்யுள் வடிவில் அமைந்தவை இரண்டு. ஒன்று ஞானக்கூத்தர் இயற்றியது. இரண்டு பஞ்சநத மான்மியம் திருவம்பலவன் எனும் தேவப்பிரியனால் இயற்றப் பட்டது. இவற்றிற் காணும் இலக்கிய நயங்களையும் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தே ஆங்காங்கே திருவை யாற்றைப் பலபடி பாடிச் சிறப்பித்துள்ள வற்றையும் இணைத்துக் காண்போம்.

பெரிய புராணம்

திருவையாறு தலத்தோற்றத்திற்கு ஆதிகாரணன் கரிகாற்சோழன் என்பதறிவோம். தமிழக வரைப்பின் வட எல்லையாகக் கொண்டு இமயமலை உச்சியில் புலிக்கொடி நாட்டிய (கரிகாற்) சோழனது காவிரி நாட்டின் சிறப்பினைச் சொல்ல சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் எடுத்த எடுப்பிலேயே

"பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
நூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்." நாட்டுச் சிறப்பு செ.1

*எனக் கூறியருளுவார்*

திருவையாற்றுப் புராணத்தே

*கரிகாலன் · இமயத்தே புலிபொறித்து வரும்வழியில் ஐயாற்றெல்லையின் கண் வந்ததும், அவன் வந்த தேர் தடைப்பட்டு நின்றது. அமைச்சர் முதலாயினோர், இஃது ஓர் சிவயோர்கியரின் செயலாயிருத்தல் வேண்டுமெனக் கூற, கரிகாற்சோழன் காட்டை அகழ ஆணையிட்டான். என்பதைத் திருவையாற்றுப் புராணம்*

இத்தலத்தினை யாழவெட்டுக வென்றுரைத்தனன் மன்னது
மத்தலத்தினை யாழவெட்டின ரஞ்சதாசிவ லிங்கமுஞ்
சத்திமைந்தர்கள் சத்தமாதர்கள் சண்டர் சூரிய ரனைவரு
முத்தலத்திடைத் தோன்றின ரொருயோகியோன் சடைகண்டதே."
நி.ச.4

*என்னே! அதிசயம் வெட்டியதும் சதாசிவலிங்கம், சத்தி, மைந்தர்கள் உருவங்களோடு யோகியரின் சடையும் தெரிந்தது. அதிர்ச்சியுற்ற மன்னன் எதிரே, அச்சித்தர் வெளிவந்து ஒரு தண்டமளிக்கிறார்.*

நீடுபோக நினைததகாரிய நினைத்த சித்தி யளித்திடு
மாடுநாடு மளித்திடுங் கரிகால்மன்ன! வெனச் சொன்னான்.

*மேலும், சித்தர், கரிகால் மன்ன! இதுவரை எவருக்கும் வெளிப்படாதிருக்க இறைவர் (ஐயாறர்) உனக்காகவே தோன்றியுள்ளார். தேவர்களும் நந்திசரும் வழிபட்ட இம்மகாலிங்கத்திற்குக் கோயிலெடுப்பாயாக என்றனர்.*

*மன்னனும் உளமகிழ்ந்து ஏத்தி உடன் அக்காட்டினை அழித்து நாடாக்கி குளம் வெட்டி வளம் பெருக்கிக் கோயிலையும் குடிமக்களையும் இங்கு நிலைத்திருக்கச் செய்து தானும் உறையூரினின்றும் இங்கு வந்திருந்தான் என்பதனைப் பத்துப்பாட்டில் ஒன்றாகிய பட்டினப்பாலையால் அறிகிறோம்.*

திருவையாறும் திருக்கோயிலும் சங்க காலத்திற்கு முந்திய பழமை வாய்ந்தது என்பதற்குச் சான்றாக சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப் பாலையில்

"காடு கொன்று நாடாக்கிக்
குளம் தொட்டு வளம்பெருக்கி
பிறங்கு நிலை மாடத்துறந்தை போக்கி
கோயிலொடு குடிநிறீஇ" —பட்டினப்பாலை 283 286)

என்ற அடிகளால் உய்த்துணர முடிகிறது. உறந்தை போக்கி உறையூரை விட்டு இங்கு வந்து கோயிலையும், குடிமக்களையும் நிறுவி எனப் பொருள் கொள்வதும் இதற்கொப்பவே அமையும்.

பஞ்சநதமான்மியம்

இதனையே திருவம்பலவனின் பஞ்சநதமான்மியத்தே மன்னனின் பக்திக்கிரங்கிய ஐயாறர் மன்னன் காண மண்ணிற்கும் விண்ணிற்குமாக ஒருபேரொளிப் பிழம்பாகச் செம்பொற் சோதியாகக் காட்சியளித்து சிவலிங்க மூர்த்தியினுள் குறுகி ஒடுங்கிப் பேசினார்.

"ஊர்களெண் ணிலவுண்டேனுந் திருவையா றூராயுள்ளோம்
பேர்களெண் ணிலவென்னிலுஞ் செம்பொற சோதி எனும் பேரோம்
சீர்களெண் ணில்யுகங்கள் சேரலால் சீரணித்துப்
பார்களெண் ணில்சூழ்தேரோய் பழகிய திந்தக்கோயில்"

(பி.கா. செய் 21)

"அப்படிச் சொலித்த செம்பொற் சோதியுள் ளொளித்தானம்மா

(செய் 22)

சிவலிங்கத் துவாரங்களில் கௌதமர், வசிட்டர் போன்ற பல முனிவர்கள் நீங்காமல் நிற்கக் கண்டு பயமும், அதிசயமும் கொண்டு தடக்கையால் வணங்கி அவ்விடத்தே பெரு நகரமும், மாடமாளிகை கூட கோபுரங்களும் அமைத்தான். இதனை

"அன்னவன் பயந்து பின்னர் அதிசயமெய்தி நின்று

முன்ன ரஞ்சலி புரிந்து முறைமுறை வணங்கி யாங்கு
பொன்னகர் சிகர மாடம் புரிசை கோபுரங்கள் செய்தான். பி.கா.செய்

எனக் கூறுவதன் மூலமும் அறிகிறோம்.

பட்டினத்துப் பிள்ளையாரின் ஐயாற்றுப்பாடல்:
"மண்ணுந்தணலாற "............

இவரது காலம் பற்றி கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் ஒருவரும் 14 ஆம் நூற்றாண்டில் ஒருவரும் வாழ்ந்ததாகக் கூறுவர்.

காவிரிப்பூம்பட்டினத்தே வணிகர் குலத்துப் பிறந்து வாழ்ந்தவர். தமிழ், வடமொழி தேர்ச்சிப் பெற்றவர். காவிரிப் பூம்பட்டினத்தே இருந்தமையால் பட்டினத்தார் என அழைப் பாராயினர். அவர் சிறந்த அருளாளர். அவரது பாடல்கள் யாவரும் விரும்பிப் பயிலும் எளிமையும் இனிமையும் வாய்ந்தவை. பட்டினத்தார் பாடல்கள் நயமும், தத்துவச் செறிவும், சமய உண்மையும் நிரம்பியவை. கருத்து வளமும் அனுபவ முதிர்ச்சியும் கொண்டவை. கோயில் நான்மணிமாலை முதலிய ஐந்து பிரபந்தங்களைத் தந்துள்ளார். இதைத் தவிர பொதுவாக தனிப் பாடல்கள் பலவும் பாடியுள்ளார். தலயாத்திரையாக தில்லை தொடங்கி திருக்குற்றாலம் ஈறாகப் பதினெட்டுத் தல மூர்த்தி களையும் நேரில் சென்று பாடியுள்ளார். அவற்றில் ஒன்றுதான் கீழ்க்காணும் திருவையாற்றுப் பாடல் அருமையான பாடல்

திருவையாறு

"மண்ணும் தணல்ஆற வானும் புகைஆற
எண்ணரிய தாயும் இளைப்புஆறப் பண்ணும் அயன்
கைஆறவும் அடியேன் கால்ஆறவும் கண்பார்
ஐயா திருவையா றா"

ஐயா திருவையாற்று இறைவா மண்ணுலகில் அடிக்கடி யான் பிறந்து கொண்டுள்ளதால் மண்ணில் சூடு ஆறவில்லை. அது ஆறவும், தொடர்ந்து பிறத்தல் இறத்தல் சுடுதல் நிகழ்ச்சியால் விண்ணில் படரும் புகையும் ஆறவில்லை. அப்புகை ஆறவும், இதுவரை எத்தனையோ தாய்கள் வயிற்றில் பிறந்து கொண்டே யான் இருந்ததால் அவர்கள் வயிறு இளைப்பாறவும் என்னைப் பலப்பல உயிராகப் படைத்த பிர்மாவும் கை சளைத்து விட்டான்.

அவன் கை ஓய்வு பெறவும், அடியேனது கால்கள் பிறத்தலின்றி உன்திருவடிகளைச் சார்ந்து இளைப்பாறவும் கடைக்கண் பாலித்தருள் வீராக என வேண்டுகிறார்.

உயிர்கள் யாவும், பிறந்து பிறந்துழலும் துன்பத்தைத் தன்மேல் சார்த்தி, "பிறவாயாக்கை" முத்திப்பேறுசிட்ட வழி காட்டுகிறார். பட்டினத்தாரின் இப்பாடல் ஐந்து ஆறுதலைக் கூறுவதால் இத்தலம் பிறவிக்கு ஆறுதல் அளிக்கும் தலம் திருவையாறு என்ற சிறப்பைப் பெறுகிறது.

1. மண்ணும் தணலாற 2. வானும் புகையாற 3. எண்ணரிய தாயும் இளைப்பாற 4. அயன் கையாற 5. அடியேன் காலாறவும் கண்பார் என ஐந்து ஆறுதலையும் தருவதனால் 'ஐயாறு' எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனும் புதுப்பொருளும் கொள்ள இடம் தருகிறது.

புதிதாகக் கிடைத்த நூல்

## தருமாம்பிகைப் பதிகம்

ஆசிரியர் சிவத்திரு அப்பாத்துரை தேசிகர்

வேதமொடு சைவநெறி யைப்பழிக் காமலும்
விளங்கு சிவநாமமதனை
மெய்யன்ப தாயுச்ச ரிக்கவும் அன்பினான்
மேன்மைபெறு நின்னடியரைக்
காதலுட னேவணங் கவுநன் னடக்கையுங்
கருதுதரு மங்கள செயவும்
கனவிலும் பொய்மொழி நவிற்றாம லும்நினது
கழலிணைக் கன்புசெயவும்
போதமுங் கல்வியும் நல்கலும் மிவையெலாம்
பொற்புட னெனக்--கருளுவாய்
பூமகளு டன்வாணி யுந்தொழுதி றைஞ்சுநற்
புகழ்பெறுஞ் சத்திநீயே
ஆதவ ன்னாளிக்குமே லாயமணி மாடமலி
யையாற்று ணாளுமேவி
அம்புவியு ளோர்பரவ வின்பவரு ணல்குதரு
மாம்பிகைச் செல்வியுமையே

# தஞ்சையை ஆண்ட "சகசி" மன்னரால் இயற்றப்பட்ட "காவேரி கல்யாணம்" இலக்கிய வரிசையில் தமிழிசை நாட்டிய நாடகம்:

*திருவையாற்றில் முத்தமிழும் முழங்கியதென்பதற்குத் தக்கச சான்று திருவையாறு வரலாற்றிற்கு கிடைத்த நாடகப் பரிசு. ஐயாறப்பர் ஆலயம் காவேரிக்கரை பூசப்படித்துறை மண்டபத்தே 1704 ல் ஆடி 18ம் பெருக்கு அன்று தஞ்சை மாமன்னன் இரண்டாம் சகசியால் நடத்தி' காட்டப்பெற்ற அரங்கேற்றப்பட்ட தமிழிசை நாட்டிய நாடகம். இந்நாடகம் "பாகவதமேளா" மரபில் நடத்திக் காட்டுவதாகும். இதனை யக்ஷகானம் என்றே கூறுவர்.*

நாடகச் சுருக்கம்:

*காவேரி (நதிப்பெண்) திருவையாற்றில் பஞ்சநதீசரைப் பூசித்துத் தனக்குத் தகுந்த கணவன் வாய்க்க வேண்டும் என்று வேண்டுகிறாள்.*

காவேரிப் பெண் பாடும் பாடல்: (தரவு)

| | |
|---|---|
| கங்கை வேணிய கங்காளா | பஞ்சநதீசுவரா |
| காலகாலா | பஞ்சநதீசுவரா |
| துங்கவரவ பூஷணா | பஞ்சநதீசுவரா |
| தூலகபாலமேந்திய | பஞ்சநதீசுவரா |
| அம்புலிதன்னைத்தரித்த | பஞ்சநதீசுவரா |
| சாமவேதகானப் பிரியா | பஞ்சநதீசுவரா |
| சகசிராசன் குலதெயவமே | பஞ்சநதீசுவரா |
| தேறுடன பாலுங்கலந்த | பஞ்சநதீசுவரா |
| உந்தன சிரசில் அபிடேகம் செய்தேன் | பஞ்சநதீசுவரா |
| நான் அர்ச்சனை செய்கிறேன் | பஞ்சநதீசுவரா |
| எனக்கு நல்லபுருடனைத் தாரும் | பஞ்சநதீசுவரா |

*காவிரியின் தந்தை கவேரன், அவன் மனைவி அகத்திய மாமுனிவருடன் திருவையாறு வந்து காவேரியிடம் சமுத்திரராஜனை மணக்க வேண்டிக் கூற, காவேரி பஞ்சநதீசரிடம்*

வேண்டி, அவர் சொன்னாலன்றி சம்மதியேன் என்கிறாள். அகத்தியர் அதற்குத் தம் தவவலியால் பஞ்சநதிசுவரரை வேண்டி வரவழைக்க, பஞ்சநதிசரும் "அகத்தியரே! நானே காவேரியை சமுத்திரராசனுக்கு மணம் செய்து வைக்கிறேன் சமுத்திரராசனை அழைத்து வாரும்" என, அவரும் சென்று சமுத்திர ராசனை அழைத்து வர, சமுத்திரராசன் பஞ்சநதிசரைப் பணிந்து வேண்டுகிறான்.

சமுத்திரராசன் பாடும் பாட்டல்

சரணம் சுவாமி சரணம்
    சௌந்தரேச சரணம்
அரவு கங்கை திங்கள் சடையில்
    அணிந்த பஞ்ச நதியீசா .....(சரணம்)
புகழ் பஞ்ச நதிவாசா
    போசல குலயீசா
சகசி ராசனிரவும் பகலும்
    தான் பணியும் சர்வேசா....(சரணம்)

பஞ்சநதிசரும் "சமுத்திரா! காவேரி உன்னை மணந்து கொள்ள சம்மதம் தெரிவித்து விட்டாள், என் முன்னிலையில் அவளை மணம் புரிந்துகொள்" என அகத்தியர் பஞ்சநதிசுவரர் சுட்டளைப்படி காவேரிசமுத்திரராசன் திருமணத்தை முடித்து வைக்கிறார்.

அகத்தியர் பாடல்:

மாலை யிடடீ பெண்ணே மாலை யிடடீ
    வால மன்மதன் போலவே வரும் சமுத்திர ராசனுக்கு (மாலை)

வரு சமுத்திர ராசனுக்கு மங்களம் எங்கள்
    வனிதை காவேரிக்கு மங்களம்
தண்டமிழார் சகசேந்திரன் ..... தேவிக்கு மங்களம்

ஓம் சக்தி

# திருவையாற்றுத் திருப்புகழ்

ஆசிரியர் அருணகிரிநாதர்

திருப்புகழ்:

முருகன் புகழ்பாடும் சந்தத்தமிழ் இசை நூல் தமிழிற்குக் கிடைத்த இசைச் செல்வம். திருப்புகழ் பாடல்கள் சொல் உச்சரிப்பைத் தெளிவு படுத்தும் என்பர். தாளக்கட்டும் காதிற்கு இனிமையும் வாய்ந்த சந்தப் பாடலாகும். நாயன்மார் தேவாரத்தால் சிவனையும், ஆழ்வார்கள் பிரபந்தத்தால் விஷ்ணுவையும் பாடிப் பரவியது போல அருணகிரியார் தம் சந்தத்திருப்புகழால் முருகனைப் பாடிப் புகழ்ந்துள்ளார்.

குறையுடைக் கவிகளைக் காதுறுக்கும் பழக்கமுடைய வில்லிபுத்தூரார் அருணகிரியிடம் கந்தரனுபூதிப் பாடலுக்குப் பொருள்கூற முடியாது தோற்றார். அருணகிரிப் பெருமான் 16,000 திருப்புகழ் பாடியிருக்கலாம். ஆனால் இப்பொழுது கிடைத்துள்ளவை 1324 திருப்புகழ்களே. அவற்றுள் திருவையாறு திருப்புகழும் ஏழுதலத் திருப்புகழும் சேர்ந்தவையாகும்.

15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரியார் தலங்கள் தோறும் சென்று முருகன திருப்புகழைச் சந்ததமும் சந்தமுடன் பாடியருளிய பேரருளாளர். "வாக்கிற்கு அருணகிரி கருணைக்கு அருணகிரி" என்பார்கள். கந்தவேளை எந்த வேளையும் தியானம் செய்த அதனால் செவ்வேட்பரமன் திருப்புகழை ஊர்தோறும் பாடிப்பரவி வந்தார்; திருவையாற்று வில்லேந்திய வேலவர் அம்முறையில் புதுமைக் காட்சியாகப் புலப்பட்டது. உடனே "சொரியுமாமுகிலோ" எனும் திருப்புகழ் அவர் வாக்கினின்றும் புறப்பட்டது.

அருணகிரிப் பெருமான், தமது உலகியல் வாழ்வில் சிற்றின்ப வேட்கையில் பெரும்பாலான காலத்தைக் கழித்து வீணடித்ததைத் தமது ஒவ்வொரு திருப்புகழிலும் வெளிப்படுத்தி வேதனைப்படுகிறார். தவறு செய்யும் மனிதனுக்கு அருணகிரி வாழ்க்கை ஒரு படிப்பினையாகும். பொது மகளிர் உறவினால் தாம்

சீரழிந்ததை உள்ளது உள்ளபடி ஒளிவு மறைவின்றி அப்படியே பாடுவார். அதன்படி திருவையாறு திருப்புகழில் "பரத்தையர் தம் மாய வலையில் சிக்கி, சல்லாப காலத்தே அவர்களை எப்படி யெல்லாம் புகழ்ந்து திரிந்தேன்" என்பதைப் பாடல் தொடக்கத் திலேயே எடுத்து ப க்கின்றார்.

"பெண்ணே! உனதழகை யான் எப்படி வருணிப்பேன். உனது கூந்தலழகை, மழைமேகம் போன்றதென்பேனா? இருள் என்பேனா? உனது இருவிழிகளினழகைக் கூர்வாள் என்பதா? மான்விழி என்பதா? உனது பேச்சின் இனிமையைத் தேவாமிர்தம் என்பதா? குயில்மொழி என்பதா? உனது இடை இருக்கின்றதா இல்லையா எனத் தெரியவில்லையே? உனது நடையழகை அன்ன நடை என்பதா? பெண்யானை நடை என்பதா? உனது திரு முலை யழகை இருமலைகள் என்பனா? தாமரைமொக் கென்பனா? என இப்படியெல்லாம் உரையாடினேன பெருமானே! அன்பினால் எனை ஆட்கொள்க நான் ஒரு குற்றமற்றவன்; பெண்களின் பகட்டுப் பேச்சினால் மதியிழந்தேன்.. இனியாகிலும் துன்பமிகு பரத்தையர் வசம் அழியாமல் ஞானிகள் போற்றும் மோட்ச வீட்டை ஒரு நாளாவது யானடைய அருள்புரிவாயாக என வேண்டுகிறார்.

இதுவரை அருணகிரிப் பெருமான், திருவையாற்றுத் திருப்புகழில் வில்லேந்திய வேலவா தனுசு சுப்பிரமணியர் கையிலுள்ள வில் தனித் தன்மையுடன் இங்கு மட்டும் தோற்றமளிப்பது நமக்கு வேண்டுமானால் புதுமையாக இருக்கலாம். அவருக்குப் புதுமையேயல்ல அவரது பரம்பரைக்கே உரிய சொத்து வில்லாகும் எனபதை மாமன் திருமாலது கையிலுள்ள வில் செய்த விளையாட்டுக்களையும் தந்தை சிவபெருமானது கையிலுள்ள வில் செய்த வீரச் செயல்களையும், மகனாகிய வேலன் கையிலுள்ள வில்லும் வேலும் ஆற்றிய அற்புதங்களையும் அழகுறப்படம் பிடித்துக் காட்டி அடியேன் செய்த அடாத தவறுகளையும் மன்னித்து ஒருநாள் முத்தியுல களிப்பாய் என வேண்டுகிறார் அருணகிரி நாதர் இதோ அத்திருப்புகழ்

சொரியு மாமுகி லோஇரு ளோகுழல்
சுடாகொள் வாளிணை யோபிணை யோவிழி
சுரர்த மாரமு தோகுயி லோமொழி இதழ்கோவை
துவர தோஇல வோதெரி யாவிடை
துகளி லாவன மோபிடி யோநடை
துணைகொள் மாமலை யோமுகை தானென உரையாடிப்
பிரிவி னாலெனை யாளுக நானொரு
பழுதி லானென வானுத லாரொடு
பகடி யேபடி யாவொழி யாவிடர் படுமாயப்
பரவை மீதழி யாவகை ஞானிகள்
பரவு நீற்புக ழேயது வாமிரு
பரம வீடது சேர்வது மாவதும் ஒரு நாளே
கரிய மேனிய னானிரை யால்பவன
அரிய ராவணை மேல்வளர் மாமுகில்
கனகன மார்பது பீறிய வாளரி கனமாயக்
கபடன் மாமுடி யாறுட னாலுமோர்
கணையினால் நில மீதுற நூறிய
கருணை மால்கவி கோபக்ரு பாகரன் மருகோனே
திரிபு ராதிகள் தூ ளெழ வானவர்
திகழ வேமுனி யாவருள் கூர்பவர்
தெரிவை பாதியர் சாதியி லாதவர் தருசேயே
சிகர பூதரம் நீறுசெய் வேலவ
திமிர மோகர வீரதி வாகர
திருவையாறுறை தேவக்ரு பாகர பெருமாளே!

இவ்வாறே, "மருவுலாவிடு மோதி குலைப்பவர்" எனும் ஏழுதலத்திருப்புகழையும் பாடியுள்ளார். திருவையாற்றில் அருணகிரிநாதர் பலநாட்கள் தங்கியிருத்தல் வேண்டும் அவர் தங்கி இருந்த நாட்களிலேயே திருவையாறு சப்தஸ்தல பிரதட்ஷணத் திருவிழா நடைபெற்றுள்ளது. அதனைக் கண்டு அகமிக மகிழ்ந்த நிலையில் அந்த ஏழு ஊர்களையும் சேர்த்து ஒரே திருப்புகழில் பாடியுள்ளார். திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் திருவையாறுடன் ஏழு திருப்பதிப் பெருமாளே! எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார்

## தாயுமான அடிகளாரின் ஐயாற்றுப் பாடல்கள்

*இவரது காலம் 16 ஆம் நூற்றாண்டு சோழவளநாட்டின் திருமறைக் காட்டில் கேடிலியப்பப் பிள்ளை எனும் சைவ வேளாளருக்கு இரண்டாம் மகவாகத் தோன்றி வடமொழி தென் மொழிகளைக் கற்றவர். அது காலை திருச்சியை ஆண்ட விசய ரெகுநாத சொக்கலிங்க நாயக்கரின் அரசுப் பெருங்கணக்கராகத் தந்தையைப் போன்றே இவரும் பணியாற்றி வந்தார் எனினும், இவரது உள்ளம் இறையருள் நாட்டமே பெரிதாகக் கொண்டு நல்லதொரு குருநாதனுக்கு ஏங்கிக் கொண்டிருந்தது. திருவருளால் திருமூலர் மரபில் வந்த மௌன குரு தேசிக ஞானாசாரியர் கிடைக்கப் பெற்றார். மெய்யறிவு தலைக்கூட அரசவாழ்வை வெறுத்து யோகநெறிக்கண் சென்றவரைத் தடுத்து தமையனார் இல்லற நெறியில் ஈடுபடுத்தினார். மட்டுவார் குழலியை மணந்து கனகசபாபதியைப் பெற்றெடுத்தார். சின்னாட்களில் மனைவியார் இறைவனடி சாரத்தாம் துறவறம் மேற்கொண்டு திருச்சி மௌன குருமடத்தின் (கி.பி. 1644) தலைவரானார். பல பதிகளுக்குச் சென்று இறைவனைப் பணிந்து வந்தார். பின், ஞானகுரு மௌன குருவின் திருவருளால் ஞானநிட்டை கூடி கி.பி. 1662 தை 22 விசாகத்தன்று இராமநாதபுரம் காட்டூரணியில் தவயோக சித்தியடைந்தார்.*

*தாயுமானவர்தம் தலயாத்திரையில் திருவையாற்றுச் செம்பொற் சோதிப் பெருமானை வழிபட்ட நினைவு மறவாது போற்றிசைத்த பாடல்களை நாமும் போற்றிப் புகழ்வோம்.*

### 18. பொன்னை மாதரை

"வைத்த தேகம் வருந்த வருந்திடும்
பித்த ஞானருள் பெற்றுந் திடமிலேன்
சித்த மோன சிவசின்ம யானந்தம்
வைத்த ஐய அருட்செம்பொற் சோதியே" 10

செம்பொன் மேனிச் செழுஞ்சுட ரே!முழு
வம்ப னேனுனை வாழ்த்து மதியின்றி

---

* *தாயுமானவர் அடிகள் திருப்பாடல்கள் : சைவ சித்தாந்த* [illegible]

இம்பர் வாழ்வினுக் கிச்சைவைத் தேன்மனம்
நம்பி வாவெனின் நானென்கொல் செய்வதே 11

வாழ்த்து நின்னருள் வாரம் வைத்தாலன்றிப்
பாழ்த்த சிந்தைப் பதகனும் உய்வனோ
சூழ்த்து நின்ற தொழும்பரை யானந்தத்
தாழ்த்து முக்கண் அருட்செம்பொற் சோதியே 21

சோதியே சுட ரேசுக மேதுணை
நீதி யேநிச மேநிறை வேநிலை
ஆதி யேஉனை யானடைந் தேன்அகம்
வாதி யாதருள் வாய்அருள் வானையே 22

## இராமலிங்க சுவாமிகளின் விண்ணப்பக் கலிவெண்பா

*திருவருட்பா 3 ஆம் திருமுறை ஆசிரியர் இராமலிங்க சுவாமிகள்*

*19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள் (கி.பி. 1823--74) வடலூரில் சமரச சுத்தசன்மார்க்க நெறி கண்டவர்கள். அவர்களது அருட்பா தெய்வமணங் கமழும் எளிய இனிய நூல். பாமரரும் புரிந்து கொள்ளும் அளவில் எளிய, இனிய சொற்களைக் கொண்டும் அருட்கவி பாடமுடியும் என்பதைப் புலப்படுத்திய மகான், சித்தர் என்றே சொல்லலாம். தேவாரத் திருமுறைகள் போல இவரது பாடற்தொகுப்புகளும் ஆறு திருமுறைகளாகப் பகுக்கப் பெற்றுள்ளன.*

*இறைவன் கோயில் கொண்டுள்ள அத்தனைத் தலங்களையும் இருந்த இடத்திலிருந்து கொண்டே திருவருள் உள்நின்றுணர்த்தக் கண்டு அவ்வத்தலங்களிலுள்ள இறைவனை உள்ளது உள்ளபடியே ஈரடிகளில் தெய்வ நலஞ்சான்ற விண்ணப்பக்கலி வெண்பாவாகப் பாடியுள்ளார்கள்.*

*அம்முறையில் ஐயாற்றைச் சுற்றியுள்ள ஏழூர்த் தலங்களையும் ஒரு சேரப் பாடியுள்ளமை தனிச் சிறப்பாகும். திருப்பழனந் தொடங்கி பாடியுள்ள பான்மையினைக் காண்போம்.*

1. வண்பழனத் தின்குளிவுளன் வாயில்தேன் வாக்கியிட
உண்பழனத்து என்தன் உயிர்க்கு உயிரே பண்ப அகன்ற 51
2. வெய் ஆற்றில் நின்றவரை மெய் ஆற்றில் ஏற்றுதிரு
ஐயாற்றில் மேவியஎன் ஆதரவே பொய்யாற்றி 52
3. மெய்த்தானம் நின்றோர் வெளித்தானம் மேவுதிரு
நெய்த்தானத்து உள்அமர்ந்த நித்தியமே 53
4. வாந்துருத்தி கொண்டு உள்அனல் எழுப்பு வோர்புகழும்
பூந்துருத்தி மேவுசிவ புண்ணியமே காந்தருவத் 75
5. தண்டியூர் போற்றும் தகைகாசிக் கண்செய்து
கண்டியூர் வாழும் களைகண்ணே கொண்டு இயல்பின் 76
6. வேற்றுத் துறையுள் விரவா தவர்புகழும்
சோற்றுத் துறையுள் சுகவனமே ஆற்றல் இலாத் 77
7. தீதுக் குடிஎன்று செப்பப் படார் மருவுட்
வேதிக்குடி இன்ப வெள்ளமே 78

என்றெல்லாம் ஏழூர் இறைவர்தம் இயல்பினை இரத்தினச் சுருக்கமாக இனிமை தவறு விளித்துள்ள பாங்கு போற்றி புகழற்குரியதாம்.

திருவையாற்றுப் பதிகம் : ஆசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

*1838 ல் திருநெல்வேலி சைவவேளாண் மரபிற் பிறந்து திருச்செந்தூர் பழனி, சென்னை யாதிய தலங்களில் வதிந்து திருவாமாத்தூரில் தங்கி தண்டபாணிசுவாமிகளென்றும், முருகதாஸ சுவாமிகளென்றும், திருப்புகழ் சுவாமிகளென்றும் பெயர் பெற்று பன்னூல்களை யாக்கிய பெரியவராயிருந்தநர். இவரால் ஆக்கப்பெற்ற நூல்களாவன : தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம் திருவாமாத்தூர் புராணம், திருமயிலைக் கலம்பகம், சென்னைக் கலம்பகம், ஒலியலந்தாதி, புலவர் புராணம், திருச் செந்தூர்க் கோவை, அருணகிரிநாதர் புராணம், ஏழாயிரப்

* தண்டபாணிசுவாமிகள் பற்றி குறிப்பு: செந்தமிழ்செல்வி' திங்கள் இதழ் சிலம்பு 7 பரல் 5 பொருனை நாட்டுப் புலவர்கள் எம்.எஸ் பூரணலிங்கம் பிள்ளை 1929 மே

பிரபந்தம், ஏகபாதத் திகழகலந்தாதி, பதிகச்சதகம், சதகப்பதிகம், திருச்செந்தூர்த் திருப்புகழ், நான்குநூல், அறுவகையிலக்கணம் முதலியன. இப்புலவர் சந்த விருத்தப்பா எழுதுவதிற்கை தேர்ந்தவர். திருக்குருகூர் ஞானசித்தசுவாமிகள் இவருக்குச் சிறந்த நண்பர். இவர்கள் 1888 இல் இறையடி படிந்தார்கள். இற்றைக்கு 100 ஆண்டுக்கு முன் சிறந்த கவிவளவராக விளங்கிய தண்டபாணி சுவாமிகள், திருவையாற்றிற்கு வந்த சமயம் திருவையாற்றுப் பதிகம், திருவையாற்று முருகன் மும்மணிக் கோவை எனும் இரு சிற்றிலக்கியங்களை யாத்துள்ளனர். அவற்றைத் திருவாமாத்தூர் மடத்தினின்று கோவை கௌமார மடாலயத்தே பாதுகாத்து வைத்திருந்து தவத்திரு சுந்தரசுவாமிகளால் அன்பொடு நமக்கு வழங்கப்பட்டவையாகும். நன்றி.

"முப்பழமும் அடுபாலும் சருக்கரையும்
தேனும் ஏன் மொழியும் பாடல்
கைப்பவர்பால் விலைகூறித் தளர்வேன் உன்
அடியவருள் கலந்துய் வேனோ
துப்பனைய திருமேனிப் பெருமானே
இடபநெடும் துவசத் தானே
செப்பரிய வளம் ஓங்கும் திருவையா
றதனில்வளர் சிவபி ரானே" 3

"ஐந்துகரத் தொருதேவை அயிலேந்தி
மயில்ஊரும் மேல வேளைத்
தந்துமகிழ்ந் தவள்பாகம் இருக்கும்நீ
எனக்கிரங்காத் தன்மை யாதோ
நந்துமெழிற் கிம்புரியும் சந்தனப்பைங்
கோடுமுதல் நவில்வ யாவும்
சிந்துதிரைக் காவிரிசூழ் திருவையா
றதனில்வளர் செம்பொற் சோதீ. 9

## திருவையாற்று முருகன் மும்மணிக்கோவை

ஆசிரியர்: வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

திருவையாற்றில் கோயில் கொண்டுள்ள நூற்றுக்கால் மண்டபத்தண்டபாணி மீது இதனைப் பாடியுள்ளார்கள். இடையே (வில்லேந்திய) வேலவனையும் பாடியுள்ளார்கள்.

*முத்து, பவழம், மரகத மணிகளால் வரிசையாகக் கோர்த்து முருகனுக்கு அணிவிக்கும் பாமாலையாகும்.*

## காப்பு வெண்பா

அண்டர்புகழ் ஐயாற் றயில்வேற் குமரனுக்கு
வண்டமிழ்ப்பா வால்மும் மணிக்கோவை தொண்டர்
அளிகூரப் பாடுவதற் கானதுணை கூறில்
களிறா னனத்தான் கழல்

## ஆசிரியப்பா

அருள்வலி யினர்வளர் ஐயாற் றம்பொற்
பொருள்வள மலிதரு பொற்புடைக் கோயிற்
சிவனநுதல் விழிஉமிழ் செஞ்சுட ராகிப்
பலமிகு தானவப் பணிஅறக் களைந்து
குறைவறு முத்தமிழ்க் குறுமுனி முதலினர்
நிறைஅருள் பெறச்செயும் நிமலசற் குருவாய்த்
தென்முகம் நோக்கித் திகழ்தரு குகனே
என்முகம் வாட ஈனர்தம் மொடுபோய்
நின்பெயர் கருதியும் நின்றிரந் தலுத்தேன்
அன்பெனக் களித்தாண் டடியவ ரொடுசேர்த்
துலவரும் துயர் எலாம் ஒரீஇக்
குலவுமெய்ப் புகழ்க்கடல் குளித்திடப் பணியே 1

## வெண்பா

சேயமுகம் ஆறுடைய சிற்பரனே ஐயாற்றின்
மேயவர்கள் போற்றிசைக்கும் வேலோனே--நீயலதிங்
'காரைக் கருதுகின்றேன் அந்தேநின் மெய்யடியார்
சீரைஎனக் கின்றருளிச் செய். 20

## கட்டளைக் கலித்துறை

செய்யசொல் விட்டுக் கரியே அனையசொல் தேடிச் செல்லும்
பொய்யர்தம் பாடலைப் போலஎன் நூல்களும் போதல் நன்றோ
வையகம் போற்ற மயிலேறி வந்தொரு வார்த்தை சொல்லாய்
மெய்யடி யார்புகழ் ஐயாற்றின் மேயசெவ் வேலவனே. 21

## திருவையாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி

ஆசிரியர் : முத்துசாமி பாரதி

தமிழில் இப்பொழுது கிடைக்கும் சிற்றிலக்கிய நூல்களின் அந்தாதி வரிசையில் இது ஒரு தனித்தன்மை வாய்ந்தது. 96 வகைப் பிரந்தகளில் 'அந்தாதி' என்பதும் ஒன்று. அந்தத்தை ஆதியாகவுடையது அந்தாதி. அதாவது : முதல் செய்யுளின் ஈற்றுச்சீர் அடுத்த செய்யுளின் முதற்சீராகக் கொண்டு 100 செய்யுட்களில் தொடர்ந்து ஈறும் முதலும் இணையப் பாடுவது. இறைவன் வள்ளல் போன்றாரைக் கவிஞர்தம் புலமைத்திறம் புலப்படப் பாடுவது அந்தாதி நூல் வெண்பா கலித்துறை பாவகையால் பாடப்பெறுவது.

"சங்க இலக்கியங்களில் ஒன்றாய "பதிற்றுப்பத்து" என்பது அகவற் பாக்களாலான பத்துப் பகுதிகள் சேர்ந்து அமைந்தமையின் 'பதிற்றுப்பத்து' எனும் பெயராயிற்று. ஆசிரியப்பாவினால் புறம்பொருள் பற்றிய செய்யுட்கள் நூறு அமைந்தன வாயினும் ஒவ்வொரு பத்தும், ஒவ்வொரு சேர அரசரைப் பாராட்டுவதனால் இந்நூல் பத்துவேறு பகுதியாகியது. வெவ்வேறாகிய பத்துவகை யாப்பினால் அமைந்த ஒருவகை அந்தாதியைப் பதிற்றுப்பத்தந்தாதி என்று வழங்கும் பிற்கால வழக்கு இங்கே நினைத்தற்கு உரியது. இவ்வகையில் அமைந்ததே திருவையாற்று ஐயாறப்பர் மீது பாடியுள்ள பதிற்றுப் பத்தந்தாதியாகும். ஆசிரியர் முத்துசாமி பாரதி பற்றி ஏதுமறியோம்.

'அந்தாதி இலக்கணத்திற்கு அமைந்த, இயைந்த அந்தாதித் தொடையில் இந்நூல் அமையவில்லை. பத்துவகை யாப்பு அமைதியுடன் மட்டும் விளங்குகிறது. அறுசீர் எழுசீர், கொச்சகக் கலிப்பா, அறுசீர் சந்தம், கலிவிருத்தம், கலிநிலைத்துறை, என்ற அமைப்பில் உள்ளன. அதுவும் 100 பாடல்களின்றி, பத்துப் பாடல்களே உள்ளன. தருமபுர ஆதீன வெளியீடு திருவையாற்றுத் தலபுராணம் 1948 இப்பத்துப் பாடல்களையே வெளியிட்டுள்ளது. கிடைத்தது பத்தோ அல்லது உரிய பாடல்கள் இப்பந்து

---

* பதிற்றுப் பத்து உ.வே.சா. பதிப்பு 1941 பக்கம் 5

*மட்டும்தானோ அறியோம். பாடல்கள் எளிய இனிய சந்த அமைப்பில் உள்ளன.*

திருவையாற்று பதிற்றுப் பத்தந்தாதி பாடல்களின் சாரம்:

*எனது உள்ளத்திருளை அகற்றி நின் திருவருளைத் தா., பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கும் யான் உன் திருவடியை அடைவது எப்போது? மங்கையர் மையலில் அலையாமல் உன்னருள் தந்து என்னை ஆள்வாய். கருணைக்கடலே ஐயாற! நாயேனது இருள் கெட அருள்வாயாக. கைலாயமாகிய ஐயாற்றுப் பரம்பொருளே! பிறரால் பரவுதற்கு அரிய நீ அடியார்க்கு அடியன் ஆவாய்.. ஐயாற்று அண்ணலே உன்னைத் தவிர எனக்கு வேறு புகலிடம் ஏது? என் பிழை பொறுத்து ஆண்டருள்க.*

இலக்கிய இன்பத்திற்கு இரண்டொரு செய்யுட்களைக் காண்போம் :யமகம் போன்றது.

அறுசீர் (சந்தம்)

ஐயம் பாரினி லேற்றவன் பாற்கட லருந்தவ மகக்கீந்தோன்
ஐயம் பாரிய செங்கர னுருவழித் தருள்பவன் நன்னெஞ்சே
ஐயம் பாரிளம் பிறையணி திருவையா றனைத்தொழி னமக்கில்லை
ஐயம்பாரியா ளொடுவிடை மீதுவந் தருள்வனற் கதிவாழ்வே 5

*பொருள்: 1. ஐயம் பிச்சை, உலகில் பிட்சாடணராக பிச்சை ஏற்க வந்தவன் உபமன்யு முனிவருக்காக பாற்கடலை அருந்த அழைத்தவன்.*

*2. ஐயம் பாரிய ஐ + அம்பு + ஆரிய + செங்கரன். ஐந்து மலர்களை அம்பாக எய்து அசந்த கைகளை உடைய மன்மதனின் உருவத்தை அழித்து தேவர்க்கு அருளியவன். மனமே*

*3. ஐயம் பாரிளம் பிறை ஐ + அம்பார் = கூர்மையான அம்பை உடைய திரிபுர சம்ஹாரர், மூன்றாம்பிறைச் சந்திரனை முடியில் அணிந்த ஐயாறனை ஒழித்து நமக்கு வேறு யாரும் இல்லை.*

*4. ஐயம் பாரியாளொடு ஐ + அம் + பாரியாளொடு = மேலான, அழகிய மனைவியோடு இடப வாகனத்தே வந்து நமக்கு நற்கதி அளிக்க வருவான்.*

### கற்பனை நயத்திற்கு :

விமல பற்பல கவலை கொண்டிடருறு வினையேன்
மும்மல வேரறுத் தாளுநா ளென்றரோ? மொழிவாய்
கமல வாவிநின் றெழுமிள வாளைபூங் கமுகோ
டமல மேகமுங் கிழிக்குமை யாற்றிறை யவனே 7

பொருள் : தாமரைத் தடாகத்திலிருந்து துள்ளிய வாளைமீன் பாக்கு மரத்தோடு மேகத்தைக் கிழித்தோடும் வளம் சார்ந்த ஐயாற்று இறைவனே.! பற்பல கவலைகளினால் துயருறும் என் மும்மலத்தையும் அறுத்து ஆளும் நாள் என்று? சொல்வாயாக எனக் கேட்கிறார்.

### ஓசை நயத்திற்கு

நம்பாவுனை நம்பாது தினம்பாசக ருடனே
வம்பார்குழல் வம்பார்முலை வம்பார் மொழி மடவார்
தம்பாலலை யாதுன்னரு டந்தேயெனை யாள்வாய்
அம்போருக மிகுதண்பணை யையாற்றிறை யவனே பாடல் 6

### திருவையாற்றுத் தர்மசம்வர்த்தனி மாலை:

தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் 'மாலை என்பதும் ஒன்று. இறைவன், இறைவிக்குப் பலவகை மலர்களாற் பூமாலை கட்டி அணிவித்து அலங்கரிப்பது போன்று, பக்திப் பாக்களாற் பாமாலை சூட்டி வழிபடுவது தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கமாகும். இது, "தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடை" ' சங்கத் தமிழ் மாலை முப்பதும்" என்ற பாடல்களினின்றும் தெரியவரும். 96 வகைப் பிரபந்தங்களில் மாலை என்பதும் ஒன்று. 100 பாடல்களிலும் அமையும் 30 பாடல்களிலும் அமையும்.

துறைமங்கலம் சிவப்பிரகாசரின், சோணசைல மாலை, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் அகிலாண்ட நாயகி மாலை ஆகியவை 100 பாடல்கள் கொண்டவை. வித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்கள், 'திருச்செந்தில் மாலை' என்ற நூலை 30 பாடல்களில் யாத்துள்ளார். அது போல, இந்நூல் திருவையாற்றில் கோயில் கொண்டுள்ள இறைவி மீது 30 கவித்துறைகளால் ஆன புகழ்மாலையாகும்.

இவ்வூர் இறைவி-தமிழில் அறம் வளர்த்த நாயகி என்றும் வடமொழியில். தர்மசம்வர்த்தனி, தர்மாம்பாள் என்றும் வழங்கப்படுகிறாள். இந்த இறைவி மீது பாடப் பெற்றதே தர்மசம்வர்த்தனி, மாலையாகும்.

இந்நூலின் கடைசிப் பாடலின் மெய்யாம் அறிவுமிகு சிவஞானன்' என்று இருப்பதால் இந்நூலை இயற்றியவர் சிவஞானன் என்பது தெரிய வருகிறது. பிற விபரங்கள் தெரிய வில்லை. பாடல்கள் எளிமையும் இனிமையும் வாய்ந்தவையாக உள்ளன. இந்நூலின் ஏட்டுப் பிரதியும், கையெழுத்துப் பிரதியும், மகோமகோபாத்யாய டாக்டர். உ.வே.சா. அய்யர் அவர்கள் தம் தமிழ் ஆய்வுக்காக ஏடு தேடும் பணியில் ஈடுபட்ட ஞான்று தொகுக்கப் பெற்று, அவர்கள் பெயரால் நிலவும் நூல் நிலையத்தே பாதுகாக்கப் பெற்றுள்ளன. இது கிடைத்தது நாம் பெற்ற பெரும் பேறாகும். அன்னை அறம் வளர்த்தாள். அளித்த வரம்., சுவைக்கு ஒரு சில பார்ப்போம்:

தண்டா மரையெனும் பாதமுடைய தோர்தைய னல்லாய்
உண்டார் சுவைதனை யுன்னருள் பெற்றிடு முத்தமர்கள்
பண்டார் வினையது பாற்றியுன் பானெஞ்சம் பற்ற வைப்பாய்
வண்டார் குழலுடை மாதே தருமசம் வர்த்தனியே (பாடல் 9)

வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய தர்ம சம்வர்த்தனியே குளிர்ந்த தாமரை மலர் போன்ற பாதம் உடைய பெண்ணே! உனது அருட்சுவை உண்ட உத்தமர்களின் வினையை அழித்து உன்னை விரும்பும் மனத்தை உவந்தளிப்பாயாக என்பது இதன் பொருளாகும்.

இச்சிறுநூலில் தர்மசம்வர்த்தனி என்று மகுடமிட்டு இறைவியை விளித்துள்ள போதிலும், அங்கயற்கண்ணி (20) அஞ்சை (26) கண்ணொரு மூன்றுள காரிகை (23) தையல் நல்லாய், உத்தமி, தற்பரை, தயாவரி என்றெல்லாம் விளித்துள்ளார். இதில் ஐயாற்று அன்னைக்கே உரிய தனிச்சிறப்பு முக்கண்ணை உடையவள் என்பதும் தென்கயிலாயமுடையார் கோயில் அம்மையப்பர் அஞ்சலை பஞ்சநதிவாணர் என்பதும் விளித்துச் சிறப்பித்துள்ளது பாராட்டிற்குரியதாகும்.

மற்றொரு பாடலில் ·

கல்லா மெனதுளங் கண்டே யிரங்கிக் கசிந்துருகு
நல்லோர் மனங்கொண்ட நாயகியே யுன்னை நாடுதற்குச்
சொல்லா லுணர்த்திச் சுகந்தர வேணுஞ் சுருதிமொழி
வல்லோர் தமக்கருள் மாதே! தருமசம் வர்த்தனியே 13

பொருள் :

*வேதம் வல்லோர்க்கருளும் தர்மசம்வர்த்தனியம்மா கல்மனம் உடைய எனக்கும் இரங்கி, கசிந்துவரும் நல்லோர் மனத்தையும் ஏற்கும் தாயே! உன்னை அடைதற்குரிய வழியெலாம் சொல்லால் அறிவித்து எனக்குச் சுகத்தைத் தந்தருள்வாயாக. எனக் கேட்கின்ற அழகே அழகு.*

*மற்றும் சிவனார் துணைவி என்ற நிலையை அரனாரு கந்தவள் (3) உயிர்க்குயிரானார் இடத்தமர் (5) என்றெல்லாம் புகழ்ந்துரைக்கின்ற பான்மையையும் பார்க்கின்றோம்.*

உற்றா ரெனக்கிலை யுன்னடித்தாமரைக் கொப்பிதமாய்
செற்றார் புரஞ்செற்ற சேவகனார் பங்கிற் தேன்மொழியே
நற்றா மரைப்பத நாடுதெனை சிந்தை நயந்தளிப்பாய்
வற்றா வருட்கடல் மாதே! தருமசம் வர்த்தனியே18

பொருள்

*"அருட்கடலாகிய தர்மசம்வர்த்தனி அம்மா! எனக்கு உற்றார் உறவினர் யாரும் இல்லை. தாமரை போன்ற உன் திருவடிப் பேற்றையே என் மனம் நாடுகின்றது. இதனை உவந்தளிப்பாயாக." என நாம் வேண்டுவது போலவே வேண்டியுள்ளார்.*

*இதே கருத்தை அப்பர் சுவாமிகள் ஐயாறப்பரிடம் "உற்றார் இலாதார்க்கு உறுதுணையாவன ...'ஐயாறன் அடித்தலமே" என்று பாடியுள்ள தாண்டக அடியொற்றி இப்பாடல் அமைந்துள்ளது உற்று நோக்கத்தக்கதாகும். அன்னையின் அருள்தவழ் திருமுகத் தைக் கமலத் திருமுகம்(1) தாமரை முகம் எனவும், பான்மொழி, தேன்மொழி என மொழியையும், பேராயிரம் கொண்ட பெண்ணே என்றும் பலபடியாகப் பாராட்டிப் போற்றிசைத்த வரிகள் புலவர்தம் புலமைத் திறத்தைப் புலப்படுத்துவனவாயுள்ளன.*

## ஐயாற்று அப்பர் ஐம்மணி மாலை

ஆசிரியர் : வை. சுந்தரேச வாண்டையார்

மாலை

*பிரபந்த வகைகளில் ஒன்று : ஐம்மணிமாலை : இறைவனுக்கு முத்து, பவழம், வைரம், வைடூரியம், மரகதம் போன்ற மணிகளால் இயன்ற மாலைபோல, வெண்பா, கலித்துறை, ஆசிரியப்பா, அறுசீர்விருத்தம், பன்னிருசீர்விருத்தம் ஆய பாவகையால் மாலையாகப் புனைந்துப் பாடியதாகும். ஒரு செய்யுளோடு ஒரு செய்யுளியைய அந்தாதித் தொடையால் இயைத்துச் சமயக்குரவர் நால்வருள் ஒருவராய அப்பர் பெருமான் மீது பாடியுள்ள பாடற் தொகுப்பே 'அப்பர் ஐம்மணி மாலை' ஆகும். இந்நூல், தமிழகத்தே கல்வெட்டுத் துறையில் துறைபோய பேராசிரியர் திருவையாறு வை. சுந்தரேச வாண்டையார் அவர்களால் இயற்றப்பட்டதாகும். அவர்கள் ஐயாற்றுத் தென்கயிலாய அப்பர் பெருமானிடம் ஆராக் காதலுடையார். அவரே தஞ்சம் என வாழ்ந்தவர். 1943ல் பாடிய இந்நூலிற்குப் பண்டித அ. கந்தசாமி பிள்ளை, நாவலர் ந.மு.வே. நாட்டார், கவியரசு வேங்கடாசலம் பிள்ளை ஆகியோர் அணிந்துரை வழங்கியுள்ளனர். சான்றிற்கு ஒன்று, இரண்டு :*

### வெண்பா

கூறுவே வின்புகழே கும்பிடுவே னின்கழலே
பேறுவே றொன்றையுநான் பேணிலேன் -ஏறுபுகழ்
அப்பூதி யார்பரவு மாளுடைய நாவரசே
இப்பூதி யார இனிது.

### கட்டளைக் கலித்துறை

இனிவேறு தஞ்ச மெமக்கிலை யின்றமிழ் நாவரசே
முனிவேறு துன்பப் பிறப்பிறப் பால்முழு துந்தளர்ந்தோம்
கனிவேறு கண்ணுத லஞ்செழுத் தாலி கணித்தருளி
நனிவேறு மாறருள் புன்பிறப் பாய நளிகடலே

## ஆசிரியப்பா

| | | | |
|---|---|---|---|
| நனிபுனற் | பொன்னி | நன்னதி | படிந்து |
| தெளிவுறு | மன்பர் | குழுவொடு | சேர்ந்து |
| திருவை | யாறமர் | செம்பொற் | சோதி |
| மருமலர்ப் | பாதம் | வைகலும் | போற்றித் |
| தாண்டக | வேந்த | ராண்டநா | வரசர் |
| ஓதிய | பாடல்க | ளாதர | வதனாற் |
| பாடும் | அடியர்கட் | கெளிதே | |
| தேடரும் | இன்பச் | சிவனருட் | சீரே |

## திருவையாற்று அறம் வ்ளர்த்த நாயகியார் பதிகம்

ஆசிரியர் : ஐயாறனடிமை

*பதிகம் என்பது ஆசிரிய விருத்தம் அல்லது கலிவிருத்த வகையால் நான்கடி.முதல் எட்டடி வரை வைத்து, பத்துப் பாடல்களில் பாடப்பெறுவதாகும். இதனை இருபது பாடல்களில் அமையப் பாடப்படுவதும் உண்டு. தேவாரம் திருமுறைகள் முழுதும் பத்துப் பாடல் உடைமை கருதியே 'பதிகம்' என்னும் பெயர் பெறுமாற்றையறிவோம். அம்முறையில் ஐயாறமர் அறம் வளர்த்த நாயகியார் மீது தற்காலப் புலவர் "ஐயாறனடிமை" எனும் ஐயாற்றுப்புலவர் பாடியதாகும். வெள்ளைப் பாட்டு எனும் வகையில் எளிமையாக உள்ளது. எவரும் எளிதில் பொருள் புரிந்துகொள்ளலாம். கொச்சகக் கலிப்பா வகையாற் பாடப்பெற்றுள்ளது. காப்பாகத் திருவையாற்றுத் திருக்கோயிலில் ஐப்பேச மண்டபத்தே எழுந்தருளியுள்ள தலவிநாயகர் ஆதிவிநாயகரைப் போற்றித் தொடங்கியுள்ளது.*

## நூல் : பதிகம் பத்தின் சாரம்

*ஐயாறமர் அறம் வளர்த்த நாயகியை வெற்றி தரும் கொற்றவையாகவும் (1) கலைமகள், அலைமகள், மலைமகள் எனும் முச்சக்தியரின் கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றை வழங்க வல்ல வளாகவும் (2) பயிர், உயிர் ஆகிய இவற்றின் முழுப் பயனாக விளங்குபவளாகவும், (3) கல்லார், வல்லார், இல்லார் எல்லாரும் நலமுடன் வாழ அருள் செய்பவளாகவும் (4) பழியேதும் வராமல் செழிப்பான வாழ்வருள்பவளாகவும், (5) உள்ளக்கோயிலில் மெல்ல வந்தமர்ந்து கள்ளக் கபடத்தினைக் கட்டழிக்க வல்லவளாகவும்*

*(6) பிறவிப் பிணி அகல பேணிக்காக்க வல்லவளாகவும், (7) காலங்கடவாமல் காலத்தில் வந்து காப்பவளாகவும் (8) பக்தி இல்லார்க்கும் முக்தி அளிக்க வல்லவளாகவும் (9) தாயின் கடமை தனயன் தவறை மன்னிக்க வல்லதாயாகவும், (10) போற்றப்படுகிறாள். இதோ சான்றிற்கு மூன்று :*

கலைமகளின் திருவுருவே கனிந்தகலை தந்தருள்வாய்!
அலைமகளின் திருவுருவே அரும்பொருளை ஆக்குவிப்பாய்!
மலைமகளாம் மடமயிலே மனத்திருளைப் போக்கிடுவாய்!
தலைமகளே ஐயாற்றில் அறம்வளர்த்த நாயகியே! 2

கல்லாரும் கற்றாரும் காதலுடன் போற்றிடுவார்
வல்லாரும் மாட்டாரும் வளம்பெறவே வந்திடுவாய்
இல்லாரும் உடையாரும் இன்னருளை வேண்டிடுவார்
எல்லாரும் நலம்பெறவை அறம்வளர்த்த நாயகியே! 4

பத்தியே சிறிதுமிலாப் பாவியேன் பாசமதால்
கத்தியே உன்னடியைக் காணவே துடிக்கின்றேன்
முத்தியே எனவந்தன் கரதலத்தால் மொத்திடுவாய்
சக்தியே ஐயாற்றில் அறம்வளர்த்த நாயகியே 9

*என்றெல்லாம் தற்கால இளைஞர் உள்ளிட்ட எவரும் உளத்துணர்ந்து போற்றிசைத்து வழிபடற்காம் நிலையில் அமைந்துள்ளது.*

## திருவையாற்று வேலவனாற்றுப்படை

ஆசிரியர் : புலவர் கோ. சுப்பிரமணியனார்

**ஆற்றுப்படை : வழியில் (கண்டு) செலுத்துதல் என்பது பொருள். ஆற்றுப்படையாவது புலவர், பாணர், கூத்தர், விரலியர் என்பவர்களுள் ஒருவர் வள்ளல் தன்மையுடைய அரசர், தெய்வம் போன்றாரிடம் சென்று பாடி அவரிடம் தாம் பெற்ற பரிசிலை வழியில் எதிர்வரும் தன்னைப் போன்ற இரவலரிடம் காட்டி, 'அத்தலைவனிடம் நீங்களும் சென்றால், என்னைப்போல் நிறைய*

* திருவையாறு வில்லேந்திய வேலவர், புலவர் கோ.சுப்பிரமணியனார் & புலவர் பத்மா
வெளியீடு : ஐயாறமன்ற இழுப்புக் கொண்டான் இயக்கம் 1991 பக்கம் 45

பரிசிலைப் பெற்று வரலாம்' என வழிப்படுத்திப் பாடுவதாகும்.

திருவையாறு ஐயாறப்பர் திருக்கோயில் வேலவன் கோட்டத்தே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அற்புதமூர்த்தி 'வில்லேந்திய வேலவர்' மீது, தற்காலப் புலவர் கோ. சுப்பிரமணியனார் பாடியதாகும். எளிய, இனிய அகவற் பாவால் ஆனது. 'ஓங்கிய அதுதான் அகவலின் வருமே' பன்னிருப் பாட்டியல் சூத்திரம்

சுவைக்குச் சில வரிகள்

.............

| | | | |
|---|---|---|---|
| யான்பெற்ற | இன்பம் | யாவரும் | பெற்றிட |
| என்போல் | வாழ்வில் | இடர்கள் | பலவும் |
| பெற்றோர் | தாமும் | பெறார் | தாமும் |
| "வேலவன் | கோட்டம்" | விரைவில் | வருவீர்! |
| "வேலவப் | பெருமான்" | திருவடி | பணிவீர்! |
| சரவண | பவனைச் | சரணம் | அடைந்தால் |
| எய்ப்பினில் | வைப்பாம் | இன்பம் | பெறலாம் |
| எண்ணிய | எண்ணியாங் | கெய்தவும் | பெறலாம் |
| வேலவன் | வேலை | வணங்கலே | வேலை |
| என்றே | யானும் | ஆற்றுப் | படுத்துவன் |
| குன்றாக் | குமர | வள்ளற் | பிரானின் |
| முலபண் | டாரம் | முந்திப் | பெறவே |
| சேர | வாரும் | செகத்துள் | ளீரே! |

இதுபோல் 'திருவையாறு நீரோட்ட யமக அந்தாதி' என்ற ஒரு நூலும், "திருவையாறு அறம் வளர்த்த நாயகி பிள்ளைத்தமிழ்" நூலும், உள்ளதாக அறிகிறோம். அவைகளைத் தேடுகிறோம். திருவருள் துணையால் கிடைக்கவேண்டும்.

வடமொழி இலக்கியம்

### சிவ பஞ்சரத்ன சுலோகங்கள்*

அதி அற்புத நூல்-புதுமை நூல்-வியத்தகு விந்தை மிகு நூல்

இது மிக நுண்ணிய எடுத்துக்களாலான சுலோகங்

---

* சரஸ்வதி மகால் வழிகாட்டிநூல் . அ. பஞ்சநாதன் 1992 பக்கம் 39

களாகும். ஐந்து ஸ்லோகங்கள்-திருவையாறு பஞ்சநதீஸ்வரரைப் புகழ்ந்து கவிகுருதாஸ் என்பவரால் எழுதப்பட்டன.

சாதாரணமாகப் பார்க்கும்போது இது தேவநாகரி முறையில் எழுதப்பட்ட ஸ்லோகங்கள் போலத்தோன்றும். ஆனால் உற்றுநோக்கின் ஒவ்வொரு எழுத்தின் கோடுகளும் 'சிவசிவ' என்ற எழுத்துக்களால் உருவாக்கப்பட்டவை என்பது புலனாகும். 'சிவ' என்ற எழுத்து பலநூறு முறைகளில் ஒவ்வொரு எழுத்திலும் திரும்பத்திரும்ப எழுதப் பட்டிருக்கும், இது இந்துக்களின் இறை பக்தியையும், சிவன் பால் உள்ள அன்பினையும், இவ்வுலகில் எப்பொருளிலும் இறைவன் இருப்பதையும் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது அதன் புகைப்படமுள்ளது.

## பஞ்சநதஸ்தல புராணம் *

தஞ்சையை மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்த இரண்டாம் துளஜா (கி.பி. 1763 1787) மகாராஜாவிற்கு தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி இலக்கியங்களில் ஆர்வம் மிகுந்திருந்தது. கஸ்தூரி ரங்கையாவின் மாணவரான அல்லூரி குப்பண்ணாவிற்கு "ஆந்திர காளிதாசன்" என்ற விருதை அளித்துச் சிறப்பித்தார். இக் குப்பண்ணாவைக் கொண்டு சமஸ்கிருதத்தில் "பஞ்சஸ்தல புராணம்" யாப்பதற்குப் பெரிதும் துணை புரிந்தார். இதன் மொழி பெயர்ப்பே இப்பொழுதே தமிழில் உள்ளவையாகும். இந்நூல் தவிர இவர் இராமாயண யக்ஷ கானங்கள், பாகவத கதைகள் பாரமபாகவத சரிதம், இந்துமதி பரிணயம், கர்மவிபாகம் நூல்களயும் இயற்றியுள்ளார்.

இவை தவிர தனியார் இயற்றிய 'பஞ்சநதீசர் பஞ்சகம்', பிரணதார்த்திஹர அஷ்டகம்' என்பனவும் உள்ளன.

* சரஸ்வதி மகால் வழிகாட்டிநூல் அ. பஞ்சநாதன் 1992 பக்கம் 39

வடமொழி இலக்கியம்

## ஜப்யேசுவர ஸ்துதி அஷ்டகம்
## கௌதமரால் இயற்றப்பட்டது

1. பஜே ஜப்யேச்வரபதிம்-பூர்ணமானந்த மவ்யயம்
தேஹ்ற யன்னம் வஸதாமத்ர ஸ்வாமி பஞ்சனத ஸ்தலே!
2. பஜே பஞ்சநதீனாதம் ஸ்வப்ரகாசாஞ்ச சின்மயம்
தேஹ்ற யன்னம் வஸதாமத்ர ஸ்வாமி பஞ்சனதஸ்தலே!
3. பஜே ஜப்யேசுவரபதிம் அவித்யா விஷயாஸ்ரயம்
தேஹற யனனம் வஸதாமத்ர ஸ்வாமி பஞ்சனத ஸ்தலே!
4. பஜே பஞ்சனதீநாதம் வேதாந்தார்தைக லக்ஷிதம்
தேஹ்ற யன்னம் வஸதாமத்ர ஸ்வாமி பஞ்சனத ஸ்தலே!
5. பஜே ஜபயேச்வரபதிம் அவஸ்தாதரய ஸாக்ஷிணம்
தேஹ்ற யன்னம் வஸதாமத்ர ஸ்வாமி பஞ்சனத ஸ்தலே!
6. அவஸ் தாத்ரய நிர்முக்தம் பஜே பஞ்சநதி பதிம்
தேஹற யன்னம் வஸதாமத்ர ஸ்வாமி பஞ்சனதீ பதே!
7. விச்வம்ச தேஜஸம் ப்ராக்ஞம் துர்யாதீதம் மஹேசுவரம்
தேஹ்ற யன்னம் வஸதாமத்ர ஸ்வாமி பஞ்சனத ஸ்தலே!
8. காயத்ரி ஓம்கார தாத்பர்யம் பஜே பஞ்சநதீபதிம்
தேஹ்றயனனம வஸதாமத்ர ஸ்வாமி பஞ்சனத ஸ்தலே!

ஸ்ரீ கௌதமக்ருதம் ஜப்யேசுவர ஸ்துதி அஷ்டகம் ஸம்பூர்ணம்.

வடமொழி இசை இலக்கியம்

## திருவையாறு பிரணதார்த்தி ஹரசுவாமி மீது முத்துசாமி தீக்ஷிதர் இயற்றிய கீர்த்தனை "ப்ரணதார்த்திஹரம்"

*ராகம் . நாயகி (22)* - *தாளம் : ஆதி*

*ஆ : ஸரிகாமபதநிஸா* *அவ : ஸாநிதபமரிகாரிஸா*

பல்லவி

ப்ரணதார்த்தி ஹரம் நமாமி ஸததம்
பஞ்ச நத1 க்ஷேத்ர ப்ரகாசம் ஸ்ரீதம் (ப்ரண)

அநுபல்லவி

கணநாயகாதி, ஸகல ஸுரனுதம்
கீதவாத் யாதி மனந்தம் (ப்ரண)

சரணம்

வஸந்த ருது மேஷமா ஸோத்ஸவம்
வீரக்ஷேத்ர பால ப்ரபா4வம்
வாஸுதே வ நத ஸப்த ஸ்தா2னம்
விசித்ர யமப4யாதி நிவாரணம்
வாஸுகி கார்கோட காதி தரணம்
வரதர்ம ஸம்வர்த்தனீ ரமணம்
தாஸ ஜனாதி த4னதா ன்ய ப்ரதம்
தீ4ரதர கு ருகு ஹ பூஜிதபதம்

சிட்டஸ்வரம்

மதபம பதநீ தபபம பரிமநி
ஸாரி காரி ஸரிநிஸா ரிகமபத
பதநிஸ்ரி ப்மரிகாரிஸ் நிரிஸ்ரி (ப்ரண)
நிஸ் பதநீதப மரீகா ரிஸரிம

## திருவையாறு தர்மஸம்வர்த்தனி மீது முத்துசாமி தீக்ஷிதர் இயற்றிய கீர்த்தனை "தர்மஸம்வர்த்தனி"

*ராகம் : மத்யமாவதி (22)* *தாளம் : ரூபகம்*

*ஆ : ஸரிமபநிஸ்* *அவ : ஸ்நிபமரிஸ*

பல்லவி

தர்ம ஸம்வர்த்தனி தனுஜ ஸம்மர்த்4தனி
தராத் தராத் மஜே அஜே தயயாமாம் பாஹிபாஹி (தர்ம)

அனுபல்லவி

நிர்மல ஹ்ருத யனிவாஸினி நித்யானந்த விலாஸினி
கர்மஜ் ஞான விதா4யினி காம்ஷிதார்த்த ப்ரதாயினி(தர்ம)

சரணம்

மாத4வ ஸோத ரி ஸுந்தரி மத்4யமாவதி சங்கரி
மாது4ர் யவாக் விஜநம் பி4ணிமகாதேவ குடும்பினி
ஸா4து ஜன சித்தரஞ்சனி ஸர்வத குருகுஹஜனனி
போ த4 ரூபிணி நிரஞ்சனி பு வநேச து ரித ப4ஞ்ஜனி

மத்யகாலம்

பாதஜ விஸ்வ விலாஸினி பஞ்சனதீ ஸோல்லாஸினி
வேத சாஸ்த்ர விஸ்வாஸினி வி4கிறெரி ஹயப்ரகாஸினி (த4ர்ம)

## மஹரிஷிபி : க்ருத பஞ்சநதீச ஸ்துதி

நம: பஞ்சநதீ நாத
    ப்ரணதார்த்தி ஹரேச்வர
நமோ ஐப்யேச்வர பதே
    கத்ருத்ராய ப்ரசே தஸே ||

ஹிரண்ய பாஹவே துப்யம்
    திசாம் பதயேநம:
கக்ஷா நாமபதேய துப்யம்
    வ்ருக்ஷாணாம் பதயே நம : ||

நமோ ஐப்யேச்வரசாய
    ப்ரணதார்த்தி ஹராயதே
நம: பஞ்சநதீசாய
    க்ராமண்யாய நமோஸ்துதே ||

தக்வாஸஸே நமஸ்துப்யம்
    ஹரிகேசாய சம்பவே
பூயோ பூயோ நமஸ்துப்யம்
    பாஹி பஞ்சநதீபதே ||

## "பஞ்நதோஷ்கர்ஷ நிருபண நூலில் தேவலக்ருதரால் சொல்லப்பட்ட ப்ரணதார்த்தி ஹராஷ்டக ஸ்துதி

ப்ரணமாமி ஜகந் நாதம்
    ப்ரண தார்த்தி ஹரம் ஹரம்
ப்ரமாநாகோ சரம் தேவம்
    ஸ்ரீமத் பஞ்சநதேச்வரம் ||1||

உமா காந்தம் விருபாக்ஷம்
    நீலகண்டம் சதாசிவம்
ம்ருத்யுஞ்சயம் பஞ்சவக்த்ரம்
    கபாலாபரணம் விபும் 2

பஜே ஐப்யேச்வரம் தேவம்
    ஸ்ரீமத் பஞ்சநதீச்வரம்!

---

* உதவி : ஆகமப்ரவீனர் K.யோகவனச்சிவாச்சாரியார், திருவையாறு

ஊர்த்வரேதம் ஜகந்நாதம்
ஆதி மத்யாந்தவர்ஜிதம் 3

உபாஸே மேரு தந்வாநம்
ஸ்ரீமத்பஞ்ச நதேச்வரம்
காமாரிம் கால ஹந்தாரம்
கால கூட விஷாதந 4

ஆச்ரயே த்ரிபுரா ராதிம்
ஐப்யேச்வர பதிம் விபும்!
கங்காதரம் சந்திர சூடம்
நாகாபரண பூஷிதம் 5

ஸேவே பஞ்சநதீநாதம்
ப்ரண தார்த்தி ஹரம் சிவம்
பிநாகபாணிம் கிரீசம்
சூல ஹஸ்தம் ஜகத்குரும் 6

நந்தி ப்ருங்கி மஹாகாண
கஜாநந ஷடாநநைப்
அவிநாபூத பார்ச்சவந்தம்
தேவம் ஐப்யேச்வராதீபம் 7

வ்யாக்ர சர்மாம்பரதரம்
கஜசர்மோத்தரீயகம்
ப்ரணமாமி மஹாதேவம்
ப்ரணதார்த்தி ஹரம் ஹரம் 8

இது தேவலக்ருத ப்ரணதார்த்திஹ ராஷ்டகம்

*இது பஞ்சநதோத்கர்ஷ நிருபண நூலிலிருந்து எழுதப்பட்டது*

## தெலுங்கு இசை இலக்கியம்

### திருவையாற்று க்ஷேத்திர கிருதிகள்

*சங்கீத சிரோண்மணியாகத் திகழ்ந்த சத்குரு தியாகராஜ ஸ்வாமிகள் தன்னுடைய இளம் வயது முதல் சமாதி அடையும் வரை திருவையாற்றில்தான் வாழ்ந்து வந்தார்கள். ஐயாற்றில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள பஞ்சநதீச்சரரையும், தர்மசம்*

வர்த்தனியையும் நாள்தோறும் மாலைநேர தீபாராதனை சமயம் வழிபட்டு வருவது வழக்கம். அதிலும் சிறப்பாக தர்மசம்வர்த்தனி அம்பாளிடம் மிக்க ஈடுபாடு கொண்டு அம்பாள் அனுக் கிரகத்தைப் பரிபூரணமாகப் பெற்றிருந்தார்கள். இதனை அவரது மதுரமான, "முச்சட", 'விதிசக்கரா' கிருதிகளில் வர்ணித்துள்ளார். ஒரு சமயம் தர்மஸம்வர்த்தனியே வந்து தன் மனைவியிடம் பேசிவிட்டுச் செல்வதைப் பேரொளி மூலம் கண்டு உடன்மறைந்ததைப் பார்த்துப் பரவசம் அடைந்த நிலையில் 'சிவபாகிமாம்' கிருதிப் பாடினார். பிரும்மோற்ஸவத்தின்போது ஒரு நாள் யாக சாலை தீபாராதனை பார்த்து 'எவருன்னாரு' கிருதிப் பாடினார். தர்மாம்பிகை விஷ்ணு அம்சம் என்பதையும் வெள்ளிக்கிழமை மகாலெட்சுமி, அம்பாளான விஷ்ணுவைத் தரிசித்து வருகிற காட்சியை 'நன்னுகன்னதல்லி' கிருதியில் பாடினார். ஜெப்பேச மண்டபத்தே அமர்ந்து ஜெபசித்தியை அடைந்து 'நாதம் தனுமனுசம்' பாடினார். முக்கியத் திருவிழாவான சப்தஸ்தான விழாவைப் புகழ்ந்தும் பாடியுள்ளார்கள்.

## பஞ்சநதீசர் கிருதிகள்

| கிருதி | இராகம் | தாளம் |
|---|---|---|
| 1. இலலோ ப்ரணதார்த்திஹருடு | அடாணா | ஆதி |
| 2. எவருன்னாரு ப்ரோவ | மாளவஸ்ரீ | ஆதி |
| 3. ஏஹி த்ரிஜக த்ச | ஸாரங்க | திரிபுட |
| 4. பஞ்சநதீச பாஹிமாம் ஹர | கௌரி மனோகரி | ஆதி |

## தர்மஸம்வர்த்தனி கிருதிகள்

| | | |
|---|---|---|
| 1. கருணஜுடவம்ம | தோடி | ஆதி |
| 2. பராசக்தி மனு | ஸாவரி | ஆதி |
| 3. நீவுப் ரோவவலே | ஸாவேரி | ஆதி |
| 4. பாலே பாலேந்து | ரீதிகௌள | |
| 5. முச்சடப்ரம்மாதுலகு | மத்யமாவதி | |
| 6. அம்மதர்மஸம்வர்த்தினி | அடாணா | |
| 7. விதி சகிராதுலகு | யமுனா கல்யாணி | |
| 8. சிவே பாகிமாம் | கல்யாணி | |

## ஆட்கொண்டார்

| | | |
|---|---|---|
| 1. க்ஷேத்ரபாலக க்ஷேமுசிந்த | பிலஹரி | ஆதி |
| 2. காலசம்ஹார கருணாகர | சௌராஷ்ரம் | ஆதி |

## அப்பர் கயிலைக் காட்சி

| | | |
|---|---|---|
| 1. ரக்ஷிம்பவே ஸ்ரீரஜதகிரி நிலய | மாயாமாளவ கௌள | ஜம்பை |

* *திருவையாற்று முக்கிய மூர்த்தங்களில் ஆட்கொண்டார், முக்கிய விழாக்களில் அப்பர் கயிலைக்காட்சி போன்றவற்றை யெல்லாம் நேரில் கண்டு அனுபவித்த நிலையில் பாடிப் பரவியுள்ளதைப் பார்ப்போம்.*

## ஆட்கொண்டார்

*இராகம் : பிலஹரி* *தாளம் : ஆதி*

### பல்லவி

க்ஷேத்ர பாலக க்ஷேமமு சிந்த
தாமஸ மேரா ஸகல பாக்யதாயக (க்ஷேத்ர)

### அனுபல்லவி

ஷாத்ரமுகா தர்ம ராஜுநி மதஹரண
ப்ரண தார்த்தி ஹராக்ஞுதோ ஜேஸினா (க்ஷேத்ர)

### சரணம்

ஸாது ஸத்யவ்ரதஸுசரித வத்ஸுடு
சோகநாசன ஸுந்தர மூர்த்தி
வாதுசேயக ஸுரவந்தித சரணஸ்ரீ
வர தியாகராஜு நீசரணமு நம்மின (க்ஷேத்ர)

## அப்பர் கயிலைக் காட்சி

*இராகம் : மாயா மாளவ கௌளை* *தாளம் : ஜம்பை*

### பல்லவி

ரக்ஷிம்பவே ஸ்ரீரஜதகிரி நிலய
வ்ருஷபத்வ ஜானந்த மோக்ஷ வரதாயக (ரக்ஷிம்பவே)

---

* *திருவையாறு மகா கும்பாபிஷேக மலர் தேவஸ்தான வெளியீடு 1971 பக்கம் 193, 188*

### அநுபல்லவி

குக்ஷிலோ ப்ரபஞ்சமுன நிர்வஹிஞ்சின நீகு
பக்ஷபாதமு காதுரா ப்ரணதார்த்திஹ நன்னு (ரக்ஷிம்பவே)

### சரணம்

தக்ஷிண கைலாஸ மந்து தேஹதோ தெரிசிஞ்சுட
காக்ஷி கல்கி ஈஜுத்ஸாக்ஷி காபுண்டி நீ
தீக்ஷிஞ்சி தியாகராஜுநி காவிஞ்சுட உ
பேக்ஷிதமு ஏலரா உரகபூஷண நன்னு

## இலக்கியம் பேசும் திருவையாறு நிறைவுரை :

*ஒரு நாட்டின், ஊரின் வளத்தினை வெளிப்படுத்திக் காட்டும் அளவுகோல் அதன் இலக்கியச் செல்வங்களே. எந்த அளவிற்கு இலக்கியவளம் செறிந்து காணப்படுகிறதோ அந்த அளவிற்கு அவ்வூர்குப் பெருமைவாய்ந்ததாகப் பேசப்பெறும். அதிலும் தலநலம், கோயில் விளக்கம் இவற்றிற்கேற்ப ஊரும் வளம் கொழிக்கும். தெய்வநலஞ் சான்ற அருளாளர் பலராலும் பாராட்டப்பெற்றிருப்பின் அவ்வூர் மேலும் மேன்மையுற்றுத் திகழும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. அம்முறையில்தான் திருவையாறு திகழ்கிறது. இனியும் திகழும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. திருவையாறு, தெய்வநலஞ்சான்ற செந்நாப் புலவர் பலராலும், பன்மொழியிலும் பல்வேறு இலக்கியங்களிலும் பாராட்டப் பெற்றிருப்பதால் தான் இன்றளவும் வளமுடன் திகழ்கிறது என்பதை அநுபவத்தில் கண்டுணரலாம்.*

" பத்தர்சித்தர் வாழிபரி பக்குவர்கள்வாழி செங்கோல்
வைத்தவர்கள் வாழிகுரு வாழி பராபரமே"

தாயுமானவர்



• பொருளடக்கம்

## 9. சித்தர் முத்தர் வாழும் திருவையாறு

சித்தர்-முத்தர்கள் அருளாளர்கள்-தல-யாத்திரை சித்தர் வாழ்தலங்கள்-சித்தர்கள்பற்றி மணிவாசகர், தாயுமானவர் திரு மூலர் கருத்துக்கள்.

திருநந்திதேவர், அகத்தியர், அகப்பேய்ச்சித்தர்,அப்பர் சுவாமிகள், ஆட்கொண்டார்சாமி, சுடுக்காட்டுச்சாமி- தம்பல சாமி, ஆண்டார்சாமி, சிங்கப்பூர்சாமி, அருள்சாமி, பச்சையப்பர், சச்சிதானந்தசுவாமி, சுந்தரசாமி, தியாகராஜ சுவாமிகள், தெட்சணாமூர்த்தி-நிறைவுரை

# 9. அருள்தவ சித்தர்முத்தர் வாழும் திருவையாறு

" வினைப் பயன்களை நுகரவும், இறையருளைப் பெறவும், பெருந்தகைமை, கொடை வண்மை, தூய்மை, அமைதி, உள்ளொளி ஆன்மீகம் முதலிய உயரிய குணங்களைப் பெறவும் இப்புண்ணிய பூமியில் பிறப்பது பெருந்துணை புரிகிறது"

—விவேகானந்தர்

உலக நாடுகளில் ஒப்புயர்வற்ற சிறப்புடைய நாடு நம் இந்தியா. பிற நாடுகளை நோக்க "இந்திய நாடு" மிகவும் புண்ணிய பூமியாகும். இப்புண்ணிய (பூமிக்கு) மண்ணிற்கு தனி ஆற்றல் இருக்கிறது, என்பதை அனுபவ பூர்வமாக ஞானியர் அறிந்து உணர்ந்துள்ளனர்.

எனவே, .தேவர்களும், இப்புண்ணிய பூமியில் பிறக்க விரும்புகின்றனர், என்கிறார் மணிவாசகர். இங்ஙனம் விண்ணகத் தேவரும் மண்ணகத்தே வந்து தவம் இயற்றி வழிபட்ட தலங்கள் எண்ணில நம் நாட்டகத்தே உள்ளன.

## சித்தர்முத்தர்கள் :

இமயமலை, கொடிய பனிமலைச் சாரலிலும், இனிய பொதிய மலைச் சாரலிலும் தம்மை மறந்த நிலையில் எண்ணற்ற அருந் தவசிகளும், முனிபுங்கவர்களும் ஊன், உடை உறக்கம் துறந்து பொய்யுலகை விட்டு மெய்யுலகைக் காண இன்றும் அருந்தவம் இயற்றிக் கொண்டுள்ளனர். அதனால் தான் இந்தியா இன்றளவும் பாதுகாப்புடன் உள்ளது. எத்தகைய தீய சக்திகளும் நம்மை எதிர்க்க இயலாநிலையில் உள்ளது. செய்ற்கரிய செயலை ஒரு நொடிப் பொழுதில் செய்யும் வித்தகர்கள் அவர்கள். மோனம் கை வந்து முத்தி நிலை கைவரப் பெற்ற சித்தர்கள் பலர். அவ்வாறே சித்தி பெற்று முத்தி நிலை பெற்ற சித்தர்கள் பலரும் பல்வேறு தலங்களில் மூர்த்தங்களாக — அருட் செங்கோலோச்சிக் கொண்டுள்ளனர். இவர்களை "வித்தகச்சித்தர்கணம்" என்பார்

நாயுமானார். இவ்வாறு அருந்தவ ஞானியர் சித்தர் முத்தர்கள் வாழும் தலங்களே இன்று பேரும் புகழும் கொண்டு திகழ்கின்றன. அவ்வாலய மூர்த்தி முனிவர்களால், சித்தர்களால் பூஜிக்கப்பெற்று அதனோடு ஐக்கியமடைந்த காரணத்தால் அடியார் கூட்டத்தை "இவண் வருக! தரிசித்துப் பயன் பெறுக" என அழைக்க, மக்கட் கூட்டமும் ஆங்காங்கே திரள்கின்றன. பழனி, திருப்பதி, திருவண்ணாமலை, சிதம்பரம், காசி, இராமேஸ்வரம் போன்ற தலங்களின் சிறப்பிற்குக் காரணம் இதுவே. சித்த முத்தர்கள் தோன்றாத் திருமேனியாக இருந்து கொண்டு மக்களை ஈர்க்கின்றனர். சித்தர்களால் உருவேற்றப்பட்ட மூர்த்திக்குத் தெளிவான அருள் நோக்குண்டு.

அருளாளர்கள் :

நாயன்மார்களும், ஆழ்வார்களும் தல யாத்திரையாக வந்து ஆங்காங்கே இறைவன் உறை தலங்களை வழிபட்டுப் பாடிப் பரவிச் சென்ற காரணத்தால் தேவாரப் பாடல் பெற்ற மங்களா சாசனம் பெற்றத் தலங்கள், எனும் சிறப்பிற்கு உரியவாயின. அவர்களுடைய பாதம் பட்ட மண், திருவடித் தூளி அங்கே தங்கி அருள் அலைகளாக எங்கணும் பரவிக் கொண்டுள்ளன. இதனை அவண் சென்று வழிபட்டுப் பலன் கண்டோரே நன்கு அறிவர். எனவே, நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற அருளாளர் பலரும் சென்று வழிபட்டு, பாடிப்பரவிய தலங்களுக்குச் சென்று நாம் தரிசிக்குங்கால் நமக்கும் அவர்களின் அருளாற்றல் நம் மீது ஓரளவு பதிகிறது. காலமும் இடமும் வேறுபட்டுக் கடந்திருப்பினும் நாம் அவர்களோடு மானதத் தொடர்பு கொள்கின்றோம். அவர்களை நாம் நேரடியாகக் காண இயலாவிட்டாலும், அவர்களின் தொடர்பு பெற்ற தலங்களையும், கோயில்களையும் காணுகின்ற போதும், தரிசிக்கும் போதும் ஒரு வகையில் அவர்களை நாம் நேரே காண்பது போன்ற உணர்ச்சியும், மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படு கின்றன. சமயக் குரவர் நால்வர்களின் தேவார திருவாசகப்பாடல் பெற்ற திருத்தலங்கள் அனைத்தையும் ஒரு முறையாவது நாம் [illegible] [illegible] [illegible] [illegible] சிறந்த வழியாகும்.

அதற்காகவே நம் முன்னோர்கள் 'தலயாத்திரை' என்ற பெயரில் தெய்வத் திருத்தலங்களையும் அங்குள்ள இறைவனையும் வழிபட்டுப், பிறவிப் பயனைப் பெற்றுய்ய எளிய வழியை வகுத்துச் சென்றுள்ளனர்.

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக கொள்வனே --திருமூலர்

## தலயாத்திரை

தலயாத்திரை மேற்கொள்வதால் நாம் எய்தும் நலன்களுக்கு அளவே இல்லை. துன்பமும், துயரமும் நிறைந்த இவ்வுலகில் நம்முடைய குறுகிய வாழ்நாளில் நாம் அடையக்கூடிய ஏதோ ஒரு சிறு இன்பம் கூட தலயாத்திரை தந்த இன்பமே எனலாம். முற்காலத்தே நம் முன்னோர் "தலயாத்திரை" என்று அமைத்திருந்ததைத் தான் தற்காலத்தே "சுற்றுலா" என்ற பெயரில் பல்லிடங்கட்கும் செல்லுகின்றோம். நம் கவலைகளை மறக்கின்றோம், நம் மாசுகள் அகன்று ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாத இடங்களையும், காட்சிகளையும் கண்டு களிக்கின்றோம், கேளாத செய்திகள் பலவும் கேட்டுணர்ந்து கிளர்ச்சியும், வளர்ச்சியும் பெறுகின்றோம். பல வேறு மொழி, இன, மக்கள், நடை, உடை, நாகரிகப்பண்பாடுகளை அறிந்து கொள்கின்றோம். அத்துடன் தல வழிபாட்டால் மனத் தெளிவும், அமைதியும், இன்பமும், நல்லுணர்வும் கொள்கின்றோம். அதனால் நம்மையறியாது இறையருளும், பக்தியும், முறையே நம்மிடமும், நம் சந்ததியினரிடமும் வளர்ந்தோங்குகின்றன, நம் முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும் அரும் பெரும் சிறப்புகளையும் கண்டும், உணர்ந்தும் களிமகிழ் வெய்துகின்றோம், பிறவிப் பயனையடைகின்றோம்.

நம் முன்னோர் தமிழ் மண்ணை ஐந்து நிலப்பகுதிகளாகப் பாகுபடுத்தியுள்ளனர். அவற்றில் இறைவனுறை புண்ணியத் தலங்களும் உண்டு.

*1. முல்லை (காடு), 2. குறிஞ்சி (மலை), 3. மருதம் (ஆறு) 4. நெய்தல் (கடற்கரை) 5. பாலை (மணற்பரப்பு)*

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| திருமறைக்காடு | பழனிமலை | காவிரி வடகரை தலங்கள் | இராமேஸ்வரம் |
| திருவாலங்காடு | குற்றாலமலை | காவிரிதென்கரைத் தலங்கள் | கன்னியாகுமரி |
| தலையாலங்காடு | திருவண்ணாமலை | திருவையாறு | திருச்செந்தூர் |

## அருந்தவ சித்தர் முத்தர்கள் இன்றும் வாழும் திருத்தலங்கள்*

| | |
|---|---|
| 01. நந்தீசர் | காசி |
| 02. பதஞ்சலி | இராமேஸ்வரம் |
| 03. கொங்கணர் | திருப்பதி |
| 04. இடைக்காடர், கௌதமர் | திருவண்ணாமலை |
| 05. போகர் | பழனி |
| 06. திருமூலர் | சிதம்பரம் |
| 07. தன்வந்திரி, வசிட்டர் | வைத்தீஸ்வரன் கோயில், கண்டி |
| 08. கும்பமுனி | கும்பகோணம் |
| 09. சட்டமுனி | சீர்காழி, சீரங்கம் |
| 10. கமலமுனி | திருவாரூர் |
| 11. மச்சமுனி | திருப்பரங்குனறம் |
| 12. சுந்திரானந்தர் | மதுரை |
| 13. இராமதேவர், அழுகணிசித்தர் | அழகர்மலை |
| 14. மயிரேசர் | திருவானைக்கா |
| 15. காளாங்கி | காஞ்சீபுரம் |
| 16. கோரக்கர் | நாகை--பொய்யூர் |
| 17. வால்மீகர் | எட்டுக்குடி |
| 18. அகப்பேய்ச் சித்தர் | திருவையாறு |
| 19. பாம்பாட்டிச் சித்தர் | மருதமலை, திருக்கடையூர் |
| 20. குதம்பைச் சித்தர் | மயிலாடுதுறை, திருக்கழுக்குன்றம் |

* *18ன் சித்தர் பெரிய ஞானக்கோவை : வா. சரவணபிள்ளை வெளியீடு 1924 பக்கம் 525 (அபிதானசிந்தாமணி) இவ்வகை போகர் 500ல் கூறி இருக்கின்றன.*

| | | |
|---|---|---|
| 21. | திருமூலவர்க்கம் | விருத்தாசலம் |
| 22. | நாரதர், பத்ரகிரியார | திருவிடைமருதூர் |
| 23. | கருவூர்த்தேவர் | திருக்காளத்தி, தஞ்சாவூர் |
| 24. | அகத்தியர் | அனந்தசயனம் |
| 25. | புலத்தியர் | பாபநாசம், ஆவுடையார்கோவில் |
| 26. | விசுவாமித்திரர் | திருவாவடுதுறை |
| 27. | பட்டினத்தார் | திருவொற்றியூர் |
| 28. | இராமலிங்கர் | வடலூர் |
| 29. | குருஞானசம்பந்தர் | தருமபுரம் |
| 30. | ஆதிபராசக்திசித்தர்கணம்21 | மேல்மருவத்தூர் |
| 31. | காசிபர் | துத்திரகிரி |

சித்தர்கள்

*சித்தர்களின் சிறப்பும் பெருமையும் இத்தகையனவென்று நம்மால் அளவிட்டு, அறுதியிட்டுக் கூற முடியாது. அடியார் களிலும், அருளாளர்களிலும், சித்தர்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்கள்.*

மணிவாசகர்

*தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள் சித்தர்கள் என்று இறையருள் பெற்ற சான்றோர்களை வகைப்படுத்தியும், வரிசைப் படுத்தியும் கூறியுள்ளார். தொண்டர் பக்தர், யோகி மூவரிலும் மேலானவர் சித்தர்களே என்பது மணிவாசகப்பெருமான் கருத்தாகும்.*

" தொண்டர்கள் தூசி செல்வீர் பக்தர்காள் சூழப் போகீர்
ஒண்திறல் யோகிகளே பேர் அணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நாடு ஆள்வோம் நாம் அல்லல்படை வாராமே"

*-மணிவாசகரின் திருவாசகம்*

*திருப்படை எழுச்சி 2*

தாயுமானவர்

*இறையருள் முழுவதாகச் சித்திக்கப்பெற்றவர்கள் "சித்தர்கள்" அதனால்தான் தாயுமானவ சுவாமிகள் "வித்தகச்*

சித்தர்கணம்" என்ற தலைப்பில் 10 பாடல்களைப் பாடியுள்ளார். இத்தகைய பெருமை மிக்காரில் கோரக்கர், ராமதேவர், சட்டை முனிவர், அகத்தியர், அகப்பேயார், போகர், சுந்தரானந்தர், தன் வந்திரி, கொங்கனர் சதுரகிரியில் வாழ்ந்து வருவதாக நம்பப் படுகிறது. (சதுரகிரிமதுரை மாவட்டம் வத்ரா இருப்புக்கு அருகில் உள்ளது)

"எண்ணரிய சித்தர் இமையோர் முதலான
பண்ணவர்கள் பத்தருள் பாலிப்ப தெந்நாளோ."

அடியார் வணக்கம்--9

என்பார் தாயுமானவர்

## திருமூலர்

" நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரர்
என்றிவர் என்னொடு எண்மரு மாமே"

திருமந்திரம் 67

நடனத்தைக் கண்டுகளித்த பதஞ்சலி முதலியோருடன் திருமூலரும் ஒருவர். ஆக எண்மர் என்பது இப்பாடலால் தெரியவருகிறது.

சித்தர்கள் ஞானசித்தர், நாதசித்தர், ரஸேஸ்வர சித்தர் என்று மூன்று பிரிவினராவர். உண்மையான ஞானநிலையில் நின்றவர் ஞானசித்தர். பிராணாயாம யோகப் பயிற்சியால் சுழுமுனை நாடியில் உண்டாகும் நாதத்தில் தம் மனத்தை ஒடுக்கிச் சமாதி நிலை நின்றவர் நாதசித்தர் ரஸாயன முறையில் காயசித்தியடைந்தவர் ரஸேஸ்வர சித்தர் இவர்களே வைத்தியம், ரசவாதம் முதலிய நூல்களைச் செய்தவர்.

ஞானசித்தர்கள்-சுத்த சன்மார்க்க சித்தர்கள் எனவும் அழைக்கப்படுவார்கள். அகத்தியர், அகப்பேயார், திருமூலர் பாம்பாட்டியார், கடுவெளியார், இடைக்காடர், குதம்பையார், சிவவாக்கியர், திருவெண்காடர் (பட்டினத்தார்) பத்திரகிரியார்,

அருணகிரியார், திருமாளிகைத்தேவர், இராமலிங்கர், குருஞான சம்பந்தர் போன்ற ஆன்றோர்கள் யாவரும் ஞானசித்தர் ஆவர். எனவே, திருவையாற்றுத்திரு மண்ணில் வாழும் சித்தர் பெரு மக்களில் தலைசிறந்தோராக போற்றப்பெறும் திருநந்திதேவர், அகத்தியர், அகப்பைசித்தர், அப்பர் இவர்கள் பற்றிக் கண்போம்.

(1) திருநந்தி தேவர்

"நந்தி திரு அருள் பெற்ற நன்னகர்" சேக்கிழார் திருஞானசம் 301

*நந்தி என்ற சொல்லுக்கு எப்பொழுதும் ஆனந்த நிலையில் இருப்பவர் என்பது பொருள் இவர் இளமையும் திட்பமும் வாய்ந்தவர்.

" செம்பொருள் ஆகமந் திறம் தெரிந்து
நம்பவம் அறுத்த நந்தி வானவன்"

என்றதால் திருநந்திதேவர் சிவபிரானிடமிருந்து சிவாகமங்களைத் தெரிந்து நமக்கு அருளினார் என்பது தெரிகிறது. ஆதலால் அவரே தம் சைவசமயத்திற்கு முதல் குருவாக இரண்டாம் சம்புவாகத் திகழ்கிறார்.

நந்தி தேவருக்கு நெற்றிக்கண்ணும், நான்கு புயங்களும், கையில் பிரம்பும், உடையவாளும், இரு புயங்களில் மான், மழுவும் உண்டு. மான், வேதத்தைக் குறிக்கிறது. மழு வீரத்தைக் குறிக்கிறது. ஆண்மையைக் குறிக்கிறது எனக்கூறுவர். எல்லா உயிர்களையும் ஒரு காலத்தில் ஒய்வுபடுத்துதல்--மகாசங்காரம் எனப்படும். இவ்வதிகாரம் நந்தியெம் பெருமானுக்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது. இவர் ஒரு சித்தர். இவர் சிவ சந்நிதியில் காவல் பூண்டு நிற்கிறார். இவரது அனுமதி பெற்றே சிவதரிசனம் செய்தல் வேண்டும். இவருக்கு உருத்திரன் என்றும் பெயருண்டு. ருத்--துக்கத்தை, ரன்--ஒட்டுபவன், தூயவன், சைலாதி என்ற பெயர்களும் உண்டு.

* இந்துமத இணைப்பு விளக்கம் மகாவித்துவான் கே. ஆறுமுக நாவலர் சென்னை இந்து சமய அறநிலைய வெளியீடு--1963 பக்கம் 80

" நங்கள் நாதனாம் நந்தி தவஞ்செய்து
பொங்கு நீடருள் எய்திய பொற்பது
கங்கை வேணி மலரக் கனல்மலர்
செங்கை யாளர் ஐயாறும் திகழ்வது

*சேக்கிழார் பெரியபுராணம்*

*இத்தகைய சர்வ சக்தி படைத்த தெய்வம் திருவையாற்றில் சிலாத முனிவரின் திருமகனாக அவதாரம் செய்து செப்பேசர் என்ற திருநாமத்துடன் வளர்த்து வந்தார். தமக்கு ஆயுள் 16 என்பது அறிந்து, பெற்றோர் கவலை அகற்றத் தன் 14காம் வயதில் கோவணம் உடுத்தி, மான்தோல் கொண்டு, காதணி அணிந்து, குடுமி புனைந்து, உடலெங்கும் வெந்நீறு அணிந்து ஐம்புலன் அடக்கி ஐயாறமர் செம்பொற்ஜோதியை அடிவணங்கி மவுனமாக, சூர்ய புஷ்கரணியில் கழுத்தளவு நீரில் நின்று, சிரமேற் கரங்களைக் கூப்பி காலின்மேல் காலை ஊன்றி வடதிசையை நோக்கிப் பரமசிவ தியானத்துடன் அட்ஷரலட்ஷ்மாகும்படி மகாருத்ர மந்திரம் ஜபித்துத் தவம் இயற்றியனார். இங்ஙனம் 110 ஆண்டு காலம் தவம் இயற்றி அன்னை அருளால் ஐயா றப்பர் காட்சி அளித்து, ஏலும்புருவாய் இருந்த உடலை சூரிய, சந்திர கங்கை, திருமுலை, நந்திவாய்நுரை எனும் பஞ்சநதிகளால் தாமே அபிடேகித்து சிவதிட்சையும் "நந்திகேஸ்வரர்" எனும் திட்சா நாமமும் அளித்து சாருப்ய பதவியும் அளித்தார். குரு முதல் வராகிய திருநந்திதேவர் திருஅவதாரம் செய்த சிறப்புடன் திருவை யாற்றில் சந்நிதிமுன் இன்றும் திருமணக்கோலத்துடன் நித்திய வாசம் செய்து கொண்டு திருவருள் பாலித்து வருகின்றார்.*

அகத்தியர்

" ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நலம்பெறற் பொருட்டே"

---

* : *"சித்தர்கள் சீர்மை பற்றிச் சிறு விளக்கங்கள்"; ப. சுந்தரமூர்த்தி--ஆசாரியர் சன்மார்க்க சங்கம்--தஞ்சாவூர்*

*"மோட்சமது பெறுவதற்குச் சூட்சம்--சொன்ன" அகத்தியர் ஒரு பெரும் சித்தர். புராண அகத்தியரும், சங்ககால அகத்தியரும் ஒருவரா என்ற ஐயம் எழுததேவையில்லை. "இருந்தேன் இக்காயத்துள் எண்ணிலி கோடி காலம்" எனத் திருமூலர் வாக்குப்படி, அகத்தியர் பல ஊழியும் கண்ட சித்தராகக் கொள்ளலாம். பொதியமலை வாழ்ந்தவர், குறுமுனி, கும்பமுனி, கலசமுனி என்ற பல பெயர்கள் உடையவர் தெளிந்த ஞானி, சிறந்த தமிழ்ப் பேராசான் "பேர் அகத்தியம்" என்ற இலக்கண நூலை இயற்றியவர். தொல்காப்பியர் முதலிய பன்னிரு மாணாக்கரைக் கொண்டவர். சங்கம் தொடங்கி தமிழை நிலைநாட்டியவர். சிவபெருமானிடமும் முருகக் கடவுளிடமும் தமிழ் கற்றவர். "தென்பொதிகைத்தமிழ் முனி" என சிறப்பிக்கப் படுபவர். விண்ணில் காணும் 27 நட்ஷத்திரங்களில் திரிசங்கு, துருவன் போன்ற தெற்குப் புறமாக வானத்தில் அகத்தியர் நட்ஷத்திரமும் உள்ளதைக் காணலாம். அதன் ஒளி தனிச் சிறப் போடு காணப்படும். அகத்தியர் வரலாறு மிகவும் வியப்பைத் தருவது, பெருமை வாய்ந்தது.

இத்தகைய சிறப்பு மிகுந்த அகத்திய மாமுனிவர் மாதவர் பலருடன் திருவையாறு தலத்திற்கு வந்து ஸப்த ஸ்தலங்களில் வசிக்கும் காசிபர் முதலிய ஸப்த ரிஷிகளைக் கண்டு மகிழ்ந்தார் அதன்பின், ஐயாற்றுச் சூரிய புஷ்கரணியில் நீராடி ஐயாறப்பரை வலம் வந்து, பன்னீராயிரம் பஞ்சாக்ர ஜபம் செய்து அட்டாங்க யோகமும் செய்து, பஞ்சாக்கினி மத்தியில் யோக நிட்டைக்கூடி அக்கினி மயமாய் இருந்தார். கருணைக்கடலாகிய ஐயாறப்பர் அருட்காட்சி "நல்கி" வேண்டிய வரம் கேள் என்றார். அகத்தியர் "ஸ்வாமி" அடியேன் உமது திருவடிக்கீழ் அடங்கி நின்று தோத்திரம் செய்ய சிறிய வடிவம் தந்தருள வேண்டும் " என்று பிரார்த்திக்க அவ்வாறே குறுமுனிஆகுக என் செம்பொற் சோதியார் கட்டளையிட்டு அருளினார். குறுமுனி ஆனாலும் எவ்விடத்தும் எச்செயலையும் சென்று செய்வாய் மேலும், என்ன

* அகத்தியர்--விவேகாநந்த கேந்திர புத்தகமாலை--மலர் 10 சென்னை 1987 பக்கம்--6

வேண்டும் என, பெருமானே! என் மனம் திருக்கயிலை காண விழைகின்றது! என்று கூறிப் பணிய "சிறப்பு மிக்க முனிவனே! நமது ஐம்பத மந்திரத்தை நீ ஓதிக்கொண்டு சூரிய திர்த்தத்தில் மூழ்கினால் பிரகாசம் உள்ள வெள்ளி வெற்பையும், அதன் மேல் நம்மையும் காண்பாய் "நித்திய சித்தன் ஆவாய்" எனக் கூறி மறைந்தனர். அவ்வாறே முத்தமிழ் முனிவராம் அகத்தியர் சூரிய தீர்த்தம் மூழ்கி கயிலை சேர்ந்தார். கயிலையில் பெருமான் அருள் பெற்று அருட்காட்சி கண்டு பெருமான் கட்டளைப்படி தென்திசை உயர்ந்ததை சமநிலைப் படுத்த பொதியும் வந்தார். இத்தகைய அகத்தியர் ஐயாற்றில் நவக்கிரக சன்னதியில் லோபா முத்திரை சமேத அகத்திய லிங்கமாக இன்றும் அருட்காட்சி நல்கிக் கொண்டுள்ளார்.

## (3) அகப்பைச் சித்தர்

நியமேசராக புற்றுமூடிய நிலையில் அருந்தவம் இயற்றியதன் பலனால் ஐயாறன் இருப்பிடம் காட்டி, கரிகால் சோழனால் ஐயாறப்பர் ஆலயத்தை எழுப்பிய அருந்தவ ஞானியர் தலைவர் (பழனியில் பழனி ஆண்டவர்முன் சமாதி கூடி அமர்ந்துள்ள போகர் போன்று) அகப்பைச் சித்தர் ஐயாறப்பரின் எதிரே சித்தேஸ்வரராகவே அமர்ந்து இன்றும் சித்தேசராலயத்தே இலிங்கவடிவில் காட்சி தந்து அருள் பாலித்து வருகின்றார். மக்களின் ஜுரம் போன்ற பிணிகளைத் தீர்க்கும் ஜுரஹரேசர் எனவும் அழைக்கப்படுகிறார். எனவே, ஜுரப்பிணி மட்டுமல்ல, பிறவிப் பிணிக்கும் மருந்தளிக்க வல்லவர்கள்சித்தர்கள் என்பதனை இதனால் நாம் அறிகின்றோம். இவர்களது காலத்தை அறுதியிட்டுக் கூறமுடியாது.

அகப்பை சித்தர் பதினெண் சித்தர்களில் ஒருவர். இவர் பேயாக அலையும் மனத்தை 'அகப்பேய்' என விளித்தே தன் பாடலில் பாடியுள்ளதால் அகப்பேச் சித்தர் ஆனார். கால ஓட்டத்தில் அகப்பேய் என்பது அகப்பையாகமாறிவிட்டது.

பேய் மனத்தை அலையாது நிற்க அறிவு கூறிப்பாடியவர் அகப்பைச் சித்தர். அவரது பாடற் கண்ணிகள் ஒவ்வொன்றும்

வைரம் போன்றவை. அறியாமையும், முரட்டுக் குணமும், கொண்ட மாந்தர், ஒன்றையும் புரிந்துகொள்ளாமல் தாம் கெடுவதோடு உலகையும் கெடுக்கின்றனர்.. உலகத்தை நலமுறச் செய்வது அன்பின் ஒளியே. அந்த அன்பு ஒளியைக் காண அகக்கண் திறக்க வேண்டும். தெளிவடைய வேண்டும் நம் அகத்தில் படிந்துள்ள அகந்தைக் கிழங்கை (ஆணவத்தை) அகழ்ந்து எடுத்து அங்கே உண்மை எனும் அகல் விளக்கேற்றுகிறார் அகப்பைச்சித்தர் உதாரணத்திற்கு ஒரு சில

" சைவ மாருக்கடி-அகப்பேய்
தன்னை யறிந்தவர்க்கே
சைவமானவிடம்-அகப்பேய்
சற்குரு பாதமடி
பிறவிதீர வென்றால்-அகப்பேய்
பேதகம் பண்ணாதே
துறவி யானவர்கள்-அகப்பேய்
சும்மாயிருப்பார்கள்
தேனாறு பாயுமடி-அகப்பேய்
திருவடி கண்டவர்க்கே
ஊனாறு மில்லையடி-அகப்பேய்
ஒன்றையும் நாடாதே"

அகப்பேய்ச் சித்தர் பாடல்

## (4) அப்பர் சாமிகள்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாய்மூரில் புகழனார் மாதினியார்க்கு மருண்நீக்கியார் திரு அவதாரம் செய்தார். பின் தர்மசேனராக சமணராகி, திருநாவுக்கரசாக சிவபெருமானால் சூலை நோய்கொடுத்துத் தடுத்தாளப் பெற்றவர். நீற்றறையாலும், விடத்தாலும், யானையாலும், கடலாலும் விழுங்கப்பெறாது நற்றுணையாம் நமச்சிவாயத்தால் பேறு பெற்று உயர்ந்தவர்கள். இறைவனுடைய திருவருள் ஆணையால் திங்களூரில் பாம்பு கடித்த பாலனை உயிர்ப்பித்து பல அற்புதங்களைப் புரிந்தார்கள். தலயாத்திரையே, தம் வாழ்வாகக் கொண்டு காளத்தி கண்டவர்,

* பதினென் சித்தரின் ஞானக்கோவை 1924 பக்கம் 248

கயிலையையும் காணும் பெரு விருப்பில் கடுநெறிக்களைக் கடந்து உடல் தேய்ந்து. உள்ளந்தேயாதவராய் அயர்ந்தார். இவரிடம் இறைவனே முனிவர் உருக்கொண்டு வந்து, மானிட உடல் கொண்டு கயிலைகாண்டல் அரிது, திரும்பிச் செல்வதே கடன், என்று கூற, இவர், கயிலைகண்டன்றி இவ்வுடல் கொண்டு மீளேன் எனும் உறுதித் திறன் கண்டு ஐயன் 'திருநாவுக்கரசே! எழுந்திரு இப்பொய்கை மூழ்கி எமது கோலத்தை ஐயாற்றில் காண்க என்றதும் கயிலை அருகே உள்ள இமயத்திருந்த வாவியில் மூழ்கி தோத்திர ஞானத்தால்' மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி, யாதும் சுவடுபடாமல்" மண்மீது பாதம்பதியா நிலையில் ஒளிவடிவினராய் பிரணவதேகம் பெற்று ஐயாறடைந் தார்கள். அப்பர்சாமிகள், அத்தகைய அரும்பெரும் சித்தராக முனிவர் விடிவில்வந்த சித்தரோடு சித்தராக திருவையாறு தென் கயிலாயத்தே நின்ற திருக்கோலத்தோடு நமக்குக் காட்சித் தந்து கொண்டுள்ளார்கள். அவரது ஒளி தென் கயிலாயத்தே இன்றும் ஒளிவீசிக் கொண்டுள்ளதைக் காணலாம்.

### (5) ஆட்கொண்டார் சாமி :

இவரது சமாதி கோயில் திருவையாறு மேலவீதி, தென்மேற்கு மூலை திருநெய்த்தான சாலை முன்னதாகவே இடிபாடுற்றுள்ளது. இவர் ஒரு பரதேசி, ஊர் ஊராகத்திரிந்து இங்கு வந்த திருவையாறு தெற்குக் கோபுரவாசலில் உள்ள இறைவன் ஆட்கொண்டார் சந்நிதியில் எப்பொழுதும் அமர்ந்து தியானத் திலிருப்பார். அதனால் தான் ஆட்கொண்டார் சாமியானார். நிர்வாணமாக அவதூத நிலையில் இருப்பார். நினைத்த இடங்களில் வீடோ, கடையோ அங்கு தானே சென்று வேண்டியதை எடுத்துக் கொண்டோ, உண்டுவிட்டோ, செல்வது வழக்கம். நம் எதிர்காலத்தை அதாவது வரப்போவதைச் சொல்லும் சக்தி படைத்தவர். இவரிடம் யாரும் நெருங்க முடியாது. அப்படி நெருங்கினால் கண்டபடி திட்டுவார். கற்களை வீசி அடிப்பார். எனவே மக்கள் இவரிடம் நெருங்கப்பயப்படுவர். பல சித்துக்கள் செய்து காட்டுவார். இரவில் உறங்கும்போது கால், கை, முண்டபம் இவை தனியாகக் கிடக்குமாம்.

வண்டியில் செல்வோரை வழிமறித்து அதிலுள்ள பழம், தேங்காய் போன்ற பொருள்களைக் கேட்பாராம்; தராவிடில், வண்டியின் கீழே படுத்து விடுவாராம். வண்டிக்காரர் அறியாத நிலையில் உடல்மீது வண்டி ஏறி இறங்கியதும் திடுக்கிடுவார்களாம். உடனே "சாமி! இந்தா தேங்காய்" எனக் கொடுக்க அன்று நல்ல விலைக்கு வியாபாரமாகுமாம்.

இவரது காலம் :- விதேக முத்தி கலி. 4936, மன்மத ஆவணி உத்திரம் அதாவது கி.பி. 1835 திருவாரூர் தட்சிணாமூர்த்தி சுவாமிகளும் இவரும் ஒரே காலத்தவர். அன்பர்களிடம் "திருவாரூரானிடம் போ" என்று இவரும், அவர், திருவை யாற்றானிடம் போ என்றும் சொல்வார்களாம். இருவருமே சித்தர்கள் அவதூத நிலையினர். இறுதியாக இவர்கள் தாம் முத்தியடையப்போகும் கால நேரத்தை முன்னதாகவே மக்களுக்கு அறிவித்து. "நாளை பட்டம் பறக்கப் போகுதடா வந்து பார்" என்று சொல்லி, ஆட்கொண்டார் சந்நிதி முன், மதியம் 12 மணிக்கு அமர்ந்து நிட்டை கூடினார்கள். மண்டை தானாகவே வெடித்து, கபால மோட்சம் கிட்டியதை மக்கள் கண்டு போற்றினர். இந்த அதிசயத்தை அக்காலத்தே ஆண்ட வெள்ளை அதிகாரிகள் கண்டு வியந்து மாவட்டப் பதிவேட்டில் பதிவு செய்துள்ளனர். இதனை இந்நூல் முதற்பகுதியில் காணலாம்

இச்சித்தர் மகானின் குருபூஜை பல ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்றது. இவரது ஐம்பொன் சிலை அறுபத்துமூவர் மடத்தில் மிக்க அழகாக உள்ளது. இத்தகைய அருட்சக்தி மிக்கவர் அருட்பீடத்தை யார் முன்னின்று கட்டி வழிபாடு செய்வார்களோ அவர்கள் பெரும் பேறு பெற்றவர் ஆவார்.

## (6) சுடுகாட்டுச்சாமி என வழங்கும் சதானந்தசுவாமிகள்

திருவையாறு திருநெய்த்தானம் சாலையில் பெரிய மடமாக நல்ல நிலையில் உள்ளது. அதில் அவரது ஜீவ சமாதி உள்ளது. ஆதியில் நாடகப் பாடல்களையும், லாவணி பாடுவதிலும் வல்லவராக இருந்தாராம். பக்குவம் வந்து மவுனியாகி ஞானம்

கைவரப் பெற்ற அவர் சதா சுடுகாட்டில், மயானத்தில் அமர்ந்து கொண்டு தவம் இயற்றும் காளாமுகச் சைவராகத்திகழ்ந்தவர் குறையுடைய மக்கள் தம் மனக் கவலையை அவரிடம் வந்து சொல்வார்களாம். நல்ல நேரமுடையவர்களுக்கு நிட்டை கலைந்து சுடுகாட்டுச் சாம்பலையே பிரசாதமாகக் கொடுப்பாராம். அவர் கைபட்டு மந்திரநீறாகி மக்கள் பிணியகற்றும், குறை நீக்கும் அருமருந்தாயமைந்தது. பவப்பிணி தீர்க்கும் மகான் ஆதலின், அவரது குரு பூசை விழா சிறப்பாக நடைபெறும். அவரது சீடர் பரம்பரையில் செல்லப்பசாமி காலத்தில் திருவண்ணா மலையிலிருந்து "திருக்கூட்டம்" சாதுக்கள் நூற்றுக்கணக்கில் வந்து கலந்து கொள்வதைக் கண்டுள்ளோம். அருள் தவ ஞானி இவர் இயற்பெயர் சதானந்தசுவாமி சிறந்த மந்திர சித்தர்.

அருள்தவ ஞானியராகிய இவர்மீது இவரது மாணாக்கர் சண்முகப்பத்தர் அவர்களால் "சதானந்த சுவாமிகள் பதிகம்" எனும் நூல் ஒன்று 1914ல் பாடி வெளியிடப்பெற்றுள்ளது. சான்றுகொன்று தருவோம்.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அன்றுகல் லாலின் கீழிருந்த தன்பா
    யரியமா வாக்கியந் தன்னை
நன்றுறச் சனகர் முதலியோர் தமக்கு
    நவின்ற மெய்ஞ்ஞான நாயகனே!
குன்றுமுப் பொருளைச் சத்மென நம்பிக்
    குவலயந் தன்னிலே வாடு
மின்றெனை யுவந்தாட் கொள்ளுவாய் ஐயாற்
    றெழில் சதானந்தசற் குருவே"

*சதானந்தசுவாமிகள் பதிகம் 5*

இதிலிருந்து இவருக்குப் பல சீடர்கள் இருந்தனர் என்பதும் சீடர்களுக்கு இவர் தத்துவ சாத்திரங்களை ஓதி வந்தார். என்பதும் அறிகிறோம் இவரது பூர்வாசிரமப்பெயர் இராமசாமி பிள்ளை என்பதாம்.

மறைந்த பின்பும் மகத்துவம்

தஞ்சையில் ஒரு பெண் தானாகப் பேசுவதும் திட்டுவதுமாக அவதிப்பட்டுக் கொண்டிருந்தவளிடம் அடியார் வடிவில் வந்து "நாளை திருவையாறு சுடுகாட்டுச் சாமி சமாதிக்கு வா" என்று கூறிச் சென்றார். மறுநாள் அப்பெண் சமாதியில் வந்து வணங்கி "சுவாமி! வந்துள்ளேன். அனுக்கிரகம் செய்க! திருநீறு வேண்டும்" எனக் கேட்டு வணங்கி எழ கீழே விபூதி பொட்டலம் ஒன்று இருக்க, "இதனைப் பூசி நலம் பெறுக" எனச்சாமி அசரீரி மூலம் சொல்லக்கேட்டு நலம் பெற்றாள் என்பர்

(7) தம்பலசுவாமிகள்

திருவையாறு திருநெய்த்தானம் சாலை சுடுகாட்டுச்சாமி மடத்திற்கு முன்னதாக சற்று உள்புறம் சோலையில் அருள்தரு சுயம்பிரகாச சுவாமிகள் என்கிற தம்பலசாமிகள் ஜீவசமாதி உள்ளது.

இவரும் இன்றைக்கு நூறு ஆண்டுகட்கு முன் இருந்தவர். சித்தர்கள், ஞானிகள் செய்யும் ஒவ்வொரு செயற்பாட்டுக்குரிய காரணமும் சிற்றறிவுடைய நம்--மனோரால் அறிதற்கியலாது. தியான நிலையில் தம்பலத்தை மென்றுதின்றபடி அமர்ந்திருப்பார். அவரைத் தரிசனம் காண வருவார் அவருக்குத் தாம்பூலம் பிடித்தபொருளென்று கருதி வாசனைப்பொருள் கலந்து பாக்கு, ஜாதிப்பத்திரி, ஏலம், கிராம்புடன் வெற்றிலை மடிந்து கண்மூடி மௌனியாகவுள்ள அவர் வாயில் புகட்டுவார்களாம். (இவர் சுடுகாட்டுச் சாமிகளின் குருநாதர் என்பர் கடம்பர் கோயிலிலடங்கிய திருப்பதி சாமிகள், இவரது சீடராவர்.)

அடியேனது தந்தையார் பண்டித தி.சு. கோபால்சாமி செட்டியார் அவர்கள் அனுபவித்துக் கூறியவை. அவர்களுக்குப் பல நாட்களாக ஆஸ்மா என்னும் இருமல் இளைப்பு நோய் இருந்தது. எவ்வளவு வைத்தியம் பார்த்தும் பயனில்லை. படித்தவர்களாதலின் மகான்களின் தரிசனத்தாலும், அவர்களது வாக்காலுமே சௌகரிமாகுமென்ற நம்பிக்கையுடன் பலநாள்

வந்து தரிசனம் செய்து தம்பலம் புகட்டி வந்துள்ளார்கள். ஒருநாள் சுவாமி கண்திறந்து வாயில் குதப்பிக் கொண்டிருந்த தம்பலத்தை எடுத்துக் கொடுக்க, அமிர்தமாக அவர்கள் உண்ண ஆஸ்மா இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. மாசி சிவராத்திரி நன்னாளில் அவரது குருபூஜை விழா வரும். அதில் கலந்து கொண்டு வழிபாடாற்றி வருகின்றோம்.

## (8) ஆண்டார்சாமி

திருவையாறு மேலமடவிளாகம் 5 என்ற இடத்தில் அதாவது இன்று, மேல்மருவத்தூர் சுயம்பு ஆதிபராசக்தி வார வழிபாடடு மன்றம் இருக்கும் இடத்தில் சிவலிங்க வடிவில் கோயில் கொண்டுள்ளார். சிறிய கோயில் பள்ள மண்டபத்தினுள் எதிரே பாணலிங்கமாக உள்ளார். இவரும் பெரும் சித்தராக இருந்துள்ளார். இன்றும் இருக்கிறார் என்பது பக்தியுடையார் வழிபாட்டு அனுபவத்தால் அறியக் கிடைத்த உண்மை* மேலும் இவர், பெரும் புலவராக இருந்து, திருவையாற்றுப் புராணம் 1000க்கு அதிக திருவிருத்தங்களைக் கொண்ட நூல் இயற்றியதாகக் கர்ணபரம்பரைச் செய்தி.

இவரை நினைந்து வணங்கிப் படுத்தால் கனவில் காட்சி தருகிறார்? "நான் இருக்கும் போது உனக்கு ஏன் கவலை" என்கிறார் ஒரு அன்பர். நாள்தோறும் சந்நிதி வந்து விளக்கேற்றி வணங்கிச் செல்வது வழக்கம். ஒரு நாள் மதியம் சாது ஒருவர் அவரில்லம் சென்று, பசியால் வந்துள்ளேன் உணவிடு" என்கிறாராம். அவரும் எதிரே வரவேற்று மனைவியுடன் அவரது கைகால்களை கழுவி விட்டு அமர செய்து உணவிட்டார். உணவு உண்டதும் "உன் பரம்பரையினர் யாரும் நரகிற்குச் செல்லமாட்டார்கள் நன்றாயிரு" என கைதூக்கி ஆசி கூறிச் சென்றார். மறைந்தார். அன்று இரவு அவர் கனவில் "மதியம் நான்தானடா வந்தேன்" எனக் கூறினாராம். இவர் சந்நிதியில் வந்தால் நினைத்தவை கைகூடும். நம்பிக்கை வேண்டும். இவரும்

* திருவையாற்றுத் தல மகிமைச் சுருக்கம் : கும்பாபிஷேக வெளியீடு 1937 பக்கம் 1

தானாகவே அமர்ந்து ஜீவன் முக்தர் ஆனவர். இன்றும் அமாவாசை முதல் நாள் இரவும்,பௌர்ணமி மறுநாள் இரவு 12 மணிக்கும் வெளிவந்து அன்னை ஆதிபராசக்தியை வழிபட்டுச் செல்கிறார்கள். நெடிய திருவுருவம் ஜடா முடியுடன் பீடத்திலிருந்து குனிந்து வெளிவருவதைக்கண்ட அருளாளர் ஒருவரின் கூற்று இது. உண்மை உணர வேண்டுமானால் பழத்தட்டை வைத்துத் தூக்கிப் பார்த்தால் தூக்க முடியாத சுமையாக இருக்கும்.

## 9. சிங்கப்பூர்சாமி எனும் முருகேச சுவாமிகள் கி.பி. 1920

திருவையாறு புஷ்யமண்டபக்காவிரிக்கரை ஓரமாக மிக அழகாகக் கட்டப்பெற்றுள்ள "அறுபத்து மூவர் மட" மென்றும், "சிங்கப்பூர்சாமி மட"மென்றும் புகழப்படும் சிறந்த மடமாகும். 1920 : ஆண்டில் சிங்கப்பூரிலிருந்து வந்த முருகேச சாமிகள் தாம் கொண்ர்ந்த பொருளைக் கொண்டு திருவையாற்றில் அழகிய மடமொன்றைக் கட்டவேண்டுமென்று விரும்பி இடத்தை வாங்கிக்கட்டினார்கள்.

சிவபூஜாதுரந்தரராக இருந்து, காவியுடுத்திய ஞானி "உள்ளம் பெருங் கோயில்" என்பது போல உயர்ந்த உள்ளங் கொண்டவர்கள். மிக்க அழகான மாளிகை போன்ற மாடங்களோடு கூடிய மடமாக அமைத்துள்ளார். அவர்களது பூசையறை இன்றும் காண்டற்குரிய கவின்மிகு காட்சியுடையதாக உள்ளது அறுபான் மூன்று நாயன்மார்களது வரலாற்றைத் தஞ்சைக் கலைச் சிறப்பமைந்த தங்க ரேக்கினாலாய படங்களாகத் தயார் செய்து நாளும் பூசை செய்யும் வகையில் அமைந்துள்ளார்கள். திருவிளையாடற் புராணம் கந்தபுராணப் படங்கள் இன்றெல்லாம் அது போல் எங்கும் காணக்கிடைக்காது மேலும் அழகிய உருத்திராக்க விமானத்தில் ஸ்படிகலிங்க மூர்த்தி நடுநாயகமாக எழுந்தருளியுள்ளார். நாளும் 3கால பூசை நடைபெறும், நாளும் அன்னதானம் நிகழ்வுறும், அது ஒரு காலம், சக்தியையும், 18ன் சித்தர்களையும் வழிபடுபவர் சிறந்த அருளாளர்.

கார்த்திகை சோமவாரந்தோறும் 108 சங்காபிஷேகம் நடைபெறும். வலம்புரிச்சங்குகளுக்குத் தங்கப் பூணும், சாதா

சங்குகளுக்கு வெள்ளியினாலாய பூணும் அழகாக அமைக்கப் பட்டு அவை அமர பீடங்களுமுள்ளன. அபிடேக வேதிகை, பாத்திரங்கள் யாவும் வெள்ளியினாலாயவை. திருக் கூட்டத் தார்க்கு அன்னதானம் நாளும் நிகழ்றும் சாமி அவர்கள் மடத் திலிருந்தவாறு காவிரி சென்று நீராடத் தனித்துறை அமைந் துள்ளார்கள். அங்குசெல்ல தெரு இடையே மரப்பாலம் உள்ளது.

ஸ்ரீமுருகேச சாமிகள் 1925ல் ஆவி சித்திரை நாளில் அவரது மடத்திலேயே சமாதியாகியவுடன் சிதம்பரசாமிகள் எனும் தமிழ் அறிஞர் பட்டமேற்று மடத்தை நிர்வகித்தார்கள். அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தில் ஈடுபட்டு மகாத்மா காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து தியாகச் செம்மலாகச் சிறை சென்றவர்கள். நாள்தோறும் அவர்கள் அதிகாலை, கனீரென்ற குரலில் சிவபுராணத்தைப் பாடிக் கொண்டு வீதிவலம் வருதலைக் கண்டிருக்கின்றோம். அடுத்து பண்டிதசித நாராயணசாமி என்பாரும், சித.நா. கருணானந்தசாமி என்பாரும் நிர்வகித்து, இப்பொழுது தனியார் வசம் உள்ளது. இதற்கு அண்மையில் கும்பாபிடேகம் நடைபெற்ற இம் மடம் புதுப்பொலிவுடன் திகழ் கிறது. இம்மடத்தினுள்ளேயே சிங்கப்பூர்சாமிகளின் ஜீவசமாதி அமைந்துள்ளது.

## 10. பரமானந்த குரு எனும் அருள்சாமிகள் :

கும்பகோணம் சாலையில் சப்தகன்னியர்கோயில் பக்கம் இவரது சமாதிக்கோயில் உள்ளது. இவர், சோதிடம், வைத்தியம், மந்திர சாஸ்திரம் இவற்றில் அளவு கடந்த சித்தி பெற்றவர். மலையாள மௌன சாமியிடம் வித்தை பெற்றுப் பலரையும் ஜெயித்தவர். ஒரு தீவில் நீட்ட நாள் தங்கியிருந்து கூடுவிட்டுக் கூடு பாயும் சக்தி பெற்றவர். தீராத நோய்களைத் தீர்த்து வைத்ததனால் மக்கள் கொண்டாட ஆரம்பித்தனர். நலம் பெற்ற அன்பர் ஒருவர் இனாமாகத் தன் வீட்டை இவருக்கு அளித்தார்.

அது, புஷ்யமண்டபத் தெரு பக்கம் சகாஜி நாயக்கன் சந்தில் அவரது மடமாக உள்ளது. அதில், தாமரைப்பீடம் ஓம் அட்சரத்தோடு, கூடிய பெரிய யாககுண்டம் உள்ளது. உக்ர மான

பாதபூஜைகள் செய்வார். அம்பாளுடன் நேருக்குநேர் இரவில் பேசிக்கொண்டிருப்பதையும் தர்க்கம் நடைபெறுவதையும் பக்கத்தில் உள்ள மக்கள் கேட்டுள்ளனர். கற்பூர ஜோதியில் தெய்வ தரிசனத்தை மக்களுக்குக் காட்டியவர். அம்பாளுக்கும் இவருக்கும் உள்ள பிணக்கு இவரை முருக உபாசகராக மாற்றியது. சிறந்த வேத ஆகம பண்டிதர்களை அழைத்து அடிக்கடி பேசுவது வழக்கம். இவரது பூஜா விக்கிரகங்களை மடத்தில் இன்றும் காணலாம்.

ஒரு சமயம் பஞ்சாயத்து போர்டு வீட்டுவரி வாங்கச் சென்ற காளிமுத்து என்ற குமாஸ்தாவிடம் உள்ளே சென்று வேண்டிய தொகை மட்டும் வரவழைத்துக் கொடுத்தாராம். அதற்கு ரசீது கொடுத்தபோது அதனை அவர் பார்த்த மாத்திரத்தில் பற்றி எரிந்ததாம். அவருடைய சீடர் ஆறுமுகம் என்பவர் ஒரு சமயம் சாமியிடம் சினந்து இட்டிக் காலால் எற்றி விடவே, சாமிகள் சிரித்துக் கொண்டே அந்த கால் நோகுமே சரி போ என்றாராம். சிலநாட்களில் அவர் தொழுநோயால் அவதி யுற்றுக் காவிரி நீரில் தாமே வீழ்ந்து போயினராம்.

இவருக்குப் பூர்வீகம் பட்டுக்கோட்டைக்குப் பக்கம் உள்ள கிராமம். வாணவியர் செட்டியார் மரபு. பங்குனி சுவாதியில் இவரது குருபூஜை நிகழும். அருட்பிரசாதம் வழங்கக் கடுமையான ஆச்சாரம் அனுசரிப்பார்கள். இரவு வைத்திருந்த பிரசாதம் தேவர்கள் அருந்திய நிஷ்டாப்பிரசாதம் ஆகும். அங்குள்ள கல்வெட்டு ... அருள்குரு பரமானந்த நிலையம் 1531933 அங்கிரஸ பங்குனி 2 ... சுமார் 70 வயது வரை வாழ்ந்த மகான்.

## வள்ளல் பச்சையப்ப முதலியார் (கி.பி. 1754-1794)

காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாருடைய ... கள் தமிழகத்தே இல்லாத இடங்களே இல்லை எனலாம். ... வாழ்ந்த தலைசிறந்த வள்ளல். மேலைநாட்டு நோபல் ... இணையானவர் இவரது காலம் கி.பி. 1754-1794 ஆகும். ... நாற்பதுக்குள் ஏராளமான பணம் சேர்த்து காசி முதல் இராமேச் சுரம் வரை எத்தனையோ கோயில் திருப்பணிகள் செய்துள்ளார். திருவையாற்றிலும் ஐயாறப்பர் ஆலயத்தே நான்காம் பிரகார

முகப்பு மண்டபத் திருப்பணி இவருடையது. இங்கு இவரது திருவுருவம் இரு மனைவியரோடு, நின்று கொண்டு இன்றளவும் பறைசாற்றிக் கொண்டுள்ளன. அவரது அறக்கட்டளைக் கல்வெட்டுமுள்ளது. வள்ளல் வாரி வழங்கினார். எத்தனையோ குடும்பங்கள் அவரால் காப்பாற்றப்பட்டுள்ளன. அவர் ஆயுளில் ஆண்டிற்கு ஓர் ஊராகச் சென்று தங்குவார். அவ்வாண்டு வருமானத்தை முதல் பயணத்தில் கோயில் கட்டளைகளுக்கும், இரண்டாம் முறை வந்தால் கல்வி அறக்கட்டளைக்கும் செலவு செய்வார். அப்படி உருவானவை தான் சிதம்பரம், சென்னை, காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரிகளாகும். தமக்குப் பிள்ளை இல்லை என்றாலும் அவர் பெயரால் பச்சையப்பர் பள்ளிகள் கல்லூரிகளில் படித்து வளரும் பிள்ளைகள்தான் எத்தனை எத்தனை? காசி முதல் இராமேச்சுரம் வரை எத்தனை அன்னதானச் சத்திரங்கள். பசிப்பிணி மருத்துவர். திருவையாறு திருமஞ்சன வீதியில் அவரது சத்திரம் உள்ளது. அதில் அவரது தோற்றம் 1754 காஞ்சிபுரம் பெரியபாளையம். மறைவு 3131794 திங்கட்கிழமை அமாவாசை நாளில் ஐயாறனடி சார்ந்தார்கள் என்ற கல்வெட்டுள்ளது. உலகம் போற்றும் உத்தமரின் இறுதி வாழ்க்கை' ஐயாற்றில் பங்காளிகளின் தொல்லை (பணம்) படாதபாடு படுத்திவிட்டது. உலகப்புகழ் வாய்ந்த பெரியார் ஐயாற்றில் வந்து முத்தியடைந்தது ஒரு சிறப்பன்றோ!

## 12. சச்சிதானந்த சுவாமிகள்

இவர் 1940ல் திருக்கோயில் தென்கயிலாயத் தோட்டத்தே பலகாலம் தங்கியிருந்தார்கள். அகண்டபரிபூரண சச்சிதானந்த சபை ஏற்படுத்தி பல சீடர்களைக் கொண்டவர்கள் அருட்சக்தி மிக்கவ்ர். வெள்ளை வேட்டிசாமி.

சென்னை சேலையூர் குருசேஷத்திரத்தில் சமாதி கொண்டுள்ளார்கள். அவர்கள் சித்தியடைந்தது கார்த்திகை பௌர்ணமி நாளாகும்.

13. சுந்தர சாமிகள்

பல காலம் திருவையாற்றில் இருந்தார் கௌபீனதாரி; அழுக்கேறிய உடல்; நாற்றமிராது; தேங்காய் மூடி ஓடு கையில் அடுக்கிவைத்திருப்பார். அதில் காபி வாங்கிக்குடிக்கும், சுருட்டு குடிக்கும், காசு-காசு என்று சொல்லிக் கடைதோறும் வரும். வியாபாரிகள் அவர் கையால் காசு எடுக்கச் சொல்வார்கள். செப்புக்காலணாவிற்கு மேல் எடுக்காது. நிறைய சேர்த்து வீதி முச்சந்தியில் வாரி இறைத்துச் சிரிக்கும் அட்டமா சித்திகை வரப்பெற்ற சாமி 1944ல் தஞ்சை கரந்தையில் சமாதியாயிற்று.

14 சற்குரு தியாகராஜசுவாமிகள் (கி.பி. 1767-1847)

இவரது ஜீவசமாதிக் கோயில், வால்மீகி மண்டபம் ஆகியவை திருவையாறு கும்பகோணம் சாலையில் மயான பூமி பக்கத்தில் பிராமணத் துறவிகள் சமமாதிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இன்று உலகமேடையில் கர்நாடக சங்கீதத்தின் பிறப்பிடம் எதுவென்றால் தியாகையரும், திருவையாறும் என்று உறுதியாகக் கூறலாம்.

*தமிழ்நாடு செய்த தவப்பயனாய் 1767ல் திருவாரூரில் ராமபிர்மம் எனும் தெலுங்கு (காகர்லா குடும்பம்) பிராமணருக்கு தவப்புதல்வராய் தியாகராஜர் தோன்றினார். திருவாரூர் இறைவன் பெயரையே தியாகராஜர் என இட்டனர். தலச்சிறப்பு காரணமாகவும் வாழ்க்கேற்ற வசதி காரணமாகவும் திருவை யாற்றிற்குக் குடி பெயர்ந்தார்கள். திருவையாறு திருமஞ்சன வீதியில் 2ம் துளஜா மன்னரால் வீடு கிடைத்தது. (அவரது இல்லம் இன்று புனிதத்தலமாக போற்றப்படுகிறது)

தியாகராஜர் நாள்தோறும் சீடர்களுடனோ-தனியாகவோ முக்கிய வீதிகளில் கீர்த்தனங்களைப் பாடியவாறு உஞ்சவிருத் செய்துகொண்டு போவார். அன்பர்கள் மூலம் அரிசியோ, பழமோ,

---

* பொன்னி நதிக்கரையில் புனித ஆலயங்கள் :- தியாகைய்யர் 'ஞானஒளி' மாத இதழ் ஜூலை 1991 பக்கம் 34

வெல்லமோ காய்களோ எது கிடைத்தாலும் சீடர்கள் பெற்று கொள்வார்கள். சீடர்கள் கொணர்ந்தவற்றை மனைவி கமலாம்பாள் சமைத்துப் போடுவார். தங்களுக்கென்று எதுவும் சேமிப்பது கிடையாது.

விடியு முன்னரே எழுந்து இராமபிரான் மீது பாடியபடி காவிரிக்கு நீராடப் போவார்கள். பிறகு இராம விக்ரகங்களுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவார்கள். அது சமயம் உருக்கமாக தம்மையே மறந்த நிலையில் இராமபிரான் மீது, கீர்த்தனங்களை ஏறற இசையில் பாடுவார்கள். இரவு தூங்கப்போகும் முன இராமபிரானைத் துதித்துப் பாலும் பழமும் நிவேதித்துத் தாலாட்டி விட்டுத்தான் சுவாமிகள் தூங்கப்போவார்கள்.

ராமசடாட்சரி மந்திரத்தைத் தொண்ணூற்றி அறுகோடி தடவை உச்சரித்து முடித்த சித்தமாகபுருஷன் அப்போது அவருககு முப்பத்தெட்டு வயது. அதுசமயம் அவருக்கு ராமனின் தரிசனம் கிடைத்தது. விசுவாமித்தரரின் யாகம் காக்கச் சென்ற கோலம் அவருக்குத் தெரிந்தது. "ஏல நீதயராது" என்ற அடாணா ராகக் கீர்த்தனையை அப்போது தான் பாடினார்.

1847 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் தேதி வழக்கம்போல எழுந்து நீராடிவிட்டு இராமனுக்கும் பூஜை செய்துவிட்டு தனது சீடர்களுடன் ராமதாரக மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே அமர்ந்திருந்தார் சுவாமிகள். 'பரிதாபமு' என்ற மனோகரி ராகத்தை அப்போது பாடினார். உடனே, அவர் சமாதி நிலை அடைந்தார். அவருடைய உச்சியிலிருந்து பேரொளி ஒன்று புறப்பட்டு இராமபிரான் விக்கிரகத்தில் ஐக்கியமாயிற்று. அவர் ஜீவன் முக்தரானார். மார்கழி பகுளபஞ்சமி திதியில் இவரது குருபூஜை உலக சங்கீத வித்வான்களால் ஆண்டுதோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் விரிவு விழாப் பகுதியில் காண்க.

## (15) தெட்சிணாமூர்த்தி சாமிகள்

திருவையாறு வடக்குமாட வளாக முனையில் பொம்மைமடம் என்றும், தெட்சிணாமூர்த்தி சுவாமிகள் மடம்

என்றும் வழங்கப்பெறும் அழகிய இடம். ஒரு காலத்தில் பேரும்--புகழும் கொண்டு சித்தாடியவர்கள் சமாதி பீடம். பளிங்கு உருவச்சிலை கௌபீனதாரி 1920 வரை வாழ்ந்தவர்கள். அவரால் அருள் நலம் பெற்றவர்கள் பலா மேனகை, விசுவாமித்திரர், மார்க்கணடேயர், சுதைவேலைப்பாடுடைய பொம்மை மடத்தைக் ' கட்டினார். அழகிய விநாயகர் கோயிலும் முன் உள்ளது.

## 9. சித்தர் முத்தர் வாழும் திருவையாறு நிறைவுரை:-

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்கள் சித்தர்கள் சித்து கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள். எத்தகைய அரும்பெருஞ் செயல்களையும் ஒரு நொடியில் செய்யவல்ல ஆற்றல் நிறைந்தவர்கள். அத்தகைய சித்தர்கள் ஒருவர் இருவரல்ல 15 சித்தகணத்தார்., திருவையாற்றில் மோனநிலையில் சமாதி கூடி அருள்பாலித்து வருவதைக் கண்டோம், அவர்களின் தூல உடல், மண்ணில் விண்ணில் மறைந்திருந்தாலும், சுக்கும-வடிவில் திருவையாற்றின் எல்லை நாடி வருவார்க்கு அருள்நலம் பாலித்துக் கொண்டேயுள்ளனர். இன்று உலகமே திருவையாற்றை, வியந்து நோககுகிறது என்றால், அதற்குக் காரணம் என்ன தியாகய்யர் போன்ற சித்தமகாபுருஷர்களின் அருள் ஆற்றலே அவர்களின் அருட்சக்தியே எங்கணும் பரவி உலகத்தை ஈர்த்துள்ள தென்பதை உறுதியாகக் கூறலாம்.

# 10. சீரூர் விளக்கும் திருவையாறு

திருவையாற்றை, வரலாற்றுப் பார்வையாகப் பார்க்கின்ற பொழுது அறிந்து கொள்ள வேண்டிய செய்திகள ஏராளமாக உள்ளன. ஒரு நகரம் என்றால் அதன் பரப்பளவு மக்கள் தொகை, வளர்ச்சிப் பணிகள், சுற்றுப்புறக் கிராமங்கள்' அலுவலகங்கள், பொது நல அமைப்புக்கள் இன்னோரன்ன பல செய்திகளை வெளியிட்டால்தான் நகர வரலாறு முழுமையுறும். இவை பிற்காலத்தே எத்தகைய வளர்ச்சி பெற்றுள்ளதென்பதறிதற்கு வரலாற்று ஆய்வாளருக்கும், வருங்காலச் சந்ததியினருக்கும் உறுதுணையாக அமையும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. எனவே அரும் பெரும் இக்குறிப்புக்களை அரிதில் முயன்று திரட்டி நகரக் குறிப்புச் சுவடியாக (Town Diry) வெளியிட்டுள்ளோம்.

| | |
|---|---|
| திருவையாறு வட்டம் | பரப்பளவு : 27,183,46.5 ஹெக்டேர்<br>1991 ல் மக்கள் தொகை : 1,72,230 |
| திருவையாறு நகரம் | பரப்பளவு : 558,00.5 ஹெக்டேர்<br>மக்கள் தொகை : 14,531 |

திருவையாறு தேர்வு நிலைப் பேரூராட்சியின் வளர்ச்சிப் பணிகள்

| | | |
|---|---|---|
| அன்புமக்கள் | 14,531 | |
| ஆடவர் | 7,138 | |
| மகளிர் | 7,393 | |
| ஆண்டு வருவாய் | 19,46,000 | |
| சாலைகள் | எண்ணிக்கை | நீளம் |
| தார் சாலைகள் | 17 | 5,145 கி.மீ |
| கப்பிசாலைகள் | 29 | 11.070 கி.மீ |
| கிராவல் சாலைகள் | 14 | 3.140 கி.மீ |
| மண் சாலைகள் | 5 | 0.650 கி.மீ |

## தெருவிளக்குகள்

| | | | |
|---|---|---|---|
| சோடியம் விளக்குகள் - | 4 | மெர்க்குரி விளக்குகள் | - |
| டியூப் லைட்டுகள் | 247 | | |
| பல்புகள் | 262 | | |
| இதர இனம் | 2 | | |

## குடிநீர் தொட்டிகள்

| | |
|---|---|
| மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி .. | 2 |
| கைப் பம்புகள் | 69 |
| பொது குடிநீர் குழாய்கள் | 39 |
| தனியார் குடியிருப்புக் குழாய்கள் | 165 |
| மார்க் 2 பம்புகள் | 2 |

## கல்வி நிலையங்கள்

| | |
|---|---|
| கல்லூரி | 1 |
| மேல்நிலைப்பள்ளி | 2 |
| உயர்நிலைப்பள்ளி | 2 |
| நடுநிலைப்பள்ளி | 2 |
| தொடக்கப்பள்ளி | 6 |
| கோயில்கள் | 21 |
| மாதா கோயில் | 1 |
| அரசு அலுவலகங்கள் | 19 |
| பயணியர் விடுதி | 1 |
| பெட்ரோல் பங்க் | |

## திருவையாறு சுற்றுப்புறக் கிராமங்கள்

| | |
|---|---|
| ஊரின் கிழக்கில் | நகர் விரிவு, தியாகராஜா காலனி, அகிலாண்டபுரம் அம்மாள் அக்ரகாரம், கார்குடி, இராயம்பேட்டை, சிறுபுலியூர், திங்களூர், திருப்பழனம், வைரவன் கோயில், பெரம்பூர், ஈச்சங்குடி, கணபதி அக்ரகாரம், உமையாள் புரம், கவித்தலம், சுவாமிமலை, கும்பகோணம் |
| தென்கிழக்கில் | பொன்னாவரை, ஆய்க்குநாதபுரம், கல்யாணபுரம், சின்னகண்டியூர், உத்தமனூர், உப்புக்காய்ச்சிப் பேட்டை, திருச்சோற்றுத்துறை, வீரசிங்கன் பேட்டை, திருவேதிகுடி, அய்யம்பேட்டை, பாபநாசம் |
| ஊரின் தெற்கில் | நகர் விரிவு, ஸ்ரீராம் நகர், புது அக்ரகாரம், முகமமது பந்தர், நடுக்கடை (காவிரியின் நடுவிடமாக இருந்தது) கண்டியூர், அரசூர், அம்மன்பேட்டை, பளரியக்ரகாரம், கரந்தை, தஞ்சாவூர் |
| தென்மேற்கில்: | திருப்பூந்துருத்தி, திருஆலம்பொழில், நடுக்காவேரி, கருப்பூர், கண்டமங்கலம், |

| | |
|---|---|
| ஊரின் மேற்கே: | திருநெய்த்தானம், கடுவெளி, பனையூர், மருவூர், சாத்தனூர், கூத்தூர், மகாராஜபுரம், திருக்காட்டுப்பள்ளி, கல்லணை |
| வடமேற்கில்: | பெரும்புலியூர், புனல்வாயில், வைத்தியநாதன் பேட்டை, திருமழபாடி |
| ஊரின் வடக்கே: | விளாங்குடி, திருமானூர், பழுவூர், அரியலூர் |
| வடகிழக்கில்: | பருத்திக்குடி, குண்டங்குடி, அணைக்குடி, செம்மங்குடி, வீரமாங்குடி, சோமேஸ்வரபுரம் |

## ஐயாற்றில் வளரும் கைத்தொழில்கள்

*பாய்பின்னல் : விளாங்குடி, வைத்தியநாதன்பேட்டை, சொசைட்டி மூலம் தரமான கோரைப் பாய்கள் உற்பத்தி யாகின்றன.*

*கிராமிய நூற்பு நிலையம்: தஞ்சாவூர் மேற்கு சர்வோதய சங்கம் காதி கிராமோத்யோக் பவன் திருவையாறு, 6 கதிர் அம்பர் சர்க்கா மூலம் 20 மாணவிகள் சிட்டங்கள் தயார் செய்து கதராடை நெய்ய வெளியூர்களுக்கு நூல் அனுப்புகின்றார்கள்.*

*தவில் வளையம்: தவில் இசைக் கருவிக்கு வேண்டிய தரமான வளையம் தயாரிக்கப்படுகிறது.*

## திருவையாற்றில் அரசு அலுவலகங்களும் பிறவும்

**உரிமையியல் நீதிமன்றம்:**

*1860 வரை தாலுக்காவின் முக்கிய தலைநகர் 'சுபா' வாக விளங்கியது. 1806 ல் மாவட்ட நீதிமன்றம் நிறுவப்பட்டது. அது முதல் மாவட்ட முன்சிப் அலுவலகம் திருவையாற்றில் செயல் பட்டு வந்தது. 1863 ல் தஞ்சையில் ஏற்பட்டது. அப்போது திருவாதி டி.முன்சிப் இலாகாவிற்குட்பட்ட மாகாணங்கள் 11 ஆக, அதன் கிராமங்கள் 219 ஆக செயல்பட்டு வந்தது என்பதை தந்தையார் T.S.கோபால்சாமி செட்டியார் அவர்கள் 1900 ல் எழுதி வைத்துள்ள அருமையான குறிப்புகள் மூலம் தெரிய வந்தது. (உம்) திருவாதி மாகாணம் 26 கிராமங்கள் கண்டியூர் மாகாணம், 21 கிராமங்கள் இப்படி 11 மாகாணங்களும் உரிய கிராமப் பெயர்கள் உள்ளன.*

துணைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

*கி.பி. 1810 ல் துணை வட்டாட்சியர் அலுவலகத்தோடு இணைந்திருந்தது. 1956 லிருந்து தனியிடத்தே செயல்பட்டு வருகிறது.*

*துணை வட்டாட்சியர் அலுவலகம் 1860 ல் தொடங்கி இன்று தனி வட்டாட்சியர் அலுவலகமாக உயர்ந்துள்ளது. 10-7-94*

| அலுவலகங்கள் | ஆண்டுத் தொடக்கம் |
|---|---|
| சார் பதிவாளர் அலுவலகம் | 4.1.1865 |
| 1888 க்கு முன்பிருந்தே இராஜா மிராசுதார் | |
| மருத்துவமனையாக சத்திர நிர்வாகத்திலிருந்து இப்பொழுது | |
| அரசு மருத்துவமனையாக மாறியது | 1.10.1983 |
| காவல நிலையம் அரசு ஆணை எண் 745 நாள் | 27.7.1988 |
| ஊராட்சி அலுவலகம்(பஞ்சாயத்து போர்டு தோற்றம்) | 5.5.1886 |
| தேர்வு நிலைப்பேரூராட்சி அலுவலகமாக மாற்றம் | 13.8.1973 |
| கும்பகோணம் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் தோற்றம் | 23.4.1974 |
| தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகமாறியது | 7.1.1937 |
| உதவிக் கோட்ட இளமின் பொறியாளர் அலுவலகம் (புறநகர்) | 7.1.1974 |
| உதவிச் செயல் பொறியாளர் அலுவலகம் மின் | |
| இயக்குதலும் காததலும் | 1.12.1988 |
| தலைமை அஞ்சலகம் | |
| 1. கிளை அஞ்சலகம் வடக்கு வீதி | |
| 2. கிளை அஞ்சலகம் தியாகராஜா காலனி | |
| தொலைபேசி இணைப்பகம் | |
| தொலைத்தொடர்பு மையம் | 24.3.1994 |
| ஊராட்சி ஒன்றியம் | 2.10.1961 |
| பொதுப்பணித்துறை ,உதவிக்கோட்டபொறியாளர் | |
| நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை | 25.4.1984 |
| பயணியர் மாளிகை | 1888 க்கு முன |
| கால்நடை மருததவமனை | 16.11.1955 |

| | |
|---|---|
| தனி வட்டாட்சியர் ஆதித்திராவிடர் நலம் | 1.1.1981 |
| தனிவட்டாட்சியர் நத்தம் நிலவரித்திட்டம் | 1.9.1993 |
| வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் | 15.4.1990 |
| தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க மையம் | 6.3.1962 |
| சார் நிலைக் கருவூலம் | 13.3.1981 |
| கரும்பு ஆராய்ச்சி நிலையம் குருங்குளம் சர்க்கரை ஆலை | 20.4.1976 |
| தென்னை (கோ.கோஸ்) ஆராய்ச்சி நிலையம் | 11.5.1970 |
| இந்து அறநிலைய ஆய்வாளர் அலுவலகம் | 1-7-1976 |
| அரசு கிளை நூலகம் | 13.9.1960 |
| பள்ளித் துணை ஆய்வாளர் அலுவகமாக 1905 தொடங்கி இன்று உதவிக் கல்வி அலுவலர் அலுவலகமாக மாற்றம் | 1.11.1989 |
| திருவையாறு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் | 30.11.1982 |

## ஐயாற்றுக் கல்விக் கழகங்கள்

### அரசர் கல்லூரி

*இக்கல்லூரி கலைக்காவலர் சரபோஜி மன்னரால் கட்டப்பெற்ற 'கல்யாணி மகால்' கட்டிடத்தில் இயங்குகிறது. மொழியரசியும் கலையரசியும் இணைந்து அருட் செங்கோலோச்சு கின்றனர். மன்னர் சரபோஜியால் ஏற்படுத்தப்பட்ட அறக் கட்டளை சத்திரம் நிர்வாகம் மாவட்ட ஆட்சியரின் ஆளுகையின் கீழ் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது.*

*கி.பி. 1881 ல் வடமொழிக் கல்வி புகட்டத் தொடங்கிய கலைக்கூடம் கி.பி. 1927 ல் திரு. பன்னீர்செல்வம் மாவட்டத் தலைவராக இருந்த காலை(இன்று பி.லிட்., பி.ஏ.; எம்.ஏ.,; எம்.ஃபில் பட்டப்படிப்பும்)தமிழ்க்கல்லூரியாக மலர்ந்து, கி.பி. 1965ல் இருந்து இசை, நாட்டியம், நாதசுரம், வீணை, மிருதங்கம், வயலின், வாத்தியம், என பல்கலைத் துறைகளும் பயிற்றி வரும் பல்கலைக் கல்லூரியாக மணம் பரப்பி வருகிறது. தமிழகத்தின் தன்னேரிலாக் கலைக்கோயில் திருவையாறு அரசர் கல்லூரி எனலாம். 1994 ல் இதன் துறைகள் பற்றிய விளக்கம்*

| இதிலுள்ள துறைகள் | பேராசிரியர்கள் | மாணவ | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தமிழ்த்துறை | 13 | 272 | 43 | 315 |
| சமஸ்கிருதத் துறை | 6 | 25 | — | 25 |
| இசைக்கலைதுறை | 10 | 183 | 39 | 222 |
| உடற்கல்வித்துறை | 1 | — | — | — |
| மொத்தம் | | | | 562 |

## சீநிவாசராவ் மேல்நிலைப்பள்ளி

*தஞ்சை மாவட்டப் பள்ளிகளில் சிறந்த ஒன்று. 3.3.1886 ல் சென்ட்ரல் ஹைஸ்கூல் என்ற பெயரில் திரு. T.S.சீநிவாசராவ் எனும் பெயரால் தோற்றுவிக்கப் பெற்று பின் அவர் மகன் திரு. கிருஷ்ணராவ் 1944 ல் தந் தந்தை பெயரால் மாற்றம் செய்தார். 1994 ல் இதன் வளர்ச்சி*

| | |
|---|---|
| வகுப்புகள் | 6 +2 |
| ஆசிரியர் | 79 |
| மாணவர் | 2115 |

## காமராஜ் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி

*கி.பி. 1888 ஆங்கில அரசால் தொடங்கிய மகளிர் ஆரம்பப் பள்ளி வளர்ந்து 5.9.1976 இல் இருந்து காமராஜர் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி அளவில் உயர்ந்துள்ளது. 1994 ல் 6 முதல் 10 வகுப்புகள் ஆசிரியர்கள் 17, மாணவியர் 625*

## சரஸ்வதி அம்பாள் ஆரம்பப் பாடசாலை

*கி.பி. 7.3.1912 ல் பிரணதார்த்த--ஹரய்யர் எனும் பெரியவரால் தோற்றுவிக்கப் பெற்று சான்றோர் பலரை உருவாக்கும் ராசியான பள்ளி, பழம் பள்ளி எனும் சிறப்புப் பெயருடன் விளங்கிவருகிறது.*

*1994 ல் 1 முதல் 5 வகுப்புகள் ஆசிரியர்கள் 11 மாணவர்கள்*

## ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி

*மாவட்டக்கழக ஆரம்பப் பள்ளியாக 1.2.1926 ல் தொடங்கி 2.10.1961 லிருந்து ஊராட்சி ஒன்றியப் பள்ளியாக மாறி செயல்பட்டு வருகிறது.*

*1994 ல் 1--5 வகுப்புகள், ஆசிரியர்கள் 7, மாணவர்கள் 222*

## H.M. கான்வெண்ட் புனித சூசையப்பர் நடுநிலைப்பள்ளி

*19.3.1893-ல் தொடங்கி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து செம்மையாக நடைபெற்று வரும் பள்ளி*

*1994 ல் வகுப்புகள் 1--8 ஆசிரியர்கள் 19; மாணவர்கள் 980*

## ஸ்ரீபாலகணபதி வித்யாசாலா

*வ. இராஜகோபாலஐயங்கார் எனும் பெரியவரால் 1925 ல் தொடங்கப் பெற்று நன்முறையில் செயல்பட்டு வருகிறது. மாலை நேரத்தில் இந்தி வகுப்புகளும் நடைபெற்று வருகிறது.*

*1994 வகுப்புகள் : 1-5, ஆசிரியர்கள் 16 மாணவர் தொகை 681*

## ராஜ வேத பாடசாலை அம்மாளக்ரகாரம்

*நூற்றாண்டு கால யஜுர், சாமவேத பாடசாலை ஆசிரியர் 2 மாணவர் 13*

## தமிழய்யா வீ.குமாரசாமி பிள்ளை கல்விக்கழகம்

*12.7.1983 ல் லேடீஸ் டியூஷன் சென்டர் என்ற பெயரில் முனைவர் திரு. கலைவேந்தனால் தொடங்கப் பெற்ற நிறுவனம், கம்பன் கழகம், கண்ணதாசன் மன்றம், செஞ்சிலுவை சங்கம், இலக்கியப் பேரவை, ஔவை மழலையர் பள்ளி எனப் பல அமைப்புகளை உருவாக்கி ஐயாற்றில் கல்வி, கலை, இலக்கியம், சமூகம் ஆய பல்துறைகளில் சிறந்து பணியாற்றி வருகிறது.*

*வகுப்புகள் 1 முதல் +2 வரை 1994 ல் 1 +2 ஆசிரியர்கள் 15, மாணவர்கள் 500*

## அமல்ராஜ் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்

*11.1.1991 ல் அமல்ராஜ் எனும் தனியாரால் தொடங்கப் பெற்ற ஆங்கில வழிக் கல்வி நிறுவனம், மிகக் குறுகிய காலத்தில் நல்ல வளர்ச்சியடைந்து உயர்ந்து வருகிறது. விசாலமான இடம் புதிய மாடி கட்டிடங்கள்*

*1994 ல்* LKG - X *வகுப்புகள் ஆசிரியர்கள் 30 மாணவ மாணவியர் 1000*

## தட்டச்சுப் பயிலகங்கள்

| | |
|---|---|
| 1. மணீஸ் டெக்னிக்கல் இன்ஸ்ட்டியூட் | 1952 |
| 2. ஈஸ்வரி டெக்னிக்கல் இன்ஸ்ட்டியூட் | 1974 |
| சாரதாஸ் தையல் பயிற்சிப் பள்ளி | 1984 |

## ஊரில் அமைந்துள்ள வங்கிகள்

| | ஆண்டுத் தொடக்கம் |
|---|---|
| பாரத வங்கி (ஸ்டேட் பாங்கி கிளை) | 14.11.1979 |
| இந்தியன் வங்கியாக | 20.2.1990 |
| லெட்சுமி விலாஸ் வங்கி | 9.12.1963 |
| தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி (வ.து.)கிளை) | 31.3.1963 |
| திருவையாறு கிராமக் கூட்டுறவு வங்கி (வ.து) | 28.12.1955 |
| திருவையாறு கூட்டுறவு நிலவள வங்கி (லிமிடெட்) | 25.12.1970 |
| திருவையாறு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | 12.4.1988 |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி(நடுக்கடை) | |

## திருவையாறு பொதுநல அமைப்புகள்

| | |
|---|---|
| 1. தியாகப் ப்ரும்ஹ மஹோத்ஸவ ஸபா | 1930 |
| 2. தமிழிசை மன்றம் | 1971 |
| 3. அரிமா சங்கம் (லயன்ஸ் கிளப்) | 1969 |
| 4. செஞ்சிலுவைச் சங்கம் (ரெட் கிராஸ்) | 1993 |
| 5. தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்புக் கழகம் | 1978 |
| 6. பாரதி இயக்கம் | 1978 |

| | |
|---|---|
| 8. பென்சனர் (ஓய்வு ஊதியர்) சங்கம் | 1.2.1981 |
| 9. அறிவொளி இயக்கம் | 1994 |

## ஆன்மீக அமைப்புகள்

| | |
|---|---|
| 1. அருள்மிகு ஐயாறப்பர் வார வழிபாட்டுக் கழகம் | 1963 |
| 2. ஐயாறன் மெய்த் தொண்டர் இயக்கம் | 1990 |
| 3. இந்து வர்த்தக அறப்பணிக்குழு | 1985 |
| 4. மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் | 1983 |
| அப்பர் கயிலைக்காட்சி தேவார பாராயணம் | 1938 |
| அப்பர் அப்பூதி அடிகள் திருச்சபை | 1968 |
| மார்கழி மாத பாவை வழிபாட்டுக் குழு | 1960 |
| சன்மார்க்க சங்கம் | 1975 |
| சிவசமய சங்கம் | 1980 |
| ஆடி அமாவாசை கயிலைக் காட்சி திருமுறை இசை விழா | 1984 |
| மகளிர் துர்க்கை வார வழிபாட்டுக் குழு | 1984 |
| சத்ய சாயி பஜனா மண்டலி | 1994 |

சிவ:சிவ:ஓம்சக்தி

## நிறைவுரை

"பரபரக்க வேண்டாம் பல்காலும் சொன்னேன்
வரவரக் கண்பாராய் மனமே ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்நன்றி குன்றாதே
ஏங்கி இளையா திரு." குருஞானசம்பந்தர்

*அன்பார்ந்த நேயர்களே!*

*திருத்தல வரலாற்றுப் படைப்பிலோர் புதுமை கண்டோம். காலத்திற்கேற்ப மனிதனது கருத்துக்களும் செயல்களும் மாறி வருதலைப் பார்க்கின்றோமன்றோ அம்முறையில் தலவரலாற்றை முழுமையாகப் புதிய கோணத்தில் பார்த்த பொழுது நிறைய செய்திகள் கிடைத்தன. அதன் பயனாகச் சரிதம், வரலாறு, கல்வெட்டு, வேத, புராண, இலக்கிய வளர்ச்சியுடன் சித்தர்கள், கோயில் விழாக்களின் உயர்ச்சி இன்றைய நகர மேம்பாட்டிற்குரிய அலுவலகங்கள், மக்கட் பெருக்கம் ஆய அனைத்தையும் அறிந்து கொள்ள முடிந்தது.*

இறைவயாவும், எல்லாம் வல்ல திருவையாறகலாத செம்பொற சோதிப் பெருமான்-தன் கருணைத்திறமே யன்றிவேறல்ல முன்னைப் பழமைக்கும் பழமையாய்: பின்னைப் புதுமைக்கும் புதுமையாய கருத்துக்களையெல்லாம் வெளியிட வைத்தும் எக்காலத்தும் இவை நிலைத்திருக்கும் வகையில் பல்வேறு தலைப்புடைய நூற்களின் திரண்ட கருத்துக்களை யெல்லாம் பிழிந்து வடித்து வழங்கச் செய்ததும் அவனருளே. எனவே, நுண்மாண் நுழைபுலமிக்கச் சான்றோர்கள் இதனை நன் முறையில் படித்துச் சுவைத்துப் போற்றி மகிழ்வர். அம்மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அவரவர் தம் வாழ்த்துக்களை உள்ளார்ந்த நிலையில் எந்தமக்கு வாரி வழங்குவர் என்பது உறுதி.

இத்தகைய பேறே யாம் பெற்ற பெறற்கரும் பேறாகக் கருதி அதனை ஐயாறன் தன் திருவருட் பாலிப்பாகப் போற்றி மகிழ்வோம். அம்மகிழ்வின் வெளிப்பாடாக அடுத்து "ஐயாற்றுத் தெய்வத்தமிழ் இலக்கியங்கள்" வெளியிட ஐயாறப்பர் அருள் பாலிக்க நாம் வேண்டுவோம். வாழ்க வையகம்; வாழ்க வளமுடன்;

## வாழ்த்து

வையம் நீடுக, மாமழை மன்னுக,
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக!
சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக!
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே --சேக்கிழார்

'தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' ஆரூர் அமர்ந்த அரசே போற்றி சீரார் திருவையாறாபோற்றி போற்றி

சிவ! சிவ! திருச்சிற்றம்பலம் ஓம் சக்தி

துணை நின்று உதவிய நூல்கள்:


1. A Manual of the Distric^t of Thanjavur. T. Vengasami Raw 1883 A.D.

2. Madras District Gazetreers Tanjore Vol.1
F.R. Hemingway I.E.s. 1906.

3. Topoeropical list: Inscriptions of the Madras Precedency Vol. II V. Rengacharya M.A.L.T., 1919.

4. South Indian Inscriptions Volumes. V

5. Sri Pancehanathis waraswami Temple, Tiruvaiyaru, Adhinam Publication No: 309 - 1965

6A. Thiruvaiyaru S.Swaminathan B.A. 1983

7. தமிழகம் ஊரும் பேரும்
ரா.பி. சேதுபிள்ளை சைவ சித்தாந்தம் 4 ம் பதிப்பு 1968

8. திருவையாற்றுத் தல மகிமைச் சுருக்கம்
தருமபுர ஆதினப் பதிப்பு 1937

9. திருவையாற்றுப் புராணம்
ஞானக் கூத்தர் தருமபுர ஆதீனம்,திருவையாறு,தேவஸ்தானம் 1930

10. திருவையாறு :
சதாசிவ பஞ்சாமி சதாசிவ வெளியீடு திருவையாறு 1988

11. திருவையாறு:
புலவர் செந்துறை முத்து மணிவாசகர் பதிப்பகம் சிதம்பரம் 1989

12. திருவையாறு:
க. இராஜகோபால் எம்.ஏ., தமிழ்நாடு அரசு தொல்பொருள்துறை 1976

13. பஞ்சநத மான்மியம்:
உரைநடை சாமாசாஸ்திரி தி. கந்தசாமி உபாத்தியாயர் 1885

14. பஞ்சநதிப் புராணட.
திருவம்பலவன் சக ஆண்டு 1527 கி.பி. 1605
சரஸ்வதி மகால் வெளியீடு 1991.

15. பஞ்சநத க்ஷேத்திர தத்துவம்:
சுப்பிரமணிய ஐய்யர் சென்னை 1949

16 பஞ்சநத க்ஷேத்திர உத்கிருஷ்ட வைபவம்:
மா. சுந்தரக் குருக்கள் 1971 குடமுழுக்கு வெளியீடு

17. ஸ்ரீதத்துவநிதி:
மைசூர் கிருஷ்ணராஜ மகாராஜா சரஸ்வதி மகால் தஞ்சை பாகம் 3

18. திருவையாறு மகாகும்பாபிஷேக மலர்
தருமபுர ஆதீன வெளியீடு 1971

19. திருவையாற்று தர்மசம்வர்த்தனி மாலை :
சிவஞானன் தருமை ஆதின வெளியீடு 197[illegible]

20. ஏழூர்த் திருவிழா வரலாறும், பதிகங்களும்:
ந.மு. கோவிந்தராஜ நாட்டார் பி.ஏ.எல்டி, 1954

21. திருத்தல தரிசனம்:ஏழூர் திருமஞ்சன விழா:
எம்.கே. பிரபாகரமூர்த்தி எம்.ஏ., சென்னை

22. திருத்தலப்பெருமை : திருவையாறு 66:
ஆனந்த விகடன் இதழ் 23.5.52 பரணீதரன்

23. சப்தஸ்தானஸ்தலங்களின் மகிமை:
இராமகிருஷ்ண தபோவனம் திருப்பராய்த்துறை 1989

24. தியாகப் பிரும்ம மஹோத்ஸவ சபா: பொன்விழா மலர் 1991

25. தியாகராஜர் : 146 ஆவது ஆராதனை விழா வெளியீடு 1993

26. பத்துப்பாட்டு: உ.வே.சா. பதிப்பு 1931

27. பதிற்றுப்பத்து : உ.வே.சா. 1941

28. சிலப்பதிகாரம்: இளங்கோவடிகள் உ.வே.சா. பதிப்பு 1944

29. கலித்தொகை: பாகநேரி காசி விஸ்வநாதன் பதிப்பு 1943

30. திருஞானசம்பந்தர் தேவாரம் 1, 2, 3, திருமுறைகள்
ஆதீன பதிப்பு எண் 290, 317 1953, 5455

31. திருநாவுக்கரசர் தேவாரம்: 4, 5, 6 திருமுறைகள்
ஆதீன பதிப்பு எண் 391. 1958

32. திருவாசகம் மணிவாசகர் தருமபுர ஆதினப் பதிப்பு எண் 572 1966

33. திருத்தொண்டர் புராணம் சி.கே.எஸ். உரை கோவை பாகம் 4

34. திருமந்திரம் : திருமூலர் ஆதினப் பதிப்பு எண் 613 1974

35. பதினென் சித்தர் ஞானக்கோர்வை, வ. சரவணப் பிள்ளை
வெளியீடு 1924

36. பட்டினத்தார் பாடல்கள்: மணிவாசகர் பதிப்பகம் சிதம்பரம் 1989

37. திருவிளையாடற் புராணம்: பரஞ்சோதி
முனிவர் சுப்புராயச் செட்டியார் உரை

38. காஞ்சிப் புராணம் சிவஞான முனிவர் காஞ்சி
மெய்கண்டார் கழக வெளியீடு 1937

39. ஆணைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும்
காசிமட வெளியீடு 1971

40. இந்துமத இணைப்பு விளக்கம் கே.ஆறுமுக நாவலர் .
இந்து அறநிலைய வெளியீடு சென்னை 1963

41. நமது தமிழ்நாடு: தஞ்சாவூர் மாவட்டம்
சோமலெ. பாரிநிலையம் சென்னை 1961

42. மதுரை நாயக்கர் வரலாறு: அ.கி. பரந்தாமனார்
பாரி நிலையம் சென்னை 1966

43. பல்லவர் சரித்திரம்: பி.தி. சீனிவாச அய்யங்கார் மூன்றாம பதிப்பு

44. கரிகாலன் கி.வா.ஜ. அமுத நிலையம் சென்னை 1954

45. சரஸ்வதி மகால் வழிகாட்டி நூல் அ. பஞ்சநாதன 1992

46. திருவையாறு வில்லேந்திய வேலவர் சுப்பிரமணியன் பத்மா 1991

47. திருவாரூர் குடவாயில் பாலசுப்ரமணியம் கோயில் வெளியீடு 1988

48. திரியுகம் கண்ட தேவி மாலையும் சக்தி கவசமும்,
திருவாவடுதுறை ஆதீனம் , 1988

49. சித்தர்கள் சீர்மை பற்றி சிறுவிளக்கம்
அகத்தியர் சன்மார்க்க சங்கம் தஞ்சாவூர்

50. அகத்தியர்: விவேகானந்த கேந்திரம் சென்னை மலர் 101987

51. தமிழ் இலக்கிய வரலாறு மு.கோவிந்தசாமி
பாரிநிலையம் சென்னை 2

52. சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம் எஸ்.பி.சபாரத்தினம்
சைவசித்தாந்த சென்னை 1992

53. உபநிஷதங்களின் சாரம் நடராஜசிவாச்சாரியார்.
நர்மதா பதிப்பகம் சென்னை 1982

54. "ஐயாற்றை வழிபடுவோம் வாருங்கள்"
பேராசிரியர் சுவர்ணகாளீச்சுரன், 1960



